தமிழ் மொழி வரலாறு

Sarvodaya Ilakkiya Pannai

Collected Works of
Professor T. P. Meenakshisundaran

Volume II

A History of Tamil Language

(Translated from the English original
by Dr. S Jeypragasam)

சர்வோதய இலக்கியப் பண்ணை
பேராசிரியர் தெ. பொ. மீ நூல்கள் வரிசை
தொகுதி 2

Sarvodaya Ilakkiya Pannai
Madurai 625 001
1982

தெ. பொ. மீ.

தமிழ் மொழி வரலாறு

தமிழாக்கம்

டாக்டர் ச. செயப்பிரகாசம்

சர்வோதய இலக்கியப் பண்ணை
மதுரை 625 001
1982

இரண்டாம் பதிப்பின் மறு அச்சு
மார்ச் 1982
பிரதிகள் 2000

உரிமை : திருமதி காமாட்சி சண்முகம்
சர்வோதய இலக்கியப் பண்ணை வெளியீடு எண் : 2

(மதுரை காமராசர் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களால் தமிழ் மொழி மற்றும் இலக்கிய பட்ட மேற்படிப்புக்கு பாடநூலாக இந்நூல் அறிவிக்கப்பட்டுள்ளது.)

விலை ரூ 12-50

இந்திய அரசு சலுகை விலையில்
வழங்கிய தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது

வெளியிட்டோர்
சர்வோதய இலக்கியப் பண்ணை
32/1 மேல வெளி வீதி, மதுரை 625 001
தொலைபேசி 31746

அச்சிட்டோர்
திரு வி. ஆர். சங்கரசுப்பு
வைகை அச்சகம், மதுரை 625 001

மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் மறைவுக்குப் பின்னர் "தமிழ் மொழி வரலாறு" நூலின் இரண்டாம் பதிப்பு மறு அச்சாகிறது. கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் மொழியியல் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான வளர்ச்சிகளையும், தமிழ் மற்றும் திராவிடமொழிகளில் நிகழ்ந்துள்ள புதிய ஆராய்ச்சிகளையும் கருத்தில் கொண்டு புத்தம் புதிய தமிழ்மொழி வரலாற்று நூலை எழுத அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் அது கனவாகவே நின்று விட்டது. தென்னக மொழியியல் துறைக்கு இது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இந்நூலின் தமிழாக்கத்திற்குப் பின்புலமாக இருந்த பேராசிரியர் டாக்டர் இராம. சண்முகம், திருமதி. காமாட்சி சண்முகம், தமிழாக்கத்தைச் செம்மைப்படுத்திய பேராசிரியர் சு. குழந்தைநாதன், டாக்டர் கோ. விஜயவேணுகோபால் ஆகியோருக்கு நான் பெரிதும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். இவ் வெளியீட்டின் அச்சுப்படிகளை திருத்தி உதவிய டாக்டர் அஞ்சலி அன்னுபாய், திரு. அ. சோமசுந்தரம் திரு. எஸ். கிருஷ்ணசாமி ஆகியோருக்கு நன்றி. பேராசிரியர் தெ. பொ. மீ. நூல் வரிசை வெளிவர என்றும் உதவிவரும் சர்வோதய இலக்கியப் பண்ணை அறங்காவலர் குழுச்செயலர் திரு. சு. லோகநாதன், இணைச்செயலர் திரு. வி. ரெங்கசாமி ஆகியோருக்கு எனது நன்றிகள் உரியதாகும்.

பேராசிரியர் தெ. பொ. மீ. நூல்கள் வரிசை தொடர்ந்து வெளிவர தமிழ் கூறும் நல் உலகம் ஆதரவளிக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

மதுரை 625 009
14 - 3 - 1982

— ச. செயப்பிரகாசம்

SCHEME OF TRANSLITERATION

உயிரொலிகள்

அ	*a*	ஆ	*ā/a:*	இ	*i*	ஈ	*ī / i:*	உ	*u*
ஊ	*ū/u:*	எ	*e*	ஏ	*ē/e:*	ஒ	*o*	ஓ	*ō/o:*
ஐ	*ai*	ஔ	*au*						

கீழிடை இதழ்விரி முன்னுயிர் *ɛ*

மேல் இதழ்விரிப் பின்னுயிர் (குற்றியலுகரம்) *ɨ*

மேல்கீழ் இதழ்விரி முன்னுயிர் æ

நடுவிடை இதழ்விரி நடுஉயிர் ə

ã; ã: என்பன மூக்கின் உயிர்களாகும் (Nassal vowels)

மெய்யொலிகள்

	க்	ச்	ட்	த்	ப்	ற்
ஒலிப்பிலா	*k*	*c*	*ṭ*	*ṭ/t*	*p*	*t/ṛ*
ஒலிப்புடை	*g*	*j*	*ḍ*	*d*	*b*	

ங் *ṅ*	ஞ் *ñ*	ண் *ṇ*	ந் *n̲*	ம் *m*	ன் *n*
ய் *y*	ர் *r*	ல் *l*	வ் *v*	ழ் *ḻ*	ள் *ḷ*

குரல்வளை வெடிப்பொலி *h*

பல்லிதழ் பிளந்துரசொலி *f*

நுனியண்ண குழிந்துரசொலி { ஒலிப்பிலா *s* ; ஒலிப்புடை *z* }

நாவளை குழிந்துரசொலி *ṣ*

உள்ளுறை

	மொழி பெயர்ப்பாளரின் முன்னுரை	v
	Scheme of Transliteration	vi
1	தமிழ் மொழி வரலாற்றுக்கான அடிப்படைச் சான்றுகள்	1
2	மூலத் திராவிட மொழி	17
3	தென் திராவிட மொழிகளும் தமிழும்	31
4	குகைக் கல்வெட்டுக்களின் மொழி	53
5	தொல்காப்பியத் தமிழ்—ஒலியனியல்	68
6	தொல்காப்பியத் தமிழ்—உருபனியல்	101
7	சங்ககாலத் தமிழ்	146
8	பல்லவர், சோழர், நாயக்கர் காலத் தமிழ்	165
9	தமிழ் மொழியின் புற வரலாறு	219
10	இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்	268
	கலைச் சொற்பட்டியல்	302

1

தமிழ் மொழி வரலாற்றுக்கான அடிப்படைச் சான்றுகள்

1. 0 முன்னுரை

"பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு" என்பது அறிவியல் அடிப்படையில் முதன்முதலாக உயிரியல் மாற்றங்களை ஆராய்வதற்கே பயன்படுத்தப்பெற்றது. பின்னர் அக்கோட்பாடு மானிடவியலின் பல்வேறு துறைகளுக்கும் விரிவுபடுத்தப்பெற்றது. இந்தியாவைப் பொறுத்தவரையில் இப்பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு 'பரிணாம வாதம்' என்ற பெயரில் நெடுங்காலமாகவே வழங்கி வந்துள்ளது. ஆயினும் மொழி ஆராய்ச்சிக்கு அக்கொள்கை ஒரு போதும் பயன்படுத்தப் பெறவில்லை. ஏனெனில் உயர்தனிச் செம்மொழி அல்லது சரியான வழக்கு என்பதில் பற்றுக் கொண்டோர் அதனின்றும் மாறுபட்டவைகளையெல்லாம் பிழையானவை என்றும் இழிந்தவை என்றும் நம்பியதே இதற்குக் காரணமாகும். மேலும் இலக்கியம், தத்துவம், நியாயசாத்திரம், சமயம் முதலிய எத்துறையாயினும் அத்துறையின் பிற்கால வழக்குகளில் ஏற்பட்ட மாற்றங்களையெல்லாம் மூல நூல்களின் மீதே ஏற்றிச் சொல்லும் உரை மரபும் காரணமாகும். இவையன்றி என்றும் மாறாத இளமையுடையதாக, கன்னித்தாயாக, மொழியைத் தெய்வ நிலைக்கு உயர்த்தியமையும் மொழியை வரலாற்று முறையில் அணுகுவதற்கு இடையூறாக அமைந்தது. தமிழரும் தம்மொழியைக் 'கன்னித்தமிழ்' என்பர்.

எனவே இழிவழக்குகளின் வரலாறு (History of Corruption) என்பதினின்றும் வேறுபட்ட தமிழ்மொழி வரலாறு என்பது புதுமையானது; மரபு வழிப்பட்டோரால் பொதுவாகச் சரியானது என ஒத்துக் கொள்ளப்படாதது. திராவிடமொழிகள் அனைத்தும் அடிப்

† மூல ஆதாரங்கள் (Sources)

படையானதும் தூய்மையானதுமான தமிழிலிருந்தே தொடங்கி வளர்ந்தன என்று கருதியதால் கால்டுவெல்லின் திராவிடமொழி களின் ஒப்பிலக்கணமும் இந்த இழிவழக்குகளின் வரலாறு என்ற கொள்கைக்கே ஆக்கம் தந்தது. நமது பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி வரலாறு கற்பது தமிழ் மொழி வரலாறு ஒன்றின் தேவையை நமக்கு உணர்த்தியுள்ளது. எனினும் இத்தகைய வரலாற்றைத் தொடர்புறக்கூறும் தனித்ததொரு பாடநூல் எதுவும் இல்லை என்பதும் உணரத்தக்கது. இத்தேவையை ஓரளவு நிறைவு செய்யும் நோக்கிலேயே இந்நூல் அமைகிறது.

2. 0 மொழியின் மாறுபடும் இயல்பு

2. 1 சொற்களும் அவற்றின் பொருள்களும்

வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களில் அரசியல், பண்பாட்டு, வணிகத் தொடர்பிலான சூழ்நிலைகளால் தமிழ்மொழி பிறமொழிகளுடன் தொடர்பு கொள்ள நேரிட்டமையால் தமிழ் வழக்காற்றில் இணைந்துவிட்ட பல பிறமொழிச் சொற்களின் வரலாற்றைக் கூறும் 'தமிழின் புறவரலாறு' (External history of Tamil) இதில் முதலிடம் பெறுகிறது. தமிழ்மொழியின் சொற்றொகுதி (Vocabulary) வளர்ச்சியினை மொழியின் 'சொல் மாற்றம்' (Lexical change) என்ற வகையில் விளக்கலாம். இது தமிழ் மொழி வரலாற்றின் சுவையானதொரு பிரிவாக அமையும். இயற் சொற்களிலும் (Native words) பிற மொழிச் சொற்களிலும் (Foreign words) தொடர்ச்சியான பொருள் மாற்றங்களும் (Semantic changes) நிகழ்ந்துள்ளன. பொருள் மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட 'பொருளமைப்பை'க் (Semantic structure) காட்டி நிற்கின்றன. சமுதாயத்தில் காலத்திற்கு காலம் நிகழ்ந்த வளர்ச்சிப் போக்குகளை எதிரொலிக்கும் வகையில் வாழ்க்கையின் பலநிலைகளை வெவ்வேறு முறையில் வலியுறுத்திக் கூறுமுகத்தான் ஒருசொல் தன் பொருள் எல்லையிலிருந்து வேறொரு எல்லைக்கு மாறுதல் பொருள் அமைப்பில் ஒரு மாற்றத்தையே உணர்த்தி நிற்கிறது. சான்றாக 'அறம்' என்ற சொல் 'அறம்' என்ற பொருள் எல்லையிலிருந்து 'சமயம்' என்ற பொருள் எல்லைக்கு ஆழ்வார்கள், நாயன்மார்களின் பாக்களில் மாறுகிறது. இச்சொல் அடிப்படையில் 'நல் ஒழுக்கம்' என்ற பொருளையே தந்து பின் சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் நல்லன எல்லாவற்றையும் குறிக்கும் சொல்லாகியது.

2. 2 ஒலியனியல் (Phonology)

மற்ருெரு பிரிவு மொழியின் ஒலிகள் தொடர்பானது. ரகரமும் ஆடொலியாகிய றகரமும் (இவ்வொலி ஒரு காலத்தில் நுனியண்ணத் தடையொலியாக ஒலிக்கப்பெற்றது) தமிழில் பெரும்பாலான கிளை மொழிகளில் ஒன்ருகிவிட்டன. இது மொழியின் ஒலியன் அமைப்பையே (Phonemic structnre) மாற்றுகின்றது. ஆனல் ஈருயிரிடை வரும் கடையண்ணத் தடையொலியை உரசொலியாக ஒலிப்பது மொழியின் ஒலியன் அமைப்பைப் பாதிக்காத வெறும் ஒலி மாற்றமே.

2. 3 உருபொலியனியல் (Morphophonemics)

உருபொலியன் மாற்றங்கள் எனச் சில உள்ளன. அவை யாவன: (அ) உருபுகளின் வடிவம் அல்லது ஒலியன் அமைப்பில் மாறுபாடுகள். காட்டு: 'பொலன்' என்னும் சொல் 'பொன்' எனவும் 'மண்' என்னும் சொல் 'மண்ணு' எனவும் மாறுதல். (ஆ) இலக்கண வடிவுகளின் மாற்றங்களில் மாற்றங்கள். காட்டு : 'அதன்' என்னும் சொல் 'அதற்கு' என்ற சொல்லில் 'அதற்—' என்ற மாற்று வடிவத்தையும் பின்னர் 'அதனுக்கு' என்ற சொல்லில் 'அதனு—' என்ற மாற்று வடிவத்தையும் பெறுதல்.

2. 4 உருபனியல் (Morphology)

உருபன்களின் கட்டமைப்பிலும் மாற்றங்கள் உள்ளன. பழைய வடிவங்களுக்குப் பதிலாகவோ அல்லது கூடுதலாகவோ புதிய உருபன்கள் தோன்றுதலும் அல்லது உருபுகளை அடுக்கி வழங்கும் முறைமையில் மாற்றங்களும் இவ்வகையில் அடங்கும். செயப்பாட்டு வினை விகுதியின் வளர்ச்சியையும் துணை வினைகளின் வளர்ச்சியையும், (பால் விகுதிகள் தொடக்கக்காலத்தில் வழக்கில் இல்லை என்று கொண்ட நிலையில்) பால் காட்டும் விகுதிகளின் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுகளாகத் தரலாம்.

2. 5 தொடரியல் (Syntax)

தொடரியல் அமைப்பிலும் மாற்றங்கள் உள்ளன. காட்டு: 'நோகோ யானே' என்னும் தொடரில் யான் என்னும் எழுவாய் பயனிலைக்குப் பின்னுல் பழங்காலத்தே பெரிதும் பயின்று வந்துள்ளது. இதனை வெறும் செய்யுள் விகாரம் என்று தள்ளிவிடமுடியாது. இத்தகைய தொடரமைப்பு இன்றைய தமிழில் எழுவாய் முன்னும்

பயனில் பின்னுமாக அமையும் பெருவழக்கினின்றும் மாறுபட்ட பழைய வழக்கினைச் சுட்டி நிற்கிறது.

3.0 அடிப்படைச் சான்றுகள் (Sources)

3.1 இலக்கியம்

தமிழ் மொழியின் வரலாற்றுக்கான அடிப்படைச் சான்றுகளுக்கு இலக்கியங்களையே முதன்மையாகக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இலக்கியம் என்று குறிப்பிடுகின்ற பொழுது இலக்கியத் தரம் வாய்ந்த நூல்கள் என்ற வரையறைக்கு உட்படுத்தாது எல்லாப் பொருள்களையும் பற்றிய உரைநடை அல்லது செய்யுள் வடிவில் உள்ள எல்லாத் தமிழ் நூல்களையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். இங்கு இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் தள்ளப் பெற்ற இலக்கியமல்லாத நூல்களே ஒருவேளை நமக்குப் பெரும்பயன் தருவனவாக இருக்கலாம். நூல்களையும் இருவகைகளாகப் பிரித்தல் வேண்டும், 1. இலக்கிய மொழி நடையில் (literary language) அமைந்தவை. 2. பேச்சு மொழி நடையில் (Colloquial language) அமைந்தவை. மிகுந்த தொல்லைகளோடன்றி இலக்கிய மொழியில் பேச்சு மொழி வழக்குகளைக் கண்டறிதல் கடினமே. கலம்பகங்களிலும் சைவ, வைணவக் குரவர்கள் பாடிய பாடல்களிலும் நாட்டுப் பாடல்களிலும் தற்காலப் பாடல்களிலும் பேச்சு வழக்கிலுள்ள சில தொடர்கள் மீட்டும் மீட்டும் வருதலைக் காணலாம். ''பழமொழி'' போன்ற சில இலக்கிய நூல்களில் குறித்துப் பாதுகாக்கப் பெற்று வரும் பழமொழிகள் பேச்சு வழக்கு இலக்கியத் திறனைச் சார்ந்தன ஆயினும் இலக்கிய மொழி நடையிலேயே காணப்பெறுகின்றன. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்குப் பின்னரே பாமர மனிதனின் தேவைகளை நிறைவு செய்கின்ற இலக்கியங்கள தோன்றி வளர்வதனைக் காண்கிறோம். இவ்வகையில் கள்வனின் பாட்டாகிய நொண்டிச்சிந்து, குடியானவரின் நாடகமாகிய பள்ளு, கட்டபொம்மன் கும்மி, ராமப்பையன் அம்மானை, கான்சாகிப் சண்டை போன்ற பழையனவும் புதியனவுமாகிய கதைகள், நிகழ்ச்சிகள் ஆகியனவற்றை எளிய நடையில் விளக்கும் பல அம்மானைகள் ஆகியனவற்றைச் சுட்டலாம். பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் படித்தறியாத பாமரமக்களின் பேச்சுவழக்குக்கள் கொண்ட நாடகங்கள், புதினங்கள் ஆகியவற்றைக் காண்கிறோம். இவை பேச்சு வழக்கினை ஆராய்வதற்கு இன்றியமையாதன.

3. 1. 1 எச்சரிக்கைகள் (Safeguards)

மேற்கூறியவற்றை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்கின்ற போது மிக்க கவனத்துடன் பயன்படுத்துதல் வேண்டும். முதலாவதாகப் பல நூல்களுக்கு நல்லனவும் நம்பக்கூடியனவு மான பதிப்புக்கள் இல்லை. பல நூல்கள் பதிப்பிக்கப்பெறுமல் உள்ளமையால் அவற்றை ஏடு அல்லது கையெழுத்துப்படி நிலையிலேயே ஆராய வேண்டியுள்ளது. அப்படியே நூல்கள் மிக நல்லமுறையில் கிடைப்பதாயிருந்தாலும் அவை பழையனவும் புதியனவுமாகிய வழக்காறுகளைக் கொண்ட அருங் காட்சியகமாகவே உள்ளன. தமிழ்ப் புலவர்கள் "முன்னோர் மொழி பொருளே யன்றி யவர் மொழியும் பொன்னே போற் போற்றுவர்".[1] பேச்சுமொழி இலக்கியங்களில் கூடப் புலவர்கள் வட்டார வழக்கு மாற்றங்களைக் குறிக்க இயலாத நிலையில் உள்ள தமிழ் நெடுங்கணக்கினையே பயன்படுத்துவதால் பழைய ஒலிப்பு முறையினைக் கண்டறிதல் கடினமாகின்றது.

3. 2 தமிழ்ச் சான்றோர் இயற்றிய இலக்கண நூல்கள்

அடுத்து நமக்குக்கிடைக்கும் அகச்சான்றுகளாவன இலக்கணங் களும் அவற்றின் உரைகளுமே. மொழியின் அமைப்பினை விளக்க எழுந்த சிறந்த முயற்சிகள் இவை. நல்ல காலமாக இந்நூல்களில் தமிழ் ஒலிகள் பற்றிய ஒலிப்பு முறை விளக்கங்கள் உள்ளன. இது போலப் புணர்ச்சி மாற்றங்களும் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. மொழியினது உருபனியல் பற்றி விளக்கும் பகுதியும் இங்கு உண்டு.

3. 2. 1 எச்சரிக்கைகள்

மேற்கூறிய அகச்சான்றுகளையும் மிகுந்த எச்சரிக்கையுடனேயே கையாளல் வேண்டும். ஏனெனில் பழைய கருத்துக்களையே தங்கள் காலத்திய மொழியில் விளக்குகின்ற போக்கே இந்நூல்களில் காணப் படுகிறது. மேலும் பின்னைய இலக்கண ஆசிரியர்கள் ஒலிப்பு முறை களைப் பற்றி விளக்கும் பொழுது தங்கள் காலத்தில் வழக்கிலி ருக்கும் ஒலிப்பு முறையினை ஆராய முயற்சி செய்தார்களா என்பது ஐயத்திற்குரியது. எடுத்துக்காட்டாகப் பின்னைய இலக்கண ஆசிரியர் ஒருவர் அடிநா அடியண முறயத்தோன்றும் என்று யகரத்தின் ஒலிப்பு முறைபற்றிக் கூறுவதைச் சுட்டலாம்.[2]

---

1 நன்னூல் 9

2 நன்னூல் 82

3. 3 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் மூலநூல் முழுவதற்குமே விளக்கம் கூறப் பெரிதும் முற்பட்டிருக்கிறார்கள். தம் காலத்திய வழக்காறுகளுக்கெல்லாம் தொல்காப்பியத்தைத் தக்க முறையில் விளக்குவதன் மூலம் அந்நூலிலேயே விதிகளைக் காண முற்படுவதை இங்குச் சான்றாகச் சுட்டலாம்.[3]

பல்வேறு காலங்களில் எழுதப்பட்ட இவ்வுரை வேறுபாடுகள், பழைய நூல்களில் குறிப்பிட்டுக் கூறப்படும் வழக்காறுகளிலிருந்து மாறுபட்டனவும், புதிதாய் நிலைபெற்றனவுமான தம் காலத்திய வழக்காறுகளைப் பற்றிய பொதுவான செய்திகளை அறிய உதவுகின்றன. இம்முறையில் இவ்வுரைகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளெல்லாம் கால வேறுபாட்டின் காரணமாக மாறிய வழக்காறுகளின் அடிப்படையில் அமைகின்றன. நிலைபெற்ற வழக்காறுகளிலிருந்து தம் காலகட்டத்தை ஒட்டி மொழியமைப்பில் ஏற்பட்ட சில மாறுதல்களை இந்த உரையாசிரியர்கள் உணர்ந்தே உள்ளனர். எனவே மொழியானது மாறுதலுக்கு உள்ளாகிறது என்பதையும் அவர்கள் உணர்ந்தே இருந்தனர் எனக் கருதலாம். உரையாசிரியர்களின் அடிப்படை ஆதார நூலான தொல்காப்பியமே ''கடிசொல் இல்லை காலத்துப் படினே'' எனக் கூறுகிறது.[4] எனவே மொழியில் நிகழும் மாறுதல்களுக்கு அவை இலக்கிய வழக்கினைக் குறிப்பனவாயிருப்பினும், சான்றுகள் இவ்வுரை நூல்களில் உள்ளன எனலாம். எனவே மொழி வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களின் அடிப்படையில் பல்வேறு மொழி வழக்காறுகளை வேறு பிரித்து அறிந்து கொள்வதற்கு இவ்வுரை நூல்களையும் அவ்வுரை விளக்கத்திற்கு அடிப்படையான இலக்கியங்களையும் கவனமாக ஆராய்ந்து ஒப்பிட்டுக் காணல் வேண்டும்.

3. 4 வெளிநாட்டவர் எழுதிய இலக்கணங்கள்

தமிழ்ச் சான்றோர் எழுதிய இலக்கண நூல்களைத் தவிர வெளிநாட்டவர், குறிப்பாக மதபோதகர்கள், வெளிநாட்டவர் தமிழைக் கற்கும் வகையில் எழுதிய இலக்கண நூல்களும் உள்ளன. மேற்கத்திய நாடுகளோடு கொண்ட தொடர்புகளின் முக்கியமான

---

3 தொல்காப்பியம் 147 நச்சினார்க்கினியர் உரை

4 தொல்காப்பியம் 935

விளைவுகளில் இதுவும் ஒன்றாகும். போர்ச்சுக்கீசிய மொழியில் தமிழ் இலக்கண நூல் ஒன்று இருந்ததாம். ஆனால் அது நமக்கு இன்று கிடைக்கவில்லை டச்சுக்காரரான பால்தே (Baldaeus) என்பார் எழுதிய இந்தியாபற்றிய நூலில் தமிழ்மொழி பற்றிய ஒரு பிரிவு உள்ளது. தமிழ் மொழியின் உச்சரிப்புக்கள், அதன் பெயர்ச் சொற்களின் வேற்றுமைப் பாகுபாடுகள், வினைச்சொற்களின் வினை விகற்ப வாய்பாடுகள் முதலியவற்றோடு இயேசு பெருமான் மீதான 'கர்த்தர் கற்பித்த செபத்தின்' (Lord's Prayer) தமிழாக்கம் ஒன்றினையும் இதில் இணைத்துள்ளார்.[5] தமிழ்ச்சொற்கள் இந்நூலில் டச்சு நெடுங்கணக்கில் எழுதப்பட்டுள்ளன. தக்காணக் கல்லூரி ஆண்டு இதழில் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டு அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.[6] 1680 ஆம் ஆண்டில் கோஸ்டா பால்த்சரா (Costa Balthsara)[7] என்பார் தமிழ் இலக்கணம் ஒன்றை இலத்தீன் மொழியில் எழுதினார். புருனோ (Bruno) என்பார் 1685 ஆம் ஆண்டில் ஒரு தமிழ் இலக்கணநூல் எழுதியதாக அறிகிறோம்.[8] ஆனால் இதுகாறும் இந்நூல் பதிப்பிக்கப்படவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் தரங்கம்பாடிச் சமயப் போதகர் குழுவைச் சேர்ந்த சீகன்பால்கு (Ziegenbalg) தமிழ் இலக்கண நூல் ஒன்றை எழுதினார்[9] ('ச்' என்னும் ஒலியை 'tsch' எனக் குறித்தல் காண்க). பின்னர் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் பேச்சுத் தமிழின் இலக்கணம் ஒன்றை எழுதினார்.[10] அதனுடைய சிறப்பினைக் குறைத்து மதிப்பிட முடியாது. பத்தொன்பது, இருபதாம் நூற்

---

5 Baldaeus, Amsterdam, 1672

6 J. A. B. Van Buttenen and P. C. Ganeshsundaram : "A Seventeenth Century Dutch Grammar of Tamil" *The Bulletin of the Deccan College*. Vol, 14, p p 168-182

7 Costa Balthsara Da : *Arte Tamulica*, Verapoli, 1680

8 Kamil Zvelebil : "A Czech Missionary of the Eighteenth Century, as author of a Tamil Grammar", *Tamil Culture* Vol. VI, No.4, p 338. Oct. 1955

9 B. Ziegenbalg : "*Grammatica Damulica*" Halae, 1716.

10 C. S. "Beschi : *Grammar of the Common Dialect of the Tamulian*" (Translation), Vepery, 1806.

ருண்டுகளில் எல்லீஸ், கால்டுவெல் போன்றோர் எழுதிய சிறந்த நூல்களும் உள்ளன.

ஒலிக்குறியீடுகள் எதுவும் இல்லாத நிலையில், இந்நூல்களிலுள்ள உச்சரிப்புப் பற்றிய விளக்கங்களையெல்லாம் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது. ஏனையோரது விளக்கங்களைக் காட்டிலும் தமிழ்ப்பாவலரும் அறிஞருமான பெஸ்கியின் விளக்கங்கள் பின்பற்றத்தக்கன. பெஸ்கி சுட்டிக்காட்டுவது போல இவ்விலக்கணநூல்கள் சிலவற்றில் நெடில் போன்ற சில முக்கியமான ஒலிக்குறிப்புக்கள் குறிக்கப்படவில்லை. பெஸ்கி தம் வாழ்வின் பெரும் பகுதிக் காலம் தமிழகத்திலேயே வாழ்ந்தார். தமிழகத்திற்குச் சிறிது காலம் வந்து சென்ற பால்தே போன்றோரின் நூல்களைவிட ஹாக்கெட்[11] குறிப்பிடுவதுபோல "நீண்டகாலம் மொழியுடன் நேரடியாகத் தொடர்புடைய" பெஸ்கி போன்றோரின் நூல்கள் நம்பத் தகுந்தன. பேச்சுத்தமிழோடு நெருங்கிய பயிற்சியின்மை காரணமாகவோ அல்லது தங்களது மறதியின் காரணமாகவோ சில தவறுகள் இந்நூல்களில் காணக் கிடக்கின்றன. சிலர் தமிழ்ச் சொற்களை வேற்று நெடுங்கணக்கில் எழுதும்பொழுது மயக்கமுற எழுதியுள்ளனர்.[12]

3. 5 அகராதிகள்

தமிழ்மொழி வரலாற்றுக்கான அடிப்படைச்சான்றுகளில் ஒன்றாக அகராதிகளையும் குறிப்பிடலாம். நம்முடைய ஆராய்ச்சியைப் பொறுத்த வரையில், செய்யுள் நடையில் எழுதப்பட்ட பண்டைக் காலத்திய நிகண்டுகள் என்பன பிற்காலத்தில் போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் தயாரித்த அகராதிகளைப் போல அவ்வளவாக நமக்கு உதவமாட்டா. போர்ச்சுக்கீசிய மொழியிலும் தமிழிலும் பெஸ்கி எழுதியுள்ள

---

11 C. F. Hockett : "Implications of Bloomfield's Algonquian Studies" in *Readings in Linguistics*, p p 283-284, 1958

12 பிரிழ்கில் (Pizikryl) என்பவர் 'சாகம்' (cagam) என்று 'காகம்' (kakam) என்பதையும், 'சை' (cai) என்று 'கை' (kai) என்பதையும் அசம் (acham) என்று ஓரிடத்திலும், பிறிதொரிடத்தில் அஸ்சம் (accham) என்றும் 'அச்சம்' (accam) என்பதை எழுதியுள்ளார்.

அகராதிகள் இவ்வகையில் அருஞ்சாதனைகளேயாகும். கிறித்துவ மதப்போதகர்கள் இதற்குப் பின்னர் பல அகராதிகளைத் தயாரித்துள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ச் சொற்களஞ்சியம்(Tamil Lexicon) இலக்கியப் பேச்சு, கிளைமொழி வழக்குகளைத் தருகிறது. இது தனித்தன்மையும், மிகுந்த பயனுள்ளதுமாகும்.

பர்ரோ, எமனோ ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளபடி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சொற்களஞ்சியமும் தமிழ்மொழியின் ஒட்டுமொத்தமான மொழிநூல் ஆவணமன்று.[13] இந்நூல் எழுதப் படுகையில் பல தமிழ்நூல்களின் காலம் முடிவு செய்யப்படாமல் இருந்தமையால் இந்நூல் வரலாற்று நெறியில் தயாரிக்கப்பட வில்லை என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

3. 6 கல்வெட்டுக்கள்

தமிழ்மொழி வரலாற்று ஆராய்ச்சிக்கு உதவும் அடுத்ததொரு அடிப்படைச் சான்று கல்வெட்டுக்களாகும். தமிழகத்தின் தென் மாவட்டங்களிலுள்ள குகைகளில் பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்ட சிறிய கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. இவை பிராமி வரிவடிவத்தின் தெற்கத்திய முறையில் எழுதப்பட்டவையாகும். கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் தொல் எழுத்தியல் (Paleography) ஆராய்ச்சி அடிப்படையில் இவற்றின் காலத்தைக் கிறிஸ்துவுக்கு முந்திய மூன்றும் இரண்டாம் நூற்றாண்டுகள் என மதிப்பிடுகின்றனர். அடுத்த சில நூற்றாண்டுகளைச் சேர்ந்த மிகச்சில கல்வெட்டுக்கள் நீங்கலாக கி பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை கல்வெட்டுக்களின் வரலாற்றில் நீண்டதொரு இடைவெளி காணப்படுகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து தற்காலம்வரை ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் உரிய ஏராளமான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை தவிர செப்பேடுகளும், அரசினர் மற்றும் தனியார் ஆவணங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றிலெல்லாம், அவ்வக் காலத்தைச் சேர்ந்த பேச்சு மொழி வழக்குகள் மிகுந்துள்ளதைக் காணலாம்.

பிற்காலத்திய கல்வெட்டுக்களில் செய்யுட் பகுதிகள் காணப் படுகின்றன. இலக்கிய அடிப்படைச் சான்றுகளைப் பயன்படுத்தும்

13 T. Burrow and M. B. Emeneau : *A Dravidian Etymological Dictionary*, p xviii

பொழுது நாம் கடைப்பிடிக்க வேண்டிய எச்சரிக்கைகளைப் பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். அவற்றையும் இங்குக் கருத்திற் கொள்ள வேண்டும்.

3.6.1 எச்சரிக்கைகள்

சில சமயங்களில் கல்வெட்டுக்களில் அவற்றை எழுதியோரின் நடையை மட்டுமே காண்கிறோம். அல்லது அக்காலத்தில் பொது ஆவணங்களில் செல்வாக்குடன் விளங்கிய நடையையே காண் கிறோம். அக்காலத்திய பேச்சு மொழியில் அல்லது செய்யுளில் இடம் பெற்ற பிற மொழிச் சொற்கள் இக்கல்வெட்டுக்களிலும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இப்பொது ஆவணங்களில் சட்டத் தொடர்பான பழைய மரபுத் தொடர்களும் பழங்கலைச் சொற்களும் காப்பாற்றப்பட்டுள்ளன. எனவே இவற்றின் காலத்தை அவை காணப்படும் கல்வெட்டுக்களின் காலத்தவைதான் என மதிக்கக் கூடிய ஆபத்தும் உள்ளது. மேலும் இந்த ஆவணங்கள் சிலவற்றின் காலத்தை முடிவு செய்வதும் கடினமானது. பல செப்பேடுகள் போலியானவை என ஆராய்ந்து தள்ளப்பட்டுள்ளன. மேலும் ஆவணங்களின் உண்மைத் தன்மையை முடிவு செய்வதிலும் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஆவணங்களை எழுதியோர் செய்த தவறுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். இத்தவறுகள் வெறும் கையெழுத்துப் பிழையன்றெனின் அவையும் நமது ஆராய்ச்சிக்கு முக்கியமானவையே ஆகும்.

பழந்தமிழ் நூல்களில் ஓலைச் சுவடிகளை வரலாற்றுப் பதி வேடுகளாகவும் ஆவணங்களாகவும் கருதலாம். ஓலைச் சுவடி எழுது வோர் அனைவரும் கற்றவர் அல்லர். எனவே அவர்கள் பேசிய முறையிலேயே எழுத விழைந்தனர். இவர்கள் செய்த பெரும் எழுத்துப் பிழைகள் கூட, அக்காலத்தின் மொழி நிலையை அறிய உதவக் கூடும். திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவர் ளகர மெய் யையும் ழகர மெய்யையும் வேறுபாடின்றி எழுதுவார் ஆயின், அது அவ்விரு ஒலிகளும் அக்கிளை மொழியில் ஒன்றுகவே கருதப் படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவதாகும். இந்நோக்கில் பார்க்கையில் நமது காலத்திய, அதற்கு முந்திய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்கள் எழுதிய கட்டுரைகள் கூட நம் ஆராய்ச்சிக்கு முக்கியமானவைகளே ஆகும்.

3.7 பிறமொழிக் கல்வெட்டுக்கள்

தமிழ்ச் சொற்களையும், தமிழர் பெயர்களையும், தமிழக இடப்பெயர்களையும் கொண்டுள்ள, இலங்கைச் சிங்களமொழிக் கல்வெட்டுக்களைப் போன்ற பிற மொழிக் கல்வெட்டுக்கள் தமிழ் மொழி வரலாற்றுக்கு அடிப்படைச் சான்றுகளாகப் பயன்படக் கூடியனவாகும்.

அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மட்பாண்டங்கள் சிலவற்றில் தென்மாவட்டங்களில் உள்ளது போன்ற பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. பண்டைய நாணயங்களில் காணப்படும் எழுத்துக்களையும் இவற்றோடு சேர்த்துக் கொள்ளலாம்.

3.8 ஆவணங்களை ஆராயும் முறை

இந்த ஆவணங்களை நமது ஆராய்ச்சி நோக்கங்களுக்கு உரிய அடிப்படைச் சான்றுகளாகப் பயன்படுத்தும் பொழுது ஏற்படும் பலசிக்கல்களை இங்கு ஆராயவேண்டும்.[14] உயர் தனிச் செம்மொழி களையும், இதர பிற மொழிகளையும் பொறுத்தவரையில் அறிவியல் முறையிலான 'பதிப்புமுறைத் திறனாய்வு' (textual criticism) மிகச் சிறந்து வளர்ந்துள்ளது. இதனைத் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக் கும் ஆசிரியர்கள் பலர் இன்னும் அறியாதிருப்பதும் இடர்ப்பாடு தருவதேயாகும்,

மேலும் தொல் எழுத்து ஆராய்ச்சியாளரும், கல்வெட்டு ஆராய்ச்சியாளரும் வரிவடிவங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து, இதுவரை அறியப்படாத பண்டைய வரிவடிவங்கள் பலவற்றின் தன்மையைக் கண்டுபிடித்து உள்ளனர். இருப்பினும் சிந்து சமவெளி நாகரிகத் தின் வரி வடிவம்பற்றிய உண்மைத்தன்மையைக் கண்டுபிடிப்பதில் அவர்கள் இதுவரை வெற்றி பெறவில்லை. ஓர் ஆவணம் முழுமை யாக அல்லது பகுதியாக அல்லது சில தொடர்கள் மட்டுமாவது இருமொழிகளின் வரிவடிவங்களிலும் எழுதப்பட்டிருக்குமாயின் அது ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவக் கூடியதாகும்.

மொழியியலாரும் ஒப்பிலக்கணத்தாரும் ஓர் ஒலிவடித்திற்கு ஒரு வரிவடிவம் என்ற முறைமையும் மாறிப்போகத்தக்க அளவில்

14 H. M. Hoenigswald : *Language Change and Linguistic Reconstruction*, p p 5-12

வரிவடிவ அமைப்பினுள் ஓர் ஒழுங்கமைதி ஏற்படவேண்டும் என்ற கருத்தில் வரிவடிவ ஆக்கமுறைகளைச் சீர்திருத்தி வருகின்றனர். எடுத்துக் காட்டாக, உச்சரிப்பில் ககர மெய்யோடு கூடிய அகரம், வரிவடிவத்தில் உயிர் மெய் எழுத்தான ககரக் குறியோடு குறிக்கப் படுவதே இயல்பு. ஆனால் சிற்சில இடங்களில் இதற்கு மாறாக வரி வடிவில் ககர மெய்வடிவோடு மட்டுமே அமைந்து நிற்கக் காணு கிறோம். இம்முறைகளின் பயனாகத் தமிழ் ஆவணங்களில் மெய்கள், சொல் முடிவுகள், வாக்கிய இடைவெளிகள் முதலியன குறிக்கப் படாத பொழுதும் அவற்றைப் படித்து விடலாம். வரிவடிவமுறை யின் பல்வேறு குறிப்புக்கள் மொழியின் ஒலியன் அமைப்பை அறிய மிகுந்த கவனத்துடன் பயன்படுத்தப்படுகின்றன. தமிழில் நுனியண்ண மூக்கொலியும், நுனிநா பல் மூக்கொலியும் ஒன்றான பின்னரும் வெவ் வேறானதாகவே எழுதப்படுகின்றன. இது வரிவடிவ மரபைக் குறிப் பதற்கேயாம். மொழிக்கு முதலில் ஓர் எழுத்தும், ஏனைய இடங்களில் மற்றோரெழுத்தும் பயன்படுத்தப்படுகின்றன, ஒரு மொழியின் வரி வடிவம் பிறிதொரு குடும்பத்து மொழிக்குப் பயன்படுத்தப்படும் பொழுது, முரண்பாடுகள் தோன்றுகின்றன. திராவிட மொழியான கோண்ட் மொழியை, தேவநாகரி வரிவடிவத்தில் எழுதும் பொழுது எகரம், ஒகரம் ஆகியவற்றைக் குறிப்பதில் இடர் ஏற்படுகிறது. (தேவநாகரி வரிவடிவத்தில் எகரமும் ஒகரமும் இல்லை என்பதை இங்கு நினைவிற்கொள்ள வேண்டும்.) உச்சரிப்பில் மாற்றங்கள் ஏற் பட்ட பிறகும், பழைய முறையிலேயே எழுதும் 'மரபின் நீட்சி' இருப் பினும் அது அம்மொழியின் வரலாற்று வளர்ச்சியை அறிய உதவும் குறிப்பைத் தருகிறது.[15]

மேலும் சிக்கலான ஆவணங்களின் ஒலித்திறனாய்வு இப் போது எளிதாகி வருகிறது. இவற்றில் உள்ள பிழையான எழுத்துக்கள், யாப்பியல், கலை மரபுகள் என்பன சரியான உச் சரிப்பைக் கண்டறிய உதவுகின்றன. ஒரு மொழியின் வரிவடிவம் பிறிதொரு மொழியை எழுதப்பயன்படும்பொழுது, அம்மொழி ஒலிப்பு முறை பற்றிய உண்மை நிலையை அறிந்து கொள்ள அது பெரிதும் உதவுகிறது. பெரும்பாலான இந்திய வரிவடிவங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்றே கூறலாம் ; குறிப்பிட்ட வட்டாரத்தில் வழங்கும் உச்சரிப்பின் தனிப்பட்ட வளர்ச்சிகள்

---

15 Herbert Penzle: *The Evidence for Phonemic Changes* Studies presented to Joshua Whatmough, p 293

என்ற வரையறைக்கு உட்பட்டு, பல்வேறு மொழிகளிலுள்ள எழுத்துக்களின் உச்சரிப்புத் தன்மையைத் தெளிவாக அறிந்து கொள்ள இக்குடும்பப் பாங்கின் அமைப்பு உதவுகிறது. புதிய ஒலிகளின் உச்சரிப்பிற்காகப் புகுத்தப்பட்ட ஒலிக் குறியீட்டுப் புள்ளிகளும் கோடுகளும் (diacritical marks) பெறும் மதிப்பை அறியவும் இம்முறை உதவியுள்ளது. இந்த முறையில்தான் தமிழ்க்குகைக் கல்வெட்டுக்களின் பிராமி எழுத்துக்கள் ஆராய்ந்து வாசிக்கப் பட்டன. சமஸ்கிருதத்திலிருந்து இந்திய மொழிகள் கடன் பெற்ற உருபன்களின் ஒலிமதிப்பு தெரிந்திருப்பது, இத்தகைய ஒலி ஆராய்ச்சிக்கு பெரிதும் உதவக் கூடியதாகும். ஒலியன்களைத் தரும் ஒப்பீட்டு முறையானது, மூல ஒலிகளுக்கும் (Original Sounds) பின்னர் ஆக்கப்பட்ட ஒலிகளுக்கும் (Derived Sounds) இடையே உள்ள பொதுமைப் பண்புகளை ஆராய இடந்தருகிறது.

3. 9 பிறமொழியாளர்கள் குறிப்புரைகள்

தமிழ்ப் பெயர்களையும் சொற்களையும் பற்றிப் பிற மொழிகளில் வழங்கும் குறிப்புக்கள், அடுத்துக் குறிப்பிடப்பட வேண்டிய தொரு மூல ஆதாரமாகும். கி.மு. நான்காம் நூற்றுண்டைச் சேர்ந்த வரருசியும் (Vararuci) கி.மு. இரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த பதஞ்சலியும் (Patanjali) குறிப்பிடும் சில தென்னிந்தியச் சொற்களுடன் இதைத் தொடங்கலாம். இதற்குப் பின்னர் பாலி, சமஸ்கிருதம்,[16] பிராகிருதம் ஆகிய மொழிகளின் இலக்கியங்களிலும், குமாரில பட்டரின் (Kumarila Bhatta) 'தந்திர வார்த்திகா' (Tantra Varttika) போன்ற நூல்களிலும், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற திராவிடக் குடும்ப மொழிகளிலும் குறிப்புக்கள் வருகின்றன. கி.பி. பதினுன்காம் நூற்றுண்டைச் சேர்ந்த 'லீலா திலகம்' (Lila Tilakam) என்னும் மலையாள நூல் பாண்டிய நாட்டிலும், சோழ நாட்டிலும் நிலவிய சில வழக்காறுகளையும் உச்சரிப்புக்களையும் குறிக்கின்றது. இதற்கு முற்பட்ட இராமசரிதம் போன்ற மலையாள நூல்கள், தமிழ் நூல்களே எனக் கூறப்படுவது முண்டு. மேலும் கல்வெட்டுக்களில் உள்ள சமஸ்கிருத சுலோகங்

---

16 சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் முதலிய மொழிகளை 'வட மொழி' என்று குறிப்பதால், Sanskrit என்பது 'சமஸ்கிருதம்' என்றே இம்மொழி பெயர்ப்பில் ஆளப்பட்டுள்ளது.

களில் அம்மொழி வரி வடிவத்திலேயே தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

இவற்றைத் தவிர இந்நாட்டிற்கு வந்த வெளிநாட்டவர் இங்குள்ள நகரங்களையும் துறைமுகங்களையும் ஏற்றுமதிப் பொருட்களையும் பற்றிக் குறிப்பிட்டு உள்ளனர். மெகஸ்தனீஸ் (Megasthenes), பெரி புளுஸின் ஆசிரியர் (the author of the Periplus) ப்ளினி (Pliny), தாலமி (Ptolemy) போன்றோர் இத்தகைய செய்திகளைத் தருகின்றனர். சீன யாத்திரிகர் யுவான் சுவாங் (Hieun Tsang) இவ்வகையில் முக்கியமானவர். மேலை நாடுகளிலிருந்து வந்த மார்கோபோலோவும் (Marcopolo) பிற யாத்திரிகர்களும் நமது ஆராய்ச்சி நோக்கில் முக்கியமானவர்கள். கிறிஸ்துவச் சமயப் போதகர்கள் தம் நாட்டிற்கு அனுப்பிய கடிதங்களை இந்நோக்கோடு ஆராய்வது பெரும் பயன் தருவதாகும். அரசுப் பதிவேடுகளிலும், விதிமுறைகளிலும், ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள தமிழ்ப் பெயர்களும், மேலைநாட்டு மொழிகளின் அகராதிகளில் புகுந்து விட்ட தமிழ்ச் சொற்களும் ஆராய்வதற்கு உரியன ஆகும்.

பிற மொழி வரிவடிவங்களில் எழுதப்பட்ட சொற்கள் அம் மொழிகளின் இயல்புகளுக்கு ஏற்ப மாற்றி எழுதப்பட்ட சொற்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கூறமுடியாது. காலத்துக்குக் காலம் மாறிய உச்சரிப்பு மாற்றங்களை எல்லாம் புரிந்து கொள்ள இலக்கியங்களும், பிற தமிழ் நூல்களும் உதவமாட்டா. பிற மொழி மூலங்கள் எல்லாம் தமிழ்ச் சொற்கள் பிற மொழியாளர்களால் எவ்வாறு கேட்கப்பட்டன என்ற செய்தியைத் தருகின்றன. தங்களது தாய்மொழியின் ஒலியன் அமைப்புக்கு இயைய தமிழ் ஒலிகளைப் பிறமொழியாளர் கேட்டிருக்கக் கூடும் என்ற உண்மையை, இவ் அடிப்படைச் சான்றுகளைப் பயன்படுத்தும் பொழுது கருத்திற் கொள்ள வேண்டும்.

பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஏற்றுப் பயன்படுத்தியிருப்பதும் நம் ஆய்வுக்குரியதாகும். கடன் தரும் மொழியின் ஒலியன் அமைப்புக்கு இணையான கடன் வாங்கும் மொழியில் உள்ள ஒலியன் அமைப்பை அவை தருகின்றன. ஆனால் எந்த ஒலியன் தொடர் அந்நிய மொழி ஒன்றின் ஒலியன் தொடருக்கு நெருங்கியது என்பதைக் கணிப்பது இயலாது. கடன் வாங்கப் பட்ட சொற்களின் ஒலியன் அமைப்பைக் கொண்டே நெருங்கிய உறவுடைய ஒலியன் பற்றிய முடிவுக்கு வரவேண்டும்.

3. 10 கிளை மொழிகள்

தற்காலக் கிளை மொழிகளைப் பற்றிய ஆய்வுகள், தற்காலப் பேச்சு மொழியின் அடிப்படை இயல்புகளைக் காட்டுவதுடன், பழைய வழக்கு ஆறுகளையும் வெளிக் கொணர்கின்றன. திருநெல்வேலிக் கிளை மொழியில் உள்ள முன்னிலைப் பன்மை வடிவமான 'நீம்', குரல் வளை வெடிப்பொலி (glottal stop) உச்சரிக்கப்படுதல் போன்ற வற்றைச் சான்றாகக் காட்டலாம். பல பொருள் குறிக்க ஒரு சொல் வருவதன் விளைவான 'மொழி இயல் நோயைத்' (linguistic pathology) தீர்க்கக் கிளை மொழிகள் வழி முறைகளைப் பெற்றுள் ளன. சான்று : 'உத்தரம்' எனும் சொல் 'உத்தரக்கட்டை', 'பதில் அல்லது அனுமதி' ஆகிய இருபொருளைக் குறித்தது. பின்னர் இரண்டாவது பொருளைக் குறிக்க, 'உத்தாரம்' என்ற சொல் தோன்றியது.

3. 11 ஒப்பியல் முறை

இறுதியாகத் திராவிட மொழிக் குடும்பத்தை ஆராய மொழி இயலார் பயன்படுத்தும் ஒப்பியல் முறையைக் குறிக்க வேண்டும். இந்தோ – ஐரோப்பிய மொழி ஒப்பியல் ஆய்வு அடைந்துள்ள அளவு வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் திராவிட மொழி ஒப்பியல் ஆய்வு இன்னும் அடையவில்லை. இன்றுள்ள நிலையில் ரோமன்ஸ் மொழி[17] (Romance Languages) ஒப்பியல் ஆய்வு அடைந்துள்ள வளர்ச்சி நிலையிலேயே திராவிட மொழி ஒப்பியல் ஆய்வும் உள்ளது. இதனால் திராவிட மொழிகளின் 'மூல-மொழியை' (Proto-language) இந்தோ-ஐரோப்பிய மொழி ஒப்பியல் ஆராய்ச்சியில் உள்ளதுபோல, மிகப் பழைய காலத்திற்குக் கொண்டு சென்று ஆராய முடியாது எனவே புதிய ஆராய்ச்சி முறைகள் வகுக்கப் பட்டுச் செம்மைப்படுத்தப்பட வேண்டும். அமெரிக்காவைச் சேர்ந்த எமனோ (M. B. Emeneau) இங்கிலாந்தைச் சேர்ந்த பர்ரோ

---

17 "லத்தீன் மொழியிலிருந்து கிளைத்தெழுந்த பிரெஞ்சு, ஸ்பானிஷ், இத்தாலியன், போர்ச்சுகீஸ் போன்ற மொழிகள் ரோமான்ஸ் குடும்ப மொழிகளாகும். இம்மொழிக் குடும்பம் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலிருந்து பிரிந்ததாகக் கொள்ளப்படும்" Mario Pei : *Glossary of Linguistic Terminology*, p 236, 1966

(T. Burrow) போன்ற மேலை நாட்டவர்கள் இந்த ஆய்வில் மிகுந்த ஆர்வம் காட்டி உள்ளனர். அவர்களின் வழிகாட்டுதலுடன் தென்னக அறிஞர்கள் பலர் இத்துறையில் நற்பணி ஆற்றியுள் ளதையும் நினைவு கூர வேண்டும். திராவிட மொழிகளின் அடிச் சொல் அகராதி (Dravidian Etymological Dictionary) இதுவரை நிகழ்ந்த திராவிட மொழி ஆய்வுகளின் மொத்த விளைவென்றே சொல்ல வேண்டும். இவ் அரிய களஞ்சியத்தைப் பயன்படுத்தி தமிழ்ச்சொற்களை அவற்றிற்கு இனமாக உள்ள பிற திராவிட மொழிச் சொற்களோடு ஒப்பிட்டு ஆராய எனக்கு இங்கு போதிய வாய்ப்பில்லை. அத்தகைய ஆய்வு தமிழ் வடிவங்களின் வரலாற்றை விளக்கப் பெரிதும் உதவும் என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

2

மூலத் திராவிட மொழி

1.0 திராவிட மொழி ஆராய்ச்சியின் வரலாறு

ஒரே குடும்ப மொழிகளை ஆராய்தல் என்ற அடிப்படையில் திராவிட மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சி 19 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது எனக்கூற முடியவில்லை. குமரில பட்டரின் 'தந்திர வார்த்திகா'வில் பிழையான பாடத்தின் அடிப்படையில் கால்டுவெல், 'ஆந்திர திராவிட' என்ற சொல்லைத் தெலுங்கு, தமிழ் மொழிகளைக் குறிக்கும் நோக்கத்தில் குமரில பட்டர் பயன்படுத்தியதாகச் சொல்கிறார்.[1] அச்சொல் உண்மையில் 'திராவிட ஆந்திரா' அன்று; மாறாகத் 'திராவிட ஆதி' (Drāvida ādi = திராவிட முதலியன) என்பதேயாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த எல்லீஸ் என்பவர், தமது கட்டுரைகளில் (இவற்றில் ஒன்று 1816 ஆம் ஆண்டில் ஆர்டென் (Arden) என்பாரின் 'தெலுங்கு இலக்கணம்' (*Telugu Grammar*) என்ற நூலின் முதற்பதிப்பில் வெளியானது) மிக நெருங்கிய உறவுடைய ஒரு குழுவாக அமையும் முறையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டினர். கால்டுவெல் 1856 ஆம் ஆண்டில் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் தமது சிறப்புமிக்க நூலை வெளியிட்டுத் திராவிடமொழி ஒப்பியல் ஆய்வுத் துறைக்கு வலுவானதொரு அடிப்படையை அமைத்தார். இந்திய விடுதலைப் போரின் தொடக்கம் எனக் கூறப்படும் "சிப்பாய்க் கலகம்" தொடங்கிய அதே ஆண்டில் தான் இந்நூல் வெளியானது என்பது அறிதற்குரியது. யூல் ப்ளாக்

---

1 R. Caldwell : *A Comparative Grammar of the Dravidian Languages*, p 4

சுட்டிக்காட்டுவது போல, இந்தோ-ஐரோப்பிய மொழிகள் அல்லாத ஏனைய உலக மொழிகளிலும் திராவிட மொழிகள் அல்லாத ஏனைய இந்திய மொழிகளிலும் இத்தகைய ஒப்பியல் ஆய்வுகள் தொடங்கியிராத காலம் அது.[2]

இந்தோ-ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியைப் பொறுத்த அளவிலும் அறிஞர்களான பாப் (Bopp), கிரிம் (Grimm) முதலானோர்கள் கால்டுவெல் ஒப்பிலக்கணத்தை எழுதிய காலத்தில் உயிரோடிருந்தவர்களே. கால்டுவெல்லின் நூல் வெளியாவதற்கு முன்னர் நான்கு ஆண்டுகளுக்குள்தான் ஸ்லாவ் (Slav), கெல்டிக் (Celtic) மொழிகளின் இலக்கணம் வெளியாயிற்று. கால்டுவெல்லின் நூல் வெளியான அதே ஆண்டில் ஷ்லேசர் (Schleicher) எழுதிய லத்துவேனிய (Lathuania) மொழி இலக்கண நூலும் வெளியானது. புத்திலக்கண ஆசிரியர்கள் ஆராய்ச்சி அரங்கில் வரத் தொடங்காத காலம் அது. எனவே, இத்தகைய சூழ்நிலையில் கால்டுவெல் எழுதிய இந்த நூலின் பெருமையைக் குறைத்துக் கூற முடியாது. அவர் காலத்தில் ஒலியியல்துறை வளர்ச்சியுற்றிருக்கவில்லை. கால்டுவெல்லின் ஒப்பிலக்கண ஆராய்ச்சி, அக்காலத்தில் அறியப்பட்ட எல்லாத் திராவிட மொழிகளையும் கருத்திற் கொண்டதெனினும், அடிப்படையில் அது தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு திருந்திய திராவிட மொழிகளை அடிப்படையாகக் கொண்டதே ஆகும். அக்காலத்தில் ஏனைய மொழிகளைப் பற்றிய ஆய்வுக்குரிய செய்திகள் குறைவே. ஆகையால் கால்டுவெல்லின் நூலை தெலுங்கினை உள்ளடக்கிய நான்கு 'தென் திராவிட மொழிகளின்' ஒப்பிலக்கணம் என்றே கூறலாம். 'உலகு படைக்கப்பட்ட நாளில் ஒரே மொழிதான் இருந்தது' என்ற விவிலிய நூலின் கருத்தை நிறுவுவதற்காக இந்நூலின் பெரும்பகுதி திராவிட மொழிகளைப் பிற குடும்ப மொழிகளுடன் ஒப்பிட்டுக் காட்டுவதற்கே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழ்ச் சொற்களின் தொன்மையும் தூய்மையும் கால்டுவெல்லைப் பெரிதும் கவர்ந்திருக்கலாம். எனவே பழமையானவை என இன்று கருதப்படும் பிற திராவிட மொழிச் சொற்களுக்குப் பதில் தமிழ்ச்சொற்களே பழமையானவை எனக் காட்ட அவர் விழைந்தார் எனக்கருதலாம்.

---

2 Jules Bloch : *The Grammatical Structure of Dravidian Languages* [English translation], Poona, pp. xxviii–xxix

கால்டுவெல்லின் நூல் வெளியாகி நூற்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது; ஆனால் இப்புதிய துறையில் முதலடி எடுத்து வைத்த இம்முன்னோடியின் பணிகள் இன்றளவும் நிலைத்துள்ளன. இதற்குப் பின்னர் நடைபெற்ற பணிகளில் "இந்திய மொழிகளின் கணக்கீடு" (*Linguistic Survey of India*) ஒரு பெரும் முயற்சியாகும். முண்டா மொழிகள் திராவிட மொழிகள் பற்றி ஸ்டென்நோவ் (Sten Konow) அவர்களால் தயாரிக்கப்பட்ட, "இந்திய மொழிகளின் கணக்கீட்" டின் நான்காவது தொகுதி விரிவான ஆய்வின் முடிவன்று. இந்திய அறிஞர்கள் சிலரும் திராவிடமொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அவர்களில் காலஞ்சென்ற திரு L. V. இராமசுவாமி ஐயரவர்களே மிகுதியும் எழுதியவர். யூல்ஸ் ப்ளாக்கின் "திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு" (*Grammatical Structure of the Dravidian Languages*) என்னும் நூல் 1946 ஆம் ஆண்டில வெளியானது. 'கோலாமி' (*Kolami*) மொழிபற்றிய தமது நூலில் எமனோ, கோலாமி மொழிச் சொற்பட்டியல் ஒன்றைத் தந்து அதனுடன் பிற திராவிட மொழிச் சொற்களையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். எமனோவும் பர்ரோவும் வெளியிட்டுள்ள "திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி" திராவிடமொழி ஒப்பியல் ஆய்விற்கு மிகவும் முக்கிய மானது என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். பல்வேறு அடிப் படைச் சான்றுகளிலிருந்து கிடைக்கும் மூலங்களைச் (material) சோதித்துச் சரிபார்த்து, பகுத்து, ஆய்வு நடத்தி, திருத்தித் தொகுத்துத் தரப்பட்டுள்ள ஒரே நூல் என்ற வகையில் இந்நூல் மிகவும் சிறப்புடையது. இவ்வகராதியின் மற்றொரு பதிப்பாசிரிய ரான பர்ரோ "கீழ்த்திசை, ஆப்பிரிக்கா தொடர்பான ஆராய்ச்சி நிலையத்தின் இதழில்" (*Bulletin of the School of Oriental and African Studies*) வரலாற்றுச் சிறப்புடைய திராவிட மொழி ஒப் பியல் ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் நிரப்பப்பணி செய்துள்ளார். இந்தியாவைச் சேர்ந்த இளம் ஆராய்ச்சியாளர்கள் சிலர் இவ்விரு அறிஞர்களின் கீழ் பணியாற்றிவருகின்றனர். இவர்களில் பர்ரோ வுடன் உழைத்த இந்திய அரசு மானிடவியல் ஆராய்ச்சித் துறை யைச் சேர்ந்த திரு. பட்டாச்சாரியாவை மறக்க முடியாது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் எனது மேற்பார்வையின் கீழ்ப் பல மாணவர்கள் ஏழாம் நூற்றாண்டு, அதற்குப் பிந்திய நூற்றாண்டு களின் கல்வெட்டுக்களின் மொழி பற்றியும், தமிழ் இலக்கியங்களின்

மொழி பற்றியும் ஆராய்ந்து வருகின்றனர்.[3] என்றாலும் இப்பணிகள் இன்னும் முடிவுறவில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து மொழியியல் துறை பேச்சு மொழி பற்றியும் கிளைமொழிகள் பற்றியும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. பேச்சுமொழி பற்றிய ஆராய்ச்சி ஒன்று முன்னரே முடிவடைந்து உள்ளது.

2. 0 திராவிட மொழிகளின் எண்ணிக்கையும் அவை வழங்குமிடங்களும்

திராவிட மொழிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என அறியும் முன்னரே மேலை நாட்டவர் அம்மொழிகளை ஆராய்ந்துள்ளனர். திருந்திய திராவிட மொழிகளின் ஆராய்ச்சி குறித்து முன்னரே குறிப்பிடப்பட்டது. ஏனைய திராவிட மொழிகளைப் பொறுத்த அளவில் கூர்க், துளு ஆகிய மொழிகளை முன்னரே அறிந்திருந்தனர். 1798 ஆம் ஆண்டிலேயே ராபர்ட்ஸ் என்பவர் அவை பற்றிய சில செய்திகளைத் தந்துள்ளார்.[4] 1837 ஆம் ஆண்டில் தோதர் மொழி அறியப்பட்டது.[5] 1838 ஆம் ஆண்டில் பிராகூய் மொழி கண்டறியப்பட்டது.[6] 1849 ஆம் ஆண்டில் கோண்டிமொழி

---

3 V. Jayakumari : *A study of the Language of Tamil inscriptions from Seventh Century up to the middle of the Eleventh Century A. D.* ; S. Baghirathi : *The Language of the Tamil Inscriptions (950-1250 A. D.)*; Thananjayaraja Singam : *Language of some Ceylon Dutch Documents*; Seethabai : *A study of Index Verborum of Tolkāppiyam* ; Sadhasivam : *A Study of Aiṅkuṟunaṟu* S. N. Kandasami : *Linguistic Study of Paripāṭal* ; Parameswari : *Language of Tirukkuṟal* ; Kamatchi Srinivasan : *Language of Iṟaiyanār Akapporuḷ Urai*

4 R. E. Roberts : Asiatic Researches, 5-127-30 [1798 A. D.]

5 Bernhard Schmid : "On the dialects of the Todavers the aborigines of the Neelgerries, Madras" *Journal of Letters and Science V*, pp 155-158

6 R. Leech : "Emotome of the grammar of the Brahuiky", *Journal of the Asiatic Society*, Bengal, Vol. VII, p p 538

கண்டறியப்பட்டது.[7] 1853 ஆம் ஆண்டில் லெட்சுமாஜி (Letchmajee) என்பவர் கூய் மொழிக்கு இலக்கணம் ஒன்றை வெளியிட்டார்.[8] கோலாமி மொழி 1866 ஆம் ஆண்டிலும்[9] மால்டோ மொழி 1884 ஆம் ஆண்டிலும் அறியப்பட்டன.[10] பார்ஜி மொழி பற்றியும், பிற திராவிட மொழிகள் பற்றியும் "இந்திய மொழிகளின் கணக்கீடு" குறிப்பிடுகிறது. கோண்டாவும் கதபாவும் 1956 ஆம் ஆண்டில் அறியப்பட்டன. குறவா (Kurava) என்றும் எருக்கலா (Erukala) என்றும் வழங்கப்படும் 'இருளா' என்னும் கிளைமொழி திராவிடமொழிகளைச் சேர்ந்த கிளை மொழியாக இப்போது கருதப்படுகிறது.

1961 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்புப்படி, பல்வேறு திராவிடக் குடும்ப மொழிகளைப் பேசுவோரின் தொகை வருமாறு.* பேசுவோர்களின் எண்ணிக்கை பேரெண் அளவில் தரப்பெற்றுள்ளன.

1	தெலுங்கு	3.767	கோடி
2	தமிழ்	3.056	கோடி
3	கன்னடம்	1.742	கோடி
4	மலையாளம்	1.701	கோடி
5	கோண்டி (Gondi)	15	லட்சம்
6	குருக் அல்லது ஒரான்	11.4	லட்சம்

---

7 Rev. J. G. Driberg and H. J Harrison: "Narrative of the second visit to the Gonds of the Nurbudda territory with a grammar and vocabulary of their language", Calcutta, 1849

8 Lingum Lecthmajee: "An Introduction to the Grammar of Kui," *Calcutta Christian Observer*, May and June 1853

9 S. Hislop: "Papers relating to the Aboriginal tribes of the Central Provinces", Nagpur, 1866

10 E. Droesf: *Introduction to Malto language*, Agra, 1884

* T.A. Sebeok (Ed): *Current Trends in Linguistics, Vol. V* "Linguistics in South Asia" p p 309-310, 1969 (படகா, இருளா, குறவா ஆகிய மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பில் உள்ளபடி தரப்பட்டுள்ளது.

7	துளு	5.1 லட்சம்
8	கூய்	9.4 லட்சம்
9	குவி அல்லது கோந்த் (Khond)	1.9 லட்சம்
10	கோயா	1.4 லட்சம்
11	பிராகூய்	3 லட்சம்
12	மால்டோ	90 ஆயிரம்
13	குடகு	80 ஆயிரம்
14	படகா	70 ஆயிரம்
15	கோலாமி	50 ஆயிரம்
16	இருளா	43 ஆயிரம்
17	குறவா	26 ஆயிரம்
18	பார்ஜி	20 ஆயிரம்
19	கொண்டா அல்லது கூபி	13 ஆயிரம்
20	கதபா	8 ஆயிரம்
21	நாய்க்கி	1500
22	பெங்கோ	1300
23	கோட்டா	900
24	ஒல்லாரி	800
25	தோடா	800

இந்தியாவில் ஏறக்குறைய மொத்தம் பத்துக்கோடி மக்கள் திராவிட மொழிகளைப் பேசுகின்றனர். பிராகூய்மொழி பேசப் படும் பலுசிஸ்தானம் இந்தியாவிற்கு வெளியே உள்ளது. இந்திய மக்கள் தொகையை மட்டும் கருத்திற் கொண்டு பார்த்தால் திராவிட மொழிகளைப் பேசுவோரின் தொகை அதில் இருபத்தெட்டு சதவிகிதம் ஆகும். தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டில் மிகப் பெரும்பாலோர் திராவிட மொழிகளையே பேசுகின்றனர்.

தமிழ்மொழி பேசுவோர் இந்தியாவிற்கு வெளியிலும் வாழ்கின்றனர். இலங்கையின் மக்கள்தொகையில் தமிழ் பேசு வோரின் எண்ணிக்கை இருபத்தைந்து சதவிகிதம் ஆகும். மலேசியா விலும் சிங்கப்பூரிலும் மலாய்மொழி, சீனமொழி ஆகியவற்றுடன் தமிழ் மொழியும் முக்கிய மொழியாக விளங்குகின்றது. மேற்கே தென்னாப்பிரிக்காவிலும் கிழக்கே பிஜி தீவுகளிலும் பிற தீவுகளிலும் தமிழர் குடியேறி உள்ளனர். திராவிட மொழிகளின் எண்ணிக் கையையும், அவற்றைப் பேசுவோரின் தொகையையும் கருத்திற்

கொண்டு நோக்குகையில் திராவிடமொழி ஆராய்ச்சி முக்கியத்துவம் பெறுகிறது.

திராவிட மொழிகளில் பிராகூய் தவிர, ஏனைய மொழிகளைப் பேசுவோர் இந்தியாவின் தெற்கிலும் இலங்கையின் வட பகுதியிலும் ஒருசேர வாழ்கின்றனர். தமக்கெனத் தனித்த வரலாற்றையுடைய மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசுவோர் கடற்கரைப் பகுதிகளிலும் உள்நாட்டுப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவற்றைப் போல இலக்கியச் செம்மையுறாத பிற திராவிட மொழிகளைப் பேசுவோர் பலுச்சிஸ்தான பீடபூமி, வட இந்தியாவிற்கும் தக்காணத்திற்கும் இடைப்பட்ட பகுதி, தென்னாட்டின் மலைப்பகுதிகள் முதலிய உயரமான பிரதேசங்களில் வாழ்வது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி இன்றைய தமிழ்நாடு மாநிலத்திலும், மலையாளம் கேரள மாநிலத்திலும், கன்னடம் மைசூர் மாநிலத்திலும், தெலுங்கு ஆந்திரப் பிரதேசத்திலும் பேசப்படுகின்றன. இம்மாநிலங்கள் சேரும் எல்லைப் பகுதிகளில், இரு மொழிகளையும் மக்கள் பேசுகின்றனர். தமிழகத்தின் வடக்கில் தெலுங்கு மொழி பேசும் பகுதி உள்ளது. மேற்கில் கன்னடமும் மலையாளமும் பேசப்படும் பகுதிகள் உள்ளன. மங்களூர் பகுதியில் துளுமொழி பேசப்படுகிறது. குடகு கூர்க் மக்களின் தாய் மொழியாகும். இப்பகுதி மைசூர் மாநிலத்தைச் சேர்ந்ததாகும். படகா, கோட்டா, தோதா முதலிய மொழிகள் நீலகிரியில் பேசப்படுகின்றன. தெலுங்கு மொழி பேசப்படும் பகுதி ஒரு புறத்தில் ஒரியா மொழி பேசப்படும் பகுதியையும் மறுபுறத்தில் மராத்தி மொழி பேசப்படும் பகுதியையும் தொடுகிறது. கோண்டி மொழி அதன் அண்டை மொழியாகும். மகாநதிச் சமவெளியில் உள்ள பீடபூமியில் கூய், கொண்டா மொழிகள் பேசப்படுகின்றன. கோலாமி மொழி மத்தியப்பிரதேசத்திலும் ஹைதராபாத்திலும் பேசப்படுகிறது. பார்ஜி அதற்கு அண்டை மொழியாக விளங்குகின்றது. கன்னட மொழி பேசப்படும் பகுதி மராத்தி, கொங்கணி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகள் பேசப்படும் பகுதிகளைத் தொடுகிறது. கோண்டி மொழி பேசப்படும் பகுதி தெலுங்கு, கோலாமி, முண்டா, மராத்தி முதலிய மொழிகள் பேசப்படும் பகுதிகட்கு அருகில் உள்ளது. திருந்தாத் திராவிட மொழிகளைப் பேசுவோரெல்லாம் மலைப் பகுதிகளிலேயே வாழ்வது நமக்கு வியப்பினை அளிக்கிறது. கதபா, குருக் அல்லது ஒரோன் ஆகிய மொழி

களைப் பேசுவோர் சோட்டாநாகபுரி பீடபூமியில் உள்ளனர். மால்டோ ராஜ்மகாலில் பேசப்படுகிறது. இப்பகுதிக்கு அருகில் முண்டா மொழிகள் பேசப்படுகின்றன. மேற்குப் பாகிஸ்தானின் மலைப்பகுதிகளில் பிராகூய் மொழி பேசப்படுகிறது.

3. 1 திராவிட மொழிகளின் அமைப்பு ஒலியனியல்[11]

ஒப்பியல் முறையில் சொல்வடிவங்களை ஒப்பிட்டு, 'இனச் சொற்களில்' (Cognate words) காணப்படும் ஒலிகளுக்கு இடையிலுள்ள உறவுகளுக்கான விதிகளை நிறுவ இவ்வியல் முயல்கிறது. "குடும்ப மொழிகள் பெரும்பாலானவற்றில் காணப்படுதல்" என்ற அடிப்படையில் மூலத்திராவிட மொழி வடிவங்கள் தீர்மானிக்கப் படுகின்றன. அருகி வழங்கும் வடிவங்கள் சில சமயங்களில், மூலத் திராவிட மொழி வடிவங்களாக இருத்தலும் உண்டு. மூலத் திராவிட மொழியின் ஒலியன் அமைப்புப்பற்றி, எமனோ 'மீட்டுருவாக்கத் தால்' (Reconstruction) அமைத்துத் தந்துள்ள முறை பின் வருமாறு.[12]

திராவிட மொழிகளின் உயிர் நீட்சி (Vowel length) ஒலியன் தன்மையதாகும். திராவிட மொழிகளில் முன் உயிர்கள் இரண்டும் பின் உயிர்கள் இரண்டும் உள்ளன. இவ்வுயிர்கள் முறையே மேல், இடை உயிர்களாகும். பிறிதொரு உயிரான அகரம் நடுவிடத் தாழ் உயிராகும். (பிற இடங்களில் காணப்படும் இடைவெளிகளில் வேற்றுநிலை உயிரொலியன்கள் வழங்காத காரணம்பற்றி, அவ் இடைவெளிகளை நோக்கி இவ் உயிரொலியன்கள் நகர்ந்து செல்லக் கூடும். இதன் விளைவாக புதிய வேற்று நிலையில் வழங்கும் உயி ரொலியன்கள் — சேய்மொழியிலும் கிளைமொழிகளிலும் தோன்றி யுள்ளன போன்று — உருப்பெற்று எழக்கூடும்.) இந்த ஒலியனியல் அமைப்பானது திராவிட மொழிகளின் பொதுக் கூற்றை (Common core) அடிப்படையாகக் கொண்டு தரப்பட்டுள்ளது. இன்றைய

---

11 உலக ஒலியியற் கழக ஒலி அட்டவணையை (International Phonetic Chart), இப்பகுதியைப் படிக்கும் பொழுது நினைவிற் கொள்ள வேண்டும்.

12 M. B. Emeneau : (Mimeograph) - *An indroductory course in the comparative Dravidian - Phonology* given at the Summer School of Linguistics held at Coimbatore in 1959

சில கிளை மொழிகளில் காணப்படும் ஒலியன்கள் மூலத்திராவிட மொழியில் இல்லாதிருக்கலாம். (சான்றாகப் பின் மேல் இதழ்விரி உயிரும் குரல்வளை வெடிப்பொலியும் இன்றைய தமிழிலும் கூய் மொழியிலும் ஒலியன்களாகும்.) பல்வேறு திராவிட மொழிகளில் காணப்படும் வடிவங்களை முறையாக ஒப்பிடும் பணி இப்பொழுது தான் தொடங்கி உள்ளது. ''திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி'' விரிவான இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு உதவும். அதன் விளைவாக மூல மொழிக்கும் சேய்மொழிகளுக்கும் இடையிலுள்ள உறவுபற்றிய விரிவான செய்திகள் தெரியவரலாம்.

உயிர்கள்

இ, ஈ	உ, ஊ
எ, ஏ	ஒ, ஓ
அ, ஆ	

மெய்யொலிகள்

க்—[13]	ச் —				த்—	ப்—
— க் —	— ச் —	— ட் —	— ற் —	— த் —		
— க்க் —	— ச்ச் —	— ட்ட் —	— ற்ற் —	— த்த் —	— ப்ப் —	
— ங்க் —	— ஞ்ச் —	— ண்ட் —	— ன்ற் —	— ந்த் —	— ம்ப் —	
	ஞ்	—ண்—;—ண்	ன்		ம்*	
	ய்				வ்	
		— ழ் —;—ழ்		— ர் —	—வ்வ்—	
		— ள் —;—ள்	—ல்—;—ல்			
		—ள்ள்—	—ல்ல்—			

ஈரிதழ் வெடிப்பொலி, நுனிநாப் பல் வெடிப்பொலி, நுனிநா நுனியண்ண வெடிப்பொலி, நாவளை வெடிப்பொலி, இடைநா இடையண்ண வெடிப்பொலி, கடைநா கடையண்ண வெடிப்பொலி ஆகிய ஆறு ஒலிப்பிலா வெடிப்பொலியன்களை மூலத் திராவிட மொழியில் எமனோ அமைத்துக் காட்டியுள்ளார். ஈரிதழ் மூக்கொலி, நுனிநாப்பல் அல்லது நுனிநா நுனியண்ண மூக்கொலி, நாவளை மூக்கொலி முதலிய மூன்று மூக்கொலியன்களே மூலத் திராவிட மொழியில் இருந்ததாக எமனோ கருதுகிறார். பர்ரோ கருதுவது

13 'க்—' = மொழி முதல் ககர மெய்
'—க்—' = மொழி இடை ககர மெய்
'—ள்—' = மொழி இறுதி ளகர மெய்

போல[14] மூலத் திராவிடத்தின் மெய்யொலியன் பட்டியலிலேயே மொழிக்கு முதலிலும் இடைநா இடையண்ண மூக்கொலியையும் கொள்ள வேண்டும். சிலர் கருதுவது போல இடைநா இடையண்ண மூக்கொலியை யகர மெய்யின் அல்லது நகர மெய்யின் மாற்றொலியாகக் கொள்ள முடியாது. இடைநா இடையண்ண மூக்கொலியைப் போலக் கடையண்ண மூக்கொலியும் மொழி முதலில் வருகிறது. ஆனால் இது கடையண்ண வெடிப்பொலியால் தொடரப்படும் பொழுது பிற மூக்கொலிகளே கடையண்ண மூக் கொலிகளாவதன் விளைவாகும்.

னகர மெய்யானது நுனிநா நுனியண்ண வெடிப்பொலிக்கு முன்னர் நுனிநா நுனியண்ண மூக்கொலியாகவும் நுனிநாப் பல் வெடிப்பொலிக்கு முன்னர் நுனிநாப்பல் மூக்கொலியாகவும் இருந் திருக்கலாம். எமனோ குறிப்பிட்ட மூன்று மூக்கொலியன்களுடன், இடைநா இடையண்ண மூக்கொலியனையும் சேர்த்து மொத்தம் நான்கு மூக்கொலியன்கள் எனக் கொண்டாலும் நுனிநாப் பல் மூக்கொலியும் கடையண்ண மூக்கொலியும் இடச்சார்பாக மாறும் வெறும் மாற்றொலிகளாகவே (Positional Variants) உள்ளன.

ஈருயிர் இடையில் தனி வெடிப்பொலிகளும் (Short Plosives) இரட்டித்த வெடிப்பொலிகளும் (Long Plosives) வேற்று நிலை வழக்கில் (Contrastive Distribution) வருகின்றன. எனவே வெடிப் பொலிகளில் 'நீட்சி' (Length) ஒலியன் தன்மையதாகும். தனி வெடிப்பொலிகளும் இரட்டித்த வெடிப்பொலிகளும் மூக்கொலி—வெடிப்பொலி மயக்கங்களுடனும் (Clusters) வெடிப்பொலிகட்கு முன்னர் வரும் இன மூக்கொலிகளுடனும் வேற்று நிலை வழக்கில் வருகின்றன. விகுதிகளைப் (Suffixes) பற்றி ஆராய்வதற்கு இம்மெய்ம் மயக்கங்கள் மிகவும் முக்கியமானவை. ல், ர், ழ், ற் முதலியவற்றை அடுத்து வெடிப்பொலிகள் வருவதால் ஏற்படும் மெய்ம் மயக்கங் களிலிருந்து இரட்டித்த வெடிப்பொலிகள் தொடக்கத்தில் தோற்றம் பெற்றிருக்கலாம்.[15]

---

14 T. Burrow: *BSOAS*, Vol. XI, Part III, p 604

* முன்னும் பின்னும் கோடு இடம் பெறுதவை மூவிடத்தும் வரும்.

15 Bh. Krishnamurthi: *Telugu Verbal Bases*, p 74, 1961

V. Venkatarajulu Reddiar: '*Tamil Collamaippu*, p 63, 1956

எமனேவின் கருத்துப்படி மொழிக்கு இடையில்-ப்-வருவதில்லை. ஏனெனில் மொழிக்கு இடையில் அது வகர மெய்யாக மாறிவிடுகிறது. ஆனால் 'தபு' போன்ற தமிழ் வேர்ச் சொற்கள் மூலத் திராவிட மொழியிலும் -ப்-ஐக் கொள்ள இடந்தருகின்றன.

எமனோ ஆழ்ந்த ஆய்வுக்குப் பின்னர் (மிகுந்த கவனத்துடன்) இரு மெய்களுக்கு (ர், ற்) இடமளித்துள்ளாரெனினும் ஆடொலியை நுனியண்ண வெடிப்பொலியிலிருந்து வந்ததாகக் காட்டலாம்; மூலத் திராவிட மொழியின் காலத்திலேயே இவ்வளர்ச்சி நேரிட்டது எனக் கொண்டாலும் கூட ஆடொலியை நுனியண்ண வெடிப்பொலியின் மாற்றொலியாகக் கொள்ளலாம்.[16] நுனியண்ண மருங்கொலிக்கும் (Lateral) நாவளை மருங்கொலிக்கும் அவர் இடம் தருகிறார். ஒலிப்புடை நாவளை உரசொலியும் உள்ளது. தமிழ், மலையாளம் ஆகியவற்றில் மட்டும் இது தொடரொலியாக (Continuant) உச்சரிக்கப்படுகிறது. யகர, வகர மெய்யொலிகளுக்கும் மூலத்திராவிட மெய்யொலியன் பட்டியலில் இடந்தரப்பட்டுள்ளது.

ட், ற், ண், ல், ள், ழ், ர் தவிர ஏனைய ஒலியன்கள் மொழி முதலில் வருகின்றன. எல்லா ஒலியன்களும் 'மொழி இறுதியில்' வருகின்றன. வெடிப்பொலியன்கள் இப்போது மொழி இறுதியில் உகரம் பெற்று முடிதலுமுண்டு.

மூலத்திராவிட மொழி அசையின் வாய்ப்பாடு "(மெய்) நெடில் உயிர் (மெய்)" என இருந்திருக்கலாம். தெலுங்கு, கூய் போன்ற சில மொழிகளில் மொழி முதலில் உள்ள மெய்ம் மயக்கங்கள் 'ஒலி இடம் பெயரலின்' (Metathesis) விளைவாகலாம். எனவே தொடக்கத்தில் மொழி முதல் மெய்ம் மயக்கங்கள் இருக்கவில்லை எனக் கொள்ளலாம். தொடக்க காலத்தில் இவ்வகையானது ஹாக்கெட் 'anzrcyeyrdk' என்ற சொல்லில் உயிரொலி வாராது மெய்யொலி உச்சரிப்புக்களே நெகிழ்வோடு அமைகின்றன எனச் சுட்டிக் காட்டியது போலவே கோட்டா மொழியிலும் மெய்ம் மயக்கங்கள் அமைந்துள்ளன.[17] இடையில் வரும் உயிரொலிகள்

16 M. B. Emeneau : *Comparative Dravidian Phonology* (Mimeograph)

17 C. F. Hockett : *A Manual of Phonology*, p. 58, 1953

மெய்ம் மயக்கங்களின் இடையே காணப்பெறும் நெகிழ்வுகளைச் சுட்டுபவையாக அமைந்து அசை முதல் அசைவாக தோன்றுகிறது. 'அசை முதல் அசை உச்சி' (Onset Peak type) வகையைச் சேர்ந்த தாக இருந்தது என்பதை இதுவே காட்டுகிறது.

இங்குக் கொள்ளப்பட்டது போல, மொழி முதல் மெய்ம் மயக்கங்கள் கொள்ளப்படாவிட்டால், அசையானது அசை முதலையும் உச்சியையும் உடையதாகும். அது ஒரு அசையீற்றைக் (Coda) கொண்டும் அல்லது கொள்ளாமலும் இருக்கலாம். ஈருயிர் களுக்கு இடையில் உள்ள மெய், அடுத்துள்ள உயிருடன் அசை முதலாக அமைகிறது. இருமெய்கள் உயிர்களுக்கு நடுவில் வருமாயின், அவற்றில் முதலாவது, முந்தைய அசையின் அசை யீறுகும். அடுத்த மெய் அடுத்த உயிரின் அசை முதலாகும். ஹாக்கெட் சுட்டிக் காட்டுவது போல இத்தகைய அசைகளில் 'இடைவருவன' (Interludes) இருப்பதில்லை என்பது குறிக்கத்தக்க கூறுகும்.[18] அசையீறு தெளிவாகப் பிரிக்கப்பட்டு மெய் ஒலியாக வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அசைமுறை வரிவடிவமும், திராவிட யாப்பியலும் இத்தகைய கருத்துக்கு ஆக்கம் தருகின்றன. இம்முடி விற்கு எதிரான சான்றுகளை 'இடம் பெயரல்' என்ற விதிப்படியோ, 'இடை உயிர்களின் இழப்பு' என்றோ விளக்கி விடலாம். இக் கோட்பாடு கோட்டா மொழியில் 'அசை முதல்' அமைப்பு வளர்ந்துள்ளதையும் விளக்கும். கோட்டா மொழியில் காணப்படும் இப்போக்கு திராவிட மொழிகளில் உயிரொலிகள் ஒலிப்பு நிலையில் வெறும் விடுப்பொலிகளாகவே (releases) ஆகின்றன என்பதற்குச் சான்றுகும். இந்த 'அசை முதல் அசை உச்சி' அமைப்பு ஏற்றுக் கொள்ளப்படுமாயின் முதல் அசையிலேயே ஒரு காலத்தில் 'அசை முதல்' இருந்தது என்பது உண்மையாகலாம். ஞ், ய், ச் முதலியன மொழி முதலில் சில சமயங்களில் மறைவதை நாம் அறிவோம். திராவிட மொழிகளின் வேர்ச் சொல் அகராதி தரும் செய்திகளைக் கொண்டு இவை மேலும் ஆராயத்தக்கவை. திறப்பசைகளும் (Open syllable) மூடசைகளும் (Closed syllable) உண்டு. மீட்டுரு வாக்கப்பட்ட வடிவத்தில் மூன்று அசைகள் இருக்குமாயின், வேரி லிருந்து மூன்றுவதாக உள்ள அசையை விதியாகக் கொள்ளலாம். (சான்று : 'பெருகு' என்பதில் உள்ள '—கு') ய், ர், ல், ள், ழ், வ் ஆகியவற்றுடனே அல்லது அவையன்றியோ அ, இ, உ ஆகிய

18 *Ibid*

உயிர்களை உடைய விகுதியின் பிறிதொரு அடுக்கு இருக்கலாம். இதையும் நீக்கினால், எஞ்சியிருப்பது ஓரசையுள்ள வேராகும். (சான்று : பெர்—உ—) ஓரசைகளிலும் கூட மெய்களை, அவற்றுடன் சேர்ந்துள்ள உயிருடனோ உயிரன்றியோ, விகுதி எனப் பிரிக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இதற்கு மேல் எதுவும் கூறுவது, ஊகஞ் செய்வதன் எல்லைக்கே கொண்டு போய்விடும். திராவிட மொழி ஆராய்ச்சி இன்றுள்ள நிலையில் இதைப் பற்றி எவ்வித முடிவுக்கும் வரமுடியாது.

மொழிக்கு முதலில் வரும் ஞகர மெய்க்குப் பதில் சிலர் யகர மெய் இருப்பதாகக் கொள்வர். மூக்கொலியால் தொடரப்படும் பொழுது இவ் யகரம் ஞகரமாகிறது. இவர்கள் ஞகரத்தை நகரத்தின் மாற்றொலி என்பர். இது எவ்வாறாயினும், மூலத் திராவிட மொழியில் ஞகர மெய்க்கு ஒலியன் நிலை கொடுக்கப் பட்டுள்ளது. பிற்காலத்து மொழி நிலையைக் குறிப்பன என்ற முறையில் இவ்வளர்ச்சிகளெல்லாம் பின்னர் ஆராயப்படும். யூல்ஸ் பிளாக் கூறுவது போல ஒலியியலின்றி உருபனியல் வரலாறு இல்லை.

2 உருபனியல்

இங்குக் கோடிட்டுக் காட்டப்பெற்ற ஒலியனியல் அடிப்படையில் உருபனியல் பற்றிய சில பொதுவான செய்திகளை இங்குக் கூற முயலலாம். சுட்டுப் பெயர்களில் (Personal Pronouns) னகர விகுதி ஒருமையையும் மகர விகுதி பன்மையையும் குறிக்கின்றன. இதே தன்மை உடைய படர்க்கைப் பெயர்ப் பதிலிகளும் உண்டு. ஆனால் பின்னர் அவை தற்சுட்டுப் பெயர்ப்பதிலிகளாக (Reflexive Pronouns) ஆகிவிட்டன. தொலைவில் உள்ள பிராகூய் மொழியிலும் இந்நிலையே உள்ளது. திணை, பால், எண் இவற்றைப் பொறுத்த வரையில் தென் திராவிட மொழிகள் உயர்திணையில் ஆண்பால் ஒருமையையும் பெண்பால் ஒருமையையும் வேறுபடுத்துகின்றன. அஃறிணையில் இவ்வேறுபாடு காட்டப்படுவதில்லை. ஆனால் வட, மத்திய திராவிட மொழிகளை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் உயர்திணை, அஃறிணை என்ற அடிப்படையில் அல்லாமல் ஆண்பால், ஆண்பால் அல்லாதன என்ற அடிப்படையிலேயே பாகுபாடு இருந்திருப்பது தெரியவரலாம். பெண்பால் ஒருமை ஆண்பால் நீங்கலாக உள்ள பிறபால் ஒருமையில் அடங்கியது. ஆகையால் தமிழிலும், கன்னடத்திலும் இன்றுள்ள பால்காட்டும் முறை மெல்ல மெல்ல வளர்ந்த நிலையாகும். இவ்வளர்ச்சிக்கு

இடைப்பட்ட நிலைகளைப் பிற திராவிட மொழிகளில் காணலாம். பெண்பால் முதலில் உயர்திணைப் பன்மையில் புகுந்து பிற அஃறிணைப் பெயர்களிலிருந்து வேறுபட்டு நிற்கும் வண்ணம் பெண்பாற் பெயர்கள் வேற்றுமை ஏற்க வந்த வடிவங்களைப்பெற இடமளித்தது. பின்னர் உயர்திணைக்குள்ளேயே பெண்பால் ஒருமை ஆண்பால் ஒருமையிலிருந்து வேறுபட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிந்திய வேற்றுமை ஏற்க வந்த வடிவங்களை மூலத்திராவிட மொழி அடைகொளி என்ற அமைப்பு முறையாகக் கொண்டிருந்திருக்கலாம். திராவிடமொழி ஆராய்ச்சிகளின் இன்றைய வளர்ச்சி நிலையில்இதற்கு மேல் மூலத்திராவிடத்தின் உருபனியல் அமைப்பையும் தொடரமைப்பையும் பற்றிக்கூற முயல்வது வெறும் கற்பனையாகவே முடியும்.

திராவிட மொழிகள் ஒட்டு நிலை மொழிகளாகும். இம்மொழிகளைப்பற்றி நாம் இரண்டாவதாகக் கூறத்தக்க கருதது இம்மொழிகளின் உருபனியல் அமைப்புக்களின் தெளிந்த தன்மையையும் இலக்கணத்தின் முறைமையையும் பற்றியதாகும்.[19] யூல்ஸ் பிளாக் குறிப்பிடுவது போல ''இம் மொழிகளின் ஒலியியல் விதிகள். சொல்லின் உறுப்புக்கள் ஒன்றோடொன்று பிணைந்து விடாது நிற்க அனுமதிப்பதால் அவை வெளிப்படையாகத் தெரியும் வண்ணம் நிற்கின்றன.''[20] ஒட்டுநிலை என்ற சொல்லானது, மொழிவரலாற்றின் ஒரு நிலையைக் குறிக்கவும், ஒட்டுத் தன்மையுடைய மொழிகளின் குடும்ப உறவை நிறுவவும் பயன்படுகிறது. ஆனல் இவ்விரு பொருள்களும், மறுக்கப்பட்டாலும் கூட மொழிகளின் 'அமைப்பு வழி ஆய்வுக்கு' (Typological Studies of the Languages) இச்சொல்லைப் பயன்படுத்துவதால் தீமை ஏதும் இல்லை.

பிறிதொரு செய்தியையும் இங்கே குறிப்பிட வேண்டும். பெயர், வினை என்று பகுப்பு நிலவாத பழங்காலத்து இலக்கண அமைப்பை ஓரளவு அறிந்து கொள்கிறோம் என்பது அது. ஆனல் இதுவும் நம்மைத் தொடரியலுக்கு இட்டுச்செல்வதாகவே அமைந்து வாக்கியங்கள் பெயர்த்தன்மையுடையன என்று முன்னரே குறிப்பிடப்பட்ட இயல்பை உறுதிப்படுத்துவதாகவும் அமையக்கூடும். திராவிட மொழி ஆராய்ச்சி இன்றுள்ள நிலையில் இதற்கு மேல் எதுவும் கூறுவதைத் தவிர்ப்பதே நல்லது.

---

19 Jules Bloch : *The Grammatical Structure of Dravidian Language* p i; 1954

20 *Ibid*

3

தென் திராவிட மொழிகளும் தமிழும்

1 திராவிட மொழி ஆராய்ச்சியின் இன்றைய நிலை

திராவிட மொழி ஆராய்ச்சி இன்றுள்ள நிலையில், ஆராய்ச்சி அறிஞர்களின் ஆய்வு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, ஒரு முக்கியமான செய்தியை ஆராயவேண்டும். இந்தோஐரோப்பிய மொழி மூலத்தைச் சார்ந்தவையே என முடிவு கட்டமுடியாத சில சமஸ்கிருதச் சொற்கள் உள்ளன. அவற்றுள் பல சொற்கள் திராவிட மொழி மூலத்தையும், சில சொற்கள் முண்டா மொழி மூலத்தையும் சார்ந்தவை என விளக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறும் விளக்கப்படமுடியாத சில சொற்கள் எஞ்சுகின்றன. அவை, இன்று வழக்கில் இல்லாத, அக்காலத்துப் பழங்குடியினர் பேசிய மொழிகளிலிருந்து வந்திருக்கலாம். மிகப் பழங்காலத்தில் சமஸ்கிருதமொழி இவ்வாறு கடன் வாங்கியுள்ளதென்றும் தென்னகத்துடன் தொடர்பு ஏற்பட்டவுடன் இக்கடன் வாங்கல் முற்றிலுமாக நின்றுவிட்டது என்றும் பர்ரோ வலியுறுத்துகிறார்.[1] வட இந்தியப்பகுதிகளில் வாழ்ந்த திராவிட மொழிகளைப் பேசுவோரிடமிருந்து இச்சொற்கள் கடன் பெறப்பட்டன என்பதே இக்கூற்றின் பொருளாகும். எனவே இக்கடன் வாங்கல்கள் வட திராவிட மொழிகளை மீட்டுருவாக்கப் பயன்படும். தென் திராவிட மொழிகளைப் பொறுத்த வரையில் வடமொழியாளர்கள் பொதுவாக ஒப்புக்கொள்வதைவிட, இவற்றில் மிக அதிகமான திராவிட வேர்ச் சொற்களைக் காணமுடியும். இந்தத் தென் திராவிட மொழி வேர்ச் சொற்களும், வடதிராவிட மொழி வேர்ச் சொற்களும் உறவுடையன என்பதைக் காட்டி விட்டால் தெற்கத்திய வடிவங்கள், அதிலும் குறிப்பாகத் தமிழ் வடிவங்களே எல்லாச் சமயங்களிலும் மூலத்

1 T. Burrow : Sanskrit and the Pre - Aryan Tribes and Languages'' Reprinted from the *Bulletin of the Ramakrishna Mission Institute of Culture*, Calcutta, p, 4, Feb. 1958

திராவிட மொழியைக் குறிப்பனவாக நிற்கத் தேவையில்லை என்பது புலனாகும்.

பிரம்மகிரி அகழ்வராய்ச்சியில் வியப்புத் தரும் வகையில் கிட்டிய கண்டுபிடிப்புக்களின் விளைவாகத் திராவிட மொழி பற்றிய ஆராய்ச்சிப் பிரச்சினைகள் மேலும் சிக்கலாகியுள்ளன. இரும்பைப் பயன்படுத்திய பெருங்கற்கால நாகரிகத்தினர் (Magalithic Culture) இங்கு வாழ்ந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கற்களால் கட்டப் பட்ட துளையுடைய கல்லறைகளை அவர்கள் கட்டியிருந்தனர். கி மு. ஐந்தாம் நூற்றுண்டிற்கு முன்னர் தென்னகத்திற்குப் புதிதாக அந்த நாகரிகத்தினர் வந்திருக்க வேண்டும் என அறிஞர் கள் கருதுவர். அவர்களே திராவிடர்கள் எனவும் கூறப்படுகிறது. எனினும் இக்கருத்து அனைவராலும் ஏற்கப்படுவதில்லை. அவர்கள் திராவிடர்களே எனின், அவர்கள் தென்னகத்தில் நுழையத் தொடங்கிய காலத்தின் முன்னெல்லை என்ன? அவர்கள் வருவதற்கு முன்னர் இப்பகுதியில் இருந்த மக்கள் யார்? என்றெல்லாம் கேட்கப்படுகிறது. அசோகரின் கல்வெட்டுக்கள் சேர, சோழ பாண்டியர்களைப் பற்றிப் பேசுகின்றன. மகாபாரத காலத்து அரசனான பாண்டுவின் பெயரிலிருந்து பாண்டியர் என்ற சொல் வந்திருப்பதாக வரருசி விளக்கம் தருவதிலிருந்து, பாண்டியர் அசோகரது கல்வெட்டுக்கள் எழுந்த காலத்துக்கும் முன்னரே அறியப்பட்டிருந்தனர் என்பது புலன் ஆகும். மக்களையோ, அரசனை யோ குறிப்பது என்ற முறையில் சோழர் என்ற சொல்லும் அவருக்குத் தெரிந்திருந்தது. வரருசியின் காலம் கி. மு 4–ஆம் நூற்றுண்டிற்கு முற்பட்டதே. வேதங்களிலும் வேதங்கட்குப் பிற் பட்ட காலத்து வடமொழி இலக்கியங்களிலும் காணப்படும் சில சொற்கள் திராவிடமொழிகளைச் சேர்ந்தவை எனின், தென்னகத் திற்குள், திராவிடர் வருகை நிகழ்ந்த காலமாகக் கி மு. பத்தாம் நூற்றுண்டே எண்ணப்பட வேண்டும். புதிதாக வந்தவர்களே திராவிடர்கள் எனக் கொண்டாலும் கூட, அவர்கள் இப்பகுதியில் வாழ்ந்தவர்களின் மொழியையே தாமும் மேற்கொண்டிருக்கக் கூடும்.

2 உட்பிரிவுகள்

மூலத் திராவிடமொழி மூன்று கிளைகளாகப் பிரிந்தது என்று கூறப்படும். பலுசிஸ்தானத்தில் பேசப்படும் பிராகூய் மொழி, வங்காளம், ஒரிசா முதலிய பகுதிகளில் பேசப்படும் மால்டோ,

குருக் முதலியன வட திராவிட மொழிகளாகும். இரண்டாம் கிளையாகிய மத்திய திராவிட மொழிகள், மத்தியப்பிரதேசம் ஆந்திரப்பிரதேசத்திற்குவடக்குப்பகுதி, ஆந்திர நாட்டிற்குள்ளாகவே சில சின்னஞ்சிறு பகுதிகள் முதலிய இடங்களில் பேசப்படுகின்றன. கன்னடம், தமிழ், மலையாளம், துளு, படகா, தோடா, கோட்டா, குடகு முதலியன மூன்றும் கிளையாகிய தென் திராவிட மொழிகளாகும். தெலுங்கு மத்திய திராவிடப் பிரிவோடு நெருங்கிய உறவுடையது; எனினும் சில அம்சங்களில் இது தென் திராவிட மொழிகளின் சில சிறப்பு இயல்புகளையும் பெற்றுள்ளது.

3 தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

அஃறிணை ஒன்றன்பாலிலிருந்து வேறுபட்ட தனி, உயர் திணைப் பெண்பால் ஒருமை விகுதியைப் பெற்றிருப்பது தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும். தென் திராவிட மொழிகள் நீங்கலாக ஏனையவற்றில் பெண்பால் ஒருமையும், அஃறிணை ஒன்றன்பாலும் வேறுபடுத்தப்படுவதில்லை. ஆனல் தென் திராவிட மொழிகளில் கூடப் பெண்பால் ஒருமை விகுதிகளில் ஒன்முன 'இ' முன்னர் அஃறிணை ஒன்றன்பாலுக்கும் உரியதாக இருந்தது. பின்னர் உயர்திணை அஃறிணை இரண்டிற்கும் பொதுவானதாயிற்று. சான்று: கிழவி (உயர்திணைப் பெண் பால்), மண்வெட்டி (அஃறிணை), நாணிலி (பொது).

அ. மொழி முதல் இடையண்ண ஒலி இழப்பு

தென் திராவிட மொழிகளின் அடுத்த சிறப்பியல்பு மொழி முதல் இடையண்ண ஒலி இழக்கப்படுதலாகும். பொதுவாக, இடையண்ண வெடிப்பொலி மட்டுமே மொழி முதலில் இழப்புறுவதாகக் கருதப்படுகிறது. இடையண்ண வெடிப்பொலியோடு இடையண்ண மூக்கொலி அல்லது இடையண்ண யகர மெய் ஆகியனவும் இழப்புறு கின்றன என்பதையும் சொல்ல விரும்புகின்றேன். மொழி முதல் நுனிநா பல் மூக்கொலியான நகரம் இழப்புறுவது, பிறழ் பிரிப்பால் (metanalysis) நிகழ்வது என்று விளக்கப்படுவதுண்டு. இந்நகரம் ஆரம்பத்தில் இடையண்ண மூக்கொலியான ஞகரமாக இருந்தது என நம்பக் காரணமுண்டு. எனவே மொழி முதல் நகரம் இழப்புறுவதும், "மொழி முதல் இடையண்ண ஒலி இழப்புறுதல்" என்பதைச் சார்ந்ததேயாகும். சான்முக முன்னிலை ஒருமையான 'நீன்' என்பதில் உள்ள மொழி முதல் நகரமெய் 'ஞாய்' (உன்தாய்) என்பதில் 'ஞ்'

என வருகிறது.[2] முன்னிலையில் ஆரம்பத்தில் மொழிக்கு முதலி லிருந்த ஞகரம் பின்னர் இழப்புற்றது எனக் கூறலாம். ஆனால் ஞ்-/ந்-/ய்- பற்றிய இப்பகுதி இன்னும் நன்கு ஆராயப்பட வேண்டும். இடையண்ண யகர மெய் மொழி முதலில் இழப்புறுகிறது. சில சமயங்களில் அடுத்துள்ள உயிரை இடையண்ண ஒலியாக மாற்றிய பிறகு அது இழப்புறுகிறது. இடையண்ண ஒலிகள், மொழி முதலில் இழப்புறுதல் தெலுங்கிலும் காணப்படுகிறது. தென் திராவிட மொழிகளில் 'உப்பு' என வழங்கும் சொல் பிற திராவிட மொழி களில் 'சுப்பு' என உள்ளது. 'ஈ' எனும் தென் திராவிட வேர் பிற திராவிட மொழிகளில் 'சீ' என வழங்குகிறது. பர்ரோ நிறையச் சான்றுகளைத் தொகுத்துள்ளார்.[3]

ஆ. ஒலி இடம் பெயர்தலின் (Metathesis) இயல்புகள்

தெலுங்கிலும் பிற மத்திய திராவிட மொழிகளிலும் நிகழ்வது போன்ற முறையான 'இடம் பெயர்தல்' தென் திராவிட மொழி களில் ஏற்படுவதில்லை. இல > லே (தெலுங்கு) என ஆனது ஒலி இடம் பெயர்தலாகும். முதற் சொல்லில் இருபுறமும் உள்ள உயிர் கள் சேர்ந்து 'ஏ' வந்தது. தமிழில் 'இரண்டு > ரெண்டு' என வழங்கு கிறது. 'இர > ரெ' என மாறியது இடம் பெயர்தலாகும். ஆனால் இது தெலுங்குக் கிளை மொழி ஒன்றிலிருந்து கடன் பெறப்பட்டதே. (உயிரின் அளவு மாற்றம் பின்னர் விளக்கப்படும்.)

இ. கன்னடமும் பிற தென் திராவிட மொழிகளும்

கன்னடமொழிக் குழுவிற்கும் தமிழ் மொழிக் குழுவிற்கு மிடையே ஒரு வேற்றுமை உண்டு. இதில் கன்னடம் ஏனைய திரா விட மொழிகளை ஒத்துள்ளது. மொழி முதல் கடையண்ண ஒலிகள் தம்மை அடுத்து 'முன்னுயிர்களை'ப் (front vowels) பெற்றிருக்கு மாயின் அவை இடையண்ண ஒலிகளாகத் தமிழிலும் மலையாளத் திலும் மாறுகின்றன.

சான்று : கின்ன > சின்ன;
கெம் > செம்

2 குறுந்தொகை "யாயும் ஞாயும் யாராகியரோ..."

3 T. Burrow : "Dravidian Studies" VI (*BSOAS* Vol. XII, Part I, 1947)

தெலுங்கில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி இது நடைபெறுகிறது. இரண்டாவது அசையில் நாவளை ஒலி இருந்தால் தமிழிலும் மலையாளத்திலும் இவ் இடையண்ணமாதல் நிகழாது. தமிழில் 'கெடு' என்பது 'செடு' என மாறாது. ஆனால் தெலுங்கில் அவ்வாறு மாறும். 'கிளி > சிளி' (சிலுக) எனத் தெலுங்கில் மாறுவதைப் போலத் தமிழில் மாறுவதில்லை. இக்காலத்தமிழில் வழங்கும் 'கெம்பு' போன்ற சொற்கள் இவ்விதியை ஒட்டி மாறுவதில்லை. விசயநகரப் பேரரசுக் காலத்தில் கன்னடத்திலிருந்து அச்சொற்கள் கடன் பெறப்பட்டன என்பது தெளிவு.

பழைய வடிவங்களில் ககர சகர மாற்றம், பின் உயிரால் தொடரப்படுங் காலையும் நிகழ்தல் உண்டு.சான்று: 'குருள் > சுருள்'. அவை இரண்டு மாறுபட்ட வேர்களாகவும் இருக்கலாம். இந்தச் சூழல்களில் உகரம் இதழ்விரி இடை உயிராக இல்லையா என்பது ஆய்வுக்குரியது. இதற்கு முடிவுகாண இது தொடர்பான எல்லாச் செய்திகளையும் ஆராய்தல் வேண்டும். இடையண்ணச் சகரமே தொடக்கத்தில் இருந்தது என்றும் அது கடையண்ண அடைப்பொலியாக (Stop) அல்லது உரசொலியாக (fricative) மாறியது எனவும் சிலர் கூறுவர். அது அப்படியாயின் இடையண்ண ஒலி, கடையண்ண ஒலியாதல் விந்தையே ஆகும். ஏனெனில் பல மொழிகளில் பொதுவாக, கடையண்ண ஒலி, முன் உயிருக்கு முன்னால் இடையண்ண ஒலியாவதற்கே சான்றுகள் மிகுதியும் உள்ளன.[4]

ஈ. தமிழ் – மலையாளக் குழுவும் பிற தென் திராவிட மொழிகளும்

தமிழ்—மலையாளக் குழுவில் பிற திராவிட மொழிகளிடம் இல்லாத மற்றொரு தனி இயல்பு உள்ளது. இது முதலசையில் குற்றுயிரைப் பெற்றுள்ள வேர்ச்சொல் தொடர்பானது. முதலில் உள்ள குற்றுயிர் அடுத்து வரும் குற்றுயிருக்கு ஏற்ப மாறும் தன்மை உடையதாக உள்ளது. அடுத்து வரும் உயிர் 'மேல் உயிராயின்' (High vowel), அது பின்னுயிராயினும் (Back vowel) முன்னுயிராயினும் முதல் உயிரில் மாற்றம் ஏற்படுவதில்லை. அடுத்து வரும் அசை-அது ஆக்கநிலை விகுதியாக (Derivative suffix) இருக்கலாம். அகரத்தில் தொடங்கினால் சிக்கல் ஏற்படுகிறது. அகரம் தொடர்ந்தால் வேரசையில் இ, உ, அ ஆகிய மூன்றில் ஒன்றே இருக்கும். தமிழிலும் மலையாளத்திலும் இங்ஙனம் ஏற்படுகிறது. கன்னடத்திலும் தெலுங்கிலும் இ, உ, அ வுக்குப் பதில் எ, ஒ, அ முதலியன

4 C. F. Hockett: *A Course in linguisrics,* p 456

வருகின்றன. மூலத் திராவிட எகரமும் ஒகரமும் தமிழில் இகரமாகவும் உகரமாகவும் ஆயின என்றும் மூலத்திராவிட இகரமும் உகரமும், எகரமாகவும் ஒகரமாகவும் கன்னடத்திலும் தெலுங்கிலும் ஆயின என்றும் பொருள்படுகின்றது. மூலத்திராவிட இகரமும் எகரமும் மூலத் தென் திராவிடத்தில் எகரம் என ஒன்றுகிவிட்டன என்றும் மூழத்திராவிட உகரமும் ஒகரமும் மூலத் தென் திராவிடத்தில் ஒகரமென ஒன்றுகிவிட்டன என்றும் ப. கிருட்டிணமூர்த்தி என்பார் கூறுகிறார். தமிழிலும் மலையாளத்திலும் வேறொரு மாற்றமும் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.[5] அடுத்து வரும் அசையில் அகரம் இருந்தால் முதலசையில் உள்ள மூலத்திராவிட எகரம் தமிழில் இகரமாகிறது. அதுபோல மூலத்திராவிட ஒகரம் அந்தச் சூழலில் உகரமாகிறது.

இக்காலத் தமிழில் முதலசையில் பழைய இகரமும் உகரமும் அகரத்தால் தொடரப்படும் பொழுது எகர ஒகரமாக மாறுகின்றன. மூலத் தென் திராவிட மொழியைப் பற்றி ஆராய்கையிலும் மூலத் தென் திராவிட மொழியிலிருந்து தமிழும் மலையாளமும் பழங் காலத்தில் பெற்ற வளர்ச்சிகளை ஆராய்கையிலும் இப் பிற்கால மாற்றத்தினைக் கருத்தில் கொள்ளக்கூடாது. ஆனால் சில மாற்று வடிவங்கள் (Alternant forms) — அவைகள் மூலத்திராவிட வடிவங் களுடைய கிளைமொழிகளிலிருந்து வந்தனவாயிருக்கக் கூடும் — நமக்குக் கிடைத்துள்ளன. சான்று: வெளிச்சம், விளக்கு, நெஞ்சு, நினை.

இலக்கண அமைப்பு

i பெயர்த் தன்மையுள்ள வாக்கியங்கள் — காலங்காட்டாதன

மூலத் திராவிட மொழியைப் பற்றி இல்லாவிடினும் மூலத் தென் திராவிட மொழியின் ஆரம்ப நிலையைப் பற்றிய அதனது தனிச்சிறப்பியல்பான சில உருபனியற் கூறுகளைப்பற்றி இங்குக் காண்போம். மூலத் தென் திராவிட மொழியில் வாக்கியங்கள் வினைத்தன்மையனவாக இல்லாமல் பெயர்த்தன்மையனவாக இருந்தன எனத்தோன்றுகிறது.[6] அக்காலத்தில் வழங்கிய வாக்கியங்கள் எதுவும் இன்று இல்லை. பயனிலையாக இன்றளவும் வழங்கும் சில வினைவடிவங்களைக் கொண்டே நாம் இம்முடிவுக்கு வருகிறோம். முன்னரே குறிப்பிட்டது போலத் தமிழ் வினைமுற்றுக்களின் அமைப்பு இரு அடுக்குகளைக் காட்டுகிறது.

5 Bh. Krishnamurthi : *Telugu Verbal Bases*, p 112 onwards, 1958
6 S. Vendreys : *Language*, p 120 onwards, 1952

1 முந்தியது : திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகளைப் (Pronominal suffix) பெறாதது.

2 பிந்தியது : திணை, பால், எண் காட்டும் விகுதிகளைப் பெற்றது.

ழூல் ப்ளாக்கும் பிறரும் சுட்டிக்காட்டுவதைப் போலத் 'திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகள்' என்பன பிற்காலத்திய வளர்ச்சிகள் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே இங்கு 'முந்தியது பிந்தியது' என்ற சொற்கள் ஆளப்பட்டுள்ளன.[7]

ii ஒரு பழைய வடிவம்

'செய்யும்' என்னும் வாய்பாட்டு வடிவம் வழக்கில் உள்ள இத்தகைய பழைய வடிவமாகும். (கால்டுவெல் இவ்வாய்பாட்டை முக்காலத்துக்கும் ஒத்தவடிவம் (aorist) என்றழைக்கிறார்). இவ் வாய்பாட்டில் வேரும் உம் விகுதியும் உள்ளன. வேருடன், கு அல்லது து என்னும் சொல்லாக்க அசை பெற்ற பின்னர், 'உம்' பெறும் வடிவங்களும் உண்டு. 'செய்யும்' என்னும் வாய்பாடு தமிழில் படர்க்கை உயர்திணைப் பன்மையிலும் தன்மை, முன்னிலை யிலும் வராது.[8] தன்மைப் பன்மைக்கு இவ்வடிவம் 'கு' அல்லது 'து' என்னும் சொல்லாக்க அசை பெற்று வருகிறது.[9] கால்டுவெல்.

---

7 Jules Bloch: *The Grammatical Structure of Dravidian Languages*, p 59, 1954

8 தொல்காப்பியம், 712 ஆவது நூற்பா

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியோடு கொள்ளா."

9 தொல்காப்பியம், 687 ஆவது நூற்பா

"அவை தாம்,
அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
உம்மோடு வருங் கடதற என்னும்
அந்நாற் கிளவியோடு ஆயென் கிளவியும்
பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே."

R. Caldwell : *A Comparative Grammar Of Dravidian Languages*, p 485

யூல் ப்ளாக் ஆகியோர் சுட்டிக் காட்டியுள்ளபடி கன்னடத்தில் இவ் வடிவம் இந்த ஆக்க அசைகளுடன் மூவிடங்களிலும் எவ்விதத் தடையுமின்றி வருகிறது.[10] எனவே தமிழில் காணப்பெறும் வரையறை பழைய வடிவங்கள் வழக்கிழந்து போகாமல் படர்க்கையில் மட்டும் வழங்குவதாலேயும், பெயர்ப்பதிலி விகுதிகளை உடைய (Pronominal Suffixes) வடிவங்கள் தன்மையிலும் முன்னிலையிலும் பழைய வடிவத்தை வழக்கிழக்கச் செய்துவிட்டதாலும் ஆகும்.

iii ஒருமையாகவும் பன்மையாகவும் வழங்கும் பழைய வடிவம் (An old form as singular and plural)

இவ் ஆக்க அசைகளுடன் கூடிய இருவடிவங்கள் நமக்குக் கிட்டுகின்றன. ஒருமையில் அவை உகரத்திலும் பன்மையில் உம்மிலும் முடிகின்றன. பண்டைக்காலத் 'திணை, பால், எண், இடம்' காட்டும் வடிவங்களை ஆராய்ந்தால், னகரம் ஒருமையையும் மகரம் பன்மையையும் காட்டுவதை அறியலாம். மகரம் இன்றளவும் நிலைத்திருப்பதால் அதற்கு இணையான ஒருமைக்குரிய னகரம் முன்னர் இருந்திருக்க வேண்டும் எனக்கொள்ளலாம். ஆனால் பின்னர் அது கெட்டிருக்க வேண்டும். தமிழிலுள்ள 'நீன்' எனும் வடிவம் தனது ஈற்று னகரத்தை இழந்து இன்று 'நீ' என்று முன்னிலை ஒருமையில் வழங்கி வருவதைச் சுட்டலாம். 'செய்யும்' எனும் வாய்ப்பாட்டில் ஆக்க அசை இல்லாததால் அதற்கு இணையான னகரத்தில் முடியும் வடிவம் இல்லை எனினும் தெலுங்கில் னகரத்தில் முடியும் 'சேசனு' (cēsanu) என்ற வடிவம் உள்ளது. பழைய பயனிலைகளுடன் திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகள் சேர்க்கப்பட்டு, பின்னர் உண்டான சொற்களிலிருந்து தமிழிலேயே இவ் வடிவத்தைத் திரும்பப் பெறலாம். 'செய்யும்' என்பதிலிருந்து 'செய்யுமோர்' எனும் பின்னைய வடிவத்தை 'ஓர்' விகுதியைச் சேர்த்துச் பெறுகிறோம். 'செய்யுந்து' என்பதில் 'து' விகுதி அஃறிணை ஒருமை விகுதி எனப் பிரிக்கப்படுமாயின் 'செய்யுந்' கிடைக்கும். புறநானூற்றுப் பாடலொன்றில் 'செய்யுந்து' என்பது இதே வாய்ப்பாட்டில் உள்ள பிற பெயர்ப் பயனிலைகட்கு எதிராக

10 Jules Bloch : *The Grammatical Structure of the Dravidian Languages* (Eng. Tr), Poona

யும் பின்னர் இறுதியில் 'பெயருடனும்' பயன்படுத்தப்பட்டுள்ளது.[11] இதே போல் 'செய்யுநன்' என்பதிலிருந்து 'அன்' நீக்கப்பட்டால் நகரத்தில் முடியும் வடிவம் கிடைக்கிறது. இந்த நகரம் ஒருமை விகுதியாக உணரப்படவில்லையாயின், அதனுடன் பன்மைப் பெயர்ப் பதிலி (Pronominal) விகுதிகள் சேர்க்கப்படலாயின. அஃறிணையைச் சார்ந்த சொற்களின் ஈற்றில் உள்ள னகரமும் மகரமும் மயங்குவன எனத் தொல்காப்பியர் மொழிகிறார்.[12] சான்று : மரம் > மரன் (மரந்) (மூலத் திராவிட மொழியில் நுனிநாப்பல் மூக்கொலியும் நுனியண்ண மூக்கொலியும் ஒரே ஒலியன்). இந்த நிலையில் 'செய்யும்' 'செய்யுன்' என்பவற்றை வேறுபடுத்த முடியாது. அதிலும் குறிப்பாக னகரம் ஆண்பால் விகுதிக்கு இறுதியாயின் அஃறிணைக்கு மகரமே போற்றப்படுகிறது.

பயனிலையாக வரும் பழைய வடிவம்

இவ் ஆய்விலிருந்து பழைய பயனிலை வடிவங்களுடன் 'திணை, பால், எண், இடம்' காட்டும் விகுதிகளைச் சேர்க்கலாயினர் என்பது தெரிய வருகிறது. இச்செய்தி இன்னும் தெளிவாகப் பின்னர் ஆராயப்படும். 'நின்றோர்' போன்ற வடிவங்களை ஆராய்ந்து 'ஓர்' விகுதியை நீக்கினால் கிடைக்கும் 'நின்று' எனும் வடிவம் சில இடங்களில் வினைமுற்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது வியப்புத் தருகிறது. பழைய உரையாசிரியர்கள் இதை வினைமுற்று என்றே விளக்குகின்றனர்.[13]

---

11 புறநானூறு, 24வது பாடல்
"...தெண்கடல் திரை மிசைப் பாயுந்து
...தண்குரவைச் சீர்தூக்குந்து;...
...எல் வளை மகளிர்த் தலைக்கை தருஉந்து"

12 தொல்காப்பியம் 82வது நூற்பா
"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன"

13 ஐங்குறுநூறு 52
"......குறுமக ளிளைய
செவ்வாய் முன்னின்று மகிழ்நநின் றேரே"
A. Sadasivam : "The Suffix cin" in Saṅkam," *Tamil Culture*. Vol. VII, pp 140—150, April 1958

'உணர்ந்திசின்' போன்ற வடிவங்களில் 'இசின்', 'அசைநிலை' (expletive) எனக் கருதப்படுகிறது. எஞ்சி நிற்பது 'உணர்ந்து' என்பதாகும். முன்னிலை ஒருமை 'ஐ' இவ்வாய் பாட்டில் சேர்க்கப் பட 'வந்ததை'[14] எனும் வடிவம் கிடைக்கிறது. இந்த முன்னிலை வடிவத்துடன் பழைய வியங்கோள் விகுதி சேர்க்கப்பட்டால் 'மறந்தைக்க' என்ற வடிவம் கிடைக்கிறது. (மறந்து+ஐ+க)[15] இவற்றின் முக்கியத்துவம் என்னவெனின், காலம் காட்டாப் பயனிலை (Predicates) எனக் கூறப்படும் இவை, பழங்காலத்தி லிருந்தே இறந்த காலச் ''செய்து'' வாய்ப்பாட்டு வினையெச்சங் களாகத் தமிழில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதேயாகும்.

இம்முடிவை ஆதரிக்க மூன்றாவது வகையான சான்றுகளும் உண்டு. 'நின்றாங்கு, கண்டாங்கு' என்பன போன்ற பல வடிவங் கள் உண்டு. 'ஆங்கு' என்பது ஒப்புமைச் சொல்லாக (Particle of similarity) ஆக்கப்பட்டு விடுகிறது.[16] இங்கு வந்தது போன்று வினை களுக்குப் பிறகே இது வருகிறது. இங்கு 'ஆங்கு' என்பது நீக்கப்படு மாயின் எஞ்சியது 'நின்று' எனும் வடிவமே. 'செய்து' எனும் வினை யெச்சம் (Conjunctive participle) ஆகத் தோன்றுவது உண்மையில் வினைப் பயனிலையேயாகும். இவ்வாறே உரையாசிரியர்களும் விளக்கி யுள்ளனர். செய்தென எனும் வாய்பாட்டிலும் 'செய்து' என்பதைப் பயனிலை எனக் கொள்ளலாம்.[17]

---

14 கலித்தொகை 63

''...கடம்பூண் டொருகால்நீ வந்ததை யுடம்
பட்டாள்...''

15 *Ibid* 26

''...பொய்யினூற் பரிவுண்ட நன்மையோ
மறந்தைக்க...''

16 திருமுருகாற்றுப்படை 12

''உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ்ஞாயிறு கடற்கண் டாஅங்கு''

17 'செய்தென', 'உற்றெல' என்னும் வாய்பாடுகள் பரிபாடலில் இடம் பெறுகின்றன. (பரிபாடல் 7, 24—25)

''...அவிழ்ந்த மலர்மீ துற்றென ஒருசார்
மாதர் மடநல்லார் மணலின் எழுதிய...''

'அவ்' அல்லது 'அ' அல்லது 'க' (க் + அ) ஆகியவற்றில் முடியும் பல வடிவங்கள் உள்ளன. இவை தொழிற் பெயர் விகுதிகளாக, பின்னர் கருதப்பட்டன. இவ்வடிவங்கள் வியங்கோள் வினையாகவும் பயன்படுத்தப்படுகின்றன. தொல்காப்பியர், வியங்கோள் வினை படர்க்கைக்கே வரும் என்கிறார். ஆனால் பழைய வடிவங்கள், தொல்காப்பியர் காலத்திய இலக்கிய மொழியில் படர்க்கைக்கு மட்டும் வழங்கியதாலேயே இவ்விதி வந்தது.[18] வேறொரு கிளைமொழியில் இக்கட்டுப்பாடு இல்லாதுஇருந்திருக்கலாம். பின்னர் இதுவே இலக்கிய மொழியிலும் புகுந்திருக்கலாம் என நம்புவதற்கு இடம் இருக்கிறது. எனவே தொல்காப்பியரின் இக் கட்டுப்பாடு வழக்கிழந்து போயிற்று. 'அல்' விகுதியுடைய வடிவங்கள் மீது மற்றொரு கட்டுப்பாடும் உண்டு. அது தன்மை ஒருமையில் எதிர் காலத்திற்கு மட்டுமே வரும். இவ்வடிவம் 'செய்வல்' எனும் வாய்பாடாகும்.[19] இந்த 'அல்' விகுதியும் தொழிற் பெயர்களின் விகுதியும் ஒலியன் நிலையில் ஒன்றாகவே உள்ளன.

காலம் காட்டுவது மறைந்ததா?

மேலே கூறப்பட்ட எல்லா வடிவங்களும் ஆரம்பத்தில் காலம் காட்டின; வினை முற்றாக்கப்பட்ட துணை வினையுடன் 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் வரக் காலங்காட்டும் தன்மை இழப்புறுவதுபோல, பின்னர்க் காலங்காட்டும் தன்மையும் இழப்புற்றது என வாதிடவும் வழியுண்டு. 'வந்து விடுவாய்' என்பது உறுதியைக் குறிக்கும் எதிர்கால வடிவமாகும். 'விடுவாய்' என்பது உறுதியைக் குறிக்கச் சேர்க்கப்பட்டுள்ள துணை வினையாகும். 'வந்து' என்ற வினையில் 'வா' என்ற வேரைத் தவிர வேறொன்றும் இல்லை. அது இறந்த காலத்தைக் குறிக்க முடியாது. ஏனெனில் முழுச் சொல்லும் எதிர்காலத்தைக் குறிக்கிறது. 'வந்து விடு' எனும் கூட்டு வேர் ஏவலைக் குறிக்கப்பயன்படும். இது போல, மேலே கூறப்பட்ட வடிவங்கள் ஒரு காலத்தில் தாம் பெற்றிருந்த காலங் காட்டும் தன்மையை இழந்ததற்கான காரணங்களைக் கூறுவது

18 தொல்காப்பியம் 711ஆவது நூற்பா

"அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்
மன்னா தாகும் வியங்கோட் கிளவி"

19 தொல்காப்பியச் சேனாவரையர் உரை; 618 ஆவது நூற்பா

கடினமே ஆகும். துணை வினைகளோடு கூடிய தற்காலக் கூட்டு வினை வடிவங்கள், மேற்குறிப்பிடப்பெற்ற பழங்கால மரபுத்தொடர் முற்றிலுமாக இறந்துபடவில்லை என்பதைக் காட்டுகின்றன. 'நின்றுங்கு', 'நின்றி' (நின்று+இ) என்பன போன்ற வடிவங் களிலிருந்து கூட்டுவினைகள் ஒப்புமையாக்கமாக உருவாக்கப் பட்டுள்ளன.

பழைய மரபுத்தொடர் பிற்காலத்திலும் கையாளப்படுதல்

பிற்காலத்தில் இவ்வடிவங்கள் ஏதேனும் ஒரு வகையில் காலம் காட்டும் முறையிலேயே இடம் பெற்றன எனினும், வழக்கிலுள்ள சில மரபுத் தொடர்களில் வரும் இவ்வடிவங்கள் ஆரம்ப காலத் திலிருந்து காலம் காட்டவில்லை என்பது வியப்பளிப்பதாக உள்ளது. திராவிட மொழிகளில், இறந்தகாலம், இறந்தகாலம் அல்லாதன என்ற பகுப்பே அடிப்படையான காலப் பாகுபாடாகும். நிகழ் காலமும், எதிர்காலமும் வேறுபடுத்தப்பட்டாலும், அவற் றிடையே மயக்கம் மிகுதி. 'வருகிறேன்' என்பது நிகழ்காலமாயினும் எதிர்காலத்திற்கும் பயன்படுத்தப்படலாம். சான்று: 'நாளை வருகிறேன்'. இறந்த காலத்தைக் குறிப்பதாக விளக்கப்படும் 'உணர்ந்து', 'நுவன்று' முதலிய வடிவங்கள், பழைய நூல்களில், இறந்தகாலம் அல்லாதவற்றைக் குறிக்கின்றன.

"சென்றீ" என்பது போன்ற வடிவங்கள் ஏவலாக வருகின் றன.[20] இங்கு இகரம் துணை வினையாகும். எனவே எஞ்சுவது "சென்று" எனும் வடிவமே. 'வருதி', 'போதி' போன்றவற்றில் இகரத்தை நீக்கி விட்டால், அவ்வினைகளில் ஈற்றில் எஞ்சும் "து" என்பது பழைய இலக்கண முறைப்படி இறந்த காலத்தையே காட்ட வேண்டும். ஆனால் அது இறந்தகாலம் அல்லாததை உணர்த்து கிறது. இவற்றில் வரும் துகரம் 'மருந்து' என்பதில் உள்ளது போல, சொல்லாக்க அசையாக இருக்கலாம். நெட்டுயிர் உள்ள ஓரசை வேர்கள் ஒரு விகுதியைப் பெற்றுக் குறுகுகின்றன என்றும், பின்னர் அவை "து" என்னும் ஆக்க அசையைப் பெறுகின்றன என்றும் எமனோ சுட்டிக் காட்டுவது மேலே சொல்லப்பட்ட கருத்துக்கு வலுவூட்டுகிறது. சான்று ஆர் > அரு; அரு + து >

---

20 அகநானூறு. 46—16
"...சென்றீ, பெரும! நிற் நகைக்குநர் யாரோ"

அருந்து.[21] வேருக்கு அடுத்தும் "து"வுக்கு முன்னரும் 'உந்' இருக்கலாம் என யூல் ப்ளாக் கூறுவார்.[22] "கு" வெறும் சொல்லாக்க அசையாக இல்லாத எல்லா இடங்களிலும் எதிர் காலம் காட்டுவதில்லை. தன்மை, முன்னிலையில் சிலவிடங்களில் குருக் மொழியில் 'பு' இறந்தகாலம் காட்டப் பயன்படுத்தப்படுவது போலச் சில இடங்களில் தன்மை, முன்னிலை ஆகியவற்றில் 'கு' இறந்தகாலம் காட்டும். இச்சொல்லாக்க விகுதிகள் (Formative Suffixes) பின்னர் காலம் காட்டும் இடைநிலைகளாகப் பயன்பட லாயின.[23] ஆரம்பகாலத்தில் இவை வேறு வழக்கில் வந்திருக்க வேண்டும். ஆனால் அவற்றைப் பற்றியெல்லாம் விளக்கக் கூடிய நிலைக்குத் திராவிட மொழி ஆராய்ச்சிகள் இன்னும் வளர்ச்சி அடையவில்லை.

காலம் காட்டும் இடை நிலைகளின் வளர்ச்சி

இந்த ஆக்க அசைகள் எவ்வாறு காலம் காட்டத் துவங்கின என்பதைக் கற்பனையாகவாவது எண்ணிப்பார்க்க முயலலாம். தமிழ் வாக்கியம் ஒரு எழுவாய் பயனிலையுடன் வேறு இணைப்புக் கள் இன்றி வழங்கத் தொடங்கியிருக்கலாம். 'இணைப்பு' என்பது ஆழ் நிலை இலக்கணத்திற்கு (Deep Grammar) உரியதாகும். 'இணைப்புச் சொல்' அந்நிலையிலேயே தோன்றா நிற்கும். இன்று கூடப் பல வாக்கியங்களில் இந்நிலை விளங்கக் காணலாம். சான்று : 'இது மரம்', என்பது "இது மரம் ஆகும்" என்பதைக் குறிக்கிறது.

முன்னர் ஆராயப்பட்ட 'செய்யும்' எனும் வாய்பாடு எக்காலத்திற்கும் பொதுவான உண்மைகளான 'சூரியன் உதித்தல்' போன்றவைகளைக் குறிக்க, மரபுத்தொடர் போலப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. 'அவன் செயல்' எனும் வாக்கியத்தில் வருவது போலப் பயனிலை என்பது ஒரு காலத்தில் பெயர்த் தன்மையதாக (Substantive) இருந்து, தொழிலை மட்டுமே குறித்திருக்க வேண்டும். இவ்வாக்கியம் 'அவன் செய்கிறான்', 'அவன் செய்யட்டும்' என்னும் பொருள்களில் வருகின்றது. தொழிற் பெயர்கள் பயனிலையாகப் (predicate) பொருள் கொள்ளப்பட்டன. இதைப் போலவே துகரம்

21 M.B. Emeneau : *Comparative Dravidian Phonology*

22 Jules Bloch : *The Grammatical Structure of Dravidian Languages*, p 72

23 *Ibid*, p 68

போன்ற ஆக்க அசைகள் பெற்ற வினை வேர்கள், காலத்தை வெளிப் படையாகக் காட்டாமல் பயனிலையைக் குறித்திருக்க வேண்டும். சான்று: 'அவன் செய்து'. இதில் சூழ்நிலையைக் கொண்டு காலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்; பின்னர் சொல்லாக்க அசை பல்வேறு காலங்களைக் காட்டும் வகையில் வளர்ச்சியுற்றிருக்க வேண்டும்.

இறந்த காலம்

பயனிலைகள் ஒரே தொடராக வரும் பொழுதும் அவை நிகழ்ச்சிகளின் வரலாற்று முறைப்படியேதான் அமையும். பின்னால் வருவதோடு நோக்குகையில் முந்தையது இறந்த காலமாக அமையும். இவ்வாருக, அதிகமாக வழங்கி வரும் துகர ஆக்க அசையானது கிட்டத்தட்ட ஒரே முறையில் இறந்த காலத்தைக் குறிக்கலாயிற்று.

ஒப்புமையால் காலங்காட்டல் (Relative Tense)

தென் திராவிட மொழிகளில் 'செய்து' எனும் வினை எச்சம் மரபுத் தொடராகப் பயன்படுவதை இவ்வகையில் குறிப்பிடலாம். வினைமுற்றுக்கள் காட்டும் காலத்திற்கு மாருக, எச்சங்கள் காட்டும் காலம் ஒப்புமையானதே. 'உண்டு வந்தான்' என்ற தொடரில் 'உண்டு' என்பதை 'வந்தான்' என்ற இறந்த கால வினைமுற்ருேடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இறந்த காலமே ஆகும். ஆனல் 'நாளை உண்டு வருவேன்' என்பதில் வினைமுற்ருேடு ஒப்பு நோக்குகையில் மட்டுமே 'உண்டு' என்பது இறந்த காலம் ஆகிறது. ஆனல் வினை முற்ருே எதிர்காலத்தைக் காட்டுகிறது. முடிவாக நோக்குகையில் 'செய்து' எனும் வினையெச்ச வாய்பாடும் உண்மையில் எதிர்காலத் தையே காட்டுகிறது.

இவ்வாருக இச்சொற்கள், எவ்வரிசை முறையில் வந்தனவோ அவ்வரிசை நோக்கிக் காலம் புரிந்து கொள்ளப்பட்ட முறையி லிருந்து உருப்பெற்றதின் விளைவே இந்நிலைக்குரிய காரணமாகும்.

இறந்தகாலம் அல்லாதவற்றின் வளர்ச்சி

பெருவழக்கினவாகத் துகரத்தில் முடியும் வடிவங்களின், ''துகரம்'' இறந்தகாலத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டதி லிருந்து, துகரவிகுதியானது இறந்தகாலம் காட்டும் இடைநிலையாகக் கருதப்படலானது. இறந்த காலம் தனியாக வேறுபடுத்தப் பட்டதும், இறந்தகாலம் அல்லாததும் இவ்வாறே வேறுபடுத்தப்பட

லாயிற்று. பிற சொல்லாக்க அசைகளான கு, பு, என்பன, இறந்த காலம் அல்லாதவற்றைக் குறிக்கும் விகுதிகளாகக்கருதப்படலாயின. தமிழ்சொற் களஞ்சியம் குறிப்பிடும் 9, 10, 11, 12 ஆவது வினை விகற்ப வாய்பாடுகளில் சொல்லாக்க விகுதிகளான "கவும் பவும்" இடம்மாறிக் கொள்கின்றன. (பின் இணைப்பைக் காண்க.) சான்று : 'நிற்ப, நிற்க'. பார்ஜி மொழியில், இவைகளுக்கிடையில் உள்ள வேறுபாடு பர்ரோ சுட்டுவது போல வெறும் கிளைமொழி மாற்றங்களே ஆகும்.[24] தமிழில்கூட, இலக்கிய மொழியோடு வட்டார வழக்குகளும் கலந்திருக்கக் கூடும். இது எப்படியாயினும், இறந்தகாலமல்லாதவற்றில் எதிர்காலத்தினைக் குறிக்கப் பகரம் மிகுதியாக வருகிறது. மேற்கூறிய வினைவிகற்பங்களில் கண்டிப்பாக இடம் பெறும் சொல்லாக்க அசையான ககரம் பழைய தன்மை இடத்திலும் வருகிறது.

ககரம் என்பது சொல்லாக்க அசையாக, எல்லா வினை வேர்களுடனும், அவை எதிர்கால முற்றுக வரும் பொழுது வரலாம் என்றும், அச்சொற்களில் எதிர்காலம் என்பது பகரத்தின் மாற்று வடிவமான வகரத்தால் காட்டப்பெறும் என்றும் தொல்காப்பிய உரையாசிரியர் சேனாவரையர் சுட்டிக் காட்டுகிறார்.[25]

சொல்லாக்க அசைகள் சேர்க்கப்படும் பொழுது உண்டாகும் உருபொலியன் மாற்றங்கள்

நன்கு நிலை பெற்ற உருபொலியன் விதி ஒன்றின்படி தகரம் என்பது ன் / ல் க்குப் பிறகு வருகையில் நுனியண்ண வெடிப்பொலி யாகிறது; ண் / ள் க்குப் பிறகு வருகையில் நாவளை வெடிப்பொலி யாக மாறுகிறது. 'உண்டு, நின்று' என்பவற்றில் உண்மையில் உள்ளது இத்தகரமே என்பதை இது விளக்கும். இவ்விதிக்கு உட்பட்டு வராத வடிவங்களை அவை துகரம் பெற்றிருந்தாலும் கூட, இறந்தகாலமல்லாதவற்றைச் சேர்ந்தவை என்றே வேறு படுத்திக் கூறுதல் வேண்டும்.

சான்று : வருது, சேறு, (செல் + து). ஒரு காலத்தில் இவை 'வந்து, சென்று' என்பவற்றின் மாற்று வடிவங்களாகவே இருந் திருக்க வேண்டும். பின்னர் இவை "வந்து, சென்று" என இறந்த

24 T. Burrow: *Parji*, p 48

25 தொல்காப்பியம், சேனாவரையர் உரை 491, 497, 687 ஆவது நூற்பாக்கள்

கால வடிவங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. முந்தையது இறந்தகாலம் அல்லாதது காட்டும் இடைநிலையாக ஏற்கப்பட்டதும் ஒப்புமையாக்கத்தின் மூலம் எல்லா வினை வேர்களுக்கும் இவை விரிவுற்றன.

'கு' முதலியவற்றுடன் வரும் வேர்களுக்கும் பழைய துகரத்துடன் வரும் வேர்களுக்கும் இடையில் ஒரு வேறுபாடு உண்டு. இரண்டாவது மூன்றாவது வினைவிகற்ப வாய்பாடுகளைச் சேர்ந்த சில வினைகள் நாவளை அல்லது நுனியண்ண மூக்கொலியாக முடிவதில்லை. பதிலாக அவற்றிற்கு இணையான மருங்கொலிகளை அவை பெற்றுள்ளன.

சான்று : கொண் > கொள்
சென் > செல்

வட்டார வழக்குகளில் உள்ள பல சொற்கள் இத்தகைய மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன. காலப்போக்கில் அவை அவ்வப்போது இலக்கிய மொழியிலும் இடம் பெறலாயின.

சான்று : எண் > எள்
கொண் > கொள்
இன் > இல்
நோன் > நோல்
ஆண் > ஆல்
அகன் > அகல்

ஆரம்பத்திலிருந்தே வரும் வட்டார வழக்குகளில் காணப்படும் மாறுபட்ட வடிவங்களாக இவற்றைக் கருதலாம் என்றாலும் தமிழ் இலக்கிய மொழியை மட்டும் கருத்திற்கொண்டு பார்க்கையில் இவற்றை வரலாற்று ரீதியிலான மாற்றம் என்ற முறையிலேயே கருத வேண்டும். சிலர் முயல்வது போல, பிறழ்பிரிப்பு முறையில் இவற்றை விளக்க முடியாது.

ஊ. திராவிட மொழிகளில் விட்டிசைத்தல் (குரல்வளை வெடிப்பொலி*)

ஜெர்மனியர்கள் ஆங்கிலம் பேசும் பொழுது உயிரொலியோடு தொடங்க வேண்டிய எல்லா ஆங்கிலச் சொற்களிலும் விட்டிசை ஒலியை இணைக்கும் போக்கு உள்ளது என்பதை டானியேல்

* ''விட்டிசைத்தல் வெடிப்பொலி'', ''குரல்வளை வெடிப்பொலி'' (glottal stop) என்பவற்றை ஒரு பொருட் பன்மொழிகளாக ஆசிரியர் இந்நூலில் கையாண்டுள்ளார்.

ஜோன்ஸ் விளக்கியுள்ளார்.[26] இடையீடுகளைக் கையாளும் பொழுது ஆங்கில முறை, ஜெர்மானிய முறை என இரண்டுமுறை உண்டு என்பதே இதன் பொருள். ஒன்றில் ஒலித்தசை திறந்து வைக்கப் பட்டுள்ளது. மற்றொன்றில் ஒலித்தசை மூடப்பட்டுள்ளது. ஒலித் தசை திறந்துள்ள பொழுது, உயிரொலியைத் தெளிவாக உச் சரிக்கலாம். ஒலித்தசை மூடப்பட்டுள்ளபொழுது, உயிரொலி உச்சரிக்கப்படுமாயின் விட்டிசைத்தல் முன்னர்த் தோன்றும்.

கூய், நாய்க் ஆகிய மொழிகளைத் தவிர வேறு எந்தத் திராவிட மொழியிலும் குரல்வளை வெடிப்பொலி என்பது ஒலியன் அன்று. தமிழ், கோலாமி, கோந்த் மொழிகளின் பல்வேறு வட்டார வழக்குகள் ஆராயப்பட்ட பொழுது குரல்வளை வெடிப்பொலியானது சொல்லிறுதியில் வருவது கவனிக்கப்பட்டது. குறிப்பாக எண்ணுப் பெயர்களில் இப்போக்கு உள்ளது. சில தமிழர்களின் பேச்சில் மொழி முதல் உயிருக்கு முன்வரும் மொழியீற்று உயிரொலிக்குப் பின்வரும் குரல்வளை வெடிப்பொலி (விட்டிசைத்தல்) வருவதை நான் கவனித்துள்ளேன்.

வருமொழி வெடிப்பொலி மீதான விளைவுபற்றிய ஒரு குறிப்பு (A Suggested effect on following plosive)

மொழிமுதல் அடைப்பொலியின் உச்சரிப்பில் இம்மாறு பட்ட இரண்டு 'இடைவெளிகளின்' விளைவானது மாறுபட்டதா யிருக்கும் என்பது இதன் பொருள். திராவிட மொழிகளில் சில விடங்களில், மொழியிறுதி உயிருக்குப் பின்னுல் வரும் வருமொழி களின் முதல் வெடிப்பொலியானது இரட்டிக்கின்றது. வேறு இடங்களில் இவ்வாறு நிகழ்வதில்லை. குரல்வளை வெடிப்பொலியுடன் கூடிய இடைவெளியே இத்தகைய வெடிப்பொலி இரட்டித்தலுக்குக் காரணம் எனக் கொள்வதில் தவறில்லை. பொதுவாக ஓரசைக்கு மேலுள்ள சொற்கள், இறுதி உயிருக்கு முன்னுல் வரு மொழி முதல் வெடிப்பொலி இரட்டிக்கும். சான்று: "பார்த்துக் கொண்டேன்". ஆனுல் இதற்கும் விதிவிலக்கு உண்டு. குரல்வளை வெடிப்பொலி இன்றி, பொருளை அறிதற்கெனத் திறந்த இடை வெளி இருப்பது தேவையெனின் இரட்டிப்பு நிகழ்வதில்லை. சான்று: "கத்து-கடல்". இக்கொள்கை ஏற்கப்படுமாயின் சந்தி விதிகளைப் புரிந்து கொள்வது எளிமையானதாகும். இவ் இடைவெளிகளில் உள்ள மாற்றங்களைப் பதிவாகியுள்ள வழக்குகளிலிருந்து கண்டுணரலாம்.

26 Daniel Lones : *An outline of English Phonetics*, p 151, 1960

இரண்டாது, மூன்றாது வினைவிகற்ப வாய்பாட்டு வினை வேர்களின் ஈற்றில் வரும் மருங்கொலிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை முதலில் கவனிக்க வேண்டும். இவ்வேர்கள் ஆரம்பத்தில் மூக்கொலிகளில் முடிந்தன என முன்னர் நாம் கண்டோம். முதலில் இத்தகு மூக்கொலி இருந்ததால், இடைவெளியானது (pause) முதலில் திறந்த தன்மையுடையதாக குரல்வளை வெடிப்பொலியின்றி அமைந்தது. இதற்கு மாறாக 9, 10 ஆவது வினைவிகற்ப வாய்பாட்டு வேர்கள் என்பன குரல்வளை வெடிப்பொலியைப் பெற்றிருந்தன என்றே கொள்ள வேண்டும்; ஏனெனில் அவைகளுக்குப் பிறகு வரும் வெடிப்பொலிகள் இரட்டிக்கின்றன; மேலும் அவை ஒலிப்பிலா ஒலியாகவும் ஆகின்றன; அவற்றின் ஒலிப்பிலா உச்சரிப்பு அவற்றுக்கு இணையான நாவளை அல்லது கடையண்ண வெடிப்பொலியுடன் சமப்படுத்தப்படுகிறது. ஒலிப்புடை, ஒலிப்பிலா மருங்கொலிகளை ஒப்பிட்டறிய 'மீள்க' என்பதனை 'மீள்க்க' என்று மலையாளத்திலும் திருநெல்வேலித்தமிழிலும் எழுதப்படுவதைச்சான்றாகக்காட்டலாம். ஒலிப்பிலா மருங்கொலி தமிழ் வரிவடிவத்தில் கடையண்ண நாவளை வெடிப்பொலியாக எழுதப்படுவது இக்கருத்தை ஆதரிக்கும். ஆனால் "இடைவெளியின் மாற்றம் அல்லது ஊசலாட்டம்", "கல் கடிது - கற்கடிது" என்பன போன்ற வடிவங்கட்கு வழி வகுக்கலாம். பதினோராவது வினைவிகற்ப வாய்பாட்டு வேர்களின் இறுதியிலும் குரல்வளை வெடிப்பொலி இருப்பதாக நாம் கொள்ள வேண்டும்; ஏனெனில் இவ்வேருடன் வெடிப்பொலி தொடரும் பொழுது அது இரட்டிக்கிறது. சான்று : "பார்த்தான்; பார்க்க".

தன்வினை பிறவினையாவதால் இங்கு வல்லொலி இரட்டிக்கிறது என்ற கேள்விக்கே இடமில்லை. "நேர்ந்தது" என்பதற்கு இணையாக "நேர்த்தது" என ஒன்று இல்லை. இது போலவே 11ஆவது வினைவிகற்ப வாய்பாட்டைச் சேர்ந்த "குதி" என்பதிலும் இரட்டித்தல் உள்ளது. ஆனால் 4 ஆவது வினை விகற்ப வாய்பாட்டைச் சேர்ந்த "அணி" என்பதில் வெடிப்பொலி இரட்டிப்பு இல்லை. 1, 2, 3, 4, 5, 6, 7, 8 ஆவது வினைவிகற்ப வாய்பாட்டு வேர்ச் சொற்களின் குரல்வளை வெடிப்பொலி இல்லாதிருக்கலாம். எனவே அவற்றைத் தொடரும் வெடிப்பொலிகளும் இரட்டிப்பதில்லை.

4 ஆவது வினைவிகற்ப வாய்பாட்டைச் சேர்ந்த "அணி" போன்றவற்றையும் 11ஆவது வினைவிகற்ப வாய்பாட்டைச் சேர்ந்த 'பார், குடி' என்பவற்றையும் ஒப்பிடுவதைச் சிலர் மறுக்கக்கூடும்.

ஏனெனில் 4ஆவது வினைவிகற்ப வாய்பாட்டில் இறந்த கால வடிவத்தில் மூக்கொலி வருகிறது. சான்று : 'அணிந்தான்; நேர்ந்தான்'. ஆரம்பத்தில் இவ்வேர்களின் இறுதியில் மூக்கொலி இருந்திருக்கலாம் என நம்பக் காரணம் இருக்கிறது. பழைய அடிச் சொற்களில் மூக்கொலி முடிவு மறையாது தொடர்ந்து ரகரத்தில் முடிகிற 'நேர்' என்னும் வேர்ச்சொல் நான்காம் வினைவிகற்ப வாய்பாட்டினைச் சேர்ந்தது. இங்கு முன்பு குறித்தது போன்ற வல்லொலி இரட்டித்தல் இதற்கு இணையான எந்தவொரு வேர்ச்சொல்லிலும் இல்லை. வந்த போதிலும் ஏவலாக வரும் பொழுது, ஒப்புமையாக்கத்தால் நீட்சி பெற்ற எதிர்கால வடிவத்திலும் மூக்கொலி என்பது இழப்புக்குள்ளாயிற்று. முன்னரே குறிப்பிட்டது போலச் சில சமயங்களில் ஆக்க அசையுடனும் சில சமயங்களில் ஆக்க அசை இன்றியும் வரும் வேர்களும் உண்டு.
சான்று : ஆர் > அருந்து; ஆழ் > அழுந்து.

சொல்லாக்க அசையான "து" நீக்கப்பட்டால் வேர் மூக்கொலியுடன் எஞ்சி நிற்கிறது. சில சமயங்களில் பிற சொல்லாக்க அசைகளுக்கு முன்னரும் மூக்கொலியுடன் வரும் பழைய வடிவங்கள் இருப்பதைக் காணலாம். பிற்கால மாற்று வடிவங்களில் (variants) மூக்கொலி மறைந்து விடுகிறது. "இலங்கு" என்பது "இலகு" என்றாகியது. "வா" என்பதற்கு வம், வரு என்பன மாற்று வடிவங்கள். "வம்", "வந்து" என்பதையும் "வரு", "வருது" என்பதையும் தருகின்றன.

முன்னரே குறிப்பிட்டது போல யூல் பிளாக் இவற்றிலெல்லாம் 'உம்' அல்லது 'உன்' என்னும் விகுதியைப் பற்றிப் பேசுவார். இதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இதற்கு அவர் தரும் பொருள் இன்னும் நன்கு நிறுவப் பெறாததால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது.[27]

திராவிடமொழி அடிச்சொல்லகராதியில், மூலத்திராவிட மொழிக்கும் தமிழுக்கும் இடையே கொடுக்கப்பட்டுள்ள இன ஒலிகளைப் பின்வரும் பட்டியலில் காணலாம். மூலத்திராவிட மொழி ஞகரத்தையும், ஆடொலி றகரத்தை நுனியண்ண வெடிப்பொலியாகவும் இதில் சேர்த்துள்ளோம்.

27 Jules Bloch: *The Grammatical Sturcture of Dravidian Languages*, p 72

மூலத்திராவிடமொழி	தமிழ்	மூலத்திராவிடமொழி	தமிழ்
†அ*	அ	ண்ட்	ண்ட்
†ஆ	ஆ	†த்	த்
†இ	இ	†த்	த்
†ஈ	ஈ	†த்த்	த்த்
†உ	உ	†ந்த்	ந்த்
†ஊ	ஊ	†ப்	ப்
†எ	எ	†ம்ப்	ம்ப்
†ஏ	ஏ	†ற்	ற்
		†ற்ற்	ற்ற்
†ஒ	ஒ	†ன்ற்	ன்ற்
†ஓ	ஓ	†ம்	ம்
†க்-	க், ச்	†ன், ந்[2]	ன்,ன்
†-க்	க்	†ண்	ண்
†க்க்	க்க்	†ஞ்	ஞ்
†ங்க்	ங்க்	†ய்	ய்
†ச்[1]	ச்	†ர்	ர்
†-ச்-	ச்	†ல்	ல்
†ச்ச்	ச்ச்	†ல்ல்	-ல்ல்-
†ஞ்ச்	ஞ்ச்	†வ்-	வ்
†-ட்-	ட்	†-வ்-	வ்
†-ட்ட்-	ட்ட்	†ழ்	ழ்
		†ள்	ள்
		†ள்ள்	ள்ள்

* மூல மொழியைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் '*' என்ற குறியீட்டிற்குப் பதிலாக இங்கு '†' என்ற குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

1 †'ச்' அடிக்கடி தமிழில் மறைகிறது.

2 மூலத்திராவிடத்தில் இரு ஒலியன்கள் இருந்தன என்பதற்குத் தமிழில் சான்று உள்ளது எனத் தோன்றுகிறது. ஆனால் இன்னும் தெளிவாகவில்லை.

வினைவிகற்ப வாய்பாடு	சான்று	இறந்த காலத்தில் வரும்பொழுது வேரில் ஏற்படும் மாற்றம்	இறந்தகால விகுதி	நிகழ்கால விகுதி	எதிர்கால விகுதி	'செய' வினையெச்ச விகுதி
I	செய்	—	த்	கிற்	வ்	அ
II	ஆள்	ள் > ண்	த் > ட்	கிற்	வ்	அ
III	கொல்	ல் > ன்	த் > ற்	கிற்	வ்	அ
IV	அறி	∅ > ந்	த்	கிற்	வ்	அ
		அல்லது				
			த் > ந்த்	கிற்	வ்	அ
V	ஆகு	உ > ∅	இன் ~ இ	கிற்	வ்	அ
VI	நடு	உ > ∅	Pத் > PP	கிற்	வ்	அ
		அல்லது				
	CVPu >	CVP >	CVPPu	கிற்	வ்	அ
VII	உண்	—	த் > ட்	கிற்	வ்	அ
VIII	தின்	—	த் > ற்	கிற்	வ்	அ
IX	கேட் (ஏவல் நீங்கலாக) (ஏவலில் 'கேள்' எனவரும்)	—	த் > ட்	கிற்	ப்	க
X	கற் (ஏவலில் மட்டும் கல் என்பதாகும்)	—	த் > ற்	கிற்	ப்	க
XI	பார்	∅ > த்	த்	∅ > க்கிற்	∅ > ப்ப்	∅ > க்க
		அல்லது				
	பார்	—	த் > த்த்	க் கிற்	ப்ப்	கக்
XII	நட	∅ > ந்	த்	∅ > க் கிற்	∅ > ப்ப்	∅ > க்க
		அல்லது				
	நட	—	த் > ந்த்	க் கிற்	ப்ப்	க்க

நெடில் மெய், குறில் மெய்யீற்று ஓரசை வேர்ச் சொற்களில் உள்ள மெய் உயிர் முதல் மொழி முன் இரட்டிக்கிறது; இச் சொற்களின் உகரவீறும் உயிர்முன் மறைகின்றது. இது போல ஆறும் வினைவிகற்ப வாய்பாட்டில் இறந்தகால இடைநிலை சேரும் போது வேரின் இறுதி உகரம் இழப்புற்று இறந்தகால இடைநிலைக்குப் பின் உகரம் தோன்றுகிறது. வேறு உயிர்களில் முடியும் வேர்கள் ஓர் உயிரொலியால் தொடரப்படுமாயின் யகரவுடம்படு மெய்பெறுகின்றன. இ, ஈ, எ, ஐ முதலிய உயிர்களில் முடியும் வேர்கள் யகரவுடம்படு மெய்யையும் ஏனைய வகரவுடம்படு மெய்யையும் பெறுகின்றன.

4

குகைக் கல்வெட்டுக்களின் மொழி

1 குகைக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டமை

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில், குறிப்பாக 1906 ஆம் ஆண்டிலிருந்து, பழைய பாண்டிய நாடென வழங்கும் தென் தமிழக மாவட்டங்களில் சிறிய கல்வெட்டுக்கள் பல தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவையெல்லாம் குகைகளில் பொறிக்கப்பட்டிருந்தன. இக்குகைகள் துறவிகளின் குளிர்காலத் தங்குமிடங்களாயிருந்திருக்கக்கூடும். இக்குகைகளில் வழ வழப்பாகச் செதுக்கப் பட்ட கற்படுக்கைகள் உள்ளன. இக் கல்வெட்டுகளும் குகைகளும் இலங்கையில் காணப்படுவனவற்றைப் போன்றே உள்ளன. இவ்விரு இடங்களிலுமுள்ள கல்வெட்டுக்களும் பிராமி வரிவடிவத்தால் எழுதப்பட்டவையாகும். தொல் எழுத்தியல் அடிப்படையில் இக் கல்வெட்டுக்களின் காலத்தை கி. மு. மூன்றும், இரண்டாம் நூற்றுண்டுகள் என நிர்ணயிப்பர். தென் தமிழகக் குகைக் கல் வெட்டுகளுக்கும் இலங்கைக் குகைக் கல்வெட்டுகளுக்கும் இடையே சில வேறுபாடுகள் இருப்பினும், இவற்றுக்கிடையில் குறிப்பிடத் தக்க அளவு இன ஒற்றுமை காணப்படுவதால், இவற்றைப் பிராமி வரிவடிவத்தின் தென்னக வகை என்று அழைப்பதில் தவறில்லை.

2 வாசிப்பு (Decipherment)

முன்னர் அறியப்படாத, புதிய வரிவடிவத்தை ஆராய்ந்து, வாசித்தறிவது என்பது ஒருவகையில் துப்பறிவதை ஒக்கும். புதிய வரிவடிவத்தின் அக ஒருமைப்பாட்டினைக் காண ஏதுவாக மொழி யியல் முறைகளைச் செம்மைப்படுத்துவதற்கும், அதன் வழியே அவற்றைச் சரியாக வாசித்தறியவும், புதிய வரிவடிவத்தை ஆராயும் முயற்சி உதவுகிறது.

சில ஒலி வழக்குகள் : உயிர்கள்

அசோகரது கல்வெட்டுக்களில் மெய்யையும் நெட்டுயிர் ஆகாரத்தையும் கொண்ட ஓரசையினைக் குறிக்கும் வரிவடிவின்

உச்சியின் வலப்புறத்தில் உள்ள படுக்கைக்கோடு நெட்டுயிர் ஆகாரத்தைக் குறிக்கும்; உச்சியின் இடது புறத்தில் உள்ள படுக்கைக் கோடு ஏகாரத்தைக் குறிக்கும்; இரு புறங்களிலும் படுக்கைக் கோடுகள் வருமாயின் அது ஓகாரத்தைத் குறிக்கும். ஆனால் இவ் வரிவடிவத்தின் தென்னக வகையில், இக்கோட்டின் அளவானது வேறுபடுத்தப்பட்டுள்ளது. இங்கு நீண்ட கோடு நெட்டுயிரையும் குறுகிய கோடு குற்றுயிரையும் குறிக்கின்றன. கோட்டின் அளவு வேறுபாட்டால் ஏகாரமும் எகரமும், ஓகாரமும் ஒகரமும் வேறு படுத்தப்படுகின்றன. அசோகரது கல்வெட்டுக்களில் 'க' என வாசிக் கப்படுவது இங்கு 'க்' என்றே வாசிக்கப்படவேண்டும். தென்னகப் பிராமி வரிவடிவம் தனிவகையானது என்பதை இவ்வேறுபாடுகள் காட்டும்.

மெய்கள்

தற்கால ஆங்கில வரிவடிவத்தில் உள்ள 'G' என்பது போன்ற ஓர் எழுத்து தென் மாவட்டப் பிராமி வரிவடிவத்தில் காணப்படு கிறது. அதுவே ழகரம் என இனங்காணப்பட்டது. இதுவே குகைக் கல்வெட்டு மொழியின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்து கின்றது. அசோகரது கல்வெட்டுக்களின் பிராமி வரிவடிவத்தில் நுனிநா பல் மூக்கொலியான நகர மெய்யானது படுக்கைக் கோடு ஒன்றின் நடுவில் நிற்கும் செங்குத்துக் கோட்டால் குறிக்கப் பட்டுள்ளது. அதைப்போன்ற ஓர் எழுத்து, ஆனால் வலது புறம் சிறு வளைவுடன் கூடியதாக உள்ளது காணப்படுகிறது. அது னகர மெய்யாக இருக்கலாம் என உணரப்பட்டது. தமிழை அறிந்தோர் அதை நுனியண்ண மூக்கொலியாகவே கொள்வர். நுனிநா பல் மூக்கொலியான நகர மெய்யுடன் இம்மெய்யொலிக்கு "வேற்று நிலை வழக்கு" உண்டு என்பதை இது காட்டுகிறதா என்ற வினா எழுகிறது. தமிழ் வரிவடிவம் ஒன்று இருந்திருக்க, அதனையே இங்குப் பிராமி வரி வடிவத்தில் எழுதியிருக்க வேண்டும் எனில், தமிழில் இவ்வொலிகட்கிடையில் வேற்று நிலை வழக்கு இல்லாத பொழுது பிராமி வரிவடிவத்தில் இவ்வொலிகள் வேறுபடுத்தப் பட்டிருக்கத் தேவையில்லை. ஆனால் தமிழ் வரி வடிவம் எதுவும் அக்காலத்தில் இருந்ததா என்பது ஐயப்பாட்டிற்குரியதே. அது அங்ஙனமாயின் குகைக்கல்வெட்டுக்களை எழுதுவதற்குக் காரணமா யிருந்தோர்—அவர்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளா தவராக இருந்திருக்கலாம்—இவ்வொலிகட்கு இடையிலுள்ள வேறு

பாட்டைக் கவனித்திருக்க வேண்டும். 'S' என்னும் வடிவம் தனது மேல் வளைவு முடிவிலிருந்து நேர் கீழாக எழுதப்பட்ட செங்குத்துக் கோட்டை ஊன்றுகோலாகக் கொண்டு நிற்பதைப் போல அதற்குத் தொடர்பான நுனியண்ண வெடிப்பொலி காணப்படுகிறது. தென்னகப் பிராமியில் உள்ள நுனியண்ண வெடிப்பொலியின் வரி வடிவமானது அசோகரது கல்வெட்டுக்களின் பிராமி வரிவடிவத்தில் நாவளை வெடிப்பொலி, நுனிநா பல் வெடிப்பொலி ஆகியவற்றிற் குரிய எழுத்துக்களின் சேர்க்கையால் உருவாக்கப்பட்டதாகும். நுனியண்ண வெடிப்பொலியின் பிராமி வரிவடிவம் கண்டுபிடிக்கப் படுவதற்குக் காரணமாக இருந்தவர் யாராகினும் சரி அவர் இவ் வொலி நாவளை வெடிப்பொலிக்கும் நுனிநாபல் வெடிப்பொலிக் கும் நடுவில் அமைகிறது என்பதை உணர்ந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் விவரிப்பது போல நுனியண்ண மூக்கொலியை உச்சரிக்கையில் நாவில் வளைவு ஏற்படுவதைக் குறிப்பதுபோல அவ் வொலியின் பிராமி வரிவடிவம் அமைந்துள்ளது. இதைப்பற்றி பின்னர் ஆராய்வோம்.

கல்வெட்டுக்களில் காணப்படும் சில எழுத்துப் பிழைகளை நாம் தள்ளிவிடவேண்டும். சான்றாக னகரம் சிலவிடங்களில் நகர மாகவும் ணகரமாகவும் எழுதப்பட்டுள்ளது.

சில வடமொழி ஒலிகள் இல்லாமை

ஒலிப்புடை வெடிப்பொலிகள் (Voiced plosives), மூச்சுடை வெடிப்பொலிகள் (Aspirated plosives) முதலியன இக்கல்வெட்டுக் களில் காணப்படவில்லை. முன்னரே குறிப்பிட்டதுபோலக் குற்று யிர்களான எகரமும் ஒகரமும் அவற்றுக்கு இனமான நெட்டுயிர் களிடமிருந்து தெளிவாக வேறுபடுத்தப்பட்டுள்ளன. நாவளை ஒலிப் புடை உரசொலியாகிய (Retroflex Voiced Fricative) ழகர மெய்யும் நாவளை மருங்கொலி ஆகிய (Retroflex lateral) ளகர மெய்யும் காணப்படுகின்றன. 'ஐ', 'ஔ' முதலிய சந்தியக்கரங்களும் (Diphthongs) ரு, லு முதலிய அசையொலிகளும் காணப்படவில்லை. நுனிநா பல் குழிந்துரசொலியைத் தவிரப் பிற குழிந்துரசொலி களும் (Sibilants) காணப்படவில்லை. அந்தக் குழிந்துரசொலியும் பிறவிடங்களில் மூலத்திராவிட மொழி இடையண்ண வெடிப்பொலி யாகவே ஆகிவிடுகிறது.

தென் மாவட்டக் குகைக் கல்வெட்டுக்களின் மொழி "தமிழ் மொழி போன்றதொரு மொழி" (Something like Tamil) அல்லது

மூலத் தென் திராவிட மொழி (Proto-South Dravidian) என்பதை, மேலே ஆராயப்பட்ட செய்திகள் தெளிவாகச்சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் இக்குகைக் கல்வெட்டு மொழி தமிழ், பிராகிருதம் ஆகிய மொழிகளின் "கலப்பு மொழி" (Hybrid language) போல இருப்பதையும் கவனிக்க வேண்டும். ஏனெனில் இக்கல்வெட்டுக்களைச் செதுக்கிய பௌத்த சமயத்தினர் பிராகிருதத்தில் பேரறிஞர்களாயிருந்த போதிலும் தமிழைத் தாய் மொழியாக உடையோரல்லர். தமிழ் மக்கள் புரிந்து கொள்வதற்காகவென்றே அவர்கள் இக்கல்வெட்டுக்களைச் செதுக்கினார்கள்.

குகைக் கல்வெட்டுக்களின் ஒரு தனிச் சிறப்பியல்பு

இக் கல்வெட்டுக்களே ஈழம் பற்றிக் குறிப்பதாலும், இவை இலங்கையில் காணப்படும் குகைக்கல் வெட்டுக்களை ஒத்து அமைந்திருப்பதாலும், சிங்கள மொழியின் செல்வாக்கு இவற்றில் இருக்கக் கூடுமோ என எதிர்பார்க்கலாம். இரட்டித்த மெய்கள் சில இடங்கள் தவிர, ஏனைய இடங்களிலெல்லாம் தனி மெய்களாலேயே குறிக்கப்படுகின்றன. பிராகிருதத்துடன் ஒப்பு நோக்குகையில் இது சிங்களமொழியின் தனிச் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இவ்வியல் முழுதும் இக்கருத்தே கொள்ளப்பெற்றுள்ளது. கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த தொல்காப்பியத்தில் தனிமெய் இரட்டித்தமை என்ற வேற்று நிலை வழக்கு நிலைபெற்றிருத்தலின் குகைக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் தமிழமைப்பிலும் வரிவடிவில் சுட்டப்பெறாவிட்டாலும் இவ்வழக்கு இருந்ததாகவே கொள்ள வேண்டும்.

ஒரு குடும்ப மொழியின் வரிவடிவத்தால் பிறிதொரு குடும்ப மொழி எழுதப்படும் பொழுது, அவ்வெழுத்துக்களின் ஒலியன் மதிப்பை அளந்தறியப் பின்பற்றப்படும் வழிமுறையை விளக்குவதற்காகவே இதுகாறும் இவை விரித்துக் கூறப்பட்டன.

ஒலியன்கள் (Phonemic Inventory)

உயிர்கள்

இ	ஈ	உ	ஊ
எ	ஏ	ஒ	ஓ
	அ	ஆ	

மெய்கள்

க்	ச்	ட்	ற்	த்	ப்
	(ஞ்)	ண்	ன்	ந்	ம்
	ய்		ர்		வ்
	ழ்	ள்	ல்		

குறிப்பு : /ச்/ S ∾ C; கடன் வாங்கிய சொற்களில் 's' மொழி முதலில் வருகின்றது. பிறவிடங்களில் 'ச்' வருகின்றது. அருகிய வழக்குடைய '*dh, th*' முதலியன பிராகிருதச் சொற்களில் வருகின்றன.

வருமுறை (Distribution)

மொழி முதல்	க்—	ச்—			த்—	ப்—
மொழி இடை (தனித்து)	—க்—	—ச்—	—ட்—	—ற்—	—த்—	—ப்—
மொழி இடை (இரட்டித்து)	—க்க்—	—ச்ச்—	—ட்ட்—	—ற்ற்—	—த்த்—	—ப்ப்—
(நாம் விளக்கியபடி)						
		—ஞ்ச்—	—ண்ட்—	—ன்ற்—	—ந்த்—	—ம்ப்—
					ந்—	ம்—
			—ண்—	—ன்—	—ந்—	—ம்—
		ய்—				வ்—
		—ய்—				
		—ய்				
			—ழ்		—ர்—	
					—ர்	
			—ள்—	—ல்—		
			—ள்ள்—	—ல்ல்—		

எனவே மூலத்திராவிட மொழியின் ஒலியன் அமைப்பு இக்காலத்திலும் தொடர்வதைக் காணலாம்.

வெடிப்பொலிகள்

வேற்றுநிலை வழக்குகளை நிறுவும் சான்றுகள் கிடைக்காமையால் வெடிப்பொலியன்கள் என்ற சொல்லாட்சியைக் கையாளுவது சிரமம் எனினும் நாம் மூலத்திராவிட மொழியிலிருந்து இக்குகைக் கல்வெட்டுக்களின் மொழி நிலைக்கு வருவதால், க், ச், ட், ற், த், ப் ஆகிய ஆறையும் வெடிப்பொலியன்களாகக் கொள்ளலாம்.

க், ச், த், ப் ஆகிய நான்கு வெடிப்பொலியன்கள் மட்டுமே மொழிக்கு முதலில் வருகின்றன. நாவளை வெடிப்பொலியும் நுனியண்ண வெடிப்பொலியும் மொழிக்கு முதலில் வருவதில்லை. வெடிப்பொலிகள் எதுவும் மொழிக்கு இறுதியில் வருவதில்லை. ஆனல் எல்லா வெடிப்பொலிகளும் மொழி இடையில் உயிர்கட்கு இடையிலும், தங்களது இன மூக்கொலிகளுக்கு அடுத்தும் ('ங்க்' என்பது மட்டும் விதிவிலக்காக வருவதில்லை) வருகின்றன. 'dh' என்பதைத் தவிர ஒலிப்புடை வெடிப்பொலி எதுவும் காணப் படவில்லை.

மூக்கொலிகள்

கடையண்ண மூக்கொலி, இடையண்ண மூக்கொலி, நாவளை மூக்கொலி, நுனியண்ண மூக்கொலி, நுனிநா பல் மூக்கொலி, ஈரிதழ் மூக்கொலி முதலிய மூக்கொலிகள் காணப்படுகின்றன. ஈரிதழ் மூக்கொலி மொழி இடையில் தனது இன வெடிப்பொலிகளுக்கு முன்னரும் மொழி முதலில் உயிருக்கு முன்னரும் வருகிறது. இது ஒலியனுகத் தொடர்ந்து திகழ்கிறது. நுனிநா பல் மூக்கொலியும் இவ்வாறே மொழிக்கு முதலிலும் இடையில் இனவெடிப்பொலி களுக்கு முன்னரும் வருகிறது எழுதுவோர் நுனிநா பல் மூக்கொலிக்கும், நுனியண்ண மூக்கொலிக்கும் இடையே வேறு பாட்டினைக் கண்டனர் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இவ்விரண்டும் தனித்தனி ஒலியனுகலாம். சில இடங்களில் நுனி நா பல் மூக்கொலி மொழிக்கு இறுதியில் வருகிறது. நுனியண்ண அல்லது நாவளை மூக்கொலிக்குப் பதிலாக, தவருக இது எழுதப் பட்டிருக்கலாம். இடையண்ண மூக்கொலி மொழி முதலிலோ, இறுதியிலோ வரவில்லை. ஆனல் மொழிக்கு இடையில் மெய்யாக, இடையண்ணச் சகரத்திற்கு முன்னர் வருகிறது. அது ஒலியன் நிலையினை இழந்து விட்டது என நினைப்பதற்குக் காரணம் எதுவும் இல்லை.

இடையின மெய்கள் அல்லது மூக்கினம் சாராத அதிர் ஒலிகள் (Non-nasal Sonorants)

நாவளை, நுனியண்ண மருங்கொலிகள் வருவது பற்றியும், நாவளை ஒலிப்புடை உரசொலி பற்றியும் முன்னரே குறிப்பிட்டோம். இவை மொழிக்கு முதலில் வருவதில்லை. ரகரம், மொழி இறுதி யிலும் இடையிலும் வருகிறது. எஞ்சியுள்ள யகரமும் வகரமும்

மொழிக்கு முதலில் வருகின்றன. மொழி முதலில் உயிரொலியை யுடைய ஒரு சொல் தொடரும் பொழுது இகரத்திற்கு அடுத்தபடி யகரம் ஒரு உடம்படுமெய் ஆகத் தோன்றுகிறது. யகரத்துடன் தொடங்கும் பிற மொழிச் சொல் முன் வைப்புயிர் ஆகிய (Prothetic) 'இ' யைப் பெறுகிறது. சான்று : யக்ஷ > இயக்கன். சிரியகன் எனும் சொல் சீர் + இயக்கன் என்பதிலிருந்து தோன்றியது. இயக்குவன் என்ற வடிவம் குறிப்பிடத்தக்கது. உகரம் தொடர்ந்தாலும் யகரம் மொழி முதலாக வருகிறது ; சான்று : 'யுள்' (இச்சொல் லின் பொருள் தெரியவில்லை). ஆனால் தொல்காப்பியத்தின்படி மொழி முதலில் யகர மெய்யுடன் ஆகாரம் மட்டுமே வரும். இம்மாறுபாடு பிராகிருத மொழிச் செல்வாக்கின் விளைவாகலாம். உடம்படுமெய் இல்லாத பல சொற்கள் இருப்பதால், கல்வெட்டு வரிவடிவம் உயிர் மயக்கங்களைக் (Vowel Clusters) குறிப்பதாகக் கொள்ளலாம்.

மெய்களைப் பொறுத்தவரையில் மெய்ம் மயக்கங்கள் மொழி முதலிலோ அல்லது ஈற்றிலோ வருவதில்லை. மொழி இடை யிலேயே வருகின்றன.

உயிர்கள்

அ, எ, இ, ஒ, உ முதலிய ஐந்தும் உயிரொலியன்களாகத் தொடர்ந்து வருகின்றன எனக் கொள்ள வேண்டும். உயிர்களைப் பொறுத்த வரையில் நெடுமை ஒலியன் தன்மையுடையதே ; ஆயினும், அவ்வளவைச் சரியாக வரையறுப்பது கடினமே ஆகும். உயிர்கள் மொழி முதலில் வருகின்றன. தொல்காப்பியம் விளக்கி இருப்பது போன்ற "அ கி, இ ஒ, ஆ அ" முதலிய உயிரொலி மயக்கங்களும் (Vowel Clusters) காணப்படுகின்றன. தொல்காப் பியர் அளபெடைகள் எனக் குறிப்பிடும் குறில் தொடர்ந்த நெடில் உயிர்கள் காணப்படுவதையும் குறிப்பிட வேண்டும். அதன் அமைப்பு வருமாறு :

$$உ_1 + உ_2 = \left\{ \begin{matrix} கு \\ நெ \end{matrix} \right\} உ_2 உ_2 ல \left\{ \begin{matrix} கு \\ நெ \end{matrix} \right\} உ_2 *$$

எடுத்துக்காட்டாகச் செய்தான் என்பது செய்த + அன் ஆகும். 'ஆ அன்' என்பது 'ஒன்' எனவும் வருகிறது. இது தொல்காப்பியத்

* உ = உயிர்; கு = குறில்; நெ = நெடில்

துக்கு ஏற்புடையதே. இதைப்போலப் பலர்பால் விகுதியான 'ஓர்' என்பதன் மூலவடிவம் 'ஆ அர்' எனலாம். ஆனால் அவ்வடிவம் வரவில்லை எனினும் 'ஆர்' வழங்குகிறது (ஓர் > ஆ அர் > ஆர்). அவை தெரிநிலை வினையாலணையும் பெயராயிருக்கக் கூடும்.

4 ஒலிமாற்றம்: மொழி இறுதி மூக்கொலி இழக்கப்படுதல்

சில சொற்களில் மொழி இறுதி மூக்கொலி கேட்கப்படாமலிருக்கும் போக்கிருப்பதால் அது குறிக்கப் பெறுவதில்லை. குறிப்பாக மொழி இறுதி மூக்கொலிக்கு முன்னர் நெட்டுயிர் வரும்பொழுது இங்ஙனம் ஏற்படுகிறது. சான்று: 'செய்தான் > செய்தா'. மொழியிறுதி மூக்கொலி மறைந்தபின் அதற்கு முந்திய உயிர் மூக்கொலிச் சாயல் பெறுவது காரணமாகலாம். அல்லது எழுதுவோன் செய்த பிழைகளாலும் நேர்ந்திருக்கலாம்.

கட்டுருபான (Bound Forms) அடைசொல் (Attribute) வெடிப்பொலிக்கு முன்னர் வருமாயின் மூக்கொலி முடிவைப் பெற்றுக் காணப்படுகிறது. ஆனால் இது எல்லா இடங்களிலும் இவ்வாறு குறிக்கப்பெறவில்லை. சான்று : நெடு > நெடுN (N = மூக்கினமெய்)

(மெய்) உயிர்மெய் மூக்கொலி > (மெய்) உயிர்மெய் உயிர்.

மூக்கொலி > மருங்கொலி

இலக்கிய மொழியை மட்டும் கருத்தில்கொண்டு பார்த்தால் மொழியில் வரும் நாவளை அல்லது நுனியண்ண மூக்கொலிகள், தொல்காப்பியருக்குப் பிற்பட்ட காலத்தில் தமக்கு இணையான மருங்கொலியாக மாறுகின்றன. சங்க காலத்தில் 'வேண்' என்பது 'வேள்' என்றாகிறது. இந்த மாற்றம் குகைக் கல்வெட்டுக்கால மொழியில் ஏற்படவில்லை.

5 பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கல்

சமஸ்கிருதச் சொற்கள் பிராகிருத வடிவத்தில் வழங்குகின்றன. இவை ஒலியன் அமைப்பை விளக்க உதவுவன. அஃறிணையாயின் அச்சொல் மகர இறுதியையும் ஆண்பாலாயின் னகர இறுதியையும் பலர்பாலாயின் ரகர இறுதியையும் பெறுகின்றன.

siḍḍhi > *ciṭṭi*
kāñcana > *hāñcaṇam*
kuṭumbika > *kuṭimpikan*

		upāska	>	*upācāa* (*ṇ*)
yakśha	>	*yakka*	>	*yakkuān*
		āḍiṭya	>	*āycyan* (?)
		ḍharma	>	*ḍhammam*
		aḍiṭṭhānam	>	*aṭithānam*
		vaṇik	>	*vaṇikan*
		nigama	>	*nikamam*
		syālāka		*cālākan*

எல்லாவிடங்களிலும் உடம்படுமெய், அதிலும் குறிப்பாக யகர உடம்படுமெய் இருப்பதில்லை. ககர மெய்யும் யகர மெய்யும் மாறி அமைகின்றன. s, ச், ய் ஆகிய மெய்களும் அங்ஙனமே ஆகின்றன.

cāriyan	>	*cārikan*
kācipan	>	*kāyipan*
hariṭa	>	*ariṭan*
jaya	>	*cayan*

ஒலிப்புடை வெடிப்பொலிகளும், மூச்சுடை வெடிப்பொலிகளும், ஒலிப்பிலா வெடிப்பொலிகளாகவும் மூச்சிலா வெடிப்பொலிகளாகவும் (Unaspirated plosives) மாறுகின்றன. '*ḍhamam*', *aṭiṭhānam* என்பன விதிவிலக்குகளாகும்.

'இயக்கு' எனும் வடிவம், அக்காலத்திய வேர் அல்லது சொற்களின் வாய்பாட்டு வடிவங்களைக் கடன்பெற்ற சொற்களும் பெறலாயின என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைகிறது. '(மெய்) நெட்டுயிர் மெய் உகரம்' அல்லது '(மெய்) நெட்டுயிர் மெய் (மெய்) உகரம்' அல்லது '(மெய்) உயிர் மெய் நெட்டுயிர் (மெய்) உகரம்' இவை எல்லாவற்றிலும் ஈற்றுயிர் உகரமாகும். மொழி முதல் 'h' இழக்கப்படுகிறது. *kṣ* > *kk*. ஆனால் இது பிராகிருத வடிவத்திலேயே நேர்ந்திருக்க வேண்டும். 'sy' என்னும் மெய்ம் மயக்கம் 'c' ஆகிறது.

6 உருபனியல் 1. வினை — பொது

எச்சங்கள்

'செய்து' என்னும் வினையெச்சம் இறந்தகால அடிகளாக (இடைநிலைகளாக) மாறிவிட்டன. அகரவிகுதியை அதனுடன்

சேர்த்தால், அது பெயரடையாகிறது. சான்று: பிறந்து + அ = பிறந்த. மொழி இறுதியில் வெடிப்பொலிக்குப் பின்னர் வரும் உகரம் ஓர் உயிரால் தொடரப்படும் பொழுது இழக்கப்படுகிறது. இவ் அகர விகுதியை இலக்கண நூலார் பெயரெச்ச விகுதி என்பர். பெயரெச்சத் தொடராக அது மொழி பெயர்க்கப்படுவதால், அது பெயரெச்சம் என வழங்கப்பட்டது. அடையாக இருந்தாலும் பெயரடை போலவும், வினையின் அடிப்படைச் செயற்பாடுகளைக் கொண்டதாக இருப்பதாலும் இதனது வேர் வினையே என்பதாலும் வினைக்கு அடையாக வரும் இயல்புடைய எழுவாய், செயப்படு பொருளை ஏற்கக்கூடுமாதலாலும் இதை எச்சம் என்கிறோம்.

'வந்து போனான்' என்பது போன்ற வாக்கியங்களில் 'போனான்' என்பது தெரிநிலை வினைமுற்றாகும். 'வந்து' தெரிநிலை வினைமுற்றன்று. 'வந்து பின்னர்' என்ற பொருளில் அது விளக்கப்படலாம். எனவே அது உம்மைப் பொருளில் வரும் வினையெச்சம் என வழங்கப்படுகிறது. யூல் ப்ளாக் இதை முற்று (Absolutive) எனக் குறிப்பிடுவார். தெரிநிலை வினைமுற்றுக்களுடன் முடியும் எச்ச வடிவங்களைப் பழைய இலக்கண நூலார் வினை எச்சம் என்பர். இதுபோலப் பெயருடன் முடியும் எச்ச வடிவங்களைப் பெயரெச்சம் என்பர். எச்சம் என்றால் குறையுடையது எனப் பொருள்படும். அஃதாவது முற்றல்லாததாம். பெயரெச்சம் பெயரடையாக இருக்கும்; வினையெச்சம் வினையடையாக இருக்கும். முற்றல்லாதன என்பதோடு அவை தனித்து வழங்கக்கூடிய வடிவங்களாகவும் இருக்கவேண்டும். இருபெயரொட்டமைப்பிலும் அடை அடைகொளி என்ற அமைப்பிலும் வரும். ஏனெனில் முற்றல்லாதனவாகிய கட்டு வடிவங்களும் முற்றுவடிவங்களும் அவ்வாறு அழைக்கப் பெறுவதில்லை. இதனால் தான் இலக்கண ஆசிரியர்கள் பெயரடை (Adjective), வினையடை (Adverb) எனும் சொற்களைப் பயன்படுத்தவில்லை. குகைக் கல்வெட்டுக்கள் சிறியவையாயிருப்பதால் அவற்றில் உம்மைப் பொருளில் வரும் வினையெச்சம் வரவில்லை. இக்கல்வெட்டுக்களில் பெயரெச்ச வடிவங்கள் காணப்படுகின்றன. சான்று: பிறந்த, செய்த.

வினைமுற்றுக்கள்

பெயரெச்ச வடிவங்களோடு ஆண்பால் ஒருமையைக் காட்டும் அன் அல்லது உயர்திணைப் பன்மையைக் காட்டும் ஆர் அல்லது ஓர் முதலான பெயர்ப்பதிலி விகுதிகள் சேர்க்கப்படுகின்றன.

காலங் காட்டும் இடைநிலைகள்

இறந்த கால வினைகளில் வேர்களுக்குப்பிறகு '-ந் த்-' அல்லது '-த் த்-' உள்ளன. தமிழ்ச் சொற்களஞ்சிய அகராதி கூறும் 4, 10 ஆகிய வினைவிகற்ப வாய்பாட்டு வகைகளில் இவை அடங்கும். மேலும் 5 ஆவது வினைவிகற்ப வாய்பாட்டில் அடங்கும் வேற்சொற்களும் வருகின்றன. இவற்றின் அடிப்படை அமைப்பு :

(மெ) { கு / நெ } உ (மெ), மெ உ அல்லது (மெ) உ (மெ) மெ

{ கு / நெ } உ மெ (மெ) உ இவ்வேர்ச் சொற்களில் உகர விறுதி மறைவிற்குப் பின்னர் இகரவிறுதி சேர்க்கப்பெறுகிறது. இம்முறையில் அடையும் வடிவம் இறந்தகாலத்தைக் காட்டும். எனவே உண்மையில் இருவகையான வினைமுற்றுருக்கங்கள் உள்ளன. ஒன்று தகர இடைநிலை வினைமுற்றுருக்கம். மற்றது இகர இடைநிலைபெற்ற வினை முற்றுருக்கம்.

ஈரேவல் வினையும் அவை அல்லா வினையும்

தமிழில் ஈரேவல் வினைக்கும், அங்ஙனம் அல்லா வினைக்கும் வேறுபாடு உண்டு. இக்கல்வெட்டுக்களில் ஈரேவல் வினைவிகுதியாகிய 'பி' வேருடன் சேர்க்கப்பட்டுள்ளமையைக் காண்கிறோம். இதனுடன் வழக்கப்போல பெயரெச்ச விகுதியும் பால் விகுதியும் சேர்க்கப்படுகின்றன. சான்று : "கொட்டுபித்தோர்". பிற்காலத்தில் இது கொட்டுவித்தோர் என மாறும். குகை கல்வெட்டுக்களில் பகரம் வகரமாக மாறாத வழக்கே காணப்படுகிறது.

பகரம் வகரமாக மாறுவதில் இருவேறு கட்டங்கள் உள்ளதை நாம் கருதுதல் வேண்டும். மூலத் திராவிடமொழிக் காலத்திலேயே பல திராவிட மொழிகளில் உள்ளது போல, வேர்ச் சொற்கள் என்ற நிலையில் பகரம் வகரமாக மாறுவது இருந்தது. ஆனால் விகுதிகளைப் பொறுத்த வரையில் இத்தகைய சீரான மாற்றம் காணப்படவில்லை. எனவே பின்வந்த நிலையிலும் விகுதிகள் ஒலிப்பிலா வெடிப்பொலிகளாகவே இருந்தன. தமிழ் போன்ற சில மொழிகளில் வேரைப் பொறுத்த வரையில் பகரம் வகரமாக (-ப்- > -வ்) மாறிப் பின்னர் மீண்டும் வகரம் பகரமாகியது. (வ் - > -ப்-) எனக் கொள்ள வேண்டும். எனவே வேரிலுள்ள வெடிப்பொலிகளுக்கும் ஏனைய இடங்களில் வரும் வெடிப்பொலிகளுக்குமிடையே

வேறுபாடு இல்லாதிருக்கலாம். பின்னர் அடுத்த கட்டத்தில் உயிர்களுக்கும், அரை உயிர்களுக்கும் முன்னர் பகரம் வகரமாகிறது. மூக்கொலிகளை அடுத்த பகரம் ஒலிப்புடை ஒலியாகும் மூன்றாவது கட்டமும் உண்டு. இன மூக்கினத்திற்குப் பின்னர் ஒலிப்புடை வெடிப்பொலிகள் மூக்கொலிகளாவது அடுத்து மேலும் ஏற்படும் மாற்றமாகும். குகைக் கல்வெட்டு மொழியில் பகரம் (-ப்-) மாற்ற முறவில்லை.

2 பெயர்கள்

சொற்கள் உயர்திணை, அஃறிணை என்று இரண்டாகப் பகுக்கப் பட்டுள்ளன என்பதை மீண்டும் இங்குக் குறிப்பிடலாம். இவை ஒவ்வொன்றிலும் ஒருமை, பன்மை என்ற பாகுபாடு உண்டு. உயர் திணை ஒருமையில் மேலும் ஆண்பால், பெண்பால் என்று இரு பிரிவு கள் உண்டு. உயர்திணைப் பன்மையில் இலக்கண நிலையில் ஆண்பால் பெண்பால் பாகுபாடு இல்லை. இதுபோல அஃறிணையிலும் ஒருமை, பன்மை இரண்டிலுமே இலக்கண நிலையில் இப்பாகுபாடு இல்லை.

பெண்பால் விகுதி ஏதும் இக்கல்வெட்டுக்களில் கிடைக்க வில்லை. பௌத்த சமயக் குருக்கள் தங்குமிடமான 'பாழி' போன்ற பெயர்களை முன்பு குறிப்பிட்டது போல மேலும் ஆராய இடமிருக் கிறது என்றாலும் அடிப்படையில் அவை பெயர்கள் போலச் செயல் படுகின்றன என்றே கூறவேண்டும். இவைகள் ஆக்கப் பெயர்கள் (derived nouns) என்ற உணர்வே இன்னும் பேசுவோரின் மனத் தில் ஏற்படுவதில்லை. எனினும் அடிப்படைச் சொற்களிலிருந்து ஆக்கப் பெற்ற ஆக்கப் பெயர்கள் எனக் கொள்ளத்தக்கனவும் உள்ளன. மகர மெய்யில் முடியும் அடிப்படைப் பெயர்கள், அதை இழந்து -த்த்-ஐப் பெறுகின்றன. அதற்குப் பின்னர் 'ஓர்' விகுதி சேர்க்கப்படுகிறது.

சான்று : நிகமம் > நிகம + த்த் + ஓர் > நிகமத்தோர்

7 தொடரியல்

இயைபு: திராவிட மொழிகளில் திணை, எண், பால், இடம் ஆகிய வற்றைப் பொறுத்தவரையில், எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே இயைபு உள்ளது.

சான்று : "ஆரிதன் கொட்டுபித்தோன்"
"நிகமத்தோர் கொட்டிஓர்"

பெயர்த் தொடர் வாக்கியங்கள்

குகைக் கல்வெட்டில் உள்ள வாக்கியங்கள் கருத்து (Topic), கருத்து விளக்கம் (Comment) என்ற அமைப்பில் உள்ள பெயர்த் தன்மை கொண்ட வாக்கியங்களாகும். வழக்கமாக எழுவாய் அக் குகையை வழங்கியவர் யார் அல்லது அதை வெட்டியவர் யார் என்பதைக் குறிப்பிடும். பயனிலை 'கொட்டியோர்' அல்லது 'கொட்டு வித்தோர்' என்பதைத் தெரிவிக்கும். தமிழில் மேலோட்டமாகப் பார்க்கையில் எழுவாயையும் பயனிலையையும் இணைக்கும் இணைப்பு இல்லை. ஆனாலும் ஆழ்ந்த இலக்கண நிலையில் அது இருக்கிறது. சில சமயங்களில் பயனிலையே கருத்தாகவும், எழுவாய் என்பது கருத்து விளக்கமாகவும் அமைகிறது. செயப்படு பொருளாக வரும் அஃறிணைச் சொற்கள் வேற்றுமை உருபு எதையும் ஏற்காது தொடர்ந்து வரும் வினைவேர்களுடன் இயைந்து நிற்கின்றன. "கொடை" என்பதைக் குறிக்கும் பெயருக்கு முன்னர்ச் சில சமயங்களில் பெயரெச்சம் கருத்துவிளக்கம் என்ற நிலையில் வருகின்றது; கருத்தாக வரவேண்டியவை வாராது உள்ளன. இம்முறை எழுவாயில்லாத தற்காலத் தமிழ் வாக்கியங்களை நினைவுபடுத்துகிறது. ஒரே ஒரு இடத்தில் 'இவ' என்னுஞ்சொல் இத்தகைய 'கருத்து' என்ற பொருளில் வந்துள்ளது. (இவ = இவை; பின்னைய வழக்கு) பெயரெச்சம் தான் விசேடிக்கும் பெயரின் முன் வரும்.

8 சிறப்புப் பெயரும், இயற்பெயரும்

தற்காலத் தமிழிற் போலவே சிறப்புப் பெயரும் இயற் பெயரும் இரு பெயரொட்டுகளாக அமைந்து அவ்வமைப்பினாலேயே ஒன்றையொன்று விசேடிக்கும் தன்மை சுட்டப்பட்டது. சாத்தன், பிட்டன், ஆதன் என்பன இயற்பெயர்களாகும். காவிதி, பொன் புலவன், கூல வாணிகன், ஆசான், அறிவன் முதலியன சாதி அல்லது தொழிலை அடிப்படையாகக் கொண்டமைந்த பெயர் களாகும்.

தொல்காப்பியர் கூற்றின்படி சிறப்புப் பெயர் இயற்பெருக்கு முன்னர் வரவேண்டும். குகைக் கல்வெட்டுக்களைப் பொறுத்த வரையிலும் இது உண்மையேயாகும்.

சான்று : வேண் கோசிபன்; கணியன் இயக்குவன்; உபாசன் போத்தன், இவை ஒன்றையொன்று விசேடித்து நிற்கும் உம்மைப் பொருட்டொடர்ச் சொற்களாகும்.

வெள்ளாடை, பாகனூர், எருக்கோட்டூர், எவோமி நாட்டு, தெங்கு(நாடு), குன்றத்தூர், மதுரை, குமட்டூர் போன்ற இடப் பெயர்கள் பலவும் உள்ளன. வாழும் கிராமத்தின் பெயர் இயற் பெயருக்கு முன்னர் வருவதே வழக்கமாகும். இவ்வாறு வரும் இடத்தாலேயே இடப்பெயர் அடையாகிறது.

சான்று : ''எருக்கோட்டூர் ஈழக்குடும்பிகன்''. சில இடங் களில் நாட்டுப்பெயர்கள் அவ்வவற்றின் கட்டு வடிவத்தில் இயற் பெயருடன் தொகையாக வருகின்றன. அவ்விடங்களில் நிலைமொழி யின் மொழி இறுதி மகரமெய் கெட்டு வருமொழிமுதல் வெடிப் பொலி இரட்டிக்கிறது.

சான்று : ஈழ(ம்) + குடும்பிகன் > ஈழக்குடும்பிகன். 'நெடு', 'இன' – முதலியன கட்டு வடிவத்தில் இயற்பெயர்களுக்கு முன் ஒட்டாகின்றன. கட்டுவடிவத்தில் வரும் அடைகளை - வேர்ச்சொற் களாகக் கருதலாம்; இன வெடிப்பொலியால் தொடரப்பட்டால் அவ்வேரின் இறுதியில் மூக்கொலி இருக்கும். ஆனால் வேரிலேயே மகரமெய் உண்டு எனக் கொள்வது சிறப்பு உடையதாகலாம். வெடிப்பொலியால் தொடரப்படாத நேரங்களில் அம் மகரம் நிற்கும்; தொடரப்படும்போது வெடிப்பொலியின் இன மூக்கொலி யாகவும் நிற்கும்.

9 மாதிரி வாக்கியங்கள்

மாதிரி வாக்கியம் ஒன்றை இங்குத் தரலாம்.

''வேண் கோசிபன்
கொட்டுபித்த கல் காஞ்சணம்''.

'வேண்' என்பது குறுநிலத் தலைவர்கள் குழு ஒன்றின் பெயராகும். 'கோசிபன்' என்பது Kasyapa என்ற 'சமஸ்கிருத'ச் சொல்லின் தமிழாக்க வடிவமாகும். 'கொட்டுபித்த' என்பது ஈரேவல் வினையின் பெயரெச்ச வடிவமாகும். இது கல் காஞ்சணம் எனும் பெயருக்கு அடையாகிறது. 'காஞ்சணம்' என்பதன் பொருள் 'உறையுள்', 'இருப்பிடம்' என்பதாகும். 'காஞ்சணம்' எனும் பெயருக்கு முன்னால் சேர்க்கப் பெற்றுள்ளது என்பதாலேயே 'கல்' என்பது அதன் அடைமொழியாகிறது. எனவே இவ்வாக்கியத்தின் பொருள் பின்வருமாறு :- இது 'வேண்' வகுப்பைச் சேர்ந்த கோசிபன் என்பவனால் கொட்டுவிக்கப்பட்ட கல்லால் ஆகிய 'காஞ்சணம்'.

குறிப்புக்கள்

The Materials are available in the *Annual Report on South Indian Epigraphy* for 1912, 1915 and 1918 where the photos of the inscriptions are given. A discussion of the documents and a short history of the discovery are given in the *Proceedings and the transactions of the All India Oriental Conference,* Madras, December 1924, pp 275-300

See also the *Proceedings of the first All India Oriental Conference*, pp 327–48. An unsuccessful attempt to read the inscriptions as belonging to *Paiśācī* form of Prakrit is made by Dr. C. Narayana Rao (The *New Indian Antiquary,* Vol. I, p p 362–76)

Other references are :–

1 K. Amirta Rao': "The Dravidan Affinities of the *Paiāśācī* languages of North–Western Asia" in *Sir Asutosh Mookerjee Silver Jubilee* Vol. III, Orientalini, Part 2, pp 427-32

2 K. A. Neelakanta Sastri : *Madras University Journal,* Vol. XIV, p p 3–4

3 Suniti Kumar Chatterji : Old Tamil, Ancient Tamil and Primitive Dravidian, *Tamil Culture*. Vol. V, No. 2 1956, p p 148–74

4 K. K. Pillai : "The Brahmi inscriptions of South India and the Sangam Language", *Tamil Culture,* Vol. V, No. 2. 1956, p p 175–85

5

தொல்காப்பியத் தமிழ் - ஒலியனியல்

1 தொல்காப்பியத்தின் காலம்

தமிழில் இன்று கிடைக்கும் நூல்களில் தொன்மையானது தொல்காப்பியமே. பிற்காலத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் சில கருத்துக்கள், விதிகள், சொற்கள் என்பன தொல்காப்பியத்தில் காணப்படுவதால், அவற்றை அடிப்படையாகக் கொண்டு அதன் காலத்தைக் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டு வரைக்கும் பின் தள்ளுவர்.[1] ஆனால் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் பண்டைக் காலத்து உரையாசிரியர்களைப் போல, ஆழ்ந்து ஆராய்ந்தவர்கள் தொல்காப்பியத்தைச் சங்க இலக்கியங்களுக்கெல்லாம் முற்பட்டது என்பர்.[2] சில தொல்காப்பிய விதிகள் சங்க காலத்தில் வழக்காறற்றுப் போயின என்பதற்குச் சான்றாகப் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

1 'வா', 'தா' முதலிய வினையடிகளின் ஆட்சி தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களுக்கே உரியது,[3] எனல்.

2 'செல்', 'கொடு' முதலிய வினையடிகளின் ஆட்சி படர்க்கைக்கே உரியது,[4] எனல்.

---

1 S. Vaiyapuri Pillai : *History of Tamil Language and Literature*, Madras, 1956, p 58

2 இறையனார் களவியல் உரை, பாயிரம்

3 தொல்காப்பியம், 512

"அவற்றுள்
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்தே"

4 தொல்காப்பியம், 513 'ஏனை யிரண்டும் ஏனை இடத்தே'. தோடா மொழியில் "கொடு" என்பது இங்ஙனம் வரன்முறைக்கு உட்பட்டுப் பயன்படுத்தப்படுவதாக எமனோ கூறுகிறார்.
M. B. Emeneau, *Language*, Vol. 21, 1945

3 உவம உருபுகளின் ஆட்சி பற்றிய வரன் முறைகள்.

4 வியங்கோள் வினையின் ஆட்சி படர்க்கைக்கே உரியது,[5] எனல்.

5 இயற்பெயர், சிறப்புப்பெயர் ஆகியவற்றின் ஆட்சி பற்றிய வரன்முறைகள்.[6]

6 'தான்', 'பேன்' முதலிய இயற்பெயர்களின் வழக்காறு.[7]

இவ்விதிகளைச் சங்க காலத்திற்குப் பின்னுல் எழுந்த வளர்ச்சிகள் எனக் கூறமுடியாது; ஏனெனில் அவை சங்க காலத்திற்குப் பிற்பட்ட கால இலக்கியங்களில் ஆட்சி பெற்றிருக்கவில்லை.

முரண்பாடுகள்

தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றிற்கு இரண்டு விதமான விளக்கங்கள் தரலாம்.

1 தொல்காப்பியத்தில் சில இடங்களில் தட்டுப்பாடுகள் காணப்படுவதாக எண்ணித் தொல்காப்பியத்தைப் பயின்ற மாணவர் சிலர், சில நூற்பாக்களைத் தாங்களாகவே சேர்த்திருக்கலாம்.

2 தொல்காப்பியம் என்பது தனிப்பட்ட ஒருவரால் எழுதப்பட்டதென்பதைவிட, காலப்போக்கில் சில சிந்தனைப் போக்குகளை வளர்த்துக் கொண்டு வரும் ஓர் இலக்கணக் கோட்பாட்டினரின் கூட்டு முயற்சியால் உருவான தொன்ருக இருக்கக்கூடும்.

---

5 தொல்காப்பியம், 711

''அவள்
முன்னிலை தன்மை ஆயி ரிடத்தொடும்
மன்னு தாகும் வியங்கோட் கிளவி''.

6 தொல்காப்பியம், 524

''சிறப்பி னுகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்''.

7. தொல்காப்பியம், 351

''தானும் பேனும் கோனும் என்னும்
ஆமுறை இயற்பெயர் திரிபிடன் இலவே''.

தொல்காப்பியப் பொருளதிகார இறுதியில் உள்ள மரபியலில் 'பிள்ளை' என்ற சொல் 'குழந்தையை'க் குறிக்க ஒரு பொழுதும் வழங்காது எனக் கூறப்படுகறது.[8] ஆனால் பொருளதிகாரப் புறத்திணை இயலில் 'பிள்ளை' என்ற சொல் 'குழந்தையை'க் குறிக்க வழங்குகிறது.[9] மரபியலில் வரும் சில நூற்பாக்கள் செய்யுளில் 'நூல்' பற்றிக் கூறப்பட்டவைகளின் தேவையற்ற 'விரிவே' ஆகும். இந்நூற்பாக்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

பல்வேறு அடுக்குகள் — இவற்றுள் பெரும்பகுதி பண்டைக் காலத்ததே

எனவே தொல்காப்பியத்துக்குள்ளேயே உள்ள பழைய வழக்கையும், பின்னைய வழக்கையும் பிரித்தறிய வேண்டும். எந்தெந்த விதிகள் விளக்கங்கள் முற்பட்டவை அல்லது சமகாலச் சான்றோர்களிடமிருந்து பெறப்பட்டவை, எவை முதன்முதலாகக் கூறப்பட்டவை என்பவற்றைத் தொல்காப்பிய நூற்பாக்களே வேறுபடுத்துகின்றன.[10] இவை தொல்காப்பியர் காலத்துக்கு முற்

---

8 தொல்காப்பியம், 1503, 1510, 1513, 1523

"அவற்றுள்
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை".

"பிள்ளைப் பெயரும் பிழைப்பு ஆண்டில்லை
கொள்ளுங் காலை நாய் அலங்கடையே".

"மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பாலான".

"பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி உயிர்க்கே".

9 தொல்காப்பியம், 1006

"...வருதார் தாங்கல் வாள் வாய்த்துக் கவிழ்தல்
என்று இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்..."

10 தொல்காப்பியம், 2, 130...

"எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே".

"மென்மையும் இடைமையும் வரூஉங் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர்".

பட்ட தமிழின் தன்மையை அறிய உதவுகின்றன. மேலும் பழைய வழக்காற்றின் தொடர்ச்சியைச் சுட்டும் விதிகளும் விதிவிலக்கு களும் இவ்வகையில் பெரிதும் உதவக்கூடியன. தொல்காப்பியருக்கு முற்பட்ட காலத் தமிழின் இயல்புகள், தொல்காப்பியத் தமிழின் இயல்புகள், சங்க இலக்கியத்தின் இயல்புகள் ஆகியவற்றை ஒப்பிட் டாராய்ந்து, தொல்காப்பியத்தின் பெரும் பகுதி சங்க காலத்திற்கு முற்பட்டது என்ற முடிவுக்கு வருகிறோம். முன்னர் ஆராய்ந்த பிரா மிக் கல்வெட்டுக்களின் மொழியானது தொல்காப்பியர் காட்டும் மொழியிலிருந்து மாறுபட்டதன்று என்பதையும் தெளியலாம்.

2 உச்சரிப்பு ஒலியியல் (Articulatory Phonetics)

தட்டுப்பாடுகள்

தமிழ் ஒலிகளின் உச்சரிப்பினை விளக்கத் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் 'பிறப்பியல்' என்னும் ஓர் இயல் ஓதுக்கப் பட்டுள்ளது. இவ் இயலில் காணப்படும் சில தட்டுப்பாடுகள், பிற் காலத்தில் சில நூற்பாக்கள் சேர்க்கப்பட்டும் கூட, நூல் பழைய முழுமையான வடிவத்தில் நமக்குக் கிடைக்கவில்லை என்பதைக் காட்டுகின்றன. தொல்காப்பியப் பிறப்பியலின் முதல் நூற்பா வானது பாணினியின் (Pāṇini) 'சிச்சாவை' (Sikṣā) நினைவுபடுத்துவது போலத் தோன்றுகிறது.[11] இந் நூற்பாவில் கூறப்படும் பிறப் புறுப்புக்களில் இரண்டான 'தலை' நெஞ்சு ஆகியவற்றிலிருந்து பிறக் கும் ஒலிகள் (இவை முறையே நாவளை ஒலிகள், ஒலிப்பிலா ஒலிகள் ஆகியவையாக இருக்கலாம்.) பின்னர் வரும் விளக்கங்களில் இடம்பெறவில்லை, இதிலிருந்து இந்நூற்பா முதலில் பிறப்பியலில் இடம் பெற்றிருக்கவில்லை, பின்னர் சேர்க்கப்பட்டது என்பது புல னுகும். உயிரொலிகள், இடையின யகரம் முதலியவற்றின் பிறப்

11 தொல்காப்பியம், 83

"உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் பொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான".

பைப் பற்றிக் கூறுகையில் ஒலித்தசைகளின் அதிர்வின் விளைவான ஒலிப்புடைமையை 'மிடற்றுப் பிறந்தவளி' எனத் தொல்காப்பியர் குறிக்கிறார்.[12] மூக்கொலிகளைப் பற்றிக் கூறுகையில் மூக்கொலி இசைமையைக் (Nasal Resonance) குறிக்கிறார்.[13] என்றாலும் பிற இடையின ஒலிகள், ஒலிப்புடை ஒலிகள் ஆகியவற்றின் பிறப்பை விளக்குகையில் தொல்காப்பியர் இத்தகைய செய்திகளைக் கூற வில்லை. வெடிப்பொலிகள் ஒலிப்புடை ஒலிகளா அல்லது ஒலிப்பிலா ஒலிகளா என்பதைப் பற்றியும் அவர் ஏதும் கூறவில்லை.

ஒலிகளின் பட்டியல்

இடம் (Point of Articulation), ஒலிப்பான் (Articulator) ஆகியவற்றின் அடிப்படையில். தொல்காப்பியம் பின்வரும் ஒலிகளின் பிறப்பை விளக்குகிறது. முதலில் 'அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ' என்றும் உயிரொலிகள் விளக்கப்படுகின்றன. பின்னர் "க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ற், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்" என்றும் மெய்யொலிகள் விளக்கப்படுகின்றன. இவை தவிர வேறு மூன்று ஒலிகளும் உண்டு. அவை வருமாறு :

1 ஆய்தம்.
2 குற்றியலுகரம்.
3 குற்றியலிகரம்.

'எழுத்து' என்ற சொல்லே தொல்காப்பியத்தில் ஆளப் பட்டுள்ளது. பொதுவாக இச்சொல் 'எழுது' என்பதன் அடியாகப் பிறந்ததாகக் கூறுவர். ஆனால் 'எழுது' என்ற சொல்லே 'எழு' என்ற வேர்ச்சொல்லைக் கொண்டுள்ளது. ('-து' என்பது சொல்லாக்க

---

12 தொல்காப்பியம், 84, 99

"அவ்வழிப்,
பன்னீ ருயிரும் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்".
"அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்",

13 தொல்காப்பியம், 100

"மெல்லெழுந் தாறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்".

அசையாகக் கொள்ளப்பட்ட நிலையில்) 'எழு' என்ற சொல்லை 'ஒலியை உச்சரித்தல்' என்ற பொருளில் தொல்காப்பியர் பயன் படுத்துகிறார்.[14] எழுத்தின் அளவைப் பற்றியும் அவர் பேசுகிறார்.[15] எனவே தொல்காப்பியர் 'எழுத்து' என்பதை 'ஒலி' என்ற பொரு ளிலேயே வழங்கியிருக்க வேண்டும். எனினும் இச்சொல்லை 'வரி வடிவம்' என்ற பொருளில் அவர் பயன்படுத்தும் இடங்களும் உண்டு.[16]

மெய்யொலிகளின் ஒலிப்பு

கடை, இடை, நுனி என மூன்று பகுதிகளாக நாக்கு பிரித்துக் கொள்ளப்படுகிறது. வல்லண்ணத்தையும் மெல்லண்ணத்தையும் உள்ளடக்கிய அண்ணத்தை இங்ஙனம் தொல்காப்பியர் பகுக்கிறாரா

---

14 தொல்காப்பியம், 6

''நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர்''.

15 தொல்காப்பியம், 3, 4, 11, 12

''அவற்றுள்
அ இ உ எ ஒ என்னும்
அப்பால் ஐந்தும்
ஓரளவு இசைக்குங் குற்றெழுத் தென்ப''.

''ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும்
அப்பால் ஏழும்
ஈரளபு இசைக்கும் நெட்டெழுத் தென்ப''.

''மெய்யின் அளபே அரையென மொழிப''.

''அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே''.

16 தொல்காப்பியம், 14, 15, 17

''உட்பெறு புள்ளி உருவா கும்மே''

''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்''

''புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே''.

என்ற வினு இங்கு எழுகிறது. ''முதல் நா அண்ணம்''[17], ''இடை நா அண்ணம்''[18], ''நுனிநா அண்ணம்''[19] முதலிய தொடர்களை அவரே ஆள்கிருர். இவ் அடைமொழிகள் நாவிற்கு மட்டுமா அல்லது நா, அண்ணம் ஆகிய இரண்டிற்கும் பொதுவானதா என்பது விளங்கவில்லை. முதல் அண்ணம், இடையண்ணம் ஆகிய வற்றைப் பொறுத்தவரையில் இருவழிகளிலும் கொள்ளலாமாகை யால் சிக்கல் எதுவும் இல்லை.

அ. கடை நா (Back of the tongue) ஒலிப்பாளுக அமைதல் கடை நா கடையண்ண ஒலி (Dorso Velar)

கடைநா கடையண்ணத்துடன் மட்டுமே பொருந்துகிறது. கடையண்ண வெடிப்பொலியான ககரமெய்யும் அதற்கு இணை யான மூக்கொலியான ஙகர மெய்யும் பிறக்கின்றன.

ஆ. இடைநா ஒலிப்பாளுக அமைதல்

இடைநா இடையண்ணத்துடன் மட்டுமே பொருந்தும். இதனுல் இடையண்ண அடைப்பானும் மூக்கொலியும் பிறக்கின்றன. இவை இன்று முன்னே ஒலிக்கப்பெறுகின்றன.

இ. நுனிநா ஒலிப்பாளுக அமைதல்

''நுனிநா அண்ணம்'' என்ற தொடர் மிகவும் முக்கியமானது. ஏனெனில் நுனிநாப்பகுதி நா மேல்பதியில் விளிம்பிஞல் தொடுதலும் அல்லது நுனியினுல் நுனியண்ணத்தைத் தொடுதலும் அல்லது கீழ்ப் பகுதியில் உள்ளண்ணத்தோடு வளைந்து தொடர்பு கொள்ளுதலும் மேற் கொள்ளக் கூடும். நுனிநாவானாது பல்லை அல்லது ஈற்றைத் தொடுவது பற்றி நாம் இங்குக் கருதத் தேவை இல்லை. அண்ணத் தோடு சேர்ந்த நுனிநாவிற்கெனத் தொல்காப்பியர் வேறுபட்ட மூன்று வகை மெய்யொலிகளை அமைத்துக் காட்டுகிருர்.

---

17 தொல்காப்பியம், 89
''ககார ஙகாரம் முதல் நா அண்ணம்''

18 தொல்காப்பியம், 90
''சகார ஞகாரம் இடை நா அண்ணம''

19 தொல்காப்பியம், 91
''டகார ணகாரம் நுனி நா அண்ணம்''

நுனியண்ண வெடிப்பொலி

நுனியண்ண வெடிப்பொலியும் அதற்கு இனமான மூக்கொலியும் முதற் பிரிவில் சேர்ந்தவையாகும். 'நுனிநா அண்ணம்' என்ற தொடரில் வரும் 'அண்ணம்' என்பதன் பொருள் குறித்து, இவ்வொலிகளின் பிறப்பை விளக்குகையில் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. இங்கு 'நு னி ய ண் ண ம்' என்றே பொருள்படுகிறது. நுனிநா அண்ணத்தைத் தொட உயர்ந்து செல்வதாகக் கூறப்படுகிறது என்றாலும் கூட றகர மெய்யைப் பிறப்பிக்கையில் உயர்ந்து சென்றடையாமலே நுனிநாவானது அண்ணத்தைத் தொடுகிறது.[20] 'அணரி' என்பதன் பொருள் 'உயர்ந்து சென்றடைய முயலுதல்' என்பதாகும். அது நாவளைவாகத்தான் இருக்கவேண்டும் என்ற தேவையில்லை. இவ்வொலிகளை நுனிநா ஒலிகள் (Apicals) என வகைப்படுத்தலாம். ஆனால் சமஸ்கிருதத்தில் உள்ள அண்ணமுடி ஒலிகளுடன் (Cerebrals) ஒத்த டகரம் ணகரம் ஆகியவற்றின் பிறப்பைக் கூறுங்கால், 'அணரி' என்னும் சொல் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்படவில்லை. இவ்வொலிகள் தொல்காப்பியர் காலத் தமிழில் நுனிநா ஒலிகளாக இருக்கவில்லை என்றே கருதவேண்டும். அவற்றில் நாவிளிம்பு தொடுதல் (Blade Contact) என்பது இருந்தது. டகரமெய் :இன்று எல்லா இந்திய மொழிகளிலும் நாவளை ஒலியாக உள்ளது. 'நுனிநா அண்ணம்' என்ற தொடருக்கு நுனிநாவானது அண்ணத்தின் எப்பகுதியுடனாவது தொடர்பு கொள்வது எனப் பொருள் கொண்டாலும் கூட நாவிளிம்பு அண்ணத்தைத் தொட டகரமெய் பிறப்பதாகவும், நுனிநா அண்ணத்தைத் தொட றகர மெய் பிறப்பதாகவும் தொல்காப்பியர் கூறும் வேற்றுமையை (Contrast) நன்கு வலியுறுத்திக் கூறவேண்டும். நுனியண்ண ஒலியான றகர மெய்யானது நுனிநா ஒலி என்றும், நாவளை ஒலி எனக் கூறப்படும் டகர மெய்யானது நா விளிம்பு ஒலி என்றும் முடிவு கூறலாம். ஆனால் பின்னர் இவ்விரு ஒலிகட்கு இடையேயான வேறுபாட்டைத் தெளிவாக்க டகர மெய்யானது நாவளை ஒலியாகவும் அண்ண முடியைத்தொடும் ஒலியாகவும் ஆனது. இது சமஸ்கிருதச் செல்வாக்கின் விளைவால் நிகழ்ந்ததாகவும் இருக்கலாம்.

---

20 தொல்காப்பியம், 94

''அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்''.

உரசொலிகள்

நுனியண்ண, நுனிநா ஒலிகளாக அமைந்துள்ள இரண்டாவது பிரிவு ஒலிகள் ரகர மெய்யும் ழகர மெய்யுமாகும். தொல்காப்பியர் ''ஒற்று'', ''வருடு'' என்ற சொற்களால் முறையே "ற், ன்'' ஆகிய வற்றின் பிறப்பை வேறுபடுத்துகிருர்.[21] 'வருடு' என்பது வருடொலி, உரசொலி அல்லது நாவானது அண்ணத்தை முழுமையாகத் தொட்டு நிற்காத நிலையில் பிறக்கும் ஒலியைக் குறிக்கலாம்.

மருங்கொலி

மூன்ருவது பிரிவில் உள்ள ஒலிகள் ல், ள் என்பனவாகும்.[22] பல்லின் வேரை ஒட்டிய அண்ணப் பகுதியை நாவானது 'ஒற்ற' லகர மெய் பிறக்கிறது. நாவிளிம்பில் விறைப்பு ஏற்படுகிறது. இதே நிலையில் 'வருடல்' நிகழ, ளகர மெய் பிறக்கிறது. 'வருடலால்' பிறக்கும் ளகர, ழகர மெய்களுக்கு இடையிலான வேறுபாடு இதுதான்; ளகர மெய் ஒலிக்கப்படும் பொழுது பற்களை நோக்கி நா சற்று முன் செல்கிறது. நாவிளிம்பில் விறைப்பு ஏற்படுகிறது. இதனுலேயே ளகர, ழகர மெய்கட்கு இடையில் பல்லவர் காலத் திறுதியில் மயக்கம் ஏற்பட்டு இருக்கலாம். இன்றைய தமிழில் ளகர மெய் நாவளை மருங்கொலியாகவும் அதற்கு இணையான லகர மெய் ''முன் (front) மருங்கொலியாகவும்' உள்ளன. இவ்வளர்ச்சி பற்றிப் பின்னர் விளக்கப்படும்.

நுனிநாப் பல்லொலிகளான தகர மெய்யும் நகர மெய்யும்'பல் லெயிற்ருெலி' (gingival) களாகும். 'பல் முதல் மருங்கில்' நா நுனி பரந்து 'ஒற்ற', அவை பிறக்கும் எனத் தொல்காப்பியர் பேசுகிருர்.[23]

---

21 தொல்காப்பியம், 95

''நுனிநா அணரி அண்ணம் வருட
ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்''.

22 தொல்காப்பியம், 96

''நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகாரம் ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்''.

23 தொல்காப்பியம், 93

''அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம் இனிது பிறக்கும் தகார நகாரம்''.

டகர மெய்யும் ணகர மெய்யும், முன்னரே குறிப்பிட்டது போல நுனியண்ணப் பகுதியை நுனிநா அல்லது நாவிளிம்பு பொருந்தப் பிறக்கின்றன. ஆனால் இவை உண்மையில் அண்ண முடியைத் தொடும் ஒலிகளல்ல.

ஈ. கீழிதல் ஒலிப்பானாக இருத்தல்

1 ஈரிதழொலி

பகர மெய்யும் மகர மெய்யும் ஈரிதழ் ஒலிகளாக விளக்கப்படுகின்றன.[24]

2 பல்லிதழொலி

வகர மெய் பல்லிதழொலியாக விளக்கப்படுகிறது.[25] இவ்வொலி ஈரிதழ் ஒலியாக இருந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் பின்னர் ஆராயப்படும்.

ய், ர், ல், வ், ழ், ள் முதலியவை இடையின மெய்களாகும்.[26] இவற்றில் வ், ர், ல், ள், ழ் ஆகியவற்றின் பிறப்பு முன்னரே ஆராயப்பட்டது. யகர மெய்யின் பிறப்பு இங்கு ஆராயப்படும்.

யகர மெய் ஒலிப்புடை ஒலியாகும். இடையண்ணத்தில் சற்று அழுத்ததுடன் ஒலி பிறக்கிறது.[27] இதுபற்றித் தொல்காப்பியம் கூறும் விளக்கம் தெளிவாக இல்லை.

உயிரொலிகள்

தொல்காப்பியர் பன்னிரு உயிர்களைப் பற்றிப் பேசுகிறார். எல்லா உயிரொலிகளின் பிறப்புப் பற்றிப் பேசுகையில் 'மிடற்றுவளி'

---

24 தொல்காப்பியம், 97
"இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்"

25 தொல்காப்பியம், 98
"பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்"

26 மூக்கினமல்லா அதிர்வொலிகள் (Non-nasal Sonorants) என இடையின மெய்களை ஆசிரியர் குறிக்கிறார். இடையின மெய்கள் அனைத்தும் அரை உயிர்கள் (Semi Vowels) என்பது ஆசிரியரின் கருத்தாகும்.

27 தொல்கால்ப்பியம், 99
"அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்".

என்ற தொடரைப் பயன்படுத்துகிறார். ஒலித்தசையின் அதிர்வால் ஒலியுறுப்புக்களில் ஏற்படும் இசைமையைக் குறிப்பதாக இதற்கு நாம் விளக்கம் தரலாம். ஒலிப்பு முறைகளை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியர் உயிரொலிகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறார். அவை பின்வருமாறு.

1. அ, ஆ; 2. இ, எ, ஏ, ஐ; 3. உ, ஊ, ஒ, ஓ, ஔ. அகரமும் ஆகாரமும் வாயைத் திறத்தலாலேயே பிறக்கின்றன.[28] நாவானது இயல்பான நிலையில் இருக்க வேண்டும் என அவர் எதிர்பார்க்கக் கூடும். இது 'அ, ஆ' ஆகிய உயிர்களைக் கீழ்நடு உயிர்களாக்கும். இரண்டாவது பிரிவில் முன் உயிர்கள் உள்ளன. பல்லை நுனிநா 'விளிம்புற' இவை பிறக்கும்.[29] முன் உயிரொலிகள் பற்றிய ஒலிப்பினை அறிய எடுக்கப்பெறும் அண்ணப் படங்களில் இடையண்ணத்தின் நடுவில் ஒலிகளின் ஒலிப்புக்கு ஏற்ப அகலமுடைய தொடப்படாத பகுதி உள்ளது. தொடுதல் நாவின் எஞ்சிய பகுதியின் அருகிலும் அப்பாலும் நிகழ்கிறது. இந்த நூற்பா தெளிவாக இல்லாத போதும் தொல்காப்பியர் இத்தகைய விளக்கத்தையே தருகிறார் எனக் கொள்வது தவறாகாது. மூன்றாவது பிரிவு உயிர்கள் தொல்காப்பியத்தின்படி 'இதழ் குவிதல்' ஆகிய தன்மையைப் பெற்றுள்ளன.[30] இதைத் தொல்காப்பியர் குறிப்பிடுவதிலிருந்து இரண்டாவது பிரிவு உயிர்கள் 'இதழ் குவிதல்' தன்மையைப் பெற்றில எனக் கொள்ளலாம். கடைநா உயர்தலைப் பற்றித் தொல்காப்

---

28 தொல்காப்பியம், 85

"அவற்றுள்
அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்".

29 தொல்காப்பியம், 86

"இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோரன்ன
அவை தாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய".

30 தொல்காப்பியம், 87

"உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும்".

பியர் ஒன்றும் குறிப்பிடவில்லை. அக்காலத் தமிழில் 'இதழ் குவிதல்' நிலையை ஒட்டி நாவின் இயக்கமும் அமைந்திருக்கலாம். குற்றிய லுகரத்தை உச்சரிக்கையில் இதழ் குவியாததை அவர் குறிப்பிட வில்லை.

3 ஒலியன்கள்

தொல்காப்பியர் காலத் தமிழின் ஒலியன் பட்டியல் இங்குத் தரப்படுகிறது. விளக்கம் பின்னர்த் தரப்படும்.

மெய்யொலியன்கள்

க்	ச்	ட்	ற்	த்	ப்
	ஞ்	ண்	ன்	ந்	ம்
	ய்		ர்	ல்	வ்
			ழ்	ள்	

உயிரொலியன்கள்

இ	ஈ	உ	ஊ
எ	ஏ	ஒ	ஓ
		அ	ஆ

ஒலிகள் ஒலியன்களின் வருமுறையைத் (Distribution) தரு கிறார் என்ற வகையில் தொல்காப்பியர் பண்டைக் காலத்து இலக்கண ஆசிரியர்களில் தனியிடம் பெறுகிறார். அவர் மொழி முதல், இடை, கடையில் வருவன பற்றியும்[31] மயக்கங்கள் (clusters) பற்றியும்[32] நன்கு விவரித்துள்ளார்.

மொழியின் ஒலியன் அமைப்பைப் பற்றி ஆராய இது உதவு கிறது. வருகை முறைகள் தனிப்பட்டியல்களாகத் தரப்பட்டுள்ளன.

3. 1 மெய்யொலியன்கள் : வெடிப்பொலியன்கள்

பின்வரும் சொற்கள் வெடிப்பொலியன்களுக்கான வேற்று நிலை வழக்குகளைத் தருகின்றன.

பார்(ப்பு)	1550*
தார்	1006

31 தொல்காப்பியம் 59–81

32 தொல்காப்பியம் 23–29

* இவ்வெண்கள் தொல்காப்பிய நூற்பாக்களைக் குறிப் பனவாகும்.

சார்	363
கார்	952
தபு	1025
-அது	113
தறு	1203
தடு	525
பச(லை)	1216
தகு	558

ஆறு வெடிப்பொலியன்கள் உள்ளன. இவற்றின் நீட்சியும் ஒலியன் தன்மையதாகும். இவை தம் இன மூக்கொலிகட்கு முன்னரும் வருகின்றன. இம்மயக்கங்கள் இரட்டித்த வெடிப்பொலிகளுடனும் தனி வெடிப்பொலிகளுடனும் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன.

க்:	பாகன்	987
க்க்:	பாக்கம்	1004
ங்க்:	பாங்கன்	1050
ட்:	கடு	1369
ட்ட்:	கட்டு(ரை)	1217
ண்ட்:	கண்டு	405
ச்:	மிசை	67
ச்ச்:	நிச்சம்	1045
ஞ்ச்:	நெஞ்சம்	1093
த்:	காதல்	540
த்த்:	காத்தல்	1120
ந்த்:	காந்தள்	1006
ப்:	தபு	1022
ப்ப்:	ஒப்பு	556
ம்ப்:	ஓம்பு	496
ற்:	இறு	891
ற்ற்:	இற்று	502
ன்ற்:	இன்று	5

இவற்றின் வருமுறை பின்வருமாறு :

ப்	த்	ற்	ட்	ச்	க்
ப் —	த் —			ச் —	க் —
—ப் —	—த் —	—ற் —	—ட் —	—ச் —	—க் —
—ப்ப்—	—த்த் —	—ற்ற் —	—ட்ட் —	—ச்ச் —	—க்க்—
—ம்ப்—	—ந்த் —	—ன்ற்—	—ண்ட்—	—ஞ்ச்—	—ம்க் > [ங்க்]
—பு	—து	—று	—டு	—சு	—கு

தகர மெய்யும் டகர மெய்யும் நுனியண்ண ஒலிகள் என நம்புதற்குரிய காரணங்களை கண்டோமெனினும், மூலத் திராவிட மொழியின் வளர்ச்சியை ஆராயும் பொழுது மரபுக்காக அவற்றைத் தொடர்ந்து முறையே நுனியண்ண ஒலி, நாவளை ஒலி, என்றே அழைத்து வருவோம். மூலத்திராவிட மொழியில் மொழி இறுதியில் வந்த வெடிப்பொலிகள் இங்கு உகரத்துடனேயே வருகின்றன.

மூக்கொலியன்கள்

ஆறு மூக்கொலியன்கள் உள்ளன :

ம், ந், ன், ண், ஞ், ங்.

ஆறு மூக்கொலியன்களில் ஐந்தனுக்கே வேற்றுநிலை வழக்குகள் உள்ளன. 'அங்கனம்' என்னும் சொல், சிலவிடங்களில் ஒரே மாதிரியாக "அங்ஙனம்" என அச்சிடப்பட்டுள்ளது. பிற்காலத்தில் நூலை எடுத்தெழுதுவோர் செய்த தவறாகவே இதைக் கருதவேண்டும். கடையண்ண மூக்கொலியின் வருமுறை பற்றிய நூற்பா ஒன்று காணாமற் போய்விட்டது எனத் தோன்றுகிறது. இன்றுள்ள நிலையில் ஙகர மெய்யைத் தனி ஒலியனாகக் கொள்ளமுடியாது. கடையண்ண வெடிப்பொலிக்கு முன்னர் வரும் மகர மெய்யின் மாற்றொலி என்றே இதைக் கொள்ளவேண்டும்.

மூக்கொலிகளின் வருமுறை வருமாறு :

ம்	ந்			ஞ் —
—ம் —	— ந்—	—ன் —	—ண் —	—ஞ்—
—ம்ம்—	—ந்ந்—	—ன்ன் —	—ண்ண்—	—ஞ்ஞ்—
—ம்ப்—	—ம்ந்—	—ன்ற் —	—ண்ட் —	—ஞ்ச் —
—ம்	—ந்	—ன்	—ண்	—ஞ்

வேற்று நிலை வழக்கிற்குச் சான்றுகள்

அ. மொழி முதல்

மாலை	796
நால்	1196
ஞாலத்து	1037

ஆ. மொழி இடை தனித்தும் இரட்டித்தும்

தனிச் சொற்களில்		தொகைச் சொற்களில்	
அமை(த்தல்)	1258	முந்நாள்	1068
அம்மை	1491	முந்நீர்	980
என	7	பொருநர்	1037
என்ன	556	உழிஞை	1010
பணை	822	ஐஞ்ஞூறு	1358
பண்ணை	802		

இ. மொழி இறுதி

மரம்	304
வெரிந்	300
வரின்	101
முரண்	390
உரிஞ்	80

(நச்சினார்க்கினியர் உரை)

மொழி இடையில் வரும் ந், ஞ் ஆகியவற்றுக்கு வேற்றுநிலை வழக்குகள் கிடைக்கவில்லை. என்றாலும் தொகைச் சொற்களில் மொழி இடையில் வரும் மூக்கொலி இரட்டைகளுக்குத் தனிச் சொற்களில் வரும் தனித்த மூக்கொலிகளுடன் வேற்றுநிலை வழக்குகள் கிடைக்கின்றன.

நுனிநா பல் மூக்கொலி மொழி இறுதியில் வருவது இரண்டு சொற்களோடு நின்றுவிடுகிறது. 'வெரிந்', 'பெருந்' என்பன அச்சொற்களாகும். நுனிநா பல் நகர மெய்யும் நுனி யண்ண னகர மெய்யும் பிற்காலத்தில் ஒன்றாகிவிடும் வளர்ச்சியை நோக்குகையில், இச்சொற்களின் முக்கியத்துவம் புலப்படும். மூலத் திராவிட மொழியில் இடையண்ண ஞகர மெய் மொழி முதலில் வருமா என்ற ஐயப்பாடு இருந்தது. நுனிநா பல் அல்லது நுனி யண்ண மூக்கொலியோடு இவ்வொலி பல வட்டார வழக்குகளில்,

ஒன்றுகிவிட்டதே இந்த ஐயப்பாடு எழக் காரணமாகும். எனினும் தொல்காப்பியர் காலத் தமிழில் இவ்வொலி பேணப்பட்டிருந்தது. 'உரிஞ்' என்ற ஒரே ஒரு சொல்லில் மட்டுமே அது மொழியிறுதி யில் வருகிறது. மொழி இடையில் வருவதும் குறைவே. பிற் காலத்தில் தமிழின் பல வட்டார வழக்குகளில் ஞகர மெய்யும் நகர மெய்யும் ஒன்றுகிவிடுவதை நோக்குகையில், இச்செய்திகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

இடையின மெய்கள்

ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய எஞ்சிய மெய்கள் இடையினம் என வகைபடுத்தப்படுகின்றன. சிலர் இவற்றை 'அரை உயிர்கள்' (semi vowels) என்பர்.

இடையின மெய்களுக்கான வேற்றுநிலை வழக்குகள் வருமாறு:

வலி	827
வளி	242
வழி	714
அரி	839
யார்	1575
வார்	1536

தொல்காப்பியரின் மொழியில் யகர மெய் தனி ஒலியனு யிருந்தபோதிலும், தொல்காப்பியருக்கு முற்பட்ட தமிழில் அது அவ்வாறே இருந்ததா என்பது பின்னர் ஆராயப்படும்.

வ்—	—	ய்—
—வ்—	—ர்—	—ய்—
—வ் வ்—		
—வ்	— ர்	—ய்
—வ் (N > வ்ம் ∽ NN		
—வ் (N ம்ம்		
வ் (P > PP ∽ க்P		

[N-Nasal (மூக்கின மெய்), P-Plosive (வெடிப்பொலி)]

பல்லெயிறு சார்ந்த ஒலி	நுனியண்ணவொலி
—ல்—	—ழ்—
—ல்ல்—	
—ல்	—ழ்

ரகர மெய்யும் ழகர மெய்யும் ஒரு பொழுதும் இரட்டித்து வருவதில்லை. மூக்கொலிகள் தம்மின வெடிப்பொலிகளுடன் வரும் மயக்கங்களுக்கு முன்னர் ய, ர, ழ முதலிய இடையின மெய்கள் வரலாம். இச்சூழலில் தான் தமிழில் மூன்று மெய்கள் சேர்ந்து வரும்.

யகர மெய் ஒலியனு?

தொல்காப்பியருக்கு முற்பட்ட காலத் தமிழில் உயிரொலி மயக்கங்கள் மிகுதியாக வழங்கி வந்தன என்பது தெளிவு. தொல்காப்பியருக்கு முற்பட்ட காலத்தமிழில் யகர மெய் ஒலியனு என்பதை ஆராயலாம். ஓரசை வேரின் ஈற்றில் உள்ள யகர மெய் இகர உயிரின் மாற்றொலியாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியத்தின்படி யகர மெய் ஆகாரத்துடன் தான் மொழி முதலில் வரும். பர்ரோ குறிப்பிடுவது போல 'யா'வை 'இ+ஆ' எனப்பிரித்தால், யகர மெய் ஒலியனுக இருக்கத் தேவையில்லை.[33] சில சமயங்களில் வேர்கள் ஓரசைக்கு மேற்பட்டவையாயிருக்குமாயின் உயிர்கட்கு நடுவில் வரும் சகர மெய் மறைந்து இகரம் தோன்றுகிறது. இந்த இகரமே பின்னர் யகர மெய்யாகிறது. இங்குச் சகர மெய் இழப்புற்றது எனக் கூறலாம். பசி > பை. சான்று : ''பைங்கிளி''[34]

மொழி முதல் சில உயிர்களுடன் வரும் மெய்கள் மீதான கட்டுப்பாடுகள்

மொழி முதல் வரும் மெய்கள் மீது, அவை இன்ன உயிர்களுடன் தான் வரவேண்டும் எனச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. யகர மெய் ஆகாரத்துடனன்றி மொழி முதலில் வராது.[35] ய், ச், ஞ் முதலிய இடையின மெய்கள் மொழி முதலில் அகரத்துடன் வாரா.[36]

---

33 Burrow: *BSOAS*, Vol. XI, Part 3, pp 565–602

34 அகநானூறு, 34, 14
"...... செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி"——

35 தொல்காப்பியம், 65
"ஆவோ டல்லது யகர முதலாது".

36 தொல்காப்பியம், 62, 64, 65
"ஆவோ டல்லது யகர முதலாது"
"சகர கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே".
"ஆ எ ஒ
என்னும் மூவுயிர் ஞகாரத் துரிய".

அதாவது எகரமும் அகரமும் இச்சூழலில் எகரமாக ஒன்று கின்றன. இவற்றில் அகரம் எகரமாக இடையண்ண ஒலியாக்கப் படுகிறது எனலாம்.

உ, ஊ, ஒ, ஓ ஆகிய இதழுயிர்களுடன் வகர மெய் மொழி முதலில் வராது.[37] பிற கட்டுப்பாடுகளை அட்டவணையில் காணலாம்.

3. 2 உயிர்கள்

மூலத்திராவிட மொழியிலும் குகைக் கல்வெட்டு மொழியிலும் உள்ளது போலவே இங்கும் ஐந்து உயிரொலியன்களே உள்ளன. அவற்றின் நீட்சி இங்கும் ஒலியன் தன்மையதாகவே உள்ளது.

உயிர்கட்கு வேற்றுநிலை வழக்குகள் வருமாறு :

இரு	1336
எரு	260
அரு	1017
ஒரு	1017
உரு	139
இன்று	1054
ஈன்று	858
என	7
ஏன	66
அசை	1141
ஆசை	1053
ஒத்து	994
ஓத்து	1426
உடல்	1006
ஊடல்	960

உயிர்த்தொடர்கள் (Diphthongs)

தொல்காப்பியர் காலத்தமிழில் ஐ, ஔ ஆகிய உயிர்த் தொடர்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்ததாகக்கருதவேண்டியுள்ளது.

---

37 தொல்காப்பியம், 63

“உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்
வ என் எழுத்தோடு வருதலில்லை”.

உயிர்த்தொடர் - ஔ

உயிர்த்தொடராகிய "ஔ' தமிழில் நிலையாக வேரூன்ற வில்லை என்றே கொள்ள வேண்டும். சமஸ்கிருத நெடுங்கணக்கைப் (Alphabet) பின்பற்றியே இவ்வுயிர்த் தொடர் தமிழுக்கு வந்துள்ளது. தொல்காப்பியர் இதனை "அ+உ" என்றே விளக்குகிறார்.[38] உகர உயிர் மெய்த்தன்மை பெற்று வகர மெய்யாவதை அவர் குறிப்பிட வில்லை. முன்னிலையில் 'ஔ' இறுதி அசைநிலையாக வரும் எனக் குறிக்கிறார்.[39] தமிழில் இதற்குச் சான்று எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் பழங்கன்னடத்தில் 'ஔ' என்பது பெண்பால் விகுதியாக வருகிறது. 'அவ்வை' என்ற சொல்லின் வேரான 'அவ்' என்பதோடு 'ஔ' என்பது ஒப்பிடத்தக்கது. பிற இடங்களில் 'அவ்' என எழுதப் படுவதைத் தொல்காப்பியர் 'ஔ' என எழுதுவார்.

சான்றுகள்

அவ்வை ௳ ஔவை
தவ்வை ௳ தௌவை
நவ்வி ௳ நௌவி
பவ்வம் ௳ பௌவம்
மவ்வல் ௳ மௌவல்
வவ்வல் ௳ வௌவல்

வகர மெய்யானது தொல்காப்பியர் காலத்தில் பல்லித மொலியாக இருந்திருக்க முடியாது என்பதன் அடிப்படையாக இவ்வாறு அமைந்திருக்கலாம். எல்லா வகர மெய்களும் பல்லிதழ் ஒலியாக இருக்கவேண்டும் என அவர் கொண்டதால், இந்த ஈரிதழ் வகர மெய்யை அவர் உகரத்துடன் இணைத்துக் காண விழைகிறார் என்றே கொள்ளவேண்டும். எனவே வகரமெய் முதலில் ஈரிதழ் ஒலியாக இருந்து பின்னர்ப் பல்லிதழ் ஒலியாக ஆகியிருக்க வேண்டும்

---

38 தொல்காப்பியம், 55

"அகரம் உகரம் ஔகார மாகும்"

39 தொல்காப்பியம், 152

"ஔவென வரூஉம் உயிரிறு சொல்லும்
ஞ ந ம வ என்னும் புள்ளி யிறுதியும்
குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே".

என் நாம் உய்த்துணரலாம். இருந்தபொழுதிலும் மேலே காட்டப் பட்டது போன்று சில இடங்களில் முதலசையில் வகர மெய் வருகையில் அது தொடர்ந்து ஈரிதழ் ஒலியாகவே இருப்பதைக் காணலாம்.

உயிர்த்தொடர் — 'ஐ'

'ஐ' என்பதைப் பொறுத்தவரையில் தொல்காப்பியரே அது 'அ + இ' என்னும் உயிர் மயக்கம் எனக் கொள்ளலாம் எனக் குறிப்பிடுகிறார்.[40] இங்கு ஈற்றில் உள்ள இகர உயிர் யகர மெய்யாவ தாக அவரே கூறுகிறார்.[41] மொழி இறுதியில் இகர உயிர் வேறு சில இடங்களிலும் யகர மெய்க்கு மாற்றொலியாக வருகிறது.[42] 'ஆய்', 'போய்' என்பவற்றில் உள்ள யகர மெய்யின் உருபன் நிலையை விளக்க இச்செய்திகள் முக்கியமானவை.இறந்த காலத்தைக் காட்டும் உருபாக யகர மெய் பயன்படுவது இல்லை. மொழியிறுதியில் யகர மெய்யும் இகர உயிரும் தம்மிடையே மாறிக்கொள்கின்றன என் பதைத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டுவதன் மூலம் யகர மெய்யில் இறந்தகாலம் காட்டும் உருபான இகரத்தை உணர்ந்து கொள்ள உதவுகிறார். மேலும் இச்சொற்களில் இருவகையான பழைய உயிர் மயக்கங்களையும் காண்கிறோம்.

1 ஆஇ (> ஆய்)
2 போஇ (> போய்)

ஆனால் இவை இன்று இவ்வாறு உச்சரிக்கப்படுவதில்லை.

உயிர்மயக்கங்கள் (Vowel Clusters)

அளபெடைகள் எனப்படும் உயிர்மயக்கங்களும் உண்டு. இங்கு நெட்டுயிரானது அதற்கு இனமான குற்றுயிருடன் வருகிறது. அவை வருமாறு : "ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ". யாப்பியலின் படி இவை ஈரசைகளை உடையன. சமஸ்கிருதத்தில் உள்ள ப்ளுதாவைப் (Pluta) போல மூன்று மாத்திரை அளவுடைய தனியொலிகள் தமிழ் மொழியில் இல்லை எனத் தொல்காப்பியர் கூறுகிறார்.[43]

---

40 தொல்காப்பியம், 54

41 தொல்காப்பியம், 56

42 தொல்காப்பியம், 58

43 தொல்காப்பியம், 5
"மூவளபு இசைத்தல் ஓரெழுத் தின்றே"

சான்ருக 'ஊ + உ' என்பது உடம்படுமெய் பெறும் பொழுது 'உ [வ்] உ ல உ வ் உ' என்றும், உடம்படுமெய் பெருத பொழுது 'ஊ' என்றும் இருந்திருக்க வேண்டும். ஈருயிர்கள் உருபன் எல்லையில் வரும்பொழுது குழப்பத்தைத் தவிர்க்கவும் எல்லையைத் தெளிவாகக் குறிப்பிடவும் முதலுயிரானது நெடிலாகிறது. அடுத்த உயிர் இயல் பாக உள்ளது போலவே குறிலாக உச்சரிக்கப்படுகிறது. இந்நுட்பம் இன்று கூடப் பேச்சுத் தமிழில் காணப்படுகிறது.

சான்று : "முத்தைய + உடையார் > முத்தையா உடையார்."

"தழு + உ > தழூஉ". இது தொல்காப்பியரால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.[44] உடம்படுமெய்களான வகர, யகர மெய்கள் பின்னர் வளர்ச்சியுற்றவையாகும்; எனினும் அவை தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தொடங்கிவிட்டன எனலாம். இக் காலத் தமிழில் அடுத்தடுத்து வரும் இரு உயிரொலிகள் உடம்படு மெய்யின்றி உச்சரிக்கப்படும் பொழுது குரல் வெடிப்பொலியுடன் உச்சரிக்கப்படுகின்றன. 'அ? அ', 'இ? இ' என்பன இதற்குச் சான்றுகளாகும் குழந்தைகள் இவ்வொலிகளைச் சிறுவயதில் பள்ளிக்கூடங்களில் பயிலுகின்றன. குரல்வளை வெடிப்பொலி இங்ஙனம் வருதல் 'விட்டிசைத்தல்' எனப்படும். குரல்வளை வெடிப்பொலியும் ஒரு வெடிப் பொலியாதலின் அது பிற வெடிப்பொலிகளுடன் இசைந்து நிற்கும். இது 'விட்டிசை எதுகை' எனப்படும்.[45] விட்டிசைத்தல் இல்லாத பொழுது உயிர் மயக்கங்கள் ஏற்படுகின்றன. அவை பின்வருமாறு மாறுகின்றன : அ + அ > ஆ; அ + இ > ஐ. 'பகல்' என்ற சொல்லில் உள்ள ககர மெய் மறையும்பொழுது, இரு அகர உயிர்களும் இணைந்து ஆகாரமாகின்றன. பகல் > ப்அஅல் > பால். குகைக் கல்வெட்டுக்களில் 'செய்தா அன்' என்ற சொல் வருகிறது. செய்த+அன் > செய்தான்' என இது முன்னர் விளக்கப்பட்டது. அகரத்தில் முடியும் வேர்களில் ஈற்று அகரம், தொழிற்பெயர் விகுதியாகிய இகரத்தால் தொடரப் படும்பொழுது ஐகாரமாகிறது. நட + இ > நடை, 'ஆ இ(> ஆய்), ஒஇ(> ஓய்), போன்ற உயர்திணைப் பெயர்கள் உண்டு. வகர, யகர உடம்படு மெய்கள் சந்தியில் நிலைபெறும் பொழுது ஆய் ல ஆ +

---

44 தொல்காப்பியம், 261

"ழகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான".

45 யாப்பருங்கல விருத்தி, 53

	a	ā	i	ī	u	ū	e	ē	ai	o	ō	au
#	x	x	x	x	x	x	x	x	x	x	x	x
k	x	x	x	x	x	x	x	x	x	x	x	x
ṅ												
c		x	x	x	x	x	x	x		x	x	
ñ		x					x			x		
ṭ												
ṇ												
t̲	x	x	x	x	x	x	x	x	x	x	x	x
n̲	x	x	x	x	x	x	x	x	x	x	x	x
p	x	x	x	x	x	x	x	x	x	x	x	x
m	x	x	x	x	x	x	x	x	x	x	x	x
y		x										
r												
l												
v	x	x	x	x			x	x	x			x
l̲												
ḷ												
t												
n												

	k	ṅ	c	ñ	ṭ	ṇ	t̲	n̲	p	m	y	r	l	v	ḻ	ḷ	t	n
k	*																	
ṅ	*	*																
c			*															
ñ			*	*							*							
ṭ	*		*		*				*									
ṇ	*		*	*	*	*			*	*	*			*				
t̲							*											
n̲							*	*			*							
p									*									
m									*	*	*			*				
y	*+	*+	*+	*+			*+	*+	*+	*+	*			*				
r	*+	*+	*+	*+			*+	*+	*+	*+	*			*				
l	*		*						*			*	*	*				
v											*			*				
ḻ	*+	*+	*+	*+			*+	*+	*+	*+	*			*				
ḷ	*		*						*		*			*		*		
t	*		*						*		*						*	
n	*		*	*					*	*	*			*			*	*

இ > ஆவி; ஓய் ~ ஓ + இ > ஓவி. 'ஆவியர் பெருமகன்',[46] 'ஓவியர் பெருமகன்'[47] முதலிய சொற்களைக் காண்க.

தொல்காப்பியர் காலத்தில் 'அஇ' என்பது 'அய்' என்றாகி விட்டது. குற்றுயிர் மெய்யொலியால் தொடரப்படும்பொழுது இடத்தால் அது நெடிலாவதால், அடியின் தொடக்கத்தில் நெட்டசைக்குப் பதிலாக அது நிற்கலாம். இவ் 'ஐ' (அஇ) மொழி முதலில் வருகையில் 1½ மாத்திரை உடையதென்றும் பிறவிடங்களில் ஒரு மாத்திரை உடையதென்றும், பிற்கால இலக்கண ஆசிரியர்கள் பேசலாயினர்.[48]

3.3 சில ஒலி வழக்குகள்

i குற்றியலுகரம்

மெய் குற்றுயிர் / நெட்டுயிர் (மெய்) (மெய்) (உயிர்) (மெய்) வெடிப்பொலி உகரம்* எனனும் வாய்ப்பாட்டு வடிவத்தின் இறுதி உயிர் உகரமாகும். குற்றுயிர் உகரத்திலிருந்து வேறுபட்டு மேலும் குறுகிய உகரம் எனும் பொருளில் இவ்வுயிர் குற்றியலுகரம் என அழைக்கப்படுகிறது. குற்றியலுகரம் என்ற சொல் வெடிப்பொலிகளை உச்சரிக்கையில் ஏற்படும் உயிர் போன்றதொரு விடுப்பொலியைக் குறிக்கும் எனவும் விளக்கப்படுகிறது. குற்றியலுகரம் அது சார்ந்து வரும் வெடிப்பொலியின் பிறப்பிடத்திலேயே பிறக்கிறது; அதற்கெனத் தனிப்பிறப்பிடம் இல்லை எனத் தொல்காப்பியர் கூறுகிறார்.[49] குற்றியலுகரத்தை ஒரு விடுப்பொலி எனக்கொள்ளா

---

46 சிறுபாணாற்றுப்படை, 86 ஆவது வரி
"அருந்திற லணங்கின் ஆவியர் பெருமகன்"

47 சிறுபாணாற்றுப்படை, 122 ஆவது வரி
"உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்"

48 நன்னூல், 95
"தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும் ஔவும் முதல் அற் றாகும்".

* ஈரசைச் சொற்களில் முதலுயிர் நெடிலாக இருக்க வேண்டும். — ஆ-ர்.

49 தொல்காப்பியம், 101
"சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்".

விட்டால், குற்றிலுகரத்திற்குத் தனி ஒலிப்புமுறை இல்லாது வெடிப்பொலிகள் பிறக்கின்ற அவ்விடங்களிலேயே இவ்வுகரமும் பிறக்கும் என்ற தொல்காப்பியரின் கூற்றைப் புரிந்து கொள்வது சிரமமேயாகும். இது இதழ்ச் சாயல் பெற்ற ஒலி அன்று. மொழியிறுதி தவிர இயல்பாகப் பேசுகின்ற பேச்சில் சாதாரணமான உகரமாகவே ஆகிறது. மொழி இடையிற் கூறப் பின்வரும் இடங்களைத் தவிர பிற இடங்களில் உகரம் வெறும் வெடிப்பொலியாகவே உள்ளது. 1 இரட்டித்த வெடிப்பொலிக்குப் பின்னரும் 2 வெடிப்பொலியுடன் தொடங்கும் சொல்லுக்கு முன்னரும் வரும் பொழுது உகர உயிர் சாதாரணமாக உச்சரிக்கப்படுகிறது.[50] இந்த இரண்டாவது சூழலில் வெடிப்பொலி இரட்டிக்கிறது.

சான்று : பாக்கு + கடிது > பாக்குக் கடிது

முன்னிலையில் உருபேற்கும் கட்டு வடிவமான 'நிம்' என்பது தொல்காப்பியர் காலத்தில் 'நும்' என மாறி விட்டது. குற்றியலுகரம் அம் மூக்கொலியிலிருந்து தனித்த ஒலியன்மையின் இது உண்மையில் நகர மெய்யோடு பிறக்கும் விடுப்பொலி மகரத்தோடு முடிந்த வடிவமேயாகும். இது உண்மையில் நகரத்தின் விடுப்பொலியாகையால் நுந்தை என்ற சொல்லில் மொழி முதலில் வருவதாகச் சுட்டப்படுகிறது. தொல்காப்பியரே இவ்விடுப்பொலி அடிக்கடி இதழ்குவி ஒலியான உகரமாக மாறுகிறது என ஒப்புக் கொள்கிறார்.[51]

ii குற்றியலிகரம்

வெடிப்பொலிகளை உச்சரிக்கையில் ஏற்படும் இகரம் போன்றதொரு விடுப்பொலி ஒன்று உண்டு. அவ்வொலி குற்றியலிகரம்

---

50 தொல்காப்பியம், 408,409

"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிலையும்".
"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே".

51 தொல்காப்பியம், 67, 68

"குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முயலும்".
"முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான".

என்றழைக்கப்படுகிறது. முன்னர் குறிப்பிடப்பட்ட உகரம் போன்ற விடுப்பொலியுடன் இது 'இடச்சார்பான ஊசலாட்ட ஒலியாக' (Positional Variant) வருகிறது. உகரம் போன்ற விடுப்பொலி தொடர்ந்து யகர மெய்யில் தொடங்கும் சொல் வந்தால் இகரம் போன்ற விடுப் பொலியாக மாறுகிறது.[52] சான்று : பாக்கு + யாது > பாக்கியாது.

அகச்சந்தி (Internal Sandhi) எனக் கூறத்தக்கதில் இவ்விகரம் உருபு முடிவில் வருவதாக நம்பக் காரணமுண்டு. ஒரு சொல்லுக் குள் மகர மெய்க்குப் பின்னர் 'யா' வருமாயின், மகர மெய் இகரம் போன்றதொரு விடுப்பொலியைப் பெறுகிறது.

சான்று : கேண்ம் + யா > கேண்மியா.[53]

iii **ஆய்தம்** (இவ்வொலியை தமிழ்ப் பேரகராதி *k* எனக் குறிக்கும்.)

மூன்றாவது ஒலி ஆய்தமாகும். ஆய்தத்தின் தனித் தன்மை யைப் புரிந்து கொள்வதற்கு முன்னுரையாகச் சில செய்திகளை இங்குக் குறிப்பிட வேண்டும்.

மெய்ம் மயக்கங்கள் : இரட்டித்த வெடிப்பொலிகளைப் பற்றிய ஒரு செய்தியை முதலில் குறிப்பிட வேண்டும். வ், ல், ள் ஆகிய வற்றில் முடியும் ஓரசைச் சொற்கள் வெடிப்பொலியை முதலாக உடைய சொற்களால் தொடரப்படும் பொழுது இரட்டித்த வெடிப் பொலிகளைத் தோற்றுவிக்கின்றன. இங்கு அவற்றின் பொருளைப் பொறுத்த வரையில் சில கட்டுப்பாடுகள் உள்ளன. 'பல பொருள் ஒரு சொல்லை' (Synonym) மொழி தவிர்க்கும் போக்கும் கிடைக்கக் கூடிய இருவடிவங்களை வேறுபடுத்தும் முயற்சியும் உள்ளன. இத்த கைய 'பொருள் கட்டுப்பாடுகள்' பிற்காலத்திய வளர்ச்சிகளா யிருக்கக்கூடும். சில சந்திமாற்றங்களை இங்குக் குறித்துக் காட்டலாம்.

---

52 தொல்காப்பியம், 34

"குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே".

53 தொல்காப்பியம், 35

"புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்".

1 (மெய்) உயிர் வ் + வெடிப்பொலி — > (மெய்) உயிர்வெடிப்பொலி வெடிப்பொலி :
அவ் + கூடிய > அக்கடிய

2 அ (மெய்) உயிர் ல் + த் — > (மெய்) உயிர் ற்ற்
கல் + தீது > கற்றீது

ஆ (மெய்) உயிர் ள் + த் > (மெய்) உயிர் ட்ட்
முள் + தீது > முட்டீது

(அல்லது)

(அ) + (ஆ) என்பனவற்றை இணைத்து (மெய்) உயிர் ல் /ள் + த் > (மெய்) உயிர் ற்ற் / ட்ட் என விளக்கலாம்.

முதல் வகையைப் பொறுத்தமட்டில் ஆறு வெடிப்பொலி இரட்டைகளும் இடம் பெறுகின்றன. இரண்டாவது வகையைப் பொறுத்தமட்டில் நாவளை அல்லது நுனியண்ண வெடிப்பொலி இரட்டைகளே இடம் பெறுகின்றன. மொழி முதல் வரும் குறுகிய திறப்பசைகளுக்குப் பின்னரே இந்த வெடிப்பொலி இரட்டைகள் வருகின்றன. பல இடங்களில் ஒரு மாற்று வடிவம் வருகின்றது. அதை நெடில் உரசொலி என நான் கருதுகிறேன். இம்மாற்றொலி 'ஃ' எனக் குறிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து குறில் வெடிப்பொலி வருகிறது.

நெடில் மெய்களை இரு தனி மெய்களாகக் கருதல்

மேலே கூறப்பட்ட இரட்டித்த வெடிப்பொலிகள் மட்டுமே, இரு வேறுபட்ட மெய்யொலிகள் 'ஓரினமாதலின்' (Assimilation) விளைவு என்பது தொல்காப்பியர் கருத்தாகும். ஆனால் தொடக்கத்தில் எல்லா இரட்டித்த மெய்யொலிகளுமே இத்தகைய சந்திகளின் விளைவே என நம்பக் காரணமுள்ளது.[54]

"யாப்பியல் அளவு கெடாதிருக்க முதலில் தனித்து இருந்த மெய்யொலி இரட்டிக்கும் போக்கு பிற்காலத்தில் ஏற்பட்டது. 'என' என்பதற்கு மாறாக 'என்னை' என்ற வடிவம் பெருவழக்குப் பெற்றதைச் சான்றாகக் காட்டலாம்.''

தொல்காப்பியரே 'அஃகு' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.[55] இதன் பொருளும் 'அல்கு' என்பதன் பொருளும் ஒன்றே.

54 Bh. Krishnamurthy: *Telugu Verbal Bases*, California

55 தொல்காப்பியம், 1129
"குறித்தெதிர் மொழிதல் அஃகித் தோன்றும்''

அஃகு என்பது 'அக்கு' என்பதன் மாற்று வடிவம் என விளக்கலாம். 'அல்கு' என்பது ஒரினமாதலின் விளைவாக 'அக்கு' என ஆகியிருக்க வேண்டும். இவ் ஒரினமாதலை விளக்குவதற்கு, இடைப்பட்ட நிலையில் 'அற்கு' என்ற வடிவம் இருப்பதாகக் கொள்ள நேரிடலாம்.

தொல்காப்பியரின் கட்டுப்பாடு — ஒரு பிற்கால வளர்ச்சி

'முள் + தீது > முட்டீது ∝ முஃடீது'. இங்கு வெடிப்பொலி இரட்டையானது உரசொலி இரட்டையுடன் உறழ்ந்து வருகிறது. இது ஒரு பயனிலைத் தொடராகும். அடைத் தொடர் என்பன போன்ற பிற அமைப்புக்களில் இத்தகைய மாறுபாடுகள் இல்லை. 'முள் + தீமை' என்பது முட்டீமை என்று மட்டும் வருமேயன்றி 'முஃடீமை' என வராது. பிற்காலத்துக் கட்டுப்பாடு என்ன என்பதை இது காட்டுகிறது. வகர மெய் முடிவிற்கு ஒரு விதியையும், ல்/ள் முடிவிற்கு ஒரு விதியையும் என இரு விதிகளைத் தந்துள்ளார். முன்னரே குறிப்பிட்டது போல இச்சந்தி விதிகள் எல்லாம் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

ஒரு குறிப்பு

பொருளைப் பொறுத்த வரையிலான வரையறை அல்லது கட்டுப்பாடு என்பது பிற்காலத்திய வளர்ச்சி என்று மட்டும் கொள்ளலாம். ளகர, ழகர மெய் முடிவுகளில் மட்டுமின்றி வகர மெய் முடிவிலும் கூட வெடிப்பொலி இரட்டையும் உரசொலி இரட்டையும் மாற்று ஒலிகளாக வருகின்றன.

வடிவங்களைப் பற்றிய ஓர் ஆய்வு

வகர மெய்யில் முடிவதாக நான்கு சொற்களையே தொல் காப்பியர் தருகிறார். 'அவ், இவ், உவ்' ஆகிய சுட்டு வடிவங்களையும், 'தெவ்' என்பதையும் அவர் குறிப்பிடுகிறார். 'எவ்' குறிப்பிடப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் 'யா' என்பது குறிக்கப்படும் பொழுது வரும் மாற்று வடிவமே இவ்வடிவமாகும். உரையாசிரியர்கள் தரும் பழைய சொற்களை, தொல்காப்பிய விதிகளைக் கொண்டு ஆராய்ந்தால் வகர மெய்யில் முடியும் வேறு வேர்களைக் கண்டுபிடிக்கலாம். 'எஃகு, கஃசு, பஃது, கஃறு, கஃபு, கஃடு' போன்ற சொற்கள் காணப்படுகின்றன. இவற்றில் உள்ள இரண்டாவது அசையைச் சொல்லாக்க ஒட்டு என விட்டுவிட்டால், ஆய்தத்திற்குப் பதில் வகர மெய்யைப் பெறுகிறோம்.

'எவ்' என்னும் வேர்

'எஃ'கு என்ற சொல்லில் உள்ள சொல்லாக்க ஒட்டை நீக்கினால், எஞ்சியுள்ள வேர் 'எவ்' என்பதாகும். எவ் ∝ எய் ∞ எ.

'கவ்' என்னும் வேர்

'கஃசு, கஃபு' முதலிய சொற்கள் 'கவ்' என்னும் வேரைக் கொண்டுள்ளன. (கவ்+சு > கஃசு, கவ்+பு > கஃபு) 'கஃச' என்பதன் பொருள் 'பகுக்க', 'இரண்டாகப் பிரிக்க' என்பதாகும். 'கஃபு' என்பதன் பொருள் 'கிளை' என்பதாகும். இதன் மாற்று வடிவம் 'கப்பு' என்பதாகும். 'கஃசு' என்பதன் மாற்றுவடிவம் 'கச்சு' என்பதாகும். ஆனால் அது இன்று வேறொரு தனிப் பொருளில் வழங்குகிறது. 'கஃது' என்பதன் மாற்று வடிவம் கிடைக்கவில்லை. ஆனால் அதே வேரும், ஒட்டும் பெற்றிருப்பதுடன் சொல்லாக்க அசை அகரத்தையும் பெற்றுள்ள 'கவடு' என்ற பிறிதொரு சொல் உள்ளது.

'வெவ்' என்னும் வேர்

வெவ் + க > வெஃகா. 'வெஃகா' என்பதில் 'வெவ்' என்பது வேர். இதனுடைய மாற்றுவடிவம் 'வெம்' என்பதாகும். வெஃகா என்பது 'விரும்பத்தகு சோலை' எனப் பொருள்படும். காஞ்சீபுரத்தில் அப்பெயரில் ஒரு தலம் உண்டு.

'பவ்' என்னும் வேர்

'பஃது' என்பதில் 'பவ்' என்பது வேராகும். 'பவ்' என்பதன் பொருள் 'பரவுதல்' என்பதாகும். 'பவ்வம்' என்ற சொல் இதற்குச் சான்றாகும். 'பா' அல்லது 'பாவு' என்ற சொற்களோடு இது தொடர்புடையது. 'பத்து' என்ற எண்ணுப் பெயரின் மாற்று வடிவம் 'பஃது' என்பதாகும்.

'பல்' என்னும் வேர்

'பஃறி' என்னும் சொல்லின் வேர் 'பல்' என்பதாகும். பல் + தி > பஃறி. 'தி' என்பது சொல்லாக்க அசையாகும்.

'கல்' என்னும் வேர்

'கஃது' என்பது 'கல் + து' என்று இருக்கலாம். 'கல்' என்பது 'கன்' (= கறுப்பு) என்னும் பழைய வடிவத்தைக் கொண்டதாயிருக்க வேண்டும். 'கன்னங்கறேல்' என்ற தொடரில் 'கன்' என்னும் பழைய வடிவம் இன்றும் வழக்கில் உள்ளது.

'சுல்' என்னும் வேர்

சுல் + து > சுஃறு. சுல் என்பதன் பொருள் 'வீசுதல்' அல்லது 'அலேதல்' அல்லது 'வட்டமாய் நகர்தல்' என்பதாகும். 'சுலவு ல உலவு என்னும் சொற்களை நோக்குக. பனைமரம் காற்றில் சலசலப் பது போன்ற ஓசையைக் குறிக்கச் 'சுல்' எனும் சொல் பயன்படும். 'சுஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை' என்ற தொடர் தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரையில் ஆளப்பட்டுள்ளது. (சுஃறு என்பது இங்குத் தவருக 'சுஃஃறு' என இடம் பெற்றுள்ளது. இது பின்னர் விளக்கப்படும்) இதன் மாற்று வடிவமான 'சுற்று' என்பது இன்றும் வழக்கில் உள்ளது. 'வட்டத்தில் செல்லுதல்' என்னும் பொருளில் அது வழங்குகிறது.

முடிவு

மேலே காட்டப்பெற்ற சான்றுகள் பின்வரும் உண்மைகளைத் தெளிவுபடுத்துகின்றன.

1. தொடரில் உரசொலி வடிவம் மட்டுமே வரும் என்ற கட்டுப் பாடு ஆரம்பத்தில் இருந்ததில்லை.
2. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் வெடிப்பொலி நலிந்து உரசொலியாகியது.

ஆய்தத்தின் ஒலி மதிப்பு

ஆய்தத்தை ஒலிப்பிலா உரசொலி எனக் கொள்வது பொருந் துமா? தமிழ் நெடில் (இ ர ட் டி த் த) வெடிப்பொலியினுடைய மாற்றுெலியின் உச்சரிப்பு என்ன? பிற திருந்திய திராவிட மொழி களில் இதனோடு ஒப்பிடத் தக்கதாக ஒன்றுமில்லை என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஆய்தத்தின் இக்கால உச்சரிப்பு

'எஃகு' என்ற ஒரே சொல்தான் இக்காலத் தமிழில் வழக்கில் உள்ளது. அது (*exxu*) என உச்சரிக்கப்படுகிறது. (*erru*) என்பது இதனது மாற்று உச்சரிப்பாகும். பிற சொற்கள் இலக்கண மரபில் மட்டுமே வழக்கில் உள்ளன. 'கஃசு' என்பது (*kaccu*) என்றும் (*kahsu*) என்றும் உச்சரிக்கப்படுகிறது. கஃபு என்பது (*kaɸɸu*) என்றோ (*kahpu*) என்றோ உச்சரிக்கப்படுகிறது. முஃடீது என்பது (*muhṛidu*) என உச்சரிக்கப்படுகிறது.

டகர, தகர வெடிப்பொலிகளைத் தவிர்த்து ஏனைய வெடிப் பொலிகள் வரும் முதலாவது பிரிவிற்கும் இவ்விரண்டு வெடிப் பொலிகள் மட்டுமே இடம் பெறும் இரண்டாவது பிரிவிற்கும் ஒரு வேறுபாடு உண்டு. பிந்தியதில் கால்டுவெல் விளக்குவதுபோலப் பின்னண்ண ஒலி உண்டு;[56] அதாவது தகர, டகர வெடிப்பொலி களுக்கு முன்னர்க் கடையண்ண உரசொலி உள்ளது. பிறவிடங் களிலும் இத்தகைய ஒலி வருவதற்கான காரணம் இதுவாகத் தான் இருக்க வேண்டும்.

மென்மையாதல் அல்லது நலிபு

முதற்பிரிவில் வெடிப்பொலிகள் உரசொலிகளாக மென்மை யுறுகின்றன. தொல்காப்பியர் 'நலிபு' என்பதை 'வலுவிழத்தல், மென்மையாதல்' எனக் குறிப்பிடுகிறார்.[57] 'ஆய்தல்' என்பதன் வேர் 'ஆய்' என்பதாகும். (ஆய்+து+அம்) இதனுடைய மாற்றுவடிவம் 'சாய்' என்பதாகும். (மொழி முதலில் சகர மெய் வந்துள்ளது) தொல்காப்பியரின் கருத்துப்படி 'ஆய்' என்பது 'வலுவிழத்தல், சுருங்குதல், மென்மையாதல்' என்னும் பொருட்களை உடையது.

ஆய்தம் நெடில் உரசொலியா? குறில் உரசொலியா?

ஆய்தம் உரசொலியைக் குறிக்குமாயின், அதற்கு அடுத்த வெடிப்பொலியை அங்ஙனமாகவே உச்சரிக்கப்படுவதாக விட்டு விட்டு, அதைக் குறில் உரசொலியாக எழுதலாமா என்பதே அடுத்த வினா. ஆனால், முன்னர் விவரிக்கப்பட்ட சொற்களில் இது இங்ஙனம் உச்சரிக்கப்படுவதில்லை. அவை நெடில் உரசொலியுடன் உச்சரிக்கப்படுகின்றன.

சான்று

ஆய்தம் ஓர் ஒலியைப் போலவோ அல்லது வரிவடிவ எழுத்தைப் போலவோ திகழாது எனத் தொல்காப்பியத்தில் ஒரு

---

56 R. Caldwell : *A Comparative Grammar of the Dravidian Languages*, p 130

57 தொல்காப்பியம், 1479

"நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்"

செய்தி உள்ளது.[58] இந்நூற்பாவின் பொருள் புதிராக உள்ளது. கி.பி. பத்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப்பெறும் பெயர் சுட்டப்பெருத ஆசிரியர் ஒருவர், தொல்காப்பியரின் கருத்தைக் கூறுகையில் 'ஆய்தம் ஓர் எழுத்தன்று; வெறும் குறியீடே (a diacritical mark)' எனப் பிற் காலத்தவர் கொள்வது போலக் குறிப்பிடுகின்றுர்.[59] ஆய்தத்தைத் தொடர்ந்து வரும் வெடிப்பொலியை உரசொலியாக உச்சரிக்க வேண்டும் என்பது இவ்விளக்கத்திலிருந்து புலனுகிறது.

குற்றியலுகரத்திற்கான சூழல்

முன்னரே சுட்டிக்காட்டியபடி, குற்றியலுகரத்தில் முடியும் சொற்களின் முதலசை குறுகியதாக இருக்குமாயின் அதைத் தொடர்ந்து இரட்டித்த மெய்யொலி வருதல் வேண்டும். நெடில் மெய்யொலியின் மாற்று வடிவமே. ஆய்தமாதலின், அதை நெடில் உரசொலி என்றே கொள்ள வேண்டும்.

முடிவு – ஒரு நெடில் உரசொலி

நெடில் உரசொலியுடன் உகரம் போன்ற விடுப்பொலி சேர்ந்து ஒரே ஒலியாகிறது. எனவே தான் தொல்காப்பியர் 'அஃது' என்பது ஆய்தத்தில் (உரசொலியில்) முடிவதாகக் குறிப்பிடுகிறுர்.

இவ்வொலிகள் பற்றிய பொதுவான முடிவு

சார்பு ஒலிகளாகிய 'குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம்' ஆகியன ஒலியன்களல்ல இவை முன்னரே விளக்கப் பெற்ற ஒலியன்களின் 'இடச்சார்பாக மாறும் மாற்றெலிகளே' (Positional Variants) ஆகும். குற்றியலுகரமும் குற்றியலிகரமும், விடுப்பொலிகளாக இல்லாதபோது உகர உயிரின் மாற்றெலிகளாகும். ஆய்தம் நெடில் வெடிப்பொலியின் மாற்றெலியாகும். குற்றியலுகரமும் குற்றிய லிகரமும் மெய்யொலிகளின் கீழ் ஆராயப்பட்டன. ஏனெனில் வரலாற்று முறையில் அவை விடுப்பொலிகளேயாகும். இவை மூன்றும் 'சார்பெழுத்து' என்றழைக்கப்படுகின்றன. இக்கால மொழியியல் கலைச்சொல்லை ஆளுவதாயின், இவற்றை 'மாற்றெலிகள்' (Allophones) என்று குறிப்பிட வேண்டும்.

---

58 தொல்காப்பியம், 40

"உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக் குறிப்பெல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலையான".

59 யாப்பருங்கல விருத்தியுரை, 3 ஆவது நூற்பா உரை.

இடச்சார்பாக மாறும் பிற ஒலிகள்

இடச்சார்பாக மாறும் சில ஒலிகள் வினையின் முதலில் வருகின்றன. நாவளை அல்லது நுனியண்ண மூக்கொலியில் முடியும் பெயர்ச் சொற்களால் தொடரப்படும் பொழுது யகர, ஞகர மெய்கள் மாற்றொலிகளாக உள்ளன. முதலில் ஞகர மெய் இருந்தது;[60] பின்னர் அது யகர மெய்யானது. ஞகர மெய்யை உடைய வடிவத்தை யகர மெய்யை உடைய வடிவம் இப்பொழுது கைப் பற்றி வருகிறது.

வகர மெய்யீற்றை உடைய வடிவத்தைத் தொடர்ந்து மகர மெய் வருமாயின் மகர மெய் நெடிலாகிறது.

சான்று

'தெவ் + மாண்ட > தெம்மாண்ட'.[61] இதுவும் ஓரினமாதலுக்குச் சான்றாகும். மகர மெய்யைத் தொடர்ந்து வகர மெய் வருமாயின் மகர மெய் குறுகுகிறது. வாக்கியத்தின் இறுதியில் வருகையில் 'போலும்' என்ற சொல் 'போன்ம்' என்றாகிறது. சொல்லிறுதியில் வரும் இம்மயக்கம் அருகியதாகும்.[62] பிற சொற்களின் இத்தகைய மெய்ம்மயக்கம் இல்லை. இச்சொல்லில் கூட மகரமெய் தெளிவாக உச்சரிக்கப்படுவதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

---

60 தொல்காப்பியம், 146

"ண ன வென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர்".

61 தொல்காப்பியம், 382 ஆவது நூற்பா, நச்சினார்க்கினியர் உரை

62 தொல்காப்பியம், 51

"செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும்".

6

தொல்காப்பியத் தமிழ் - உருபனியல்

1. 0 தொல்காப்பியரின் இலக்கண அமைப்பு முறை

தொல்காப்பியருக்குப் பிற்பட்ட காலத்துத் தமிழில் நேர்ந்த மாற்றங்களை ஆராயத் தொடங்குவதற்கு முன்னர்த் தொல்காப் பியத் தமிழின் உருபனியலைத் தொகுத்துக் கூற முற்படுவோம்.

தொல்காப்பியம் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என இரண்டாகப் பிரிக்கின்றது. உரிச்சொல், இடைச்சொல் என்ற பிறிதொரு பாகுபாடும் உண்டு.[1] இச்சொற்களைத் தொல் காப்பியம் பயன்படுத்துவதை ஆராயும்பொழுது, 'உரிச்சொல் என்பதால் வேர் உருபன்களையும்[2] 'இடைச்சொல்' என்பதால்

---

1 தொல்காப்பியம், 643, 644

"சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே".
"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப".

2 தொல்காப்பியம், 782, 783, 872, 879, 936

"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்".
"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா;
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன".
"மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபிற் றோன்றுமன் பொருளே".
"அன்ன பிறவுங் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்".
"குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்"

பிற உருபன்களையும்[3] அது குறிப்பதாகவே முடிவுக்கு வரவேண்டியி திருக்கிறது. பின்வரும் வெந்த்ரீஸின் (Vendryes) கூற்று[4] இங்குக் குறிப்பிடத்தக்கது.

''ஒவ்வொரு வாக்கியத்திலும் மாறுபட்ட இருவகையான கூறுகள் உள்ளன. 1. கருத்துக்கள் அல்லது எண்ணங்களைக் குறிக்கும் எழுத்து வடிவங்கள். 2. அவற்றுக்கிடையேயான சில உறவுகளைக் குறிப்பவை. உருபன் பொருளன் (Semanteme) ஆகியவற்றுக்கிடையேயான வேற்றுமைக்கு இது இணையானதாகும். கருத்துப் படிவங்களைக் குறிக்கும் மொழியியற் கூறு பொருளனென்றாகும். இவற்றுக்கு இடையேயான தொடர்பைக் காட்டும் கூறு உருபன் எனப்படும். பொருளன்களுக்கிடையேயான உறவு பற்றி மனதில் ஏற்பட்டுள்ள எண்ணங்களை உருபன் வெளிப்படுத்துகிறது. கருத்தின் மெய்யான, புலனால் அறியக்கூடிய கூறு பொருளனென்றாகும். உருபன் என்பது பொதுவாக ஒரு ஒலிக்கூறாகும். (அது தனி ஒலியாகவோ அல்லது தனி அசையாகவோ அல்லது பல அசைகளின் கூட்டாகவோ இருக்கலாம்.) வாக்கியத்தில் உள்ள கருத்துக்களுக்கிடையேயான இலக்கண உறவுகளை அது குறிக்கிறது''.

இவற்றைச் 'சொல்' என்றழைப்பதன் மூலமாக, மொழியின் ஒட்டு நிலைத்தன்மையைத் தொல்காப்பியர் வற்புறுத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால்தான் வேரல்லா உருபன்கள் ஓரசை அல்லது ஈரசைச் சொற்களாக அவரால் தரப்பட்டுள்ளன. அவற்றின் வாய்பாடுகள் வருமாறு :

(மெய்) உயிர் (மெய்) அல்லது (மெய்) உயிர் (மெய்) மெய் உயிர்

இரட்டித்த மெய்களை அவர் சொல்வடிவங்களிலேயே தந்துள்ளார்.

சான்று : த்த்: என்பதை 'அத்து'[5] எனக் கூறுதல்
க்க்: என்பதை 'அக்கு'[6] எனக் கூறுதல்

---

3 தொல்காப்பியம், 938
''இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே''

4 J. Vendryes: *Language*, London, 1952, pp 73-74

5 தொல்காப்பியம், 125
''அத்தின் அகரம் அகரமுனை இல்லை''.

6 தொல்காப்பியம், 128
''எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய் மிசையொடுங் கெடுமே.
குற்றியலுகரம் முற்றத் தோன்றாது''

சொல்லமைப்பு முறையை வெளியிடத் தொல்காப்பியர் ஒரு முறையைக் கொண்டுள்ளார். எல்லா வேர்களையும் பொதுவாகக் குறிக்கச் 'செய்' என்னும் வேரை அவர் பயன்படுத்துகிறார். இத னுடன் தேவையான பிற ஒட்டுக்கள் சேர்க்கப்படுகின்றன. இவ்வாறு கிடைக்கும் வடிவங்கள் சொற் கட்டமைப்புக்களைக் குறிக்கும் வாய் பாடுகளாகின்றன.

சான்று

1 'செய்து'
(செய் + து) — வினையெச்ச வாய்பாடாகும்.

2 'செய்த'
(செய்து + அ) — இறந்தகாலப் பெயரெச்ச வாய்பாடாகும்.

3 'செய்யும்'
(செய் + ய் + உம்) — முக்காலத்துக்கும் ஒத்தவற்றைக் குறிக்கும் வாய்பாடாகும்.

தமிழ் ஒட்டுநிலை மொழி என்பதை இது தெளிவுபடுத்து கிறது. வேர் மொழி முதலில் வருகிறது. பிற்காலத்தவர் வேருக்கு 'முதல் நிலை' எனப்பெயரிட்டு வழங்கினர். 'இறுதி நிலை' அல்லது 'ஈறு' என்னும் சொல்லும் தொல்காப்பியத்தில் வருகிறது. சொல்லின் இறுதியில் உள்ள ஒட்டினை இது குறிக்கின்றது. 'இடைநிலை' இடை யில் உள்ள உருபனைக் குறிக்க வழங்கினும், காலம் காட்டும் இடை நிலைகளையே சிறப்பாகக் குறிக்கும் வகையில் இது மாறியுள்ளது.

1.1 வேர் உருபன்கள் (Root Morphemes)

தொல்காப்பியரின் கருத்துப்படி உரிச்சொல் என்பது, 'இசை' அல்லது 'பண்பு' அல்லது 'குறிப்பு' என்பதை உணர்த்தும். 'ஒரு பொருட் பன்மொழியாகச்' சில வேர்களும் 'பல பொருள் ஒரு சொல்லாகச்' சில வேர்களும் உள்ளன. தொல்காப்பியரின் கருத்துப் படி இவ்வேர்கள் வினையாகவும் வரலாம்; பெயராகவும் வரலாம்.[7] வினையையும் பெயரையும் உருபனியல் நிலையில் வேறுபடுத்தப் பலர் முயன்றாலும் அப்பாகுபாடு பெரிதும் தொடரியல் அடிப்படை யிலேயே அமைந்துள்ளது என்பதால் மேலே கூறப்பட்டதன் அடிப்

7 தொல்காப்பியம், 782

படை முக்கியத்துவம் தெரியவரும். அவர் சில வேர்களின் பொருளைத் தருகிறார்.[8]

வேர்களை அவர் தொழிற்பெயர் வடிவத்தில் தருகிறார். உருபுகளை நீக்க, வேர்கள் ஓரசையாகவோ ஈரசையாகவோ இருக்கும்.

அவற்றின் வாய்பாட்டு வடிவங்கள் வருமாறு :

1 ஓரசை வேர்கள் : "[மெய்] நெட்டுயிர் / குற்றுயிர் மெய்"

2 ஈரசை வேர்கள்: "[மெய்] நெட்டுயிர்/குற்றுயிர்மெய் நெட்டுயிர்/ குற்றுயிர் மெய்"

[இரண்டாவது அசையில் குற்றுயிர் வருமிடங்களே மிகுதி]

1. 2 வேரல்லா உருபன்கள் (Non-root Morphemes)

வேரல்லா உருபன்கள் அல்லது இடைச்சொற்களின் பட்டியலில் பின் வருவன அடங்கும்.[9]

1 காலம் காட்டும் இடைநிலைகள்
2 வேற்றுமை உருபுகள்
3 உவம உருபுகள்
4 அசைநிலை
5 இசைநிறை
6 தத்தம் குறிப்பாற் பொருள் உணர்த்துவன
7 சாரியை.

---

8 தொல்காப்பியம், 784 ஆவது நூற்பா முதல் 871 ஆவது நூற்பா முடிய

9 தொல்காப்பியம், 735

"அவைதாம்
புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதவுநவும்
வினைசெயல் மருங்கில் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய்குநவும் என்று
அப்பண் பினவே நுவலுங் காலை".

இவற்றுள் முதல் மூன்றும் விளக்காமலேயே விளங்குவனவாம்.

நான்காவதான 'அசைநிலைகள்' என்பவை சொல்லாக்கக் கூறுகளாகவும், பிந்து நிலைகளாகவும் (enclitics) வருவனவாகும். இடப்பெயர்களை எப்பொழுதாவது இவை குறிப்பால் உணர்த்து கின்றன. என்பதைத் தவிர இவற்றின் பொருள் இழக்கப்பட்டு விட்டன என்றே கொள்ள வேண்டும். இவை பழங்காலத்தில் ஒட்டுக்களாக இருந்திருக்க வேண்டும்.

தொல்காப்பியர் தந்துள்ள அசைநிலைகளின் பட்டியல் பின்வருமாறு :

அந்தில்	752*	
அரோ	764	
ஆங்க	762	
ஆகல்	765	
ஆர்	755	
இக	759	முன்னிலையில் வருகிறது.
இகும்	759	ஏவல் விகுதியாக வருகிறது.
என்பது	765	
ஏ	742	
கா	764	
குரை	757	
சின்	759	
மதி	759	ஏவலில் வருகிறது.
மற்று	747	
மாறு	764	
மா	758	வியங்கோளில் வருகிறது.
மியா	759	முன்னிலை ஏவலில் வருகிறது.
பிற	764	
யா	764	
பிறக்கு	764	
போ	764	

பின்வரும் அசைநிலைகள் தொல்காப்பியரால் ஆளப்பட்டுள்ளன :

ஆங்கு	108
ஆர்	371
ஆல்	168

---

* எண்கள் தொல்காப்பிய நூற்பாக்களைக் குறிப்பன

உம்	1012	
ஏ	1	
குரை	1092	
சின்	102	(தன்மை)
சின்	295	(படர்க்கை)
மற்று	1014	

'இசைநிறைகள்' என்பவையும் சொற்களுள் அமையும் இடைநிலைகளாகும். அவற்றின் பொருள் முழுவதும் இழக்கப்பட்டு விட்டதால், அவை இசைமைக்காகச் சொற்களின் நீட்சியுடைய மாற்று வடிவங்களாக வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் வழங்குகின்றன. 'அர்' எனும் இசைநிறை ''உள்ளினர் — அரோ ∝ உள்ளினரோ'' என்பதில் வருவதை நோக்குக. ''குரை'' என்னும் இசைநிறை ''சொல்லருங்குரைத்து'' என்பதில் வருவதை நோக்குக. பழங் காலத்துத் துணைவினைகளும், விகுதிகளுமாக இவை இருக்கலாம். பழங்காலத்து வடிவங்களை மீட்டுருவாக்க உதவும் மூலங்கள் இவைகளாகும்.

''தத்தம் குறிப்பிற் பொருள்'' செய்யும் இடைச்சொற்கள் என்பன வியப்படைச் சொற்கள் (Interjections) போல்வன ஆகும். இவை இக்காலத்தில் தொடரிசை (Intonation) மாற்றத்தால் உணர்த்தப்படுகின்றன. தொல்காப்பியர் வரிசைப்படுத்தும் 'தத்தம் குறிப்பிற் பொருள் செய்குந'' வருமாறு:

அந்தில்	752
அந்தோ	767
அம்ம	761
அன்றே	767
உம்	740
எல்	754
எற்று	748
என	734
என்று	744
ஏ	742
ஒடு	779
ஓ	741
ஔ	766
கொல்	753

கொன்	739
தஞ்சம்	751
தில்	738
நன்றே	884
மற்று	747
மற்றையது	749
மன்	737
மன்ற	750

ஏழாவதாகக் கூறப்பட்ட 'எற்று' என்பது, பிறிதோரிடத்தில் சாரியையாகக் கொள்ளப்படுகிறது.[10] இது தவிரப் பின்வரும் சாரியைகளைக் குறிப்பிடுகிறார் :

இன்
அற்று
அத்து
அம்
ஒன்
ஆன்
அக்கு
இக்கு
அன்

அவரே பின்வரும் சாரியைகளையும் தம் நூலில் கையாண்டுள்ளார் :

கெழு	48
உம்	48
உ	296
ஆ	299
ஏ	164

10 தொல்காப்பியம், 118, 119
"அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே"
"அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே".

சாரியைகள் ஒட்டுக்களேயாகும். அவை சொற்களிலும் தொகைகளிலும் இடையில் வருகின்றன. அதிலும் குறிப்பாகப் பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் பொழுதோ அல்லது கட்டாயமாக வேற்றுமை உருபுகளை ஏற்கவேண்டிய இடத்திலேயோ பெரும்பாலும் சாரியைகள் வருகின்றன தொல்காப்பியரின் கருத்துப்படிப் பொருளைப் புரிந்து கொள்ள (ஒருவேளை வேற்றுமை உருபுகளின் பொருளைப் புரிந்து கொள்ள) சாரியைகள் உதவுகின்றன.[11] சொற்களின் இறுதியில் வரும் ஒட்டுக்களாக இருந்திருக்கக் கூடிய சாரியைகள் தொகைகளில் மட்டும் நிலைத்திருக்க வேண்டும் அல்லது கால்டுவெல் விளக்குவது போல அவை பழைய வேற்றுமை உருபுகளாய் இருந்திருக்க வேண்டும்.[12] தொடர்ச்சியான வழக்காற்றின் பயனாகத் தமிழில் இடைச்சொற்கள் ஆற்றலிழக்கும் போக்கு உள்ளது; பின்னர் அவை வேறு புதிய இடைச்சொற்களால் வலுவேற்றப்படும். இதன் விளைவாக "இரட்டை விகுதிகள்" தோன்றுகின்றன. இந்நிலையில் மிகையாகிவிட்ட பழைய இடைச்சொல் சாரியை என்றழைக்கப்படுகிறது. சார் + இயை > சாரியை; "சார்" என்பது "சார்தல்" அல்லது "சார்ந்திருத்தல்" எனப் பொருள் படும். "இயை" என்பது "சேருதல்" அல்லது "சேர்த்தல்" எனப் பொருள்படும். எனவே "சாரியை" என்பது 'தன்னோடு சேர்ந்து வருவதைச் சார்ந்து நிற்பது' எனப் பொருள்படும்.

1.3 பெயர், வினை ஆகியவற்றுக்கிடையில் உள்ள வேறுபாடுகள்

வெறும் உருபனாக மட்டும் இல்லாத சொற்களைத் தொல்காப்பியர் பெயர் என்றும் வினை என்றும் பகுக்கிறார்.[13] வாக்கி

---

11 தொல்காப்பியம் 132

"பெயரும் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது
இடைநின் றியலும் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்".

12 R. Caldwell : *A Camparative Grammar of the Dravidian Languages,* p 259

13 தொல்காப்பியம், 643

"சொல்லெனப் படுப பெயரே வினை என்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே".

யத்தில் எழுவாயாக வருவது பெயராகும். அதனுடைய எல்லா வேற்றுமைத் திரிபுகளும் பெயர்ச் சொற்களாகும்.[14] வினைமுற்று பயனிலையாக வருகிறது. ஆனால் அதே வடிவம் எழுவாயாகவும் வரலாம்; அதேனுடு வேற்றுமை உருபுகள் சேர்க்கப்படலாம். "எழுந்தோனை"[15] என்ற சொல்லைத் தொல்காப்பியரே அங்ஙனம் பயன்படுத்தியுள்ளார். முதலில் வினையாக இருந்த 'எழுந்தோன்' என்னும் இச்சொல்லே பெயராகப் பயன்படுத்தப்பட்டு, இரண்டாம் வேற்றுமை உருபு சேர்க்கப்பட்டு வந்துள்ளது. பெயர்ச் சொல் எவ்வித மாற்றமுமின்றிப் பயனிலைக்கு எழுவாயாக வரும். பயனிலையாக வருவது பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்கும்:

1 பெயர்.

2 வினை; இதில் பின்வருவன அடங்கும்:

அ 'செயலை' இறப்பு, எதிர்வு அல்லது நிகழ்காலத்தில் வெளியிடுவது.

ஆ 'உண்டு' அல்லது 'இல்லை' என்பன போன்ற சொற்கள்.

இ 'யார்' என்பது போன்ற வினாச்சொற்கள்.

ஈ 'வாழ்க' என்பது போன்ற வியங்கோள் வினைகள்.

உ 'கரிது' என்பது போலப் பண்பைக் குறிக்கும் வேர்களிலிருந்து ஆக்கப்பட்ட சொற்கள்.[16]

சுருக்கமாகச் சொல்வதென்றால் பெயர்ச்சொல் என்பது எழுவாயாக வருவது; வேற்றுமை உருபுகளை ஏற்பது எனக் கூறலாம்.

---

14 தொல்காப்பியம், 549, 553

"அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே".
"கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப".

15 தொல்காப்பியம், 1006

16 தொல்காப்பியம், 550

"பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல் என்று
அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே".

வினை எனப்படுவது பயனிலையாகப் பயன்படுத்தப்படும் பொழுது வேற்றுமை உருபு ஏற்காது; குறிப்பாகவோ அல்லது வெளிப்படையாகவோ காலம் காட்டும்.[17] எனவே இரண்டு வகையான பயனிலைகள் அல்லது வினைகள் உள்ளன.

1 வெளிப்படையாகக் காலம் காட்டும் வினைகள். தொல்காப்பியரின் கருத்துப்படி இவையே உண்மையில் வினைகள். பிற்கால இலக்கண ஆசிரியர்கள் இவற்றைத் 'தெரிநிலை வினைகள்' என வழங்கினர்.

2 சூழல் காரணமாகக் குறிப்பாகக் காலம் உணர்த்துபவை 'குறிப்பு' என வழங்கப்பட்டன. 'குறிப்புவினை' என்பதன் சுருங்கிய வடிவமாக இது இருக்கலாம்.

பயனிலை ''தெரிநிலை வினையாக'' இல்லாத பொழுது தமிழ் வாக்கியங்கள் வெறும் எழுவாய், பயனிலையுடன் 'இருக்கிறது' என்பது போன்று பிறமொழிகளில்வரும் இணைப்புக்கள் (copula) இன்றி விளங்குகின்றன. 'இவன் இராமன்' என்ற வாக்கியத்தில் 'இருக்கிறான்' (is) என்பது இல்லை. சமஸ்கிருதத் தாக்கத்தின் விளைவாகத் தமிழில் புறநிலையில் இல்லாத இது இங்கு உள்ளடக்கமாக அல்லது ஆழ்நிலை இலக்கணத்தில் இருப்பதாகக் கொள்ளப்படுகிறது.

2. 0 வினை

2. 1 எச்சம்

வினைமுற்றுக்கள் பயனிலையாக இங்கும் வருகின்றன. இயல்பு வடிவத்தில் வினை எச்சங்கள் வினைமுற்றுக்களுக்கு அடையாக வருகின்றன. சில பெயர்களுக்கு அடையாகவோ பெயர் வேர்ச்சொற்களாகவோ வருகின்றன இவ்வாறு வருவன பெயரெச்சம் எனப்படும். முன்னரே விளக்கப்பட்டது போலப் பழைய பயனிலைகள் பின்னர் வினையெச்சங்களாக வருவதுண்டு. இவை தொடக்கத்தில் உம்மைத் தொடரமைப்பைத் (Co-ordinate Construction) தந்திருக்க வேண்டும். இன்றும் கூட இவ்வினையெச்சங்கள் அடுத்து வரும் இடங்களில், அவை 'உம்மைத் தொடரமைப்புக்களாகவே' உள்ளன. இவை ஒவ்வொன்றையும் ''வினைமுற்று + உம்'' என மொழி

---

17 தொல்காப்பியம், 638
''வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''.

பெயர்க்கலாம். எனவேதான் இவைகட்கு உம்மைப்பொருள் கொண்ட வினைஎச்சம் என்ற பெயர் 'இந்திய மொழிக்கணக்கீட்டில்' தரப்பெற்றுள்ளது. இன்று இவை வினைமுற்றுக்களின் அடைகளாவே கருதப்படுகின்றன. இவை தவிர வேறு வினையெச்ச வடிவங்களும் — செய, செயின் முதலான வாய்பாட்டு வினையெச்ச வடிவங்களும் — உள்ளன. இவற்றை வினையடை, வினை அடைத் தொடர்கள் எனலாம்.

2. 1. 1 பெயரெச்சம்

பெயரெச்சத்துக்கு இரு வாய்பாடுகள் உள்ளன.[18] ஒன்று 'செய்த' என்னும் பெயரெச்ச வாய்பாடாகும். இன்றும் இது இறந்த கால வாய்பாடாகவே உள்ளது. இது முன்னரே விளக்கப்பட்டது போலச் 'செய்து' என்னும் வினையெச்சமும் பெயரெச்ச விகுதியாகிய அகரமும் சேர்ந்தது. இந்த அகரம் உண்மையில் அடைத்தொடரைச் சுட்டும் பழைய இடைநிலையாகும். இது வேறிடங்களில் ஆறும் வேற்றுமை உருபாகப் பேசப்படுகிறது. தனிநிலைப் பெயர் (Primary noun) 'செய்த' என்பதே சரியான பெயரெச்ச வடிவமாகும். வேர்ச்சொற்களுடன் அகர விகுதியைச் சேர்த்தும் பெயரெச்சத்தைப் பெறலாம்.

சான்று: நல் + அ > நல்ல

இரண்டாவது வாய்பாடு 'செய்யும்' என்பதாகும். இது உண்மையில் பெயரெச்சமன்று. ஆனல், பெயரெச்சத்தினைப் போல பின்னர் வழங்கலானது. பழைய பயனிலையான இவ்வடிவம் பெயரடையாக இன்று பயன்படுத்தப்படுகிறது. ஒன்றையொன்று விசேடிப்பதாகத் தமிழில் இரு சொற்களை அடுத்தடுத்து வைக்கும் பொழுது முதலாவது சொல் இரண்டாவது சொல்லின் அடையாகிறது. பயனிலையானது 'பெயர்த்தன்மையாக' இருந்த பழங்காலத்தில் 'செய்யும்' என்பது பிறிதொரு பெயருக்கு முன்னுல் வந்த பொழுது அது பெயரடையாக மாறியிருக்க வேண்டும். பின்னர் விளக்கப்பட இருப்பது போல, தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் பயனிலைக்குப் பின்னர் எழுவாய் வந்தது என நம்பக் காரணமிருக்கிறது. எழுவாய்க்கு முன்னர் வந்த 'செய்யும்'

---

18 தொல்காப்பியம், 720

''அவற்றெடு வருவழிச் செய்யும் என்கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே''.

என்னும் பயனிலே, பிற்காலத்தில் — அதாவது தொல்காப்பியர் காலத்தில் — பெயரடை என விளக்கப்பட்டது. இவ்விடத்தில் இது வருவதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் இல்லே. 'செய்யும்' என்னும் வினைமுற்று நிகழ்காலத்தைக் குறிப்பாகக் குறிக்கிறது. ஆனல் தொல்காப்பியரே குறிப்பிடுவது போல, எக்காலத்திற்கும் பொது வான உண்மைகளைக் கூறுமிடங்களில் இவ்வினைமுற்று பயன்படுத் தப்படுகிறது.[19]

சான்று

'தீச் சுடும்'. பெயரெச்சம் என்ற முறையில் இது நிகழ் காலத்தையும், எதிர்காலத்தையும் உணர்த்தும். முன்னரே கூறியது போலத் தொல்காப்பியர் காலத்தில் நிகழ்காலம் காட்டும் உருபு எனத் தனியே எதுவும் கிடையாது. உண்மையில் 'இறந்த காலம்', 'இறப்பில்லாக் காலம்' என இரு வேறுபாடுகளே இருந்தன.

வினையெச்சம்

வினையெச்சங்கள் முக்கியமாக ஒன்பது வாய்பாடுகளில் வரு வனவாகும். அவற்றின் இலக்கணப் பொருள்கள் கீழே விளக்கப் பட்டுள்ளன.[20]

1	செய்+து	>	செய்து
2	செய்+ய்+ஊ	>	செய்யூ
3	செய்+பு	>	செய்பு
4	செய்+து+என	>	செய்தென
5	செய்+இ+அர்	>	செய்யியர்
6	செய்+இ+அ	>	செய்யிய
7	செய்+இன்	>	செயின்
8	செய்+அ	>	செய
9	செய்+அல்+கு	>	செயற்கு

19 தொல்காப்பியம், 725
"முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்".

20 தொல்காப்பியம், 713
"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி".

'செய்து, செய்யூ, செய்பு' ஆகிய மூன்று வாய்பாடுகளும் ஒரு பிரிவைச் சேர்ந்தவை. இவ் எச்சங்களின் காலம் அவை சார்ந்து வரும் வினைமுற்றின் காலத்தைப் பொறுத்தது [21] 'செய்' என்பது வேராகும். துகரம் இறந்த காலம் காட்டும் இடைநிலையாகும். 'வெடிப்பொலி + உகரம்' என்னும் வடிவத்தை இறந்தகால இடைநிலைகள் பெற்றுள்ளதாகப் பழைய இலக்கண ஆசிரியர்கள் பேசுவர். பின்வரும் உருபொலியன் விதியை அவர்கள் தருகின்றனர்:

உ[உயிர்] > — ϕ [உயிர்

இம்முறையே இங்கும் பின்பற்றப்பட்டுள்ளது. உயிர்கட்கு இடையில் உள்ள வெடிப்பொலி இழக்கப்படல் என்னும் போக்கு, 'செய்யூ' என்னும் வடிவத்திற்கு இடந்தருகிறது. வேரான 'செய்' என்பது பழைய 'செஇ' என்பதாகும். துகரம் தகரமெய்யை இழந்து உகரமாகிறது. இ + உ > ஊ, தொல்காப்பியருக்கு முற்பட்ட காலத் தமிழின் உருபொலியன் விதி ஒன்றின் விளைவே இதுவாகும்,

"குற்றுயிர்$_1$ / நெட்டுயிர்$_1$ + குற்றுயிர் / நெட்டுயிர்$_2$
> குற்றுயிர்$_2$ / நெட்டுயிர்$_2$ உயிர்$_2$ ல குற்றுயிர் /
நெட்டுயிர்^{2}"

"செய்யூ" என்பது இறந்தகாலம் காட்டுகிறது; வாக்கியத்தில் 'செய்து' என்பதற்கு உள்ளது போன்ற வருகை முறையே இதற்கும் உண்டு. இவற்றின் எழுவாய் வினைமுற்றினுடையதைப் போன்றதே ஆகும். "செய்தென" என்பதில் இரு சொற்கள் உள்ளன. செய்து + என > செய்தென. "செய்து" என்பது பழைய வினைமுற்றாகும். இக்காலவழக்கில் கூட "எனவே" என்பதில் உள்ள "என" என்பது "ஆகையால்" என்னும் பொருளுடையது. 'செய்தென" என்பதன் பொருள் "இது செய்யப்பட்டது ஆகையால் ..." என்பதாகும். "செய்து" என்பது பயனிலையே என்பது மறக்கப்பட்டு விட்டதாலும், இத்தொடர் முழுவதும் ஒரே சொல்லாக வழங்குவதாலும், தொடர்ந்து வரும் வினைச் சொல்லின் அடையாக இது ஆகிவிட்டது. எனவே இது வினையெச்சமாகக் கருதப்படலானது.

இது போன்ற தொகைகள் வேறு சிலவும் உள்ளன. தமிழில் இடத்தைக் குறிக்கும் சொற்கள் காலத்தையும் குறிக்கின்றன.

21 தொல்காப்பியம், 715
"அவற்றுள்
முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின".

சான்று : ''பின்''. பெயரெச்சங்களைப் 'பின், முன், கடை, கால், இடத்து' முதலான பெயர்ச்சொற்கள் தொடரும்பொழுது, அவை ஒரே தொகுதியாக நின்று, பிற மொழிகளில் காலங்கருதி வரும் வினையடைகள் எனப்படுவனவற்றைச் சுட்டும். அடைத்தொகையின் அடையையும் பெயரெச்சத்தையும் பெயரெச்சத்துக்கும் பெயருக்குமிடையே ஏற்படுத்தப் பெறும் இடையீடு வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆனால் முன்பு கூறியதுபோல வினையெச்சம் காலங் காட்டும் வினையடையாக வரும்பொழுது பெயரெச்சமானது காலங் காட்டும் சொல்லுடன் இடையீடின்றித் தொகையாகிவிடுகிறது. இப்படித் தொகையான தன்மை இரண்டாவது சொல்லின் மொழி முதல் வெடிப்பொலி இரட்டித்து வருவதால் சுட்டப்பெறுகிறது. சான்று: வந்த + கால் > வந்தக்கால். 'If' என்ற பொருளைக் குறித்ததான புதியதொரு சிறப்புத்தன்மை இங்குத் தோன்றுகிறது. கூறியபின் என்பதற்குக் ''கூறிய சமயத்தில்'' என்று மட்டும் பொருள்பட்டால் அது பெயரெச்சமும் பெயர்ச்சொல்லும் கூடியது என ஆகும். ஆனால் இதற்குக் ''கூறியதற்குப் பின்னால்'' அல்லது ''கூறியிருந்தால்'' எனப் பொருள் கொண்டால், இத்தொடர் வினையெச்சமாக முன் சொன்ன பெயரெச்சம்+பெயர் என்றல்லாமல் தொடராக ஒரு சொல் நீர்மைப்பட்டுவிடுகிறது. தமிழ் ஒட்டு நிலை மொழியாக இருப்பதால் இத்தகைய சொல்லாக்கங்கள் தமிழில் எளிமையாக அமைந்துவிடுகின்றன.

'செயற்கு' என்பதும் இத்தகையதொரு தொகையாகும். செயல் என்பதைத் தொழிற்பெயர் எனக் கொள்ளலாம். அல்லது பழைய பயனிலை என்றும் கொள்ளலாம். தொல்காப்பியர் காலத்தில் நான்காம் வேற்றுமை உருபாக ஏற்கப்பட்ட 'கு' என்னும் இடைச் சொல்லுடன் இது வருகிறது. 'செயற்கு' என்பது 'செய்யவேண்டும் என்னும் நோக்கத்திற்காக' எனப் பொருள்படும். 'கு' என்பதைத் தனி உறுப்பாகக் கொள்ளாது விடின், முழுச்சொல்லும் வினையெச்சமாக — சேனாவரையர் விளக்கியுள்ளது போல நோக்கத்தைக் காட்டும் வினையடையாக — வரும்[22].

'செயின்' என்பது 'செய்ய வேண்டுமாயின்' எனப் பொருள்படும். இதில் உள்ள 'இன்' என்பது 'இல்' என்பதன் பழைய மாற்றுவடிவமாக இருக்கலாம். மேலே விளக்கப்பட்ட 'வந்தக்கால்' என்பதைப் போன்ற அமைப்பு உடையதே 'செயின்' என்பதுமாகும் 'செயின்' என்பதின் வேரான 'செய்' என்பது 'வந்தக்கால்' என்ப

திலுள்ள 'வந்த' என்பதற்கு இணையானதாகும். 'வந்தக்கால்' என்பதிலுள்ள 'வந்த' என்பது, 'செய்' என்பதைப் போல வேர் என்ற நிலைக்கு குறைக்கப்பட்டுவிட்டதையும் விளக்க வேண்டும். துணை வினைகள் (Auxiliary verbs) எச்சங்களுடன் வருமாயின் பிந்தியன வேராகவே திகழும் என்பது முன்னரே விளக்கப்பட்டது. 'செயின்' என்பது நிபந்தனையாகவும் எதிர்காலம் காட்டுவதாகவும் மட்டுமே வரும். எனவே இறந்தகாலம் காட்டுவது நீங்கலாக ஏனைய பொருள்களுக்கும் வந்தக்கால் என்பது போன்ற வடிவங்கள் பயன்படலாயின. தமிழ்ச் சொற்களஞ்சியம் குறிப்பிடும் 9, 10, 11 12ஆவது வினைவிகற்பங்கள் 'செயின்' வாய்பாட்டில் வரும் பொழுது வேரானது 'பு + இன்' வருகின்றது. சான்று. 'நடப்பின்'.

'பு' என்பது சொல்லாக்க விகுதியாகும். பின்னர் இது பெயர்ச்சொல்லின் வினையாக்க விகுதியாக ஏற்கப்பட்டது. 'நடப்பு' என்பதன் ஏழாம் வேற்றுமை வடிவம் 'நடப்பின்' என்பதாகும். சேனாவரையர் சொல்லாக்க விகுதியாகப் புகரத்தை மட்டுமே குறிப்பிடுகிறார். ஆனால் 'செய்யும்' வாய்பாட்டில், வேர்கள் குகரத்தைச் சொல்லாக்க அசையாகப் பெறுகின்றன. சான்று: நடக்கின். குகரம் இடம் பெறும் வடிவங்களைச் சேனாவரையர் குறிப்பிடவில்லையாதலால் அவை கிளை மொழி மாற்றங்களாக இருந்திருக்க வேண்டும். அல்லது புகரத்தை விடக் குகரத்தின் வழக்காறு குறைவாக இருந்திருக்க வேண்டும். குகரத்தைப் போலப் புகரமும் சொல்லாக்க விகுதியே என்பதை இது காட்டும்.

'செய்பு' என்னும் வாய்பாட்டை அடுத்து ஆராயலாம். மேலே ஆராயப்பட்ட புகரச் சொல்லாக்க விகுதியுடன் கூடிய வேரின் வடிவத்தை இது ஒத்துள்ளது. இங்குப் புகர விகுதியானது வேர்களின் எல்லா வினைவிகற்பங்களிலும் வருகிறது. முன்னரே குறிப்பிடப்பட்டது போலப் புகரம் இறப்பு அல்லாத காலத்தைக் காட்டப் பயன்படுகிறது. புகரம் நிகழ்காலம் காட்டுவதாகச் சேனாவரையர் கொள்கிறார்.[23] 'இறப்பு அல்லாத காலம்' என்பது நிகழ்காலம் அல்லது எதிர்காலத்தைக் குறிக்குமாதலால் இங்குக் கூறப்பட்டதில் முரண்பாடு எதுவும் இல்லை.

பண்டைக் காலத்தில் வியங்கோல் வினை மூவிடங்களுக்கும் பொது வழக்காக இருந்ததை முன்னரே கண்டோம்.

22 தொல்காப்பியம், 235 ஆவது நூற்பா, சேனாவரையர் உரை
23 தொல்காப்பியம், 713

1. வாழல் ∝ வாழ
2. வாழியர் ∞ வாழிய ∞ வாழி

'வாழல்', 'வாழ' ஆகிய இரண்டையும் மாற்று வடிவங் களாகக் கொள்ளலாம். 'வாழ' என்பதில் 'வாழல்' என்பதிலுள்ள லகர மெய் இழக்கப்பட்டுள்ளது. 'வாழல்' என்பது இன்னும் பெயர்த்தன்மையதாக இருந்து வருகிறது. அதாவது தொழிற் பெயராக வருகிறது. கால்டுவெல் 'வாழ' என்பதைச் 'செய' என்னும் வினையெச்சம் என்கிறார்.[24] 'வாழ வேண்டும்' என்பது போன்ற தொடர்களில் 'வாழ' என்பது தொழிற் பெயராகவே இன்றும் உள்ளது. இங்கு 'வேண்டும்' என்னும் வினையின் எழுவாயாக 'வாழ' என்பது வருகிறது. பிற்காலத்தில் 'செய்யும்' எனும் வாய்பாட்டு வடிவம் தன்மைச் சொல்லுக்கேற்ற பயனிலை யாக வரமுடியாது. 'நான் வாழ வேண்டும்' என்பது போன்ற வாக் கியங்களில், 'நான்' என்பது 'வேண்டும்' என்பதன் எழுவாயாக இருக்க முடியாது; ஆனால் செய என்னும் வாய்பாட்டு வினையெச்ச மாகிய 'வாழ' என்பதே எழுவாயாக இருக்க முடியும். முன்னர் விளக்கப்பட்டது போலப் பழைய பயனிலை வினையெச்சமாவதால் 'வாழ' என்பதும் வினையெச்சமாகிறது. பிற்காலத்தில் இடச் சார்புக்கு ஏற்பச் 'செய' என்னும் வினையெச்சம் முக்காலங்களையும் உணர்த்திய பொழுதிலும், பழங்காலத்தில் அது அவ்வாறு உணர்த்த வில்லை. பிற்கால வழக்காற்றுச் சான்றுகள் வருமாறு:

"மழை பெய்ய நெல் விளைந்தது" — இறந்தகாலம்

"நெல் விளைய மழை பொழிந்தது" — எதிர்காலம்

"கோழி கூவப் பொழுது விடிந்தது" — நிகழ்காலம்

நோக்கத்தைக் (purposive) குறிக்கும் எதிர்காலத்தை இவ் வடிவம், பழங்காலத்தில் காட்டவில்லை. ஏனெனில் அதற்குச் 'செய்யிய' போன்ற வேறு வாய்பாடுகள் இருந்தன.

வியங்கோள் வினைக்குரிய பிற வடிவங்களாகப் பழங்காலத்தில் பொது வழக்காக இருந்த பயனிலைகளான "வாழி ∝ வாழிய ∞ வாழியர்" என்பன விளங்கின. இவை மாற்று வடிவங்களாகும். ஒன்றில் ரகரமெய் கெட்டுள்ளது. பிறிதொன்றில் அத்துடன் யகரமும்

24 R. Caldwell : *A Comparative Grammar of the Dravidian Languages*, p 535

மறைந்துள்ளது. 'வாழிய', 'வாழியர்' என்பன வினையெச்சங்களாக வருகின்றன. இகரம் பழைய சொல்லாக்க விகுதியாகலாம்.

சான்று :

'சிறிய' என்பதில் 'சிறி < சிறு — இ'
'பெரிய' என்பதில் 'பெரி < பெர் + இ'

'வாழியர்' என்பதில் உள்ள இசை நிறை எனக் கூறப்படும் 'அர்' விகுதி பழைய சொல்லாக்க விகுதியேயாகும்.

'மயர் > மய் ~ மஇ + அர்'
'அயர் > அய் ~ அஇ + அர்'

முதலியவற்றை நோக்குக. இங்கு 'அய்' என்பது 'அசை' என்பதிலுள்ள 'அச்' என்பதனோடு உறழ்ந்து வருகிறது. 'செய்யிய, செய்யியர்' முதலிய வியங்கோள் வினைகள் நோக்கத்தைக் குறிக்கும் எதிர்கால வினையெச்சங்களாக வளர்ச்சியுற்றன. இவற்றுள் 'செய்யிய' என்னும் வாய்பாடே, பிற்காலத்தது என்ற முறையில் வழக்கு மிகுதியுடையதாகும்.

தொல்காப்பியர் தாமே மிகுதியாக ஆளும் இறந்தகால விகுதியான இகரத்தை இறந்தகால விகுதி எனக் கூறுதிருப்பது வியப்பளிப்பதாக உள்ளது. சேனாவரையர் விளக்குவது போலத் தொல்காப்பியர் இறந்தகால உருபனுடன் அடக்கியிருக்கலாம்.[25] சில பழைய வடிவங்கள் நீங்கலாக ஏனையவற்றில் இகர உயிருக்குப் பின்னரே இந்த இகர விகுதி வருகிறது; இங்ஙனம் இகர விகுதியின் வருகை முறை ஒலிச்சூழல்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 'ற்', 'ட்' ஆகிய இறந்தகால விகுதிகளைத் தொல்காப்பியர் குறிப்பிடாததற்கும் இவ்விளக்கத்தையே தரவேண்டும். இவை இரண்டும் உருபொலியன் விதிகளின்படி தகரமெய்யின் மாற்றொலிகளேயாகும்.

ல்/ன்] த் > ற்
ள்/ண்] த் > ட்

எல்லாச் சொற்களும் தொல்காப்பியர் காட்டும் இலக்கிய மொழி வழக்கில் இறந்தகால விகுதியான இகரத்தைப் பெறுகின்றன எனலாம்.

உறு	+	இ	>	உறீஇ	(1025)
ஒரு	+	இ	>	ஒரீஇ	(884)
புகு	+	இ	>	புகீஇ	(1025)
கெழு	+	இ	>	கெழீஇ	(1061)

25 தொல்காப்பியம், 713 ஆவது நூற்பா, சேனாவரையர் உரை

இங்கெல்லாம் பின்வரும் உருபொலியன் விதி பின்பற்றப் படுகிறது எனலாம்.

'குற்றுயிர் / நெட்டுயிர்$_1$. + குற்றுயிர் / நெட்டுயிர்$_2$ > நெட்டுயிர்$_2$
குற்றுயிர்$_2$'

மொழியின் இடையில் இறந்தகால விகுதியான இகரம் 'இன்' எனவருகிறது. ஈற்றில் உள்ள னகரம்இழக்கப்படும் போக்கு உள்ளது.

கொண்டா மொழியில் (/ijin/) எனவரும் '/இசின்' (icin) இறந்தகால இடைநிலையாகவே ஒரே மாதிரி இங்குக் கருதப்படுகிறது. ஈருயிரிடைச் சகரமெய் இழக்கப்படுமானல் 'இஇன்' என்பது எஞ்சுவதைக் காணலாம். அப்பொழுது, உயிரொலி குறிலாகிறது. இதற்கான காரணங்கள் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. தமிழில் காணப்படுவது போன்ற 'இன்' என்னும் இறந்தகாலம் காட்டும் இடைநிலையை இது தரும். 'இசின்' என்பது தொல்காப்பியத்திலும் வருகிறது. இகரமானது தனி விகுதியாகக் கொள்ளப்பட்டதால், 'இசின்' என்பதைத் தொல்காப்பியர் 'சின்' எனக்கொள்கிறர். 'சின்' என்பதை அவர் முன்னிலை அசைநிலையாகக் கொள்கிறர். 'இசின்' என்பதிலுள்ள இகரத்தை முன்னிலை விகுதியாக அவர் கொள்கிறர் எனலாம்.[26] ஆனல் அவரே அதைத் தன்மைக்குப் பயன்படுத்துகிறர்.[27] ஆனல் இசின்' என்பதை 'இ + சின்' எனப் பிரிக்க முடியாது. இவ் அசை நிலைகளைப் பிற இடங்களிலும் பயன்படுத்தலாம் எனத் தொல்காப்பியரே கூறுகிறர்.[28] 'இசின்' என்பதன் இலக்கண முக்கியத்துவம் தொடக்கத்தில் எவ்வாறு இருந்தது என்பதை அறுதியிட்டு உரைப்பது கடினமாக உள்ளது.

26 தொல்காப்பியம், 759
"மியா இக மோ மதி இகும் சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்".

27 தொல்காப்பியர், 102
"...அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே".

28 தொல்காப்பியம், 760
"அவற்றுள்
இகுமும் சின்னும் ஏனை இடத்தொடுந்
தகுநிலை யுடைய என்மனர் புலவர்".

தொல்காப்பியர் சில பயனிலைகளைப் பெயர்ச்சொற்கள் என்றழைக்கிறார்.[29] தொல்காப்பியத்தில் 'குறிப்பு' என அழைக்கப் பெறும் காலக் கருத்துடைய வினைமுற்றுக்கள் சிலவும் உள்ளன. ஆக்கப் பெயர்களுக்கும் குறிப்பு' வினைகட்குமிடையே உள்ள வேறு பாட்டினை பின்வருமாறு சுட்டலாம். ஆக்கப்பெயர்களில் திணை பால் விகுதிகள் நேரடியாக வேர்ச்சொல்லுடனோ தொழிற் பெயர் வடிவத்துடனோ சேர்க்கப் பெறுகின்றன. குறிப்பு வினைகளில் இவ்விகுதிகள் பெயரெச்ச வடிவங்களோடு சேர்க்கப் பெறுகின்றன.

2. 2 வினைமுற்றுக்கள்

சான்று : நல் + அள் > நல்லள் (பெயர்)
நல்ல + அள் > நல்லாள் (குறிப்புவினை)

இவற்றுள் வகர உடம்படுமெய் இடம்பெற 'நல்லவள்' என்ற வடிவம் வந்தது. 'அவள்' என்னும் விகுதி ஒள் என வரும் பழைய வடிவம் ஒன்று உண்டு. சான்று : 'நல்லோள்'.[30] வகரஉடம்படு மெய்யுடன் கூடிய வடிவமும் வழக்கிலிருந்தது. சான்று : 'வழிபட்டவள்'.[31] ஆனால் இவ்வடிவம் உயர்திணைத் தொடர்பாக ஓரிடத்தில் மட்டுமே வருகிறது. 'ஓன்', 'ஓள்', 'ஓர்' என்பன மிகுதியாக இங்ஙனம் வருகின்றன. வினைமுற்றானது எழுவாயாகவோ அல்லது உருபேற்றோ வருமிடங்களில் வகர உடம்படுமெய் வருவது கல்லாடரால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.[32] இது தொல்காப்பியரால் 'தொழிற் பெயர்' எனவும்[33] நன்னூலாரால் 'வினையாலணையும் பெயர்' எனவும்[34] அழைக்கப்படுகிறது. இவ்வாறே பெயரெச்ச

---

29 தொல்காப்பியம், 550

'பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல் என்று
அன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே''.

30 தொல்காப்பியம், 1025

31 தொல்காப்பியம், 1179

32 71 ஆவது நூற்பா (ஏட்டுச்சுவடி)

33 தொல்காப்பியம், 624

''தொழிற்பெய ராயின் ஓகாரம் வருதலும்
வழுககின்று என்மனார் வயங்கியோரே''.

34 நன்னூல், 286

''வினையின் பெயரே படர்க்கை வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும்''.

விகுதியான அகரமும் முன்னிலை விகுதியான 'அய்' என்பதும் சேர 'ஆய் > ஓய்' என்ற வடிவம் கிடைக்கிறது. இங்ஙனம் 'அ+அர்' (பலர்பால்விகுதி) '>ஆர்>ஓர்' வருகிறது. இது பெயர்களுக்கும் வினைகளுக்கும் பொருந்தும். இது நிகழ்ந்த பிறகு 'அன்', 'அள்' முதலிய விகுதிகள் அவற்றுக்கு முன்னர் அகரம் வரவில்லையாயினும், 'ஓன்', 'ஓள்' ஒப்புமையாக்கத்தால் மாறுகின்றன. தொல்காப்பியரே 'கிழவோன்',[35] 'கிழவோள்'[36] முதலிய வடிவங்களைப் பயன்படுத்து கிறார். பழைய விதியின்படி 'கிழ+அன் >கிழா அன் ~ கிழவன் என ஆகும். ஆனால் கிழவோன் என்னும் வடிவம் வருவதில்லை.

வினையையும் பெயரையும் வேறுபடுத்திக் காண்பது கடின மானது. ஆனால் ஓகாரமான விகுதியுடன் வரும் வினைவடிவங்களை வினையாலணையும் பெயரெனக் கொள்ளலாம்.

பெயர்ப்பதிலி விகுதிகள் பின்வருமாறு :

	ஒருமை	பன்மை
தன்மை[37]	கு ~ டு ~ து ~ று	கும் ~ டும் ~ தும் ~ றும்
	அன் ~ ஆன்	அம் ~ ஆம்
	என் ~ ஏன்	எம் ~ ஏம்
	அல்	

---

35 தொல்காப்பியம், 1063

36 தொல்காப்பியம், 1093

37 தொல்காப்பியம், 687, 688

"அவைதாம்,
அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்
அந்நாற் கிளவியோடு ஆயென் கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே".

"கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு
என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்கும் தன்மைச் சொல்லே".

முன்னிலை[38]	இ ∞ ஐ ∝ ஆய்	இர் ∞ ஈர்
		மின்

உயர்திணை

படர்க்கை[39]	ஆண்பால்	பெண்பால்	பலர்பால்
	அன் ∝ ஆன்	அள் ∞ ஆள்	அர் ∝ ஆர்
			ப
			மார்

அஃறிணை

ஒருமை	பன்மை
று ∾ டு ∞ து	அ்ன அ, ஆ
	வ*.

தன்மையிலும் முன்னிலையிலும் ஒருமையும் பன்மையும் மட்டுமே உள்ளன. முன்னரே குறிப்பிட்டது போலப் படர்க்கையில் உயர்திணை, அஃறிணைப் பாகுபாடு அமையக் காணலாம்.

---

38 தொல்காப்பியம், 708, 709

"அவற்றுள்,
முன்னிலைக் கிளவி
இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்".
"இர் ஈர் மின் என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர்".

39 தொல்காப்பியம், 690, 691, 702, 701, 490

"அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கில் படர்க்கைச் சொல்லே".
"அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கின் படர்க்கைச் சொல்லே".
"ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி யாகும்".
"அ ஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை".
"ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே".

* வகரம் உண்மையில் இரட்டைப் பன்மையாகும், வ் + அ.

உயர்திணை ஒருமை, பன்மை என இரு பிரிவுகளை உடையது. ஒருமை என்பது ஆண்பாலாகவோ பெண்பாலாகவோ இருக்கலாம். ஆனால் உயர்திணைப் பன்மையில் ஒரு பிரிவு மட்டுமே உண்டு. இங்கு ஆண்பால், பெண்பால் என்னும் பாகுபாடு இல்லை. அஃறிணையில் ஒருமை, பன்மையென இரு பாகுபாடுகளே உள்ளன. இங்கு இவை இரண்டிலும் பால் பாகுபாடு இல்லை. இப்பாகுபாடுகள் விகுதிகளால் குறிக்கப்படுகின்றன. அவை வினையில்தான் வெளிப்படையாக இருக்கும். இவ்வேறுபாடுகளைக் காட்டாத பழைய தனிநிலைப் பெயர்கள் உள்ளன. சான்று: நீர், வில்.

சொற்கள்

- தன்மை
  - ஒருமை
  - பன்மை
- முன்னிலை
  - ஒருமை
  - பன்மை
- படர்க்கை
  - உயர்திணை
    - ஒருமை
      - ஆண்பால்
      - பெண்பால்
    - பன்மை
  - அஃறிணை
    - ஒருமை
    - பன்மை

இருவகையான வடிவங்களை உடைய விகுதிகள் உள்ளன. 1. நெடிலுயிரை முதலாக உடையன. 2. குறிலுயிரை முதலாக உடையன குறிலுயிரே தொடக்கத்திலிருந்தது என்றும் நெடிலுயிர் சந்தியின் விளைவென்றும் இங்குக் கொள்கிறோம். எதிர்மறை வினை விகுதிகளின் உயிர், அவற்றுக்கு முன் வரும் எதிர்மறை விகுதிகளால் நெடிலாக்கப்படுவதால், நெடிலாக விளங்குகிறது என்னும் கால்டுவெல்லின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் இவ்வாறு கொள்கிறோம்.

சான்று :

செய் + அ + அன் > செய்யான்
செய் + அ + என் > செய்யேன் (தன்மை)
செய் + அ + அய் > செய்யாய் (முன்னிலை)
செய்த + அன் / அள் / அர் > செய்தான்; செய்தாள்.
(பெயரெச்சம்) செய்தார்.

தொல்காப்பியர் காலத்திலிருந்து இலக்கண ஆசிரியர்கள் நெடிலோடு கூடிய விகுதிகளையும் குற்றுயிருடைய விகுதிகளையும் மாற்றுருபுகளாகக் கருதி வந்துள்ளனர். இவை உம்மைப் பொருள் கொண்ட எச்சத்தின் (Stem) அடியுடன் சேர்க்கப்படுகின்றன. குற்றுயிர் விகுதிகள் வருமிடங்களை வரையறுக்க முயலும் சேனாவரையர், 'அன்' விகுதிக்குப் பின்னர் அவை வரும் என்கிறார்.[40] அவர் அதைக் 'கால வெழுத்து' என்றழைக்கிறார். அவருடைய கருத்து 'நல்லன்' என்பது போன்ற வடிவங்களுக்கு ஏற்புடைத்தன்று. ஏனெனில் இங்கு அன் விகுதி, மேலே கூறியவாறு இடம் பெறவில்லை. குற்றுயிர் உள்ள விகுதியையே பழைய வடிவம் என நாம் விளக்குகிறோம். குற்றுயிருக்கு முன்னர் அகர உருபு வருவதால், குற்றுயிர் நெட்டுயிராகிறது. சான்று: 'செய்தான்' (இங்கு அகர உருபு பெயரெச்ச விகுதியாகும்). இவ்வாறாகக் குற்றுயிருடன் வரும் விகுதிகளும் நெட்டுயிருடன் வரும் விகுதிகளும் வேறுபடுத்தப்படுகின்றன. பெயர்ச்சொல்லும் வினையாலணையும் பெயரும் கூட இவ்வாறே வேறுபடுத்தப்படுகின்றன என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

எதிர்கால வினைமுற்று வடிவங்களைப் பொறுத்த வரையில் ஒரு சிக்கல் உள்ளது. ஏனெனில் தமிழில் 'திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகளைச் சேர்த்து நீண்ட சொல் வடிவங்களைத் தரத்தக்க'எதிர்காலத்திற்கேயுரிய பெயரெச்ச வடிவங்கள் இல்லை. தமிழில் உள்ள 'செய்வ' அல்லது 'செய்ப' என்பதற்கு இணையான கெய்வ[41] எனும் வாய்பாட்டு எதிர்காலப் பெயரெச்சம் கன்னடத்தில் காணப்படுகிறது. ஆன், ஆள், ஆர் ஆகிய ஈற்றுருபுகளைப் பெற்றுள்ள எதிர்கால வினைமுற்றுக்களில் பாதுகாக்கப் பெற்றிருந்தாலும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே இது தனித்து வழங்கும் வடிவமாக இல்லாது போயிருக்க வேண்டும். சான்று : செய்வ + அன் > செய்வான். இம்முடிவைச் சரிபார்க்க வேறொரு வழியும் உண்டு; பெயரெச்சம் என்பது வினையெச்சத்துடன் அகர விகுதி சேர்க்கப்பட்டு அமைந்ததேயாகும் எனக் கொண்டோம். 'செய்ப ∝ செய்வ' என்பதைப் பழைய பெயரெச்ச வடிவம் எனக் கொண்டால் இவ்வடிவங்களில் ஈற்று அகரத்தை நீக்கிய நிலையில் வினையெச்சம் வரப்பெறுதல் வேண்டும். நாம் முன்னரே விளக்கியபடி

---

40 தொல்காப்பியம், 687 ஆவது நூற்பா, சேனாவரையர் உரை

41 R. Caldwell : *A Comparative Grammar of the Dravidian Languages*, p 522

யும் தொல்காப்பியர் கருத்துப்படியும் இம்முறையில் 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தை நாம் பெறுகிறோம்.

அ. பெயர்ப்பதிலி விகுதிகள் பெறாத வடிவங்கள்

பழைய வடிவங்கள் சில தொல்காப்பியர் காலத்தில் தொடர்ந்து வழக்கிலிருந்தன.

தன்மை

ஒருமை		பன்மை	
விகுதி	வடிவம்	விகுதி	வடிவம்
கு	செய்கு	கும்	செய்கும்
து	செய்து	தும்	செய்தும்
டு	உண்டு	டும்	உண்டும்
று	சேறு	றும்	சேறும்
இசின்	நுவன்றிசின்		

சேனாவரையத்தின் அடிப்படையில் இவை தரப்பட்டுள்ளன.[42]

நன்னூலில் 'உண்டு, உண்டும், வந்து, வந்தும், சென்று, சென்றும்' ஆகியன இறந்தகாலத்தனவாகக் குறிக்கப்படுகின்றன. 'சேறு, சேறும், வருது, வருதும்' ஆகியன எதிர்காலத்தனவாகக் குறிக்கப்படுகின்றன.[43] சேனாவரையருக்கும் நன்னூலாருக்கும் இடையே உள்ள இக்கருத்து வேறுபாடானது முதலில் இவை காலம் காட்டாதவைகளாக இருந்து பின்னர்க் காலங்காட்டும் இயல்பினைப் பெறலாயின என்ற கொள்கைக்கே ஆக்கந்தருகிறது.

முன்னிலை

தமிழில் வேர்ச்சொற்களே ஏவல் வினைகளாக விளங்குகின்றன. தொல்காப்பியரால் வெளிப்படையாகக் கூறப்படவில்லையாயினும் பழைய பயனிலை வடிவங்கள் ஏவல் வினையாகவும் வழங்கியிருக்க

---

42 தொல்காப்பியம், 688ஆவது நூற்பா, சேனாவரையர் உரை

43 நன்னூல், 145

"றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவுந்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே".

வேண்டும் என முடிவு கட்டலாம். முன்னிலை அசைநிலையான 'இக' என்பது இன்றும் இலங்கைத் தமிழில் வழங்கும் 'சொல்லிக' என்ற சொல்லில் காணப்படுகிறது. முன்னிலை அசை நிலையான 'மியா, மோ' என்பவற்றில் உள்ள மகர மெய் பன்மை காட்டும் பழைய உருபாகலாம். 'மியா' என்பதிலுள்ள மகரத்தை நீக்கினால் எஞ்சியுள்ள 'இயா' என்பது, 'இக' என்பதன் மாற்று வடிவமாக இருக்கலாம். 'இக' என்பதிலுள்ள உயிரிடை மெய்யான 'க்' இழக்கப்பட்டு 'இயா' வந்திருக்கலாம். மேலும் மகர மெய்யுடன் முடியும் 'இகும்' என்னும் அசைநிலையும் உண்டு. 'இகும்' என்பதை 'இசின்' என்பதோடு இணைத்துப் பார்க்கலாமெனத் தோன்றுகிறது. கடையண்ணக் ககர மெய்யை அடுத்து இகரம் வராத நிலையில், அது இடையண்ண ஒலியாதல் இல்லை; ஆதலால் இரண்டையும் இணைத்துக் காண்பதில் இடையூறு ஏற்படுகிறது. இதே இடையூறு வேறு பல வடிவங்களை இணைத்துக் கூறுவதிலும் உள்ளது. சான்றாகக் 'குருள்', 'சுருள்' என்னும் வடிவங்களைக் காட்டலாம். மதி என்னும் அசைநிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட விகுதிகள் உள்ளன. மதி —> ம் (பன்மை விகுதி) + அ (சொல்லாக்க விகுதி) + து (சொல்லாக்க விகுதி) + இ (முன்னிலை விகுதி). வியங்கோள் வினையின் அசைநிலை 'மோ' (ம்+ஓ) என்பதாகும். இவற்றிலெல்லாம் உள்ள மகர மெய் பிறழ்பிரிப்பின் விளைவேயாகும்.

சான்று : காண்+ம்+ஓ > காண்ம்+ஓ > காண்+மோ

படர்க்கை

தொல்காப்பியத்தில் பேணப்பட்டுள்ள பழைய வடிவங்கள் பின்வரும் நிலையையே புலப்படுத்துகின்றன. தொடக்கத்தில் ஒருமை னகரத்துக்கும் பன்மை மகரத்துக்கும் இடையில் மட்டுமே வேறுபாடு இருந்திருக்க வேண்டும். ம்/ன் என்ற வேற்றுநிலைவழக்கு மறைவினால் கிடைக்கும் வடிவம்—ம். 'செய்ப' என்பது 'வாழ்க' என்பதைப் போல எல்லா இடங்களுக்கும் எண்களுக்கும் பொதுவானதாகக் குகரச்சொல்லாக்க விகுதிக்குப் பதிலாகப் புகரச் சொல்லாக்க விகுதி பெற்று வழங்கி இருக்க வேண்டும்.

- **உயர் திணை**
  - **ஒருமை**
    - **ஆண்பால்**
      செய்யும்
      *செய்யுன்
    - **பெண்பால்**
      செய்யும்
      *செய்யுன்
  - **பன்மை**
    செய்ப
    (தொடக்கத்தில் எல்லா இடங்களுக்கும் எண்களுக்கும் பொதுவாக இருந்தது)
    *செய்யும்

- அஃறிணை
  - ஒருமை
    செய்யும்
    *செய்யுன்
  - பன்மை
    செய்யும்

ஆ. பிற்காலப் பெயர்ப்பதிலி விகுதிகளைக் கொண்டுள்ள பழைய வடிவங்கள்

பழைய வடிவங்களுடன் திணை, பால், இடம் காட்டும் விகுதிகளைச் சேர்த்துப் புதிய வடிவங்கள் வளர்ச்சியுற்றன. பின்னர்க் காலங் காட்டும் கருத்துக்கள் இவற்றிற்குக் கொள்ளப்பட்டன. பிற வினைவிகற்ப வடிவங்களிலிருந்து இவை மாறுபட்டவை. வளர்ச்சியுற்ற வடிவங்கள் இரு வகைப்படும் :

1 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வடிவத்திலிருந்து வந்தவை.

2 'செய்து' என்னும் வாய்ப்பாட்டு வடிவத்திலிருந்து வந்தவை. '— இசின்' வடிவங்கள் இதன் உட்பிரிவாகும்.

இவ்வளர்ச்சிப் போக்கு ஏவல் வினைக்கும் விரிவுபடுத்தப்பட்டது; செய் > செய்யாய்.

இசின்: நுவன்றிசி.[44] சங்க இலக்கியங்களில் இது போன்ற வடிவங்கள் பல உண்டு.[45]

---

44 தொல்காப்பியம், 102

45 A. Sadasivam : "The Suffix cin in Caṅkam Tamil", *Tamil Culture,* Vol. VII, 1958, pp 140-150

முன்னிலை :

செய்தி ~ செய்தீ (934)
செய்மோ (934)
செய் ~ செய்யாய் (983)
செய்தி (நீ செய்கிறாய் / நீ செய்தாய்)

'சின்' என்பதைத் தொல்காப்பியர் முன்னிலை அசை நிலை எனக் குறிப்பிடுவதால்,[46] 'நின்றிசின்' என்பதில் உள்ள 'நின்றி' போன்ற வடிவங்கள் முன்னிலை முற்றான 'செய்தி' என்னும் வாய்பாட்டினவான முன்னிலை முற்றுக்கள் எனக் கொள்ளப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஏவல் வினை 'இசின்' என்னும் அசைநிலையையும் பெற்று வருவதுண்டு. சான்று : 'கண்டிசின்'[47].

படர்க்கை:

வினைமுற்றுக்களும் 'இசின்' பெற்று வருவதுண்டு.

ஆண்பால்	பெண்பால்	அஃறிணை
சென்றிசின்[48]	பெற்றிசின்[49]	போன்றிசின்[50]

இசினுக்குப் பின் பெயர்ப்பதிலி விகுதிகள் வருகின்றன.

ஆண்பால்	:	புகழ்ந்திசினோன்[51]
பெண்பால்	:	பிரிந்திசினோள்[52]
பலர்பால்	:	கண்டிசினோர்[53]

'செய்யும்' என்னும் வடிவமும் பெயர்ப்பதிலி விகுதிகளுடன் வருகிறது:

46 தொல்காப்பியம், 759
"மியா இக மோ மதி இகும் சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்".
47 அகநானூறு, 99 ஆவது பாடல்
48 நற்றிணை, 394
49 புறநானூறு, 58
50 நற்றிணை, 240
51 அகநானூறு, 210
52 கலித்தொகை, 336
53 ஐங்குறுநூறு, 85

செய்யும் ∞ செய்ம் + அன் + ஆர் > செய்மனூர்.
செய்யும் ∞ செய்ம் + அர் > செய்மர்.
செய்யும் ∞ செய்ம் + ஆர் > செய்மார் > செய்மோர்.

பிற திணைப் பால்களுக்கும் இதைப் போன்ற வடிவங்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் பின்கண்ட வடிவங்கள் மட்டுமே கிடைக்கின்றன : உணருமோர் (193). கீழ் கண்டவை 'செய்யுந்' வடிவத்தின் அடிப்படையாகத் தோன்றியவை.

ஆண்பால்	:	செய்யுந் + அன்
பெண்பால்	:	செய்யுந் + அள்
பலர்பால்	:	செய்யிந் + அர்
ஒன்றன்பால்	:	செய்யுந் + து
பலவின்பால்	:	செய்யுந் + அ

ஆனால் பின்கண்ட வடிவங்கள் மட்டுமே தொல்காப்பியத்தில் வருகின்றன.

பலர்பால்	:	அறிநர்	(1447)
பலவின்பால்	:	தகுந	(1177)

'செய்யும்' என்பதன் மாற்று வடிவமாகத் தொல்காப்பியர் 'செய்யுந்து' என்பதைக்கொள்கிறார் [777].ஆனால் அதை 'செய்யுந்து' எனக் கொள்ளவும் இடம் இருக்கிறது.

தனிநிலைப் பெயர்களுடன் விகுதிகள் சேர்க்கப்பட்ட நிலையில், அவை பெயர்களின் கட்டுகளைக் குறிக்கின்றன. ஒப்புமையாக்கத் தாலும் பொதுநிலைப்படுத்தலாலும் இடப்பெயர் விகுதிகள், இடப்பெயர்ப்பதிலிகளின் கட்டு வடிவங்கள் அல்லது வேற்றுமை உருபு ஏற்கத் திரிந்த வடிவங்களோடு ஒத்தன ஆயின. இந்நிலையில் இடப் பெயர் விகுதிகளுக்கு அல்லது பெயர்ப் பதிலிகளுக்கு முன்னர் வருவன எல்லாம் தனித்து வழங்கும் அல்லது கட்டு வடிவ அடையாக இருக்கவேண்டும். பால் முதலியன காட்டும் விகுதிகள் சேர்க்கப்பட்ட தனித்து வழங்கும் வடிவங்களே பெயரெச்சங் களாகும்.

கட்டு வடிவங்களைப் பொறுத்த வரையில் தமிழில் இரு மாறு பட்ட முறைகளில் அடைச்சொற்கள் அமைகின்றன. தொகைச் சொற்களில் உள்ளது போலப் பெயர்ச் சொல்லோ அல்லது அதனது வேரோ 'முன் பின்னாக' அமைவதைப் பொறுத்து அவற்றில்

ஒன்று அடையாகிறது. அடை அமைப்பைத் தெளிவுபடுத்த சில இடைச்சொற்கள் பயன்படுத்தப்படும் பிறிதொரு முறையும் உண்டு. இவ்விடைச்சொற்கள் சாரியைகள் எனப்படும். சான்று: 'மெய் + அளபு > மெய்யின் அளபு'.[54] இங்கு 'இன்' என்பது சாரியையாகும். ஒழுக்கம் + களவு > ஒழுக்கத்துக்களவு.[55] இங்கு அத்து என்பது சாரியையாகும். அடையும் எழுவாயின் கட்டுவடிவமும் சேர்ந்து அமைந்தவை வினைமுற்று வடிவங்கள் ஆகும்; இங்ஙனம் அவை அடை அமைப்புகளுக்குச் சான்றுகளாகின்றன. அவை சாரியையுடன் வரலாம்; சாரியையின்றியும் வரலாம்.

சான்று :

மரபு + இன் + து > மரபிற்று	(1011)	இங்கு 'இன்' என்பது சாரியை	
மரபு + இன் + அ > மரபின	(594)	,,	
மேல் + து > மேற்று	(1224)	இங்கு சாரியை இடம் பெறவில்லை.	

வேற்றுமை ஏற்கத் திரிந்த வடிவங்களோடு பெயரெச்ச விகுதிகளைச் சேர்க்கலாம். இதன் விளைவாகக் கிடைக்கும் வடிவத்தோடு பெயர்ப்பதிலி விகுதிகள் சேர்க்கப்படுகின்றன.

சான்று :

புறம் + அத்து > புறத்து + அ > புறத்த + அன் >
*புறத்தான் > புறத்தோன்.[56]
கழல் + இன் > கழலின் + அ > கழலின + அன் >
*கழலினன் > கழலினோன்.[57]

பழைய வடிவங்களுடன் அல்லது அவற்றின் பெயரெச்ச வடிவங்களுடன் பால் விகுதிகள் நேரடியாகச் சேர்க்கப்படுகின்றன.

என்னும் > என்ம் + அர் என்மர் (சாரியையில்லாமல்)

பெயர்த்தன்மையது எனக் கருதப் பெறும் பெயரெச்சத்துடன் அல்லது 'செய்யும்' என்னும் முற்றுடன், பால் விகுதிகள் சேர்க்கப்படுகின்றன.

---

54 தொல்காப்பியம், 11
55 தொல்காப்பியம், 1092
56 தொல்காப்பியம், 1013
57 அகநானூறு, 76, 77

செய்யும் + அன் + அ + அர் > * செய்யுமார் > செய்யுமோர்
செய்யும் + அன் + அ > செய்யுமன

இங்கு இடம் பெறும் **'அன்'** என்பதை நன்கு விளக்க வேண்டியுள்ளது. இது சாரியை எனப்படும். பழைய வேற்றுமை யுருபான இது பிற்காலத்தில் வேற்றுமையுருபேற்கும் வடிவங்களில் மிகுதியும் காணப்படுகிறது. பெயர்த்தன்மையதான அடி சாரியையைப்பெற்று, பின்னர் இறுதி விகுதியைப்பெறுகின்றது.

வந்த் + அன் + அன் > வந்தனன்.

மொழி இறுதி னகர மெய் இழக்கப்படுவதால் **'வந்தன்'** என்பது 'வந்த' என்றாகிறது. தெலுங்கில் பெயரெச்சத்தில் உள்ள மூக்கொலி புணர்ச்சியினால் தோன்றியது எனத் தவறாகக் கருதப் படுகிறது.

சான்று : 'nilpinan dharmamu', "நிறுவிய தர்மம்".

இங்ஙனம் பெயரெச்ச விகுதியான அகரம் தனது மாற்று வடிவம் என்ற முறையில் 'அன்' என்பதுடன் தொடர்புள்ளது. பழைய பெயர்த்தன்மையுடைய சொற்களான 'வந்து' போன்றவற்றின் வேற்றுமை உருபேற்கத் திரிந்த வடிவமே பெயரெச்சம் எனக் கருதலாம்.

3.0 பெயர்கள்

3.1 பெயர்ப்பதிலிகள் (Pronouns)

தன்மை

	ஒருமை	பன்மை
எழுவாய் வேற்றுமை	யான் (192)	யாம்(182)/நாம் (188)
உருபேற்கத் திரிந்த வடிவம்	என் (192)	எம் / நம் (190)

முன்னிலை

எழுவாய் வேற்றுமை	நீ (179)	நீயிர் (659) / நீவிர் (628)
உருபேற்கத் திரிந்த வடிவம்	நின் (179)	நும் (162)

படர்க்கை எழுவாய் வேற்றுமை	தான் (192)	தாம் (188)
உருபேற்கத் திரிந்த வடிவம்	தன் (973)	தம் (1111)

தம், நம், நும் ஆகியவை சாரியைகளாகவும் பயன்படுத்தப் படுகின்றன (191); தான் (1012), தாம் (2) ஆகியன 'ஒன்றை வலியுறுத்திக் கூறப்' பயன்படுகின்றன.

3. 2 எண்ணுப் பெயர்கள்

எண்ணுப் பெயர்களில் தனித்து வழங்கும் வடிவங்களும் உள்ளன; தனித்து வழங்காத கட்டு வடிவங்களும் உள்ளன. அவை கீழே தரப்பட்டுள்ளன. தனித்து வழங்கும் வடிவங்கள் விகுதிகளுடன் வருகின்றன. அவை அஃறிணைகளாகும்.

தனித்து வழங்கும் வடிவம்		தனித்து வழங்காத வடிவம் (அடையாக வருவது)
ஒன்று	(108)	ஒரு (1017) ∝ ஓர் ∾ ஓர் (43)
இரண்டு	(85)	இரு (75) ∾ ஈர் (17)
மூன்று	(440)	மூ (5) ∾ மு (2)
நான்கு	(63)	நால் (1196) ∾ நான் (81)
ஐந்து	(3)	ஐ (1307)
ஆறு	(92)	அறு (103)
ஏழு	(4)	எழு (1322) ஏழ்
எட்டு	(740)	எண் — (83)
ஒன்பது	(713)	ஒன்பதிற்று— (170)
ஒன்பான்	(437)	
ஒன்பஃது	(1358)	
தொண்டு	(1358)	
பத்து	(199)	பதின் (1009)
பஃது	(445)	பான் (1407)
பதினொன்று	(78)	பதின் ஓர் [493]

58 Jules Bloch : *The Grammatical Structure of Dravidian Languages*, p 61

பன்னிரண்டு	(1050)	பன்ன்-ஈ-[8] பன்ன்-இரு-(883)	
பதின்மூன்று	(1009)		
பதினைந்து	(647)		
பதினேழ்	(1307)		
		பதின் - [எண்] [9]	
இருபஃது	(103)	முப்பத் - [இரு-]	[1598]
முப்பஃது	(1)	முப்பத்தின் - [ஒருமூன்று]	[1092]
நூறு	(438)	முப்பதிற்று	[103]
ஆயிரம்	(391)	ஆயிரத்து	[317]
நூறுயிரம்	(471)		
ஆம்பல்	(393)		
தாமரை	(393)		
வெள்ளம்	(393)		

எண் அடைப் பெயர்கள் (Ordinals)

முதல் [1]

ஆக்க வடிவங்கள்

பண்புப்பெயர்	ஆண்பால்	பெண்பால்	பலர்பால்
ஒருமை [527]	ஒருவன் [666]	ஒருத்தி [695]	ஒருவர் [667]
இரட்டை (531)			நால்வர்

தொல்காப்பியத்தில் இடம்பெறும் தொகைகள் இரு பெரும் பிரிவுகளைச் சார்ந்தவையாகும்.[59] (1) வேற்றுமைத் தொகைகள் முதற்சொல் இரண்டு முதல் ஏழு முடிய உள்ள வேற்றுமைகளில் ஏதாவது ஒன்றில் வருவதாகக் கொள்ளலாம். எழுவாய் வேற்று மையும், விளி வேற்றுமையும் தொகைகளை உருவாக்க முடியாது. (2) அல்வழித்தொகைகள். இவை ஐந்து வகைப்படும். அவை வருமாறு:[60]

---

59 தொல்காப்பியம், 112

வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை.

60 தொல்காப்பியம், 895

வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

i	உம்மைத் தொகை	எ-டு	'இராப்பகல்'
ii	உவமத் தொகை		'மதிமுகம்'
iii	பண்புத் தொகை		'செங்குதிரை'
iv	வினைத் தொகை		'கொல்யானை'
v	அன்மொழித் தொகை		'மதிமுகம்'

அன்மொழித் தொகை என்பது குறிப்புப் பொருள் தருவ தாகும். எனவே அதைப் பொருளனியலின் கீழ் ஆராய வேண்டும். உம்மைத் தொகை மட்டுமே இணை நிலைத் தொடராக விளங்குகிறது. எஞ்சிய அனைத்தும் அடைத் தொடர்களாகும்.

'வேற்றுமைத் தொகை' என்ற பெயர் பிற்கால வளர்ச்சியினை யொட்டி ஏற்பட்டதாம். வேற்றுமைத் தொகை அடைத் தொடரே யாகும். பண்புத்தொகையில் முதற்சொல் வேராக அமைகிறது. வேற்றுமைத் தொகையில் எப்பெயர்ச் சொல்லும் வேராக இருக் கலாம். உவமைத் தொகை இரண்டாம் வேற்றுமைத் தொகையே யாகும். இலக்கியத்துள் இதுபெறும் இதனது சிறப்புக் கருதியே இது தனியே குறிப்பிடப்படுகிறது.

இணை நிலைத் தொடரான உம்மைத்தொகையைத் தனியாகப் பிரித்துவிட்டால் பிற தொகைகளையெல்லாம் பயனிலைத் தொடருக்கு மாறான அடைத்தொடர் என்ற ஒரே பிரிவில் அடக்கிவிடலாம். பயனிலைத் தொடரில் எழுவாய்க்குப் பிறகு ஒரு இடையீடும் பய னிலைக்குப் பிறகு ஒரு வாக்கிய இடையீடும் உள்ளன.

பெரும்பாலான சமயங்களில் பெயர்களுக்கும் வினைகளுக்கும் இடையே வேறுபாடு இல்லாதிருப்பதால் 'நனி' என்பது போன்ற அடைகள் இரண்டிற்கும் பொதுவாக வருவதைக் காணலாம்.

சான்று : நனி தின்றான்
நனி பேதை

ஆனால் பிற்காலத்தில் பெயர்களுக்கும் வினைகளுக்கும் இடையே வேறுபாடுகள் நிலைபெற்று விட்டதால், பெயர் அடை யும் வினை அடையும் தனி வளர்ச்சி பெற்று முறையே பெயரெச்சம், வினையெச்சம் என்றாயின. வேர்கள், — தொழிற்பெயர் வேர்கள் உட்பட — 'கொல்யானை' என்பதில் உள்ளது போலப் பெயர்களுக்கு அடையாகவே வருகின்றன. இவ்வாறு வருவன வினைத்தொகை எனப்படும். பிறவிடங்களில் தொகையின் முதலில் பெயர்ச்சொல்

இடம்பெற, இங்கு முதற்சொல் வினைவேராக இருப்பதைக் காண்க. **சான்று :** 'அருநிலை'. இவை பண்புத்தொகையுமாகும். இவற்றின் முதற்சொற்கள் பெயர் எச்சங்களாக வளர்ச்சியுற்று, தனித்த வடிவங்களாக வழங்குகின்றன.

சான்று : கொன்ற யானை
அரிய நிலை

சில வேர்கள் வினையடைகளாக வருவது சங்ககாலத்திலும் உண்டு.

சான்று : வரி + புனை + பந்து > வரிப்புனைபந்து

'வரி' என்பது 'வரிந்து' என வினையெச்சமாக வளர்ச்சியுறுகிறது. 'புனை' என்பது 'புனைந்து + அ' என வளர்ச்சியுற்றுப் பெயரெச்சமாகிறது. 'வரிப்புனைபந்து' என்னும் அமைப்பானது 'வரிந்து புனைந்த பந்து' எனத் தொடராக மாறிவிடுகிறது; ஆனாலும் தொகைக்குரிய பொருளிலேயே அது வழங்குகிறது.

'தலை, இடை, கடை' என்பன போன்ற பெயர்கள் 'படு' என்பது போன்ற வினைவேர்களுக்கு முன் ஒட்டாகின்றன.

சான்று : தலைப்படு
இடைப்படு
கடைப்படு

தொல்காப்பியத்தில் இத்தொகைகள் ஏனோ வேறுபடுத்தப்படவில்லை. தொகைகள் பெயர்களால் அமைந்தவை எனச் சிலர் கூறுவர். பெயர்களும் வினைகளும் சேர்ந்து தொகைகளாவதாகச் சேனாவரையர் பேசுகிறார்.[61]

3. 3 தொகைகள் இருசொற்களாக

இரண்டாவது சொல்லின் முதல் வெடிப்பொலி இரட்டிப்பதன் மூலம் தொகைகள் உணர்த்தப்படுகின்றன. நெடில் வெடிப்பொலியுடன் முடியும் வடிவங்களுக்கும் குறில் வெடிப்பொலியுடன் முடியும் வடிவங்களுக்கும் இடையே வட்டார வழக்கு மாற்றங்கள் உண்டு என்பதை முன்னரே கண்டோம். தொகைகளில் தனித்து வழங்கும் வடிவங்களிலிருந்து தனித்து வழங்காதவற்றை வேறுபடுத்த இவை பின்னர் பயன்பட்டன.

---

61 தொல்காப்பியம், 551 ஆவது நூற்பா,
சேனாவரையர் உரை

சான்று :

தனித்து வழங்காதவை	தனித்து வழங்குவன
இருப்பு (வேலி)	இரும்பு
மருத்து (-ப்-பை)	மருந்து
யாட்டு (-க்-கால்)	யாடு

சில வடிவங்கள் '(அ) த்து' என்பது போன்ற இடைச்சொற்களைப் பெறுகின்றன.

மரம் + (அ) த்து > மரத்து

மேலே கூறப்பட்ட சான்றுகளைப் பொதுமைப்படுத்திக் காண்கையில் 'மரத்து' என்னும் கட்டுவடிவத்தின் தனித்து வழங்கும் வடிவம் *மரது என்றாகும். ஆனால் இச்சொல் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே வழக்கிழந்து விட்டது. 'மரம், மரன்' ஆகிய சொற்களே ஆட்சியில் உள்ளன. ஆரம்பத்தில் மகர ஈறு பன்மையைக் குறித்ததால் ஒருமையில் வேற்றுமை உருபேற்கையில் அது பயன்படுத்தப்படவில்லை. னகர மெய்யிறுதி சாரியையின்றி வேற்றுமை உருபேற்கிறது. 'மரம்' என்பதற்கு மாறாக 'மரது' என்பதே வேற்றுமையுருபேற்கப் பயன்படுததப்பட்டது. 'மரம்' என்பதனோடு பன்மைக்குரிய 'கள்' விகுதி பெற்ற பிற்கால வடிவம் திரிபேதுமின்றி வழங்கப்பட்டது. எனவே உருபுகளோடு கூடிய பிற்கால வடிவங்கள் உண்மையில் பழைய கட்டு வடிவங்களாகும். தனி வளர்ச்சியுற்ற இடைச் சொற்களை அவை வேற்றுமையுருபுகளாகப் பெற்றிருந்தன. தொடக்கத்தில் பன்மையில் ரகர மெய்யீறு இருந்திருக்க வேண்டும். இன்று கூட முன்னிலைப்பன்மை பெயர்ப் பதிலியில் அவ்வாறு உள்ளது ('நீவிர்'). பிற்காலத்தில் ரகர மெய்யீறு பலர்பாலைக் குறிப்பதாக வளர்ச்சியுற்றது (அவர்). இவ்வளர்ச்சி நிலைக்கு முன்னர் ரகர மெய்யீறு மிகுதியும் வரும் துகர விகுதியுடன் சேர்ந்து றுகரமானது. பிற்காலத்திய வடிவமாகிய 'அவை' என்பதற்குப்பதில் 'அவறு' என்பது பன்மை காட்டப் பயன்பட்டிருக்கலாம். ஆனால் இது 'அவற்று' என தனித்து வழங்காத வடிவமாக வழக்கில் உள்ளது. தமிழில் 'அவற்று' என்பது அஃறிணைப்பன்மைக்கு மட்டுமே வழங்குகிறது.

ஆ. முதற் சொல்லின் முடிபாகச் சாரியை வருதல்

அடைத்தொடர்கள் என்பதைக் குறிக்க வரும் இடைச்சொற்கள் அல்லது உருபுகள் (markers) இடம் பெறும் தொகைகளை இது

போலவே விளக்கலாம். 'குன்றம்' என்பது 'குன்று' எனவும் வழங்குகின்றது. இவை இரண்டும் தனித்து (Free forms) வழங்கு கின்றன. தனித்து வழங்கும் வடிவங்களில் 'அம்' என்பதைச் சாரியையாகக் கொள்வதற்குப் பதிலாக (இதனை விளக்குவது கடினம்) தொடக்கத்தில் காணப்பெற்ற ஈறு பின்னர் மறைந்தது எனக் கொள்ளலாம். இதைப் போலவே 'பான்' என்பதில் வரும் 'அன்' என்பதை, பழைய மாற்று வடிவமாகக் கொள்ளலாம். இங்கு துகரத்திற்குப் பதில் -த்த்- வருகிறது. 'இன்' என்பதற்கும் இவ் விளக்கம் பொருந்தும். இவ்வாறாக சாரியைகள் பலவற்றைத் தொகைகளின் முதற்சொற்களின் பழைய ஈறுகளாகக் கருதலாம். 'கெழு, தம், நம், நும்' முதலியன முழுச்சொற்களேயாகும். அவை பழைய இயல்பை இழந்து சாரியையாக வழங்குகின்றன. அகரச் சாரியை என்பது 'அம' என்பதன் மாற்று வடிவமாகும். வெடிப் பொலிகளுக்குப் பின்னர் கட்டாயமாயும் பிறமெய்களுக்குப் பின்னர் அவ்வாறன்றியும் உகரம் வரும்; உகர இசைநிறைக்க வந்த உயிரே யன்றி உண்மையில் சாரியையன்று. ஏகாரத்திற்கு 'உம்'(and என்ற)மைப் பொருளும் உண்டு.

சான்று : ஒன்றேகால்

இ. தொகையே; உருபுதொகுதலன்று

வேற்றுமைத் தொகைகள் எனக் குறிப்பிடப்பட்டவை அடைத்தொடர்களின் கீழ் வருகின்றன. சேனாவரையர் விளக்குவது போல இத்தொகைகள் வேற்றுமையுருபுகள் தொகுதலைச் சுட்டிக் காட்டவில்லை.[62] தொகைகளின் சிறப்புப் பொருளைக் குறிக்கப் பின்னர் வேற்றுமையுருபுகள் வெளித்தோன்றுகின்றன. 'ஒருமைப் பாடு' (synthesis) என்பதிலிருந்து 'பாகுபாடு' (analysis) என்பதை நோக்கிய மாற்றம் என இதை விளக்கலாம். மொழி வளர்ச்சி யுறுவதற்குரிய ஒரே வழி இது என்றோ அல்லது இம்முறை எப் பொழுதும் வளர்ச்சியையே குறிப்பிடுகிறதென்றோ ஜெஸ்பெர்சன் கொள்வது போல இங்குக் கொள்ளவில்லை.[63] வேற்றுமைத் தொடர் களில் வரும் இடைச்சொற்களின் மிகுந்து வழங்கும் வடிவங்கள் பின்னர் பல்வேறு வேற்றுமை உருபுகளாக வளர்ச்சியுற்றன.

---

62 தொல்காப்பியம், 896 ஆவது நூற்பா, சேனாவரையர் உரை.

63 Jesperson : *Language*, p 334

4. 0 வேற்றுமைத் தொகைகளும் வேற்றுமை உருபுகளின் வரலாறும்

பயனிலைத் தொடரில் எழுவாய் வேற்றுமை வருகிறது. வேற்றுமை உருபேற்ற வடிவங்களில் சில பெயர்ச்சொற்களுக்கு அடையாகவும் வேறு சில வினைச்சொற்களுக்கு அடையாகவும் வருகின்றன. ஆறும் வேற்றுமை உண்மையில் அடைத்தொகையின் விரிவேயாகும். ஆறும் வேற்றுமை ஏழாம் வேற்றுமைப் பொருளையும் உடையதாக இருக்கலாம்.

சான்று :

மரக்கிளை < மரத்தினது கிளை / மரத்தின் கிளை

திசையையோ, நோக்கத்தையோ காட்டத் தொடங்கிய நான்காம் வேற்றுமை உருபு ஒரு பெயர்ச்சொல்லின் அடையாக இருந்திருக்கக் கூடும்.

சான்று:

புணர்நிலைக்கு (110)
உரை அசைக்கிளவிக்கு (34)

ஐந்தாம் வேற்றுமை தொடக்கத்தில் 'அதனிற்பெரிது' என்ற வாய்பாட்டில் அமைந்து ஒப்புமைப் பொருளில் வந்த ஒன்றும். இங்குப் பயனிலையாக அமைவது குறிப்பு வினை அல்லது வினைத்தன்மை பெற்ற பெயராகும். 'நீங்கற் பொருளைக்' குறிக்கும் ஐந் தாம் வேற்றுமையும் ஒரு தொகையாகவே முதலில் தொடங்கியது.

சான்று : மலை வீழருவி ('மலையினின்றும் வீழும் அருவி')

கருவிப் பொருள் வேற்றுமையும் (மூன்றும் வேற்றுமை) அடைத்தொடர் ஒன்றின் விரிவாகவே இருக்க முடியும்.

சான்று :

பொன் + வளை > பொன்வளை = பொன்னால் செய்த வளை
வாள் + வெட்டு > வாள்வெட்டு = வாளால் வெட்டிய வெட்டு

ஒட்டுநிலை மொழிகளில் ஆக்கச் சொற்களும் உண்மையில் பழைய தொகைகளேயாகும். அவற்றில் பல அடைத்தொடர் என்பதை நன்கு காட்டி நிற்கும். தொல்காப்பியர் பெயர்ச் சொல் வேர்களிலிருந்து பிறந்த வியங்கோள் வினைகளை அடைத்தொடர் மூலம் விளக்குகிறார். ஆறும், ஏழாம் வேற்றுமைகளின் சிறப்பை

முக்கியமாக உணர்த்தவே இங்ஙனம் அவர் செய்கிறார். ஆறும், ஏழாம் வேற்றுமைகளே அடைத் தொடர்களின் பழைய பொருள்கள் எனக் கால்டுவெல் விளக்குகிறார்.

4.1 ஆறும் வேற்றுமை அ ல அது ல இன்

பழைய விகுதியான 'அன் ல அ' என்பது ஆறும் வேற்றுமையைக் குறித்துப் பின்னர்ப் பெயரெச்சத்தைக் குறிக்கப்பயன்படலாயிற்று. ஆனால் இந்த அகரமானது ஆறும் வேற்றுமை உருபாகப் பிற்காலத்தில் ஒப்புக் கொள்ளப்படவில்லை. அப்பொருளை வலியுறுத்த 'கு' எனும் விகுதி சேர்க்கப் பெற்றது. பழைய வடிவமான 'என' என்பதையும் 'எனக்குமகன்'என்ற பிற்காலத்திய வழக்கையும் நோக்குக. இங்கு 'அக்கு' என்பது உண்மையில் 'அ +கு' என்பதேயாகும். இரட்டை வேற்றுமை உருபுகளுக்கு இது ஒரு சான்றாகும். பலவின் பால் விகுதியான அகரமும் இந்த அகரமும் ஒன்றென மயக்கம் ஏற்பட்டது. பின்னர் ஒப்புமையாக்கமாக அஃறிணை ஒருமையான 'அது' என்பது ஆறும் வேற்றுமை உருபாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது துகரத்தில் முடியும் பழைய சொல் வடிவங்களின் விளைவாகும். சான்று : தொகைளின் முதல் உறுப்பாக வரும் *மரபு. அஃறிணை விகுதிகள் பற்றிய மயக்கத்தின் விளைவாக அகர உருபைத் தொடர்ந்து பலவின்பால் சொற்கள் வரவேண்டும் என்றும், 'அது' உருபை அடுத்து ஒன்றன்பாற் சொற்கள் வரவேண்டும் என்றும் மரபேற்பட்டது. ஆனால் தொல்காப்பியர் இவ்வாறு குறிப்பிடுக் கூறவில்லை உயர் திணையைக் குறிக்கும் சொல் தொடரும் பொழுது குகரமே ஆறும் வேற்றுமை உருபாக இருக்க வேண்டும் என அவர் கூறுவதிலிருந்து முன்னர்க் கூறப்பட்ட கருத்தே அவர் மனத்தில் இருந்திருக்க வேண்டும் என முடிவு கூறலாம். 'அது' என்பதை அஃறிணை விகுதியுடன் சேர்த்து மயங்கியதின் விளைவாக 'அது' என்னும் ஆறும் வேற்றுமை உருபு பெற்ற 'அவனது' போன்ற சொற்களுடன் மீண்டும் வேற்றுமை உருபைச் சேர்க்க வேண்டும் எனக்கருதப்பட்டது. சான்று : 'அவனதை'. தொல்காப்பியத்திலேயே இதற்குச் சான்று காட்டலாம். சிவஞான சுவாமிகள் விளக்குவது போல, 'அது' என்பதில் முடிந்து பிறவேற்றுமை உருபுகளை ஏற்கும் சொற்கள் உண்மையில் அஃறிணைச் சொற்களே ஆகும். அவை ஆறும் வேற்றுமை ஆகமாட்டா. இந்த அகரமானது உயர்திணைச் சொற்களிலும் வருகிறது; ஆனால்

இவற்றைப் பழமையைப் போற்றும் இலக்கண ஆசிரியர்கள் பெயரெச்சங்கள் என விளக்கிவிடுவர். 'அது' என்பது சங்க இலக்கியத்தில் மிகவும் அருகியே காணப்படுகின்றது. தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் இதைப் பயன்படுத்தவில்லை, பொருளதிகாரத்தில் மட்டும் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் பொருளதிகாரம் மற்ற இரண்டு அதிகாரங்களைப் போலப் பழமையானதாக இல்லாமல் இருக்கக்கூடும்.

4. 2. கு

நான்காம் வேற்றுமை உருபான குகரம் வடக்கு போன்ற திசையைக் காட்டும் சொற்களிலிருந்து பிரிக்கப்பட்டு வேற்றுமை உருபாக வளர்ச்சியுற்றிருக்கலாம். குகரம் ஆறும் வேற்றுமைப் பொருளும் ஏழாம் வேற்றுமைப் பொருளும் உடையது. இவற்றிலிருந்து மற்றைய பொருள்களும் வளர்ச்சியுற்றன. குகரத்தைத் தொடர்ந்து உயர்திணை வரும்பொழுது, அது இன்றுகூட ஆறும் வேற்றுமைக்குரிய பொருளைத் தருகிறது. சான்று: 'எனக்கு மகன்'' தொல்காப்பியர் இதைக் குறித்துள்ளார்.

ஆனால் 'வடக்கு' முதலான திசைச் சொற்களில் உள்ளது போல, குகர விகுதிக்கு ஏழாம் வேற்றுமைப் பொருளும் இருப்பதைக் குறிப்பிடவேண்டும். 'நாளைக்கு', 'வருகிற ஆண்டுக்குப் பார்த்துக் கொள்ளலாம்', 'ஆடிக்கு ஆடி' போன்ற காலம் குறித்து வரும் சொற்களில் குகரம் உள்ளது. தொல்கால்பியர் காலத்தில் பழையமரபுத் தொடரொன்றில் இவ்வழக்கு விளங்கக் காணலாம். 'ஆடிக்குக் கொண்டான்' என்பது அத்தொடராகும். தொல்காப்பியர் காலத்தில் குகரம், நான்காம் வேற்றுமை உருபாகி விட்டதால், அவர் இத்தொடரில் உள்ள குகரத்தைச் சாரியை என்று விளக்குகிறார். சங்க இலக்கியங்களிலும் இவ்வழக்கு உண்டு. இது காலங்காட்டும் சொற்களோடு மட்டும் அடங்குவதில்லை. 'நாணல் கிழங்கு மணற்கு ஈன்ற முளை' என்பதில் குகரம் உறுதியாக ஏழாம் வேற்றுமைப் பொருளைய தருகிறது எனலாம். ஏழாம் வேற்றுமை உருபான 'இல்' வருவதற்குப் பதிலாக, வேறு வேற்றுமை உருபான குகரம் மாறி வருகிறது என இலக்கண ஆசிரியர்கள் இதை விளக்குவர். இங்ஙனம் வேற்றுமை உருபுகள் பல மாறுபட்ட பொருள்களில் வரும் தன்மை 'வேற்றுமை மயக்கம்' என்றழைக்கப்படுகிறது. இது காலம் செல்லச் செல்ல வெவ்வேறு இடைச் சொற்களும் வேற்றுமை

உருபுகளாக வளர்ச்சியுற்றன என்ற நமது கொள்கையை உறுதிப் படுத்துகிறது.

நான்காம் வேற்றுமை குகரத்தால் பொதுவாகக் குறிக்கப் பெறும். தொல்காப்பியர் காலத்தில் குகரம் நான்காம் வேற்றுமை உருபாக முழு வளர்ச்சியுற்றிருக்கவில்லை. அது ஒரு வகையான உரிமை, வரையறை, எல்லை, முடிவு அல்லது குறிக்கோள் ஆகிய வற்றைக் காட்டிற்று. இவ்வாறு இது பொருள் பெறுதற்குரியானைக் குறிக்கும் பொழுது — அதாவது துணைச் செயப்படுபொருளைக் குறிக்கும் பொழுது -- நான்காம் வேற்றுமையாக வளர்ச்சியுறுகிறது. தொல்காப்பியத்திலும், சங்ககாலத்திலும் இதுவொன்றே அதனுடைய முக்கியத்துவம் எனக் கருதிவிடக் கூடாது. ஆறும், ஏழாம் வேற்றுமைப் பொருள்களையும் அது கொண்டிருந்தது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

ஏழாம் வேற்றுமை இன்றியமையாத் தன்மையாலும் பல் வேறு இயல்புகளை உடைய தன்மையாலும் ஆரம்பத்திலேயே பல பின் ஒட்டுக்களைத் தோற்றுவித்தது. அவை அனைத்தும் வேற்றுமை உருபுகள் என்றழைக்கப்படுகின்றன. ஆனால் உண்மையில் அவை யெல்லாம் ஏழாம் வேற்றுமையின் பல்வேறு தன்மைகளின், இடவகைகளின் பெயர்களேயாகும். 'பின், முன், மாடு' என்பன அவற்றில் சில. இச் சொற்களையே வேற்றுமை உருபுகள் எனக் கருதினாலும், அவற்றின் வேற்றுமை உருபேற்கும் வடிவங்களும் வழங்குவதைக் காணவேண்டும். 'செருவகத்து' என்பதிலுள்ள ஏழாம் வேற்றுமை உருபான 'அகம்' என்பதும் உருபேற்கும் வடிவத்தைப் பெறுகிறது. எனவே 'அகம்' முதலானவை வேற்றுமை உருபுகளன்று; அவை பெயர்ச்சொற்களே என்பதை இது காட்டு கிறது. 'அவண், நடுவண்' போன்ற சொற்களிலுள்ள 'அண்' என்னும் இடைச்சொல் 'அந்த இடம்' என்பதைக் குறிக்கிறது. யூல்ஸ்பிளாக் கருத்துப்படி 'அண்' என்பது குகரத்துடன் சேர்ந்து (கு + அண்) தொல்காப்பியர் குறிப்பிடும் ஏழாம் வேற்றுமையின் பழைய உருபான 'கண்' என்பதைத் தருகிறது. இரட்டை வேற்றுமை உருபு களுக்கு இது பிறிதொரு சான்றாகும்.

4. 2. இன்

ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' என்பதாகும் பின்னர் இது 'இல்' என்பதோடு மயங்கியது. கால்டுவெல் சுட்டிக் காட்டியபடி

ஐந்தாம் வேற்றுமை ஏழாம் வேற்றுமையாலும் குறிக்கப்படுகிறது. ஆனால் இயல்பு நிலையைக் குறிக்கும் வினையன்றி இயக்கத்தைக் குறிக்கும் வினை வரும்பொழுது மட்டுமே இங்ஙனம் நிகழ்கிறது. ஆனால் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் 'இன்' என்பது ஒப்புமைப் பொருள் தரும் வேற்றுமை உருபாக விளங்குகிறது. பின்னர் ஐந்தாம் வேற்றுமையை 'நீங்கற் பொருளைக்' குறிக்கும் வண்ணம் தனியே விடுத்து 'ஒப்புமைப் பொருள் தரும் இடைச் சொல்லாக 'இன்' வளர்ச்சியுற்றது. 'ஒப்புமைப் பொருள் தரும்' வேற்றுமை உருபாக இருந்தது. பின்னர் தரப் பொருண்மை கொண்ட ஒப்புமையாக வளர்ச்சியுற்றது. இதை வேறொரு நோக்கில் பார்க்கையில் வரையறை, எல்லை, புடை பெயரும் நிகழ்ச்சிக்கான தொடக்க இயக்கம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். இவ்வாறாக இவ்வுருபு 'நீங்கற் பொருளோடும்', தவறாக வைத்தெண்ணப்பட்டது.

4. 3 ஆன்

மூன்றாம் வேற்றுமை உருபாக வளர்ச்சியுற்ற 'ஆன்' ஆரம்பத்தில் 'அவ்விடம்' என்னும் பொருளைக் குறிக்கும் சொல்லாக இருந்தது (717).

'ஆன்' என்பது இடப் பொருளைத் தவிர ஏனைய பொருள்களைப் பெற்று வளர்ச்சியுற்றது. எனவே இது இடப்பொருள் வேற்றுமையாக வரும்பொழுது, இதைச் சாரியையாகவே தொல்காப்பியர் கருதுகிறார். சான்று : 'பரணியாற் கொண்டான்.' இங்கு இட வேற்றுமைப் பொருள் தெளிவாக உள்ளது. பின்னர் 'ஆன்' என்பது கருவி வேற்றுமைப் பொருளைப் பெறத் தொடங்கியது. செயல் எக்குறிப்பிட்ட நிலையில் நடந்தது என்பதைக் குறிக்க அது அவ்வாறு மாறியிருக்கக் கூடும், சான்று : 'வாளான் வெட்டினான்.' ஆங்கிலத்திலுள்ள 'with' என்பது கருவிப் பொருளும் உடனிகழ்ச்சிப் பொருளும் பெற்றுள்ளமையை ஒப்பு நோக்கலாம்.

சான்று : He came with him
He came with a sword
He cut it with his sword.

தமிழில் ஒருவன் கருவியோடு வருவது என்பது அவன் அதைப் பயன்படுத்துவதையும் குறிக்கும். சான்று: 'வாளோடு சண்டை செய்தான்'. இவ்வாக்கியத்தில் கருவிப்பொருளும் உடனி

கழ்ச்சிப் பொருளும் உள்ளன. 'பேனாவும் கையுமாய் எப்பொழுதும் எழுதிக்கொண்டிருக்கிறான்' என்ற தற்கால மரபுத் தொடரையும் இங்கு ஒப்பு நோக்கலாம். இதுவும் கருவிப் பொருளையும் உடனிகழ்ச்சிப் பொருளையும் உடையதாகும். இம்மரபுத் தொடரானது தொல்காப்பியம் சங்க இலக்கியம் ஆகியவற்றின் அளவுக்குப் பழமை உடையது.

சான்று : 'ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்'.
'தூங்கு கையான் ஓங்கு நடைய'.

கருவி வேற்றுமை 'ஆன்' உடனிகழ்ச்சி வேற்றுமை 'ஓடு' ஆகியவற்றுக்கான நெருக்கமான உறவை இது புலப்படுத்தும். ஓர் உருபு மற்றொன்றிற்காகப் பயன்படுத்தப்படுகிறது; உண்மையில் இவ்வுருபுகள் ஒவ்வொன்றும் இரண்டு வேற்றுமைகளின் பொருளையும் உணர்த்தத் தொடங்கின. 'ஆன்' என்பது 'காரணப்' பொருண்மையையும் குறிக்கின்றது.

சான்று : 'மண்ணான் ஆகிய குடம்'

இங்கு 'ஆன்' உருபு மண் எனும் காரண (கருவி)ச் சொல்லோடு சேர்க்கப்பட்டுள்ளது.

4. 4. ஐ

செயப்படு பொருள் வேற்றுமை அல்லது இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' அஃறிணைச் சொற்களுடன் அருகியே வழங்குகிறது. தமிழில் அஃறிணைப் பெயர்ச் சொல் என்பதாலேயே இரண்டாம் வேற்றுமை செயப்படு பொருளை உணர்த்துகிறது என்பதால் உருபைத் தனியே சேர்க்க வேண்டியதில்லை. உயர்திணைச் சொற்கள் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்கின்றன. ஆனால் அவற்றின் எண்ணிக்கை மிகுதியன்று. தமிழில் ஆரம்பத்தில் 'செய்வினை, செயப்பாட்டுவினை' ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு குறிக்கப்படவில்லை; சூழ்நிலையைக் கொண்டே இவ்வேறுபாடு உணரப்பட்டது.

பயனிலையுடன் கூடிய ஒரே தொகுதியாக இரண்டாம் வேற்றுமையைத் தொல்காப்பியர் கருதுவதாக நம்பக் காரணமுள்ளது. பயனிலை 'குறிப்பு வினையாகவோ' 'தெரிநிலை வினையாகவோ' இருக்கக்கூடும். இவ்விரண்டு பயனிலைகட்கு ஏற்ப இரண்டாம் வேற்றுமையை இரண்டாகப் பிரிக்கலாம்.

1) பொன் + இலன் > பொன்னிலன்

2) ஊர் + சேர்ந்தான் > ஊர் சேர்ந்தான்

அல்லது நிலம் + கடந்தான் > நிலங்கடந்தான்.

இங்கு நிலம் என்ற பெயர்ச் சொல்லானது, முழுச்சொல்லு டன் சேராமல், கட என்ற வேருடன் சேர்ந்து தொகையாகிறது; நிலங்கட என்னும் இவ்வேர்த்தொகை பின்னர் கால இடைநிலை, விகுதி முதலியன சேர்க்கப்பெற்று வினைமுற்றாக ஆக்கப்படுகிறது.

'நிலங்கடந்தான்' என்பது தொகையே எனச் சேனாவரையர் மேற்கொண்டுள்ள நிலையை, இது சிறப்பாக விளக்கக் கூடும். உயர்திணையைப் பொறுத்த வரையிலும்கூட இவ்வேற்றுமை உருபைத் தவிர்க்கலாம். அஃதாவது இரண்டாவது சொல்லின் மொழி முதல் வெடிப்பொலி இரட்டித்தலாலே சொற்கள் ஒரு சொல் நீர்மைப்படுதலைக் குறிக்குமாயின் இந்த உருபைத் தவிர்க்கலாம். சான்று: அவர் + பிரியேன் > அவரைப் பிரியேன் (என்பதற்குப் பதி லாக) அவர்ப் பிரியேன் என ஆதல்

உயர்திணையுடன் இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்க்க வேண்டிய கட்டாயம் உள்ளது; இல்லையெனில் அதை எழுவாய் என்று தவறாகக் கொள்ள நேரிடும். 'மரம்' என்பது போன்ற சொற்களிலுள்ள பழைய அஃறிணை விகுதியான 'அம்' என்பது இரண்டாம் வேற்றுமை உருபாயிற்று. பழங் கன்னடத்தில் 'அம்' என்பது இரண்டாம் வேற்றுமை உருபாகும். தமிழில் மொழி இறுதியில் 'அம்' என்பது 'ஐ' ஆகிறது. [மொழி இடையில் 'அம் > ஐ' மாற்றத்திற்குச் சான்றாக 'பனங்காய்', 'பனை' என்பவற்றை நோக்குக] இந்த 'ஐ' இரண்டாம் வேற்றுமை உருபாகிறது. சான்றாகக் 'காவலோனக் களிறு அஞ்சுமே' என்பதை நோக்குக. இங்கு 'காவலோனம்' என்பதே பழைய வடிவமாகும். 'களிறு' என்பதோடு அது தொகையாகும் பொழுது 'காவலோனக் களிறு' என்றாகிறது. மகர ஈறு இழப்புற்றுத் தொடர்ந்து வரும் வெடிப் பொலி இரட்டிக்கும் என்ற விதிப்படி (மரம் + கிளை > மரக்கிளை) இது இங்ஙனமாயிற்று. 'ஐ' உருபு அகரமாவதைத் தொல்காப்பியரே குறித்துள்ளார். அகரத்துடன் கூடிய இவ்வடிவம் பயனிலையுடன் தொகையாவதை வெடிப்பொலி இரட்டித்தலால் அறியலாம். பெயரும் வினையும் தனித்து வளர்ந்த பொழுது 'ஐ' தனி வேற்றுமை உருபாக வளர்ச்சியுற்றது.

மொழி வளர்ச்சியின் பிந்தைய கட்டத்தில் இவ்வாறு நிகழ்ந்திருக்கிறது. தனித்த குறுகிய அசைக்கு அடுத்து வரும் மொழி இறுதி மெய்யைத் தொடர்ந்து உயிர் வருமாயின் யாப்பியல் நிலையைக் காக்க, அம்மெய்யானது இரட்டிக்கிறது. தமிழில் தனிக் குற்றுயிரைத் தொடர்ந்து ஒரு மெய்வருமாயின், யாப்பியல் அடிப்படையில் அது நெடிலசையாகும். அதாவது அது மூடசையாய் இருக்கும் பொழுது அதன் வாய்பாடு "(மெய்) உயிர் மெய்" என்பதாகும். தமிழின் 'அசை முதல் அசை உச்சி' என்னும் அசை அமைப்புக் காரணமாக மெய்யிறுதியைத் தொடர்ந்து உயிர் வருமாயின் அம்மெய் அவ்வுயிருடன் சேர்ந்து அசையாகிவிடும்.

மெய் உயிர் மெய் + உயிர் > மெய் உயிர் + மெய் உயிர்

முதலில் உள்ள குற்றுயிர் மூடசையாக இருக்கும் நிலையை இழப்பதுடன், இடங்காரணமாக நெடிலசையாக இருக்கும் நிலையையும் இழந்து விடுகிறது. மெய் இரட்டித்தல் இதனைத் தடுக்கிறது.

மெய் உயிர் மெய் உயிர் > மெய் உயிர் மெய் மெய் உயிர் = மெய் உயிர் மெய் + மெய் உயிர்.

இரட்டிக்கும் மெய்களில் ஒன்று பழைய அசையுடனிருக்க, மற்றது அடுத்து வரும் அசையுடன் சேர்ந்து விடுகிறது. ஆனால் ஆரம்ப காலத்திய நிலை இதுவன்று. எனவே எந்த வேற்றுமை உருபுகள் சேரும் பொழுது அவற்றுககு முந்திய மெய்கள் இரட்டிக்கவில்லையோ, அவ்வுருபுகள் தமக்கு முந்திய மெய்களை இரட்டிக்கச் செய்யும் வேற்றுமை உருபுகளை விட முற்பட்டவை என்று கிறது. இங்ஙனம் நோக்குகையில், 'ஐ, ஆன், இன், ஆல், இல்' என்பவற்றைவிட 'அ ∞ அது' என்பதே பழமையானது எனக் கொள்ள வேண்டும். 'என' என்பதை 'என்னை, என்னான், என்னின், என்னால், என்னில்' என்பவற்றோடு ஒப்பிட்டு நோக்குக.

அடைத் தொகைகளின் மாறுபட்ட பொருள் நுட்பங்களைச் சிறப்புற வளர்க்கச் செய்யப்பட்ட முயற்சிகளே வேற்றுமை உருபுகள் என முடிவாகக் கூறலாம். இவ்வளர்ச்சியில், வினை அடைகளுடன் வரும் வேற்றுமை உருபுகளுக்கும் பெயரடைகளுடன் வரும் வேற்றுமை உருபுகளுக்கும் இடையேயான வேறுபாடு, சமஸ்கிருத இலக்கணத்தின் அடிப்படையில் புகுத்தப்பட்டது எனினும், தமிழில் அது ஒரு பொழுதும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும்

அமையவில்லை. பிந்தைய நிலையில் செய்து கொள்ள வேண்டிய வேறுபாடு ஒன்று உண்டு.

1 எவ்வித மாற்றமுமின்றி வேற்றுமை உருபை ஏற்கும் பெயர்ச் சொற்கள். இவை எழுவாய் வேற்றுமைக்குள் வரும்.

2 மாற்றத்துக்குப் பிறகே வேற்றுமை உருபை ஏற்கும் பெயர்ச் சொற்கள். இவை உருபேற்ற வடிவங்களின் வேற்றுமைக்குள் வரும்.

முதலாவது பிரிவில் உயர்திணைச் சொற்கள் வரும். பிந்திய தில் அஃறிணைச் சொற்கள் இடம் பெறும். தொல்காப்பியத் தமிழுக்கு இது பொருந்துவதாகும்.

5. 0 தொல்காப்பியத்திலுள்ள சில சிறப்பு வழக்காறுகள்

தொல்காப்பியத்திலுள்ள சில சிறப்பு வழக்காறுகளைத் தந்து இப்பகுதியை நிறைவு செய்யலாம்.

1 வியங்கோள் வினை படர்க்கைக்கே வரும்.

2 ‘ஒப்புமை’ என்பது நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை உரு, மெய், வினை, பயன் எனப்பெறும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உவமஉருபுகள் ஓதுக்கப் பட்டுள்ளன.

3 ‘சொல்’, ‘கொடு’ என்னும் வினைகள் படர்க்கைக்கே உரியன. ‘வா’, ‘தா’ என்பன தன்மைக்கும் முன்னிலைக்குமே உரியன.

7

சங்ககாலத் தமிழ்

0 மாற்றங்கள் : பொது

மொழியில் பல மாற்றங்கள் நிகழ்கின்றனவெனினும் அவை திடீரென நிகழ்வதில்லை. இதர திராவிடமொழிகள் வழங்கும் பகுதிகளின் எல்லைப்புறங்களை ஒட்டிய பகுதிகளில் வழங்கும் கிளைமொழிகளில் சில பழையவடிவங்கள் தொடர்ந்து வழங்குகின்றன. ஏனெனில் அவை மூலத்திராவிட அல்லது மூலத் தென் திராவிட வடிவங்களைப் போன்று உள்ளன. இவை இலக்கிய மொழியில் பின்னர் வந்திருக்க வேண்டும். பல மாற்றங்களுக்கான சான்றுகள், ஒரு வேளை முன்னைய காலத்திலேயே கிடைக்கக்கூடும். சான்றாக ஈற்றுருபில் நெட்டுயிர் உள்ள வடிவங்கள் குற்றுயிர் உள்ள பழைய வடிவங்களுக்குப் பதிலாக வழங்குகின்றன எனக் கூறப்படுவதைச் சுட்டலாம். ஆனால் நெட்டுயிர் உள்ள வடிவங்கள் தொல்காப்பியத்திலும் குகைக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. எனினும் காலம் செல்லச் செல்ல இத்தகைய மாற்றங்கள் அதிகம் நிகழ்கின்றன எனக் காண்கிறோம். ஆனால் இலக்கிய மொழி பல பழைய வடிவங்களைப் பேணி வைத்துக் கொள்கிறது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடியது போலச் சாதாரண மக்களுக்கென எழுதப்படும் பொழுது இங்ஙனம் பழைய வடிவங்கள் பேணப்படுவதில்லை; அப்பொழுது அவற்றில் கிளைமொழி வழக்குகள் பல இடம்பெறுவதுண்டு. ஆகவே முதலில் கூறப்பட்டவற்றில் பழைய ஆட்சிகள் இருப்பதையும் பிந்தியவற்றில் வட்டார வழக்குகள் இருப்பதையும் கொண்டு முதலில் கூறப்பட்டவை பிந்தியவற்றைவிடக் காலத்தால் முற்பட்டவையென முடிவு கட்டிவிடக் கூடாது.

1 ஒலியனியல்

1.1 உயிர்கள்

தொல்காப்பியத் தமிழில் காணப்படும் சில போக்குகள் சங்ககாலத்தில் நன்கு நிலைபெறுகின்றன. தொல்காப்பியத் தமிழ், சில மாற்றங்களைத் தவிர, முழுக்க முழுக்கச் சங்ககாலத் தமிழேயாகும்.

உயிர் மயக்கங்கள் தவிக்கப்படல்

உயிரிடை வகர, யகர உடம்படு மெய்கள் மேன் மேலும் வழக்குமிகுதியாகின்றன. இதன் விளைவாக உயிர்மயக்கங்கள் தவிர்க்கப்படுகின்றன.

உருபுகளில் மாற்றங்கள்

இதன் விளைவாக 'மருவி'[1] போன்ற வடிவங்கள், உயிர் மயக்கங்கள் இடம் பெறும் 'மரீஇ' போன்ற பழைய வடிவங்களுக்குப் பதிலாக வருகின்றன. யாப்பியல் நோக்கில் உயிர்மயக்கங்கள் ஈரசைகளை உடையதாயிருப்பதற்குப் பதில், மூன்று மாத்திரைகளை அல்லது இன்னும் அதிக அளவுடைய உயிர்த்தொடர்களாகின்றன. இவற்றை அளபெடை (உயிர் அளவு நீட்சியுறல்) என்றழைப்பர்.

நெடில்களிடையே வேற்றுநிலை வழக்கின்மை

அளபெடைகள் நெட்டுயிர்களின் கட்டில்லா உறழ்(ச்சி) ஒலிகளாக வருகின்றன. குற்றுயிர்களும் இங்ஙனம் வரலாம் எனப் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் கொள்கின்றனர். ஆனால் 'எடுப்பதூஉம்'[2] என்பதைப் போலக் கொடுக்கப்பெறும் சான்றுகள் உண்மையில் எடுப்பது + உம் என்பது போன்ற பழைய வழக்குகளே. இங்கு உ + உ இணைந்து ஊ உ என்றாகிறது. தமிழ் யாப்பமைப்பினால் சிலவிடங்களில் (எ—டு) நேரசை - குறில் நெடில் உயிர்கள் வரலாமாதலால்அவை வேற்று நிலை வழக்கின்றிய வழக்கில் வருகின்றன. சான்று: 'ஒடு' என்பது 'ஓடு' என்ற மாற்றுருபைப் பெறுகிறது. பழைய நூல்களைப் பதிப்பவர்கள் உயிர்களுக்கு முன்னர் 'ஓடு' என்பதையும் மெய்களுக்கு முன்னர் 'ஒடு' என்பதையும் பொதுவாகக் கொள்கின்றனர்.

உயிர் மாற்றம்

அ. எ (கர) > அ (கர) மாற்றமும் அதனால் விளைந்த மாற்றமும்

எகர உயிர் மொழியிறுதியில் வருவதில்லை; மொழிக்கு இடையில் வருவதும் சங்க காலத்தே நின்று விடுகிறது. அங்கு அது அகர

---

1 பரிபாடல், 20–25
''மாட மறுகின் மருவி மறுகுற''

2 திருக்குறள், 15, 2
கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

மாகிறது. தன்மை 'என் > அன்' ஆகிறது. அதன் பன்மையான 'எம் > அம்' ஆவது தொல்காப்பியர் காலத்திலேயே நிகழ்ந்து விட்டது.[3]

ஒப்புமையாக்கத்தால் தன்மைப் பன்மை விகுதி பலவிடங்களில் '-அம்' என்ருகிறது.[4] இது 'உ > அ' மாற்றம் போலத் தோன்று கிறது. ஆனுல் உண்மையில் அஃது அவ்வாறன்று.

ஆ. 'ஊ > ஆ' மாற்றமும் அதனுல் விளைந்த மாற்றமும்

உயிர் மயக்கங்கள் வழக்கினின்று மறைந்த பின்னர், அருகிய வழக்குடைய ஊகார இறுதியை உடைய 'செய்யூ' என்னும் இறந்த கால வடிவம் 'செய்யா' என்ருகிறது;[5] ஏனெனில் ஆகாரமே இத் தகைய இடங்களில் மிகுதியும் வரும் உயிராகும். இது ஒரு குறிப் பிட்ட போக்கினைப் பின்பற்றும் முறையேயன்றி ஒலிமாற்றமன்று 'செய்யூஉ ல செய்யூ' என்பது 'தழூஉ' (தொழிற்பெயர்) என்பதோடு ஒப்பிடத்தக்கதாகும். தொடக்கத்தில் இது உண்மையில் பெயர்ப் பயனிலையாக இருந்திருக்கலாம் 'செய்து' என்பதின் மாற்ருன 'செய்யூ' என்பது 'செய் + உ' என்றும் இருக்கலாம். இங்குச் சொல்லாக்க விகுதியான உகரம் துகரத்தின் மாற்ருக இருக்கலாம். 'கண்டு' என்பது 'செய்து' என்னும் வாய்பாட்டு வடிவமாகும். 'காணூஉ' என்பது 'செய்யூஉ' என்னும் வாய்பாட்டு வடிவமாகும். இத்தகைய வேறுபாடுகள் சிலவற்றில் காணப்பெறுகின்றன. நிறீஇ.

---

3 தொல்காப்பியம், 687

"அவைதாம்
அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்
அந்நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்
பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே".

பதிற்றுப்பத்து 23, 11
"நின்னயத்து வடிவேல் கண்டனம் புல்மிக்கு"...

4 குறுந்தொகை, 219, 4
"ஆங்கட் செல்கம் எழுகென ஈங்கே"

5 அகநானூறு, 16, 15
நாணி நின்ருேள்..."
..."நிலங்கிளையா

செயூஉ போன்றவையெல்லாம் உயிர்மயக்கத்தில் முடிகின்றன; இறந்தகாலம் காட்டுகின்றன. இவற்றில் போலவே ஒப்புமையாக் கத்தால் 'அஆ' என்னும் உயிர்மயக்கமும் இறந்தகாலம் காட்டத் தொடங்கியிருக்கலாம்.

வருமுறை

இடையண்ண வொலிக்குப் பின்னர் அகரம்

தொல்காப்பியத் தமிழில் இடையண்ண ஒலிகளான ச், ஞ், ய் முதலியன மொழிமுதலில் அகரத்துடன் வாரா. ஆனால் சங்க காலத்தில் இந்நிலை மாறிவிட்டது. இது கிளை மொழிகளிலிருந்தும் பிற மொழிகளிலிருந்தும் கடன் வாங்கியதன் விளைவாக இருக்கக் கூடும். சான்று: சமம்[6], ஞமலி[7], யவனர்.[8]

'செத்தான்' போன்ற சில சொற்கள் இன்னும் தம் பழைய வடிவத்தைக் கொண்டுள்ளன; இவற்றின் வழக்கு மிகுதியே இதற்கான காரணமாகலாம். ஆரம்பநிலையில் மொழிமுதல் சகர வெடிப்பொலிக்குப் பின்னர் எகர அகர ஒலிகள் வேற்றுநிலை வழக்கில் வாராதிருந்திருக்கலாம். ஆனால் சங்ககாலத்தில் இவ்வாறு வரக்காண்கிறோம்.

சான்று : சமழ்ப்பு[9], செம்மை.[10]

யகர மெய் மொழி முதலில் தொல்காப்பியர் காலத்தே ஆகாரத்துடனேயே வந்தது. சமஸ்கிருதம் பிராகிருதம் ஆகிய மொழிகளுடனான தொடர்பின் விளைவாக இது பிற உயிர்களுடனும் நாளடைவில் மொழி முதலில் வரலாயிற்று.

---

6 புறநானூறு 14, 9
"சமம் தாங்கவும்..."

7 புறநானூறு 74, 3
..."தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய..."

8 புறநானூறு 56, 18
"யவனர் நன் கலம் தந்த தண் கமழ் தேறல்"...

9 பரிபாடல் 20, 36
"கள்வன் சமழ்ப்பு முகங்காண்மின்"....

10 மதுரைக் காஞ்சி 499
"செம்மை சான்ற காவிதி மாக்களும்"...

சான்று : யவனர்[11], யூபம்.[12]

குற்றியலுகரம்

விடுப்பொலியாக இருந்த W என்ற ஒலி பின் தனி ஒலியாக — குற்றியலுகரமாக — ஆனது அடுத்த முக்கியமான மாற்றமாகும். செய்யுளில் குற்றியலுகரத்தைத் தொடர்ந்து மெய்வருவதைப் பற்றித் தொல்காப்பியரும் பேசுகிறார். **சான்று :** அக்குளு[13]. இதன் படிக் குற்றியலுகரத்தில் முடியும் வேர்களைத் தொடர்ந்து மெய் வரலாம். இங்ஙனம் குறுகிய உகரம் மொழி இறுதியில் மட்டும் வருவது என்று வரையறை செய்யப்பெறவில்லை. 'விக்குள்' என்ற ஆக்கச்சொல்லில் 'விக்கு' என்பது வேராகும்; 'உள்' என்பது தொழிற்பெயர் விகுதியாகும். இங்குள்ள உகரம் குறுகிய உகர மாகும். குறுகிய உகரம் மெய்யால் தொடரப்படுவதையும் அவர் பேசுகிறார்.[14] இது இப்படியாயின், இவ்விரு வகையான உகரங் கட்கும் உச்சரிப்பில் ஏதாவது மாற்றமிருக்க வேண்டும். ஒரு குற்றிய லுகரம் இன்றுள்ளதைப் போன்ற இதழ்விரிவொலியாகும். மற்ற உகரம் இதழ்குவி உயிராகும். பிற்காலத்தில் மொழியிறுதிக் குற்றிய லுகரம் உயிரால் தொடரப்படும்பொழுது பொதுவாக மறைந்து விடுவது வழக்கம். இவ்வாறு மறையாத இடங்கள் சங்க இலக்கியங் களில் உண்டு. தொல்காப்பியர் கருத்துப்படி குற்றியலுகரம் மொழிக்கு இறுதியில் வரும்; ஏனைய இடங்களில் அது முற்றியலுகரத் தைப் போல உள்ளது; அங்கு அது மறைவதில்லை.[15]

1. 2 மெய்கள்

மென்மை அல்லது மூக்கினச்சாயலை இழத்தல்

சொல்லிறுதியில் வரும் மூக்கொலிகள் மூக்கொலிச்சாயலை இழந்து மருங்கொலியாகின்றன. மூன்றும் வேற்றுமை உருபான

---

11 புறநானூறு 56, 18

12 புறநானூறு 15, 21

"யூபம் நட்ட வியன் களம்"

13 கலித்தொகை 94, 10

"அக்குளுத்துப் புல்லலும் ஆற்றேன் அருள்மோ"[2]

14 தொல்காப்பியம் 1267

"குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே"

15 *Ibid* 1267

ஆன் > ஆல் ஆகிறது.[16] ஐந்தாம் வேற்றுமை உருபான 'இன் > இல்' ஆகிறது. 'வேண் > வேள்' ஆகிறது.[17] ஆனால் இலக்கிய மொழியில் பழைய இறுதி மூக்கொலிகள் பேணப்பட்டுள்ளன.

மூக்குச் சாயல் பெறுதல்

'அங்ஙனம்' என்பது சில சமயங்களில் 'இங்ஙனம்' என எழுதப் படுகிறது. தொல்காப்பிய ஏட்டுச் சுவடிகளில் கூட இவ்வடிவம் புகுந்து விட்டது. இம்மாற்றம் சங்ககாலத்திலேயே ஏற்பட்டது என்று ஒப்புக்கொள்வது மிகவும் கடினமாக உள்ளது.

மெய் மயக்கங்கள் : மொழியிறுதியில் 'ன்ம்' வரும்சொற்கள் மேலும் சில

மெல்லின மெய்மயக்கமுடைய ஒரே ஒரு சொல்லையே தொல் காப்பியர் குறிக்கிறார். 'போன்ம்' என்பது அச்சொல்லாகும். இது 'போலும்' என்னும் சொல்லிற்குப் பதில் வருவதாகும். சங்க காலத்தில் மெல்லின மெய் மயக்கமுடைய வேறு சில சொற்கள் வருகின்றன.

சான்று:

மருண்ம்[18]
கேண்ம்[19]
சென்ம்[20]

இவை 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வடிவங்களாகும். இவை வினைமுற்றாக வருகின்றன. மொழிக்கு இடையில் சிலவிடங் களில் உகரம் மறையலாம் எனத் தொல்காப்பியரே கூறுகிறார். ஆனால் இவ்விதியை பெயரெச்சங்களுக்கு மட்டுமே உரியதாக

16 திருக்குறள் 101
"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

17 புறநானூறு 201, 12
"வேளிருள்வேளே! விறற் போர் அண்ணல்"

18 தொல்காப்பியம், 52 ஆவது நூற்பா, சேனாவரையர் உரை.

19 *Ibid*

20 புறநானூறு 133, 7
"தேர் வேள் ஆயைக் காணிய சென்மே"

வரையறுத்துக் கொள்கிறார்.[21] மொழியிறுதியில் மெல்லின மெய்கள் மயங்கி வருவதை 'போன்ம்' என்ற ஒரு சொல்லுடன் மட்டுமே அவர் வரையறை கொள்ளும் பொழுது, 'மொழியிடை உகரம் சிலவிடங்களில் மறையலாம்' என்ற விதி ('போன்ம்' எனும் சொல் தவிர) மெல்லின மெய் மயக்கங்கள் மொழியிறுதியில் தோன்ற வழிவகுக்குமாயின் பின்பற்றப்படுவதில்லை என்றே பொருள். ஆனால் விதிவிலக்கே பின்வர் விதியானது ஆயினும் அவ்விதி கட்டாயமான விதியன்று.

வருகைமுறை

உயிர்களின் வருகை முறையே சகர யகர மொழிகள் மொழி முதலில் அகரத்துடன் வரும் என்பதைக் காட்டுகின்றன. யகர மெய்யுடன் பிற உயிர்களும் வருகின்றன. ஓலைச்சுவடிகளில் காணப் பெறும் வழக்குகளை உண்மையெனவே கொள்வோமாயின் சில சமயங்களில் குகரமாக எழுதப்பட்ட ஆய்தம் தனியொலியாகக் கொள்ளப்பட்டது எனக்கொள்ள வேண்டும். சான்று : அஃதை > அகுதை.[22] பிற்காலத்திய சுவடிகளில் — பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் கூட—ஆய்தத்தின் மூன்று புள்ளிகளும் இணைக்கப்பட்டுக் கூ என்னும் வடிவத்தைத் தரும் வகையில் எழுதப் பட்டது. எனவே இம்மாறுதல் சங்ககாலத்திலேயே ஏற்பட்டதா என்பதைப் பற்றி நிச்சயமாக ஒன்றும் சொல்லமுடியாது. தம் காலத்திய முறைக்கு ஏற்ப எழுதும் பழக்கத்தின் விளைவாகவும் இது இருக்கலாம்.

2 உருபனியல்

2.1 வினைகள் : பொது

குகைக் கல்வெட்டுக்களின் மொழி பற்றி ஆராய்கையில் வினைகளின் உருபனியல் பற்றிக் குறிப்பிடப்பட்டது. குகைக் கல்வெட்டுக்களின் தமிழையே தொல்காப்பியத் தமிழ் நினைவூட்டுகிறது. சங்ககாலத் தமிழுக்கு இது பொருந்தும்.

---

21 தொல்காப்பியம் 723

''அவற்றுள்
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவ்விடன் அறிதல் என்மனார் புலவர்''.

22 புறநானூறு 347- 5

''மணம நாறு மார்பின், மறப்போர் அகுதை''

அ. பெயர்ப்பதிலி விகுதிகளின் அடிகள்

'செய்து' என்னும் வினையெச்சமாக ஆகிவிட்ட பழைய பயனிலை வடிவங்களுடன் பெயர்ப்பதிலி விகுதிகள் சேர்க்கப்படுகின்றன. காலங்களுக்கிடையேயான வேறுபாடு, தன்வினை, பிறவினை ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு என்பனவெல்லாம் பின்னர் ஏற்பட்ட சிறப்பு வளர்ச்சிகளின் விளைவுகளாகும். முன்னரே குறிக்கப்பட்டது போலத் 'து' வில் முடியும் வடிவங்கள் சில, 'த்து' வில் முடியும் வடிவங்கள் சில, 'ந்து' வில் முடியும் வடிவங்கள் சில என உள்ளன. ஆனால் மூக்கொலியுடன் கூடிய வடிவங்கள் மிகுதியும் அம்மூக்கொலி இன்றியே வழங்குகின்றன. விலகு ல விலங்கு. 'து', 'ந்து' என்பன தன்வினை அடிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. நெடில் வெடிப்பொலியை உடைய 'த்து' என்பது பிறவினையாகப் பயன்படுகிறது. சான்று : 'வருந்து', 'வருத்து'. ஆனால் இந்த மாற்று வடிவங்கள் (ந்து ல த்து) எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. சான்றாக 'நேர்ந்து' என்ற வடிவம் உள்ளது; ஆனால் இதற்கு இணையான 'நேர்த்து' என்ற வடிவம் இல்லை. பார்த்து என்பதற்கு இணையான '*பார்ந்து' என்ற வடிவம் இல்லை. 'பார்த்து' போன்றவை பிறவினையாகத் தோன்றினும் உண்மையில் அவை தன்வினையேயாகும். இத்தகைய முரண்கள் 'தன்வினை-பிறவினை' வேறுபாடு என்பது பிந்தையது என்பதைக் காட்டுகின்றன. இரு மாற்று வடிவங்கள் இருந்ததால் 'தன்வினை—பிறவினை' வேறுபாடு தோன்றியிருக்கலாம். சிலவேளைகளில், 'ஈத்து', 'ஈந்து' என்பது போல இரு மாற்றுவடிவங்கள் சில வினைகளுக்கு இருந்தாலுங்கூட, அவற்றை வேறுபடுத்த முடிவதில்லை. இங்கு இரு சொற்களும் 'ஈதல்' என்னும் பொருளிலேயே வருகின்றன. அவை இரு வேறு கிளை மொழிகளைச் சேர்ந்த சொற்களாகும்; அவ்வளவே. தமிழில் 'செயப்படு பொருள் குன்றிய வினை-செயப்படு பொருள் குன்றா வினை' ஆகியவற்றுக்கிடையே அல்லாமல் 'தன்வினை-பிறவினை' ஆகியவற்றுக் கிடையில் தான் வேறுபாடு உண்டு என்பதை வற்புறுத்திக் கூற வேண்டும். 'செயப்படு பொருள் குன்றியவினை, செயப்படு பொருள் குன்றாவினை' ஆகியவற்றுக்குத் தனிக் கலைச் சொற்கள் இல்லாமை குறிக்கத்தக்கதாகும். கால்டுவெல் 'தன்வினை, பிறவினை' ஆகியவற்றைத் தவறுதலாக முறையே 'செயப்படு பொருள் குன்றாவினை, செயப்படுபொருள் குன்றியவினை' என மொழிபெயர்த்தார்.[23]

23 R. Caldwell: *A Comparative Grammar of the Dravidian Languages*, 1956, p 449

ஆ. ஏரேவல் வினையும் அவை அல்லா வினையும் (Causal and Non-causal)

தொல்காப்பியத் தமிழிலேயே வினையில் வேறொரு பகுப்பும் உண்டு; அது 'ஏரேவல் வினை-அவை அல்லா வினை' என்னும் பகுப்பாகும். குகைக் கல்வெட்டுக்களின் மொழியை ஆராய்கையில் இதனை அறிந்தோம். ஏரேவல் வினை அல்லாதன, வேருடன் எவ்வித விகுதியுமின்றி வரும். ஏரேவல் வினையானது வேருடன் 'ப்' விகுதியும் இகரத் துணையும் பெற்று வருகின்றது. ஏரேவல் வினை தொல்காப்பியத்திலேயே பயன்படுத்தப் பெற்றுள்ளதைக் காண்கிறோம். சான்று : "அம்ம கேட்பிக்கும்."[24]

'தன்வினை-பிறவினை' பாகுபாட்டிற்கும், ஏரேவல் வினைக்கும் அவை அல்லாத வினைக்கும் உள்ள வேறுபாடு யாதெனின், முந்தியது அஃறிணைக்குப் பயன்பட பிந்தியது உயர்திணைக்குப் பயன்படுகிறது. தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ள "அம்ம கேட்பிக்கும்" என்பதில் இவ்விதி மீறப்படவில்லை. காலங்காட்டும் இடைநிலைகளின் மொழி முதல் வெடிப்பொலி இரட்டித்து வரும் சொற்கள் போல, 'ஏரேவல் வினைகள்' எப்பொழுதும் உள்ளன. அதாவது அவை தமிழ்ச் சொற்களஞ்சிய 11-ஆவது வினைவிகற்ப வாய்பாட்டிற்குரியவை. சான்று : போர் > போர்ப்பித்த.

இ. பிறவினைகளும் இறந்கால வடிவங்களும்

பிறவினை அடிகளின் இறந்த காலவடிவங்கள் பலவற்றில் பல்லின வெடிப்பொலிகள் இரட்டித்து வருகின்றன. இவற்றை இரட்டைத் தகர மெய்களென இனங்கண்டு கொள்ளலாம். இரண்டாவது தகரமெய் இறந்த காலம் காட்டுவதாகவும், முதலாவது தகரமெய் பிறவினை விகுதியாகவும் கொள்ளப்படுகிறது. மூக்கொலீயெதுவும் அவ்விடத்தில் இருந்தால், அது மறையும். இவ்வாறு பொதுமைப்படுத்துவதால் பிறவினையின் இறந்தகால வடிவம் இல்லாத பொழுதும் முதலில் வரும் தகரமெய் பிறவினை விகுதியாக நிற்கிறது.

சான்று : நட > நடத்து
செல் > செலுத்து

---

24 தொல்காப்பியம் 761

ஈ. பிறவினை விகுதியா? இறந்த காலம் காட்டும் இடைநிலையா?

பகர அல்லது மகர மெய்க்குப் பின்னர் வரும் இகரம் ஈரேவல் விகுதியாக உணரப்பட்டுள்ளது. 'இரீஇ'[25] என்பது போன்ற வடிவங்களில் இகரம் பிறவினை விகுதியாக வருகிறது. இவ் இகரத்துக்கு இறந்தகாலம், பிறவினை ஆகிய இரண்டையும் குறிக்கும் சிறப்பு உண்டு. சூழல் (Context) காரணமாக ஈரேவல் வினையைக் குறிக்கும் தன்மையையும் அது பெற்றுள்ளது எனலாம். அல்லது இரு இகரங்கள் இருந்து பின்னர் அதில் ஒன்று 'அசைகெடலால்' (Haplology) கெட்டிருக்கலாம். இகரத்தைப் பெற்றுள்ள எல்லாச் 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களிலும், இகரம் ஈரேவல் வினையைக் குறிப்பதில்லை. சான்று : மரீஇ[26].

ஈரேவல்வினை

தொல்காப்பியத்தில் ஈரேவல் வினை இடம் பெற்றுள்ளது; ஆனால் ஒரே ஒருமுறைதான் வருகிறது. சங்க இலக்கியத்தில் மிகுதியும் வருகிறது. சான்று : போர்ப்பித்திலதே.[27] கலித்தொகையில் இதன் வருகை மிகுதி.

2 2 முற்றுக்கள்

அ. தன்மை

கு, து லடு, கும், தம் லறும் லடும் முதலிய தன்மை முற்று விகுதிகள் மெல்ல மறையத் தொடங்கின. 'அம் > ஒம்' என்றாகிறது. அகரம் மகர மெய்யால் 'இதழ்ச்சாயல்' பெற்று ஒகரமாகிறது. 'அம்' வருவது குறைகிறது. 'எம்' என்பதும் அங்ஙனமேயாகும். 'என்' வருமிடங்களில் 'அன்' வருகிறது. இளம்பூரணர் இதைப் புதிய வடிவம் என்கிறார்.[28] ஆனால் இவ்வடிவம் புறநானூற்றில் காணப்படுகிறது.[29] எனவே, அன் என்பதன் வழக்கு மிகுதியே புதுமை

---

25 புறநானூறு, 18,5
"ஒன்று பத்து அடுக்கிய கோடி கடை இரீஇய
பெருமைத்தாக"

26 தொல்காப்பியம்

27 புறநானூறு 286, 5
"தூ வெள் அறுவை போர்ப்பித்திலதே!"

28 தொல்காப்பியம், 688 ஆவது நூற்பா, இளம்பூரணர் உரை

29 புறநானூறு 136, 5
..."அனைத்து உரைத்தனன் யான் ஆக..."

யாகும். படர்க்கை ஆண்பால் விகுதியாக 'அன்' வழங்குகிறது பல பொருள் ஒரு சொல்லாக 'அன்' வழங்குவதன் விளைவாக, தன்மை விகுதியாக வரும் 'அன்' வழக்கிழக்கலானது. இங்கு நாம் கிள்ளி யெரான் (Gillieron) என்னும் அறிஞர் கருத்தைப் பின்பற்றுகிறோம்.

ஆ. முன்னிலை

முன்னிலையில் 'போதாய்' போன்ற வடிவங்களின் வழக்கு மிகுதியாகின்றது. பிற பழைய வடிவங்கள் மெல்ல வழக்கிழக் கின்றன. 'இர், அய்' ஆகியன மெல்ல மறைகின்றன.

'ஈர், ஆய்' முதலியன பெரிதும் பின்பற்றப்படும் ஈறுகளா கின்றன. முன்னிலை ஒருமையின் சிறப்பான விகுதியாக 'ஐ' நிலை பெறுகிறது. ஐ > அ+இ. பெயரெச்ச விகுதி, முன்னிலை இடப் பெயர் விகுதி ஆகியவற்றின் கூட்டாக இது தொடங்கியிருக்கலாம். 'ஐ' என்பதை முன்னிலை விகுதியாகத் தனியாகப் பின்னர்ப் பிரிக்கலாயினர். பழைய வடிவங்களில் கூட இவ்விகுதி உள்ளது. 'சென்றீ'[30] என்பது போல ஏவலாக 'வந்தை'[31] என்பது வருகிறது. சங்க இலக்கியத்தில் பெயர்ச்சொற்களும் 'ஐ' விகுதியைப் பெற்று வினைவிகற்பங்களைக் காட்டுகின்றன. சான்று: 'கண்ணை'[32].

பரிபாடல் வடிவங்கள்

குறிலுயிரை உடைய 'அன், அய்' போன்ற விகுதிகள் பெய ரெச்ச விகுதியான 'அன்' என்பதற்குப் பின்னர் வரும் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. சான்று: வந்தனன் + அய் > வந்தனை.

ஆனால் பெயரெச்சம், னகர மெய்யை இழக்கும் பொழுது பின்வரும் இருவகையான வளர்ச்சியினைக் காண்கிறோம்.

1 சந்தியில் நெட்டுயிர் தோன்றுகிறது.

வந்த + அன் > வந்தான்

வந்த + அய் > வந்தாய்

இவை 'வந்தோன்', 'வந்தோய்' என அடிக்கடி மாறுகின்றன.

---

30 அகநானூறு, 46, 16
"சென்றீ பெரும! நிற் றகைக்குநர் யாரே?"

31 கலித்தொகை, 63, 12
"இன்னும் கடம்பூண் டொருகால்நீ வந்தை"

32 பரிபாடல், 1

2 'வந்தவன்' என்பது வினையாலணையும் பெயராக மிகுதியும் பயன் படுகிறது; அகர விகுதியை இவ்வடிவம் பேணிக் காத்துள்ளது. இதில் வகர உடம்படு மெய் இடம் பெற்றுள்ளது. முன்னிலையான 'வந்த + அய்' என்பது உடம்படுமெய்யைப் பெற்று 'வந்தவை' என்றாகவேண்டும். ஆனால் பரிபாடல் நீங்கலாக ஏனையவற்றில் இவ்வடிவம்காணப்படவில்லை. சான்று: அட்டவை[33] ('நீ கொன்றாய்'), கொடியவை[34] ('நீ கொடியை'). இஃது அந்நூலின் தனிச் சிறப்புக் கூறாகும்.

இத்தகைய வாய்பாடுடைய முன்னிலை ஒருமை இந்நூலுக்கு முந்திய நூல்களிலோ, பிந்திய நூல்களிலோ இடம் பெறவில்லை. இதே வடிவம் படர்க்கை அஃறிணைப் பன்மைச் சொல்லாகிய 'வந்தவை' என்பது போலவே இருப்பதால் ஏற்படும் 'ஒருசொல் பல பொருள்' மயக்கமானது, இவ்வடிவத்தை வழக்கில் தொடர்ந்து வரவிடவில்லை எனலாம். ஏவலில் மரியாதைப் பன்மை என்பது வேர்களுடன் உம் விகுதியைச் சேர்ப்பதால் காட்டப்படுகிறது. சான்று: வளரும்[35], கொள்ளும்.[36]

இ. வியங்கோள்

வியங்கோள் வடிவங்களான 'வாழிய', 'வாழி' என்ற வழக்காறுகட்குப் பதிலாக 'வாழ்க'[37] என்பது வழக்குப் பெறுகிறது. வியங்கோள் எல்லா இடங்களுக்கும் எண்களுக்கும் பொதுவாகிறது.[38]

---

33 பரிபாடல், 21, 66
..."மாறம் ரட்டவை மறவேல் பெயர்ப்பவை..."

34 பரிபாடல், 15, 56
..."புள்ளணி பொலங் கொடியவை..."

35 பரிபாடல், 14, 9
..."நீடன்மின், வாரும் என்பவர் சொற்போன்றனவே..."

36 கலித்தொகை

37 புறநானூறு, 101, 10
"வருந்த வேண்டா; வாழ்க அவன் தாளே!"

38 புறநானூறு, 103, 12
..."புரத்தல் வல்லன்; வாழ்க அவன் தாளே"!

அது மரியாதை ஏவலாகவும் ஆகிறது. வாழ்த்து,[39] வேண்டுதல்,[40] பழித்தல்,[41] ஆகிய பொருள்களுக்கு அது வருகிறது. சங்க காலத்திலும்[42] திருக்குறளிலும்[43] எதிர்மறை வியங்கோளுக்கு 'அல்' விகுதி வருகிறது. ஆனால் பிற்காலத்தில் இது காணப்படவில்லை.

ஈ. படர்க்கை : பழைய வடிவங்கள் மறைதல்

பலர்பாலுக்குரிய 'செய்ப' என்பதன் வழக்காறு மிகவும் குறைகிறது. 'செய்மனோர்', 'என்மார்' என்பன மறைகின்றன. 'செய்யுமார்' முதலான வடிவங்கள் 'செய்வார்' போன்ற வடிவங்களுக்கு இடம் தருகின்றன.

அஃறிணை

அஃறிணையில் வினைமுற்றில் கூட ஒருமையும் பன்மையும் வேறுபடுத்தப்படுவது குறைகிறது. இதற்குச் 'செய்யும்' வடிவம் ஏற்றதாகும். இதன் காரணமாகப் பன்மையான 'எல்லாம்' என்பது 'முழுமையைக்குறித்தல்' என்னும் பொருளில் ஒன்றன்பாலுக்கும் வருகிறது.[44] தன்மையில் அதனது வழக்காறு மறைகிறது. பிற விடங்களில் 'எல்லாம்' என்பது அஃறிணைக்கே என்ற நிலை மாறுகிறது. புறநானூற்றில் கூட அது பலர்பாலுக்கு வருகிறது. சான்று: சான்றோர் + எல்லாம்.[45]

இத்தகைய வழக்குகள் மிகுதியாகின்றன. இதே போல உண்டு என்பதும் எல்லா இடங்களுக்கும் பால்களுக்கும் பொது

---

39 *Ibid*

40 அகநானூறு, 54, 6
"கடவுக, காண்குவன் - பாக!"

41 புறநானூறு, 196

42 தொல்காப்பியம், 496
"செப்பும் வினவும் வழா அல் ஓம்பல்"

43 திருக்குறள், 196
"பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

44 அகநானூறு, 273, 16
...நின் வரை எல்லாம் நிழற்றி"...

45 புறநானூறு, 63, 5
..."தேர் தர வந்த சான்றோர் எல்லாம்"...

வாகிறது. [உண் + து > உண்டு; 'து' என்பது ஒன்றன்பால் விகுதி யாகும்] சிலப்பதிகாரத்தில் இது உயர்திணையைக் குறிக்க வழங்குகிறது[46].

'அன்' வடிவம் மறைதல்

'அன்' சாரியை உடைய வினைமுற்றுக்கள் மெல்ல மறைந்து நெட்டுயிருடைய வடிவங்களுக்கு இடந்தருகின்றன. ஒன்றன்பாலில் இச்சாரியை மறைகிறதென்றால் 'செய்தன்று' என்னும் வாய்பாடு மறைகிறது என்று பொருள்படும். 'செய்தது' என்னும் வாய்பாடு அதற்குப் பதிலாக வருகிறது. 'ஆகின்று[47] ல ஆயின்று' என்பன போன்ற இறந்த கால வடிவங்களுக்குப்பதில் 'ஆயிற்று' என்பது போன்ற இறந்த கால வடிவங்கள் மிகுதியும் ஆளப்படுகின்றன.[48] இங்கு மூக்கொலி வெடிப்பொலியாகியுள்ளது.

'கள்' விகுதி

பன்மை விகுதியாகிய 'கள்' முதன் முதலில் தொல்காப்பியத்தில் 'மக்கள்'[49] என்ற சொல்லில் இடம் பெறுகிறது. ஆனால் இச்சொல்லிலுள்ள 'கள்' விகுதியை எளிமையாகப் பிரிக்க முடியாது. பின்னர் தொல்காப்பியர்[50] கருத்துப்படி அது அஃறிணையுடன் வருகிறது. அதற்குப் பின்னர் அது உயர்திணையுடனும் வருகிறது. திருக்குறளில் வரும் 'மற்றயவர்கள்'[51] என்னும் ஆட்சியினை நோக்குக.

---

46 சிலப்பதிகாரம், 19, 51
...''பெண்டிரும் உண்டு கொல் பெண்டிரும் உண்டு கொல்...''

47 ஐங்குறுநூறு, 236, 1
''அன்னையு மறிந்தன ளலரு மாயின்று''...

48 குறுந்தொகை, 325
...''கருங்கால் வெண்குரு மேயும்
பெருங்குள மாயிற்றென் னிடைமுலை நிறைந்தே''

49 தொல்காப்பியம்

50 தொல்காப்பியம் 654
''கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே''

51 திருக்குறள் 263
''துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தாம்''

இரட்டைப் பன்மை வடிவங்களான 'அர்கள்'[52] போன்றவற்றின் ஆட்சி மிகுகிறது.

2. 3 எச்சம்

அ. வினையெச்சம்—இறந்தகாலம்

இகர முடிவும் உயிர் மயக்கங்களும் கொண்ட 'கொளீஇ' என்பது போன்ற இறந்த காலம் காட்டும் பழைய வடிவங்களின் ஆட்சி குறைகிறது. உடம்படுமெய்களை உடைய வடிவங்கள் அவற்றுக்குப் பதில் வருகின்றன. சான்று: 'கொளுவி'. 'போய்' 'ஆய்' என்பவற்றில் மொழியிறுதி இகரம் யகர மெய்யாக வருகிறது. இவை தவிர ஏனையவற்றில் மேலே கூறப்பட்டது போல நிகழ்கிறது.

'விஞஅய்'[53] என்பது 'வினவி'[54] என வந்துள்ளதையும் நோக்குக. உகரத்தில் முடியும் வேர்களுடனேயே இறந்தகாலம் காட்டும் விகுதியான இகரம் வருகிறது.

ஆறுவது வினைவிகற்ப வாய்பாடு நான்காம் பதினோராம் வினைவிகற்ப வாய்பாடாதல்

மிகுதியாக வழங்கும் நான்காம், பதினோராம் வினைவிகற்ப வாய்பாடுகளைப் பிற வினைவிகற்ப வாய்ப்பாடுகளைச் சேர்ந்த வேர்களும் பின்பற்றுகின்றன. ஆறும் வினைவிகற்ப வாய்பாட்டைச் சேர்ந்த 'படு' என்பது 'பட்டு' என்றாகாது, பதினோராம் வினைவிகற்ப வாய்பாட்டில் மிகுதியும் வரும் பிற வினை வடிவத்தைத் தருகிறது. சான்று: படுத்து[55]. இங்ஙனமே ஆறும் வினை விகற்ப வாய்பாட்டைச் சேர்ந்த 'புகு' என்பது 'புக்க' என்றாகாது. நான்காம் வினை விகற்ப வாய்பாட்டைச் சேர்ந்ததைப் போல 'புகுந்த'[56] என்றாகிறது.

---

52 திருக்குறள் 919
''வரைவிலா மாணிழையார் மென்தோல் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு''

53 அகநானூறு, 82, 12
''செருகச் செய் யானை செல் நெறி விஞஅய்''

54 அகநானூறு, 56, 14
''வினவி நிற்றந்தோனே''

55 அகநானூறு, 56, 4
''வரி அதன் படுத்த சேக்கை''

56 புறநானூறு, 30, 13
...''புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்''...

ஆ. செயின்

'செயின்' என்பது நிபந்தனையைக் காட்டும் பழைய வினையெச்ச வாய்பாடாகும். பின்னது அது 'செயில்' என்றாகியது. திருக்குறளிலேயே இது நேர்ந்து விட்டது.[57] 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் 'ஆல்' விகுதி பெற்று நிபந்தனை வினையெச்சமாக வருகிறது. சான்று : செய்தால்.[58] 'செய்யும்' என்பது ஆயின் அல்லது ஏல்[59] என்பதுடன் சேர்ந்து நிபந்தனையைக் காட்டுகிறது. இதைப் போலப் பெயரெச்சங்களுடன் 'கால்' விகுதி சேர, அவை நிபந்தனையைக் காட்டுகின்றன.[60] இறுதியாகக் கூறப்பட்ட வழக்காறு தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகிறது.[61] -ப்ப்- என்பதற்குப் பதில் அதன் மாற்று வடிவம் வருகிறது. சான்று: கேட்பின் > கேட்கின்.[62]

எதிர்காலத்தைக் குறிக்கும் எச்சமாகிய 'செய்பு' மெல்ல மறைகிறது. 'செய்பான் ல செய்வான்', 'செய்பாக்கு' போன்றவை நோக்கத்தைக் காட்டவருகின்றன. 'செய்பான்' என்பது தொழிற்பெயராக இருக்கலாம். 'செய்பு + ஆன்' என அதைப் பிரிக்கலாம். 'ஆன்' என்பது மூன்றாம் வேற்றுமை உருபாகும்; அல்லது காரண விகுதியாகும். பின்னர் 'நோக்கப் பொருளைத்' தெளிவு

---

57 திருக்குறள்

58 திருக்குறள், 943
"அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு."

59 திருக்குறள், 18
"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு."

60 திருக்குறள், 127
"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

61 தொல்காப்பியம், 713

62 ஐங்குறுநூறு, 84, 1
"செவியிற் கேட்பினும் சொல்லிறந்து வெகுள்வோள்"
ஐங்குறுநூறு, 84, 1
"மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே"

படுத்தக் குகர விகுதி சேர்க்கப்பட்டிருக்கலாம். 'செய்பான் + கு > * செய்பாற்கு'. ஓரினமாதலின் விளைவாகச் 'செய்பாக்கு' என்ற வடிவம் கிடைக்கிறது. கலித்தொகை,[63] பரிபாடல்,[64] திருக்குறள்[65] ஆகியவற்றில் 'செய்வான்' என்ற வடிவம் வருகிறது. செய்பாக்கு என்ற வடிவம் திருக்குறளில் மட்டுமே வருகிறது.[66] இது கிளை மொழி வழக்காக இருந்திருக்கக் கூடும். 'செய்வான்' மலையாளத்தில் தொடர்ந்து இன்றும் வழக்கில் உள்ளது; ஆனால் தமிழில் வழக்கில் இல்லை.

இ. நோக்கத்தைக் காட்டும் வினையெச்சம்

'செய்யிய' என்பது நோக்கத்தைக் காட்டும் பழைய வினையெச்ச வாய்பாடாகும். இது மறைந்து, 'செய' என்னும் வினையெச்சம் புறநானூற்றில் இதனது பொருளைத் தருகிறது.[67]

2. 4 துணைவினைகள்

அ. 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

'செய' என்னும் வடிவம் வளர்ச்சியுற்றது. 'நான் செய வேண்டும்' என்பது போன்ற வாக்கியங்களில் அது எழுவாயானது. இத் தொடருக்கு இரு எழுவாய்கள் இருக்கலாம். ஒன்று 'செய' என்பதற்கு; மற்றது 'வேண்டும்' என்பதற்கு. 'செய' என்பது 'வேண்டும்'

---

63 கலித்தொகை, 113, 13
"ஏதமன் றெல்லை வருவான் வீடு"
கலித்தொகை, 97, 7
..."முத்தேர் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது காண்பான் யான் தங்கினேன்."

64 பரிபாடல், 10, 9
"புனல்மண்டி யாடல் புரிவான் சனமண்டி"

65 திருக்குறள், 1029
"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு."

66 திருக்குறள், 1128
"நெஞ்சத்தார் காதல வராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து."

67 புறநானூறு, 63

என்பது போன்ற சொற்களுடன் ஒன்றுபடுகிறது. ‘வேண்டும்’ என்பது விருப்பத்தைக்காட்டும் விகுதியாகச் சுருக்கப்படுகிறது. ‘படும்’, ‘தகும்’ என்பன இதே போலச் ‘செய’ என்பதுடன் வரும் பொழுது முறையே ‘தகுதிப் பொருளையும்’, ‘தொனிப்பொருளையும்’ உணர்த்துகின்றன. பின்னர் ‘வேண்டும்’ என்பது மட்டுமே தகுதிப் பொருளை உணர்த்த நின்றது. சான்று : அவன் வரவேண்டும்.

‘படு’ என்பது செயப்பாட்டு வினை விகுதியாக வளர்ச்சியுற்றது. ‘தகும்’ என்பது இலக்கிய மொழியில் மட்டுமே காணப் படுகிறது.

ஆ. செயப்பாட்டு வினை

‘செய’ என்பது முதலில் வினையெச்சமாக, ‘படும்’ என்பது போல வினையடையாக, வளர்ச்சியுற்றிருக்க வேண்டும். சமஸ்கிருதம் பிராகிருதம் ஆகிய மொழிகளின் செல்வாக்கால் தமிழில் செயப் பாட்டு வினை வளர்ச்சியுற்றது. ‘செய’ என்னும் வினையெச்சம் வேராகவே கருதப்படுகிறது. ‘படு’ என்பது செயப்பாட்டு வினை விகுதியாகிறது. ‘கைப்பட்டாய்’ என்பதற்குப் பதில் ‘கைப்படுக்கப் பட்டாய்’ என்ற வடிவம் கலித்தொகையில் வருகிறது.[68] செயப் பாட்டு வினைவடிவம் வருவதற்கு இது திட்டவட்டமான சான்றாகும். ‘உண்’ என்பது செய்யுளில் செயப்பாட்டு வினை விகுதியாக வருகிறது.[69] ஆனால் இதற்கு முன்னால் ‘செய’ என்னும் வடிவம் வருவதில்லை; வேரே வருகின்றது. சான்று: ‘கொல் — உண்டான்’. ‘படு’ என்பதும் இங்ஙனம் வரலாம்; ‘கொல்லப்பட்டான்’ என்ப தற்குப் பதில் ‘கோட்பட்டான்’ என்பது வருகிறது. வேர் அல்லது ‘செய’ என்னும் வினையெச்சம் தொடக்கத்தில் தொழிற்பெயரின் தன்மையைப் பெற்று இருந்தது என்பது இவற்றால் புலனாகும். பிற்காலத்தில் ‘படு’ என்பதற்கு மாற்றாகப் ‘பெறு’ என்பது செயப் பாட்டு வினை விகுதியாக வருகிறது.

இ. பிற துணை வினைகள்

‘படு’, ‘பெறு’ முதலிய துணைவினைகள் விகுதிகளாகச் செய லாற்றுவதைக் கண்டோம். ‘வினை + துணைவினை’ என்ற தொடரானது

68 கலித்தொகை, 65, 16

69 சிலப்பதிகாரம், 9, 22

70 தொல்காப்பியம், 156 ஆவது நூற்பா உரை

மிகப் பழமையானதாகும். 'திரிதரு'[71] என்பது போன்ற 'வேர்கள்' உள்ளன; ஆனால் அவை கூட்டு வேர்களாக இருக்கக்கூடும். 'செயப்பாட்டுத் தன்மை' என்பது போன்ற பொருள்களில் துணைவினைகள் வளர்ச்சியுறுகின்றன. 'இடு', 'விடு'[73] முதலான துணை வினைகள் திருக்குறள், கலித்தொகை, பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் நன்கு நிலைபெறுகின்றன. பின்னர் மேலும் மேலும் பல துணைவினைகள் வளர்ச்சியுற்றன. சான்றாகக் கல்வெட்டுக்களின் மொழியைக் காட்டலாம். தற்காலத் தமிழில் நுணுக்கமான பொருள் வேறுபாடுகளைத் துணைவினைகள் காட்டுகின்றன.

சங்க இலக்கியங்களின் ஒருவகைப் பாகுபாடு

பழைய வடிவங்களின் ஆட்சியின் அளவையும், வருகை விகிதத்தையும் கொண்டு சங்க இலக்கியங்களைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்:

1 பத்துப்பாட்டு, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு

2 திருக்குறள்

3 பரிபாடல், கலித்தொகை

4 சிலப்பதிகாரம்

5 மணிமேகலை

---

71 திருமுருகாற்றுப்படை, 1
"உலக முவப்ப வலனேர்பு திரிதரு"

72 திருக்குறள்
பரிபாடல் 13, 59
கலித்தொகை 101, 24

73 திருக்குறள், 1068
பரிபாடல், 6, 93
கலித்தொகை, 61, 24

8

பல்லவர், சோழர், நாயக்கர் காலத் தமிழ்

அ. பல்லவர், சோழர் காலத் தமிழ்

சங்க காலத்திற்குப் பிற்பட்ட, அதாவது, பல்லவர், சோழர் காலத்திய தமிழை ஆராய இலக்கியங்களும் உதவுகின்றன. எனினும் கல்வெட்டுக்களே நமக்குக்கிட்டியுள்ள முக்கிய மூலாதாரங்களாகும். இப்பகுதிகளில் தரப்பட்டுள்ள செய்திகளில் பெரும்பகுதி என்னுடைய மாணவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளிலிருந்து எடுத்துத் தரப்பட்டனவாகும்.

2. 0 உயிர்கள் (பல்லவர் காலம்)

சங்க காலத்தைப் போலப் பல்லவர் காலத்திலும் / இ எ உ ஒ அ / ஆகிய ஐந்து உயிர்களும் அவற்றின் நீட்சியும் ஒலியன்களாக இருந்தன என்பதைப் பின்வரும் வேற்றுநிலை வழக்குகள் காட்டும்.

அ	அமை
ஆ	ஆமை
இ	விற்று
ஈ	வீற்று
உ	குறு
ஊ	கூறு
எ	எழு
ஏ	ஏழு
ஒ	ஒடு
ஓ	ஓடு

உயிர்களில் எகரம் ஒகரம் தவிர, எஞ்சின மொழி மூவிடங்களிலும் வருகின்றன. எகரமும் ஒகரமும் மொழிக்கு இறுதியில் வருவதில்லை.

மெய்கள் (பல்லவர் காலம்)

க்	கூடு
ச்	சூடு
ட்	படி
த்	பதி
ப்	பாடு
ம்	மாடு
ஞ்	ஞாலம்
ந்	நாலு
ண்	மணம்
ன்	மனம்
ண்	தண்
ன்	தன்
ல்	கலம்
ள்	களம்
ல்	பலம்
ழ்	பழம்
ழ்	ஒழி
ள்	ஒளி
வ்	வலம்
ப்	பலம்
ர்	அரிய
ற்	அறிய

எனவே பின்வருவன மெய்யொலியன்களாகும்.

க்	ச்	ட்	ற்	த்	ப்
	ஞ்	ண்	ன்		ம்
	ய்	ழ்	ர்	ல்	வ்
		ள்			

நகரம் னகரத்துடன் வேற்றுநிலை வழக்கில் வருவதற்குச் சான்று கிடைக்கவில்லை. அங்ஙனம் ஙகர மூக்கொலிக்கும் பிற மூக்கொலிகளுடன் வேற்றுநிலை வழக்குக் கிடைக்கவில்லை. நகரமும் ஙகரமும் முறையே னகரம், மகரம் ஆகியவற்றின் மாற்றொலிகளாகும்.

3.0 உயிர்கள் (சோழர் காலம்)

பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்றும் நூற்றாண்டுகளிலும் இவ்உயிர்கள் ஒலியன்களாகத் தொடர்ந்து இருந்தன. அவற்றுக்கான வேற்றுநிலை வழக்குகள் வருமாறு :

அ	அது
ஆ	ஆடு
இ	விற்று
ஈ	வீற்று
உ	குடை
ஊ	கூடை
எ	எரி
ஏ	ஏரி
ஒ	ஒடு
ஓ	ஓடு

மெய்யொலிகள் (சோழர் காலம்)

க்	காண்
ச்	சாண்
க்	பகை
ட்	படை
ப்	படி
ம்	மடி
ண்	எண்
ன்	என்
ய்	காய்
ண்	காண்
வ்	வதி
ப்	பதி
ர்	கார்
ல்	கால்
ல்	பால்
ழ்	பாழ்
ல்	புலி
ள்	புளி

மெய்யொலியன்களின் பட்டியல் வருமாறு:

க்	ச்	ட்	ற்	த்	ப்
		ண்	ன்		ம்
	ய்	ழ்	ர்	ல்	வ்
		ள்			

இலக்கிய மொழியில் னகரமும் நகரமும், ளகரமும் ழகரமும், றகரமும் ரகரமும் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன. ஙகரத்தையும், ஞகரத்தையும் ஒலியன்களாக நிறுவ, வேற்றுநிலை வழக்குகள் காணப்படவில்லை. கற்றோர் மொழியில் 'kh, g, gh, d, dh, th, ph, b, bh, s, *ṣ*, *kṣ*, *h*, *s*, *ḍ*' முதலியன உள்ளன; ஆனால் இவை ஒலியன்கள் இல்லை. வடமொழியின் செல்வாக்கு இங்குத் தெளிவாகப் புலப்படுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒட்டக் கூத்தரின் பாடல்களில் ரகரமும் லகரமும் மொழி முதலில் வருகின்றன. வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தியிருப்பதால் தமிழில் வழங்காத ஒலிக்கூட்டுக்களும் வருகின்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பவணந்தி முனிவர் தெளிவுபடுத்துவது போல, இந்தப் போக்கு மணிப்பிரவாள இலக்கியங்கள் தவிரப் பிறவற்றில் மறைந்து விடுகிறது.

4. 0 மாற்றங்கள் — பொது

மெய்யொலிகளில் ஏற்படும் மாறுதல்களால் சிக்கலெதுவும் இல்லை. உயிரொலி மாற்றங்கள் அவ்வாறல்ல. முதலில் அவற்றின் அளவில் மாறுதல் இருந்தது. அவற்றின் தன்மையிலும் மாறுதல் இருப்பது மேலும் வியப்பளிப்பதாயுள்ளது. மொழி முதலில் ஏற்படும் 'இ > எ', 'உ > ஒ' ஆகிய மாற்றங்களை டாக்டர் கால்டுவெல் விவரித்துள்ளார். எகர, உகரமாக உயிர்கள் மாறுவது பின்னர் விளக்கப்படும். அது போல அகரமாக மாறுவதை விளக்க இயலவில்லை. பேச்சு மொழி உச்சரிப்பு குறிப்பாக உணர்த்துவது போல' அகர வரிவடிவம் உச்சரிப்பில் பல்வேறு மதிப்புக்களைக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. சொற்களின் பழைய வடிவங்களில் பின்னர் அகரம் வரும்பொழுது இந்தச் சிக்கலுக்கு விளக்கம் தோன்றுகிறது. அய் > எய் > எ > அ, அவ் > அ, அய் > அ > எ போன்ற சிதறலான, தொடர்ச்சியற்ற மாற்றங்களும் கூடப் பிற்காலத்திய பேச்சு மொழிச் சொற்கள் பலவற்றை விளக்கக்கூடும் என்ற நம்பிக்கையில் அவையெல்லாம் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

4.1 உயிரொலி மாற்றம் — அளவு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடத்தின் [அல்லது கோவிலின்] பெயர் 'திருவேட்களம்' என்பதாகும். அது 'திருவெக்களம் > திருவகுளம்' என மாறி உள்ளது. இவ்வாறு குறிப்பாக, நெடில் மெய்களுக்கு அல்லது மெய் மயக்கங்களுக்கு முன்னர் நெட்டுயிர்கள் குற்றுயிர்களாக ஆவது என்பது பல்லவர் காலத்திலும் பின்னரும் பெரு வழக்காகும்.

சான்று:	நீக்கி	> நிக்கி
	ஆழாக்கு	> ஆழக்கு
	தீந்தமிழ்	> திந்தமிழ்
	வீற்றிருந்தருளி	> விற்றிருந்தருளி
	மூன்று	> முன்று

4.2 உயிரொலி மாற்றம் — தன்மை.

புதிய மயக்கங்களும் சுரபத்தியும் (Svarabhakti)

மெய்யினையும் அதைத் தொடர்ந்து உயிரினையும் உடைய அசையானது, வழக்கால் விதிக்கப்படும் அளவினை உடையதாக இருக்கவேண்டும். அதாவது, மெய்க்கு அரை மாத்திரையும் உயிருக்கு —அதன் அளவைப் பொறுத்து, ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகளும் உண்டு. ஆனால் நீரில் உப்பு கரைவது போல, அசையில் உள்ள மெய்யின் அளவு உயிருடன் கலந்து விடுவதாக உரையாசிரியர்களும் சில இலக்கண ஆசிரியர்களும் கூறுகின்றனர். இதனால் அசையின் அளவு அதில் உள்ள உயிரின் அளவைப் பொறுத்தே அமைகிறது. மெய் ஒலி மறைவதில்லை; ஆகையால் உயிரின் அளவே குறைக்கப்பட்டது. இது தொல்காப்பியரின் குறில் உயிர் பற்றிய கொள்கையையே நமக்கு நினைவூட்டுகிறது. உயிர்கள், குறிப்பாக வெடிப்பொலிகளுக்கும் ர்/ல் ஆகியவற்றுக்கும் இடையில் உள்ள உயிர்கள், அடிக்கடி மறைந்து புதிய மெய்ம் மயக்கங்களுக்கு வழி வகுக்கின்றன; ஆனால் அசையானது 'அசைமுதல்' மாதிரியான அசையாக மெய்களின் நெகிழ்வான மாற்றங்களுக்கிடையில் நிலை நிறுத்தப்படுகிறது. பழைய உயிர்களிலிருந்து பெரும்பாலும் மாறுபட்ட சுரபத்தி உயிரை இத்தகைய மெய்மயக்கங்களைத் தவிர்க்கப் புகுத்துவதும் உண்டு.

அ. சுரபத்தி — இ

பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கும் முறையை ஆராய்ந்தால், சுரபத்தி உயிர்கள் இகரமும் உகரமுமே என்பது புலனாகும்.

முந்திய அல்லது அடுத்த ஒலி இதழொலியாகவோ, நாவளையொலி யாகவோ இருக்குமாயின் உகரம் வருகிறது. தமிழ் இயற்சொற் களிலும் விரைந்தொலித்தலால் ஏற்படும் 'மயக்கங்களைத்' (Clusters) தவிர்க்க இவை வருகின்றன. தகர, ரகர மெய்களைப் பொறுத்த வரையில் மயக்கங்கள் தோன்றும் போக்கினை வீரமாமுனிவர் கவனித்துள்ளார்.

சான்று: திரிசி > த்ரிசி
பலா > ப்லா > பிலா
புரு > ப்ரு > பிரு

பல்லவர் காலத்தைச் சேர்ந்தனவாகக் கவனிக்கப்பட்ட மாற்றங்களை இங்குத் தொகுக்கலாம்.

— அ — > — இ —

மங்கலம் > மங்கிலம்
மேலன > மேலின
கடா > கிடா
மதுரை > மதிரை

ஆ. சுரபத்தி — / உ

பிறிதொரு சுரபத்தியான உகரமும் வழக்கில் உள்ளது. இம் மாற்றம் பிற்காலத்தில் காணப்படும் வடிவங்களைக் கொண்டு விளக்கப்படுகிறது.

சான்று:

மகிழ > மக்ழ* > மகுழ
விழிஞம் > வுழிஞம்

4.3 உயிரொலி மாற்றத்திற்கான காரணங்கள்

உருபனியல், ஒலியியல் தனித்தன்மைகளின் விளைவாக, இதே போக்கு சோழர் காலத்திலும் தொடர்கிறது.

சான்று:

— அ — > — இ —

அதனுக்கு > அதினுக்கு
சுலபம் > சிலபம்
மேலன > மேலின

— அ — > — உ —

கொண்டது > கொண்டுது
புகுந்தது > புகுந்துது

தொடர்ந்து வரும் இதழொலி அல்லது பல்லிதழ் ஒலி அகரத்தை இதழ்குவிவைப் பெறுமாறு செய்து உகரமாக்குகிறது, சான்று :

கேசவன் > கேசுவன்

உ > இ

அமுது > அமிது

அருளின > அரிளின

சதுரத்து > சதிரத்து

செலுத்தி > செலித்தி

எ > இ

பெயரால் > பியரால்

செலவு > சிலவு

உருபனியல் மாற்றம்

மேலே குறிப்பிடப்பட்ட மாற்றம் உருபனியலில் ஏற்படும் ஒரு மாற்றத்தின் விளைவாலும் ஆகும். இவைகள் சாரியைகள் என்றழைக்கப்படுகின்றன; அதாவது இவை பழைய சிறப்பை இழந்து விட்ட உருபுகளாகும். தொல்காப்பியர் காலத்தில் 'இன்' என்பதைவிட 'அன்' என்பது பெருவழக்கு உடையதாக இருந்தது. பிற்காலத்தில் 'அன்' வருமிடங்களில், 'இன்' வருகிறது. தொல் காப்பியத்திலேயே இப்போக்கைக் காணலாம்.

மேல் + அன் + அ > மேல் + இன் + அ > மேலின எனும் மாற்றம் இவ் உருபியல் மாற்றத்தின் விளைவாகலாம்.

உருபனியல் நிலையில் உள்ள பிறிதொரு போக்கால் இகரம் உகரமாக மாறியிருக்கலாம். ஒரு அடியோ (சான்று : பங்கு) அல்லது 'செய்து' எனும் வினை எச்சமோ (சான்று : கொண்டது) உகரத்தில் முடிந்தால் கட்டு வடிவங்களில் கூட அது பேணிக் காக்கப்படு கிறது. பின்வரும் உருபுகளிலுள்ள பழைய உயிர்கள் இழக்கப் படுகின்றன.

சான்று :

பங்கினல் > பங்குனல் (பங்கு + இன் + ஆல்)

கொண்டது > கொண்டுது (கொண்டு + அ + து)

உருபனியல் நிலையில், ஒப்புமையாக்கத்தால் வரும் பிறிதொரு போக்கும் உண்டு. 'செய்து' எனும் வினை எச்சங்கள் பல உகரத்தில் முடிகின்றன. ஆனல் வேர்கள் என்பன குற்றுயிர் உகரத்தில்

முடிந்தால், சேர்க்கப்படும் உருபு 'இ' ஆகும். 'செய்து' எனும் வினையெச்சங்கள் சிலவற்றில் இவ்வாறாகத் 'தி' என்பது இறுதி அசையாக இருக்கும் துகரத்தை அடிப்படையாகக் கொண்டு, மிகு தியாக வழங்கும் 'செய்து' எனும் வினை எச்சத்தின் 'தி' முடிவானது ஒப்புமையாக்கத்தால் துகர முடிவாகிறது. இதற்கான சான்றுகள் எட்டாம் நூற்றாண்டிலும் பதினோராம் நூற்றாண்டிலும் உண்டு.

சான்று :

அடிப்படுத்தி > அடிப்படுத்து

படுத்து என்பது படு என்பதன் இறந்தகாலமாகவும் இருக்கலாம்.

ஒலிமாற்றங்கள் :

அ. முன் உயிர்கள் உயிர்த் தொடரரதல்

முன் உயிர்களான இ, ஈ, எ, ஏ முதலியன யகர மெய் முடிவுடன் உயிர்த் தொடராக மாறுகின்றன. 'ஐ' என்பது கூட 'ஐய்' என எழுதியுள்ளமை அறியப்பட்டுள்ளது.

ஆ. மேல் உயிர்களில் மாற்றம்

முதலசையில் இ, உ என்பன முறையே எ, ஓ வாக மாறுகின்றன. ஆனால் இப்போக்கு சமஸ்கிருதச் சொற்களைப் பொறுத்த வரையிலேயே காணப்படுகிறது.

சான்று :

நிதி > நெதி
புத்தகம் > பொத்தகம்
உலகம் > ஓலகம்

இகரம், ஒகரமாக ஒரே வழி மாறுவது தமிழ்ச் சொற்களிலும் உள்ளது.

சான்று :

பிறவும் > பெறவும்

ஆனால் இதற்கு முரணான போக்கும் உண்டு. அது போலி நாகரிக ஆக்கத்தின் (Hyperurbanization) விளைவாகலாம். 'எனக்கு' என்பதற்குப் பதில் 'இனக்கு' எனும் வடிவம் 11ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் காணப்படுகிறது.

பதினோராம் நூற்றாண்டிலிருந்து தமிழ்ச் சொற்களிலும் உகரம் ஒகரமாக மாறுவது மிகுதியாக நிகழத் தொடங்கியது.

சான்று :

குலைதர > கொலைதர
குந்தள அரசர் > கொந்தள அரசர்
உபாதி > ஒபாதி
குலோத்துங்க > கொலோத்துங்க

இ. இ > அ

இகர அகர மாற்றங்களும் உண்டு.

சான்று :

எதிர் > எதர்
அதியமான் > அதயமான்
ஞாயிறு > ஞாயறு
பெறுமிடத்து > பெறுமடத்து

இக்காலப் பேச்சு வழக்கிலும் பின்வருவன உள்ளன.

ஞாயிறு > ஞாயறு
வயிறு > வயறு

இம்மாற்றங்கள் பின்னர் விளக்கப்படும்.

ஈ. இடையண்ணச் சாயல் பெறுதல்

இடையண்ணச் சகர மெய்க்குப் பின்னர் மொழியிறுதி உகரம் இகரமாக இடையண்ணச் சாயல் பெறுவதையும் குறிக்கலாம்.

சான்று :

கழஞ்சு > கழஞ்சி

நுனிநா பல் வெடிப்பொலி தகரமும் அதற்கு இனமான மூக்கொலி நகரமும், இ, ய், ஐ ஆகியவற்றுக்குப் பின்னர் சேர்ந்து வரும் பொழுது இடையண்ணச் சாயல் பெறுகின்றன.

சான்று : ஐந்து > அஞ்சு

அகரத்தை தொடர்ந்து இடையண்ண ஒலி வருமாயின், அது ஐ என மாறுகிறது.

சான்று : அரசர் > அரைசர்

இது பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டு இலக்கிய வழக்குகளில் தொடர்கிறது.

சான்று : சமயம் > சமையம்
வேள்குலச்சளுக்கு > வேள்குலேச்சளுக்கி
தச்சன் > தைச்சன்

இடையண்ண ஒலி முன்னரோ அல்லது பின்னரோ வாராத நிலையிலும் அ > ஐ மாற்றம் உண்டு. இது இக்காலத்திலும் கூடச் சில சமூகக் கிளை மொழிகளில் (Social Dialects) காணப்படுகிறது.

சான்று : அத்தை > ஐத்தை

இது பாமரர் (folk etymoloy) பாங்கிலுலான வழக்கு எனவும் கூறலாம். ஐ ∝ ஆய் என்றால் அன்னை என்பது பொருள்.

ஐ > அ

'ஐ' அகரமாக மாறுமிடங்கள் உண்டு. ஐந்து > அஞ்சு, இரட்டித்த நுனிநா பல் மூக்கொலிகள் கூட இடையண்ண ஒலிகளை அடுத்து இடையண்ண மூக்கொலிகளாகின்றன.

— ந்ந் — > ஞ்ஞ —
ஐந்நூறு > ஐஞ்ஞூறு
இந்நிலம் > இஞ்ஞிலம்

ஐ > எ

'அரசர் ∝ அரைசர்' என்பது 'அரெசர்' என்றும் காணப்படுகிறது. ஐகாரம் எகரமாகிறது. சினை > சினெ; எல்லை > எல்லெ; தலை > தலெ.

இறுதி எகரம்

மொழி இறுதி எகரம் பண்டைத் தமிழில் இல்லை. அது இப்பொழுது வழங்கத் தொடங்குகிறது. அது ஏ > எ, ஐ > எ மாற்றங்களின் விளைவாகலாம்.

எகரத்தின் மதிப்பு

அரைசன் > அரெசன் என்னும் பொழுது குறில் எகரம் அகரமாக அடிக்கடி எழுதப்படுகிறது. அது மொழி இடையில் வருவதில்லை. கீழ் நடு அகரம் அவ்விடத்தில் முன் கீழ் இடை 'ɛ' கரமாகிறது என்பதை அரெசன் என்ற வடிவம் காட்டுகிறது.

வடமொழிச் சொற்களில்

இது முதலசையில் உள்ள அகரத்திற்கும், அதிலும் சிறப்பாக ஒலிப்புடை மெய்யுடன் தொடங்கும் சமஸ்கிருதச் சொற்

களைப் பொறுத்த வரையிலும் மிகுதியாக ஏற்படுகிறது. இவை ஒரே மாதிரியாகப் பின்வருமாறு தமிழாக்கப்படுகின்றன.

கங்கா > கங்கை ∝ கெங்கை
தண்டா > தண்டம் ∝ தெண்டம்

தமிழ்ச் சொற்களில்

பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு சமஸ்கிருதச் சொற்களுடன் பிறசொற்களிலும் இம்மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

கல் > கெல்
களிறு > கெளிறு

2 இகரத்திற்கு முன்னர் வரும் மொழி முதல் உடம்படுமெய்

பல்லவர் காலத்தில் முன் உயிர்கள் யகர உடம்படுமெய்யுடன் உயிர்த் தொடர்களாயின என்பதை முன்னர்க் கண்டோம். 11, 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் முன் உயிர்கள் யகர உடம்படு மெய்யை மொழி முதலில் பெறத் தொடங்குகின்றன.

சான்று :

இக்கோயில் > யிக்கோயில்
இரண்டு > யிரண்டு
இறை > யிறை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தகைய உச்சரிப்புக்களைக் கால்டுவெல் கவனித்துள்ளார். இதன் காரணமாக மொழி முதலிலில்லாத இடங்களிலும் யி > இ ஆக மாறும் 'போலி நாகரிக ஆக்கம்' உள்ளது.

ஆயிரம் > ஆஇரம்

வரலாம் எனக் கொள்ளப்பெற்ற உயிர் மயக்கத்தையுடைய பழைய வடிவமான 'ஆஇரம்' என்பதிலிருந்து, இவ்வடிவம் மாறுபட்டது.

௩. இதழ்ச்சாயல் பெறுதல்

அகரத்தைத் தொடர்ந்தோ அல்லது அதற்கு முந்தியோ இதழுயிர் வருமாயின் அகரம் இதழ்ச் சாயல் பெறுகிறது.

சான்று :

வானகப்பாடி > வானகொப்பாடி
அனுபவித்து > அனுபொவித்து
புறவரி > புறுவரி
செப்பருந்திறத்து > செப்பொருந்திறத்து

இதே சூழலில் வேறிடங்களில் அகரம் நடுப் பின் உயிராகவோ அல்லது பின்மேல் இதழ்விரி உயிராகவோ உச்சரிக்கப்படும். இக் கால உச்சரிப்புக்களிலும் இதழொலியாதலைக் காண்கிறோம். 'கம்பம் > கம்பொம் ∝ கம்பொ' முன்னிலைப் பன்மை விகுதியான 'உங்கள்' என்பது 'உங்கொள்' என்றாகிறது. கள் > கொள் ஆவது, வைணவ மணிப்பிரவாள நடையில் கூட இந்தக் கால கட்டத்தில் அமைந்துள்ளது. 'கேட்டீர்கள்' என்பதற்குக் 'கேட்டீர்கொள்' என்ற வடிவத்தையும், 'காடுகள்' என்பதற்குக் 'காடுகொள்' என்பதையும் காண்கிறோம்.

இ > உ

பின்வருபவற்றை நோக்குக. அவை பின்னர் விளக்கப்படும்.

களிறு	>	களுறு
தமிழ்	>	தமுழ்
தம்பிரான்	>	தம்புரான்
மதில்	>	மதுல்
முசிறி	>	முசுறி

எகரமும் பின்னரோ அல்லது முன்னரோ இதழ் ஒலிகளோ நாவளை ஒலிகளோ நுனியண்ண ஒலிகளோ வருமாயின் இதழ்ச் சாயல் பெறுகிறது. சான்று: 'எப்பேர்பட்ட > எப்போர்பட்ட' என்பது 11, 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் வருகிறது.

தென்றிசை	>	தொன்றிசை
செம்பாதி	>	சொம்பாதி
நெளித்து	>	நொளித்து
செவிடு	>	சொவிடு

'சொவிடு' என்ற வடிவம் பின்னர் 'சோடு' என்றானது. 'செம்' > 'சொம்' என்பதன் அடிப்படையிலான ஒப்புமையாக்கத்தால் 'செந்தாமரை > சொந்தாமரை' என்றாகிறது. இவற்றிலெல்லாம் எகரம் நடு உயிராகவும் இதழ்குவி உயிராகவும் ஆக்கப்படுகிறது.

5. 0 மெய்கள்

ட், ற்

தொல்காப்பியர் காலத்தில் நாவளையொலியாக இல்லாதிருந்த டகரம் இப்பொழுது சமஸ்கிருதச் செல்வாக்கால்

நாவளையொலியாகிறது. தமிழ் டகரத்தை சமஸ்கிருத வரிவடிவத்தில் எழுதியிருப்பதைக் காணும் பொழுது இது புலனாகும். நுனியண்ண வெடிப்பொலியான றகரமும் சமஸ்கிருதத்தில் நாவளையொலி டகரமாக எழுதப்பட்டது காணப்படுகிறது. இது இரட்டித்து வரும் போது பல்லொலியாக மாறிய நுனிநா பல்லொலியின் உச்சரிப்பினைப் பாதித்திருக்க வேண்டும்.

மெய்யொலிகள் இடையண்ணச் சாயல் பெறுதல்

i. ஞ்

இலக்கிய மொழியில், அப்பர் பாடல்களில் பின்வருவன காணப்படுகின்றன.

கைந்நின்ற > கைஞ்ஞின்ற
மெய்ந்நின்ற > மெய்ஞ்ஞின்ற
செய்ந்நின்ற > செய்ஞ்ஞின்ற

சில போது முன்னர் வரும் இடையண்ண அல்லது முன் உயிர் இதற்குக் காரணமாக — சூழலாக — அமைகிறது எனக் கருதலாம். எனினும் வேறு பலவிடங்களில் இப்படிப்பட்ட சூழல்களை வரையறுக்க முடியாது.

நெகிழ்த்து > ஞெகிழ்த்து ;
முந்நாழி > முஞ்ஞாழி ;
நகர் > ஞகர்

ஒருவேளை இவற்றிலெல்லாம், கிளைமொழி வழக்குகளிலும் மலையாளத்திலும் தொடர்ந்து பயன்படுத்தப்பெற்ற ஞகர மெய்யே மூல ஒலியாக இருந்திருக்கலாம்.

ii. ச்

'த்த்' கூட, அதன் முன்னர் இடையண்ண ஒலி அல்லது முன் உயிர் வருமாயின் அண்ணச் சாயல் பெற்று 'ச்ச்' என்றாகிறது.

சான்று : வைத்த > வைச்ச

சிலப்பதிகாரத்திலும் இடையண்ண மூக்கொலி இரட்டை வருகிறது.

சான்று : அஞ்ஞை, முஞ்ஞை, மஞ்ஞை

'ஞாய்' என்பதில் உள்ள ஞகர மெய் முன்னிலை இடப்பெயரின் மொழி முதல் மெய் ஆகும். இடையண்ண மூக்கொலிகள் மலையாளத்திலும் தமிழில் சில வட்டார வழக்குகளிலும் தவிர

ஏனைய திராவிட மொழிகளில் மறைந்து விட்டன. இகர அல்லது யகரத்திற்குப் பின்னே வரும் இடையண்ண மூக்கொலிகள் பல்லவர் கால இலக்கிய மொழியில் வந்தன. ஆனால் விரைவில் இவையும் நின்று போய்விட்டன. சோழர் காலத்தில் நுனிநா பல் ஒலிகள் போற்றப்பட்டன. இவ்வொலிகளைத் தொடர்ந்து வைத்திருந்த மலையாளம் தனி மொழியாகக் கருதப்படும் நிலை ஏற்பட்டது. நன்னூல் உரையாசிரியர் அண்ணச்சாயல் பெறுவதைக் கொள்ள வேண்டியதில்லை என்கிறார். ஆனால் 'த்த்' என்பதன் அண்ணச்சாயல் பெற்ற வடிவங்கள், இன்று வரை பேச்சு மொழியில் உள்ளன.

சான்று :

வைத்து > வைச்சு

பின்னர் மொழியிறுதி உகரமும் இகரமாகிறது.

வைச்சு > வைச்சி
அஞ்சு > அஞ்சி என வருவதையும் காண்க.

அண்ணச் சாயல் பெறுவதற்குக் காரணமாக இருந்த இகரம் அல்லது யகரம் பின்னர் மறைகிறது.

iii தூழல் மறைதல்.

வேர்களின் இறுதியில் வரும் யகர மெய் பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் மறைகிறது.

சான்று :

வாய்க்கால் > வாக்கால்
செய்த > சேத
மேய்ந்த > மேந்த

அண்ணச் சாயல் பெறுதல் மறைந்து பல்லினச் சாயல் பெறுதல் இடம் பெறுகிறது

இடையண்ண ஒலிகள் பல்லினச் சாயல் பெறுதல் சோழர் காலத்தில் நன்கு நிலைபெற்று விட்டது.

சான்று :

ஞாயிறு > நாயிறு
சண்டேஸ்வர > தண்டேஸ்வர
செரு முனை > திருமுனை

இதன் விளைவாகக் கொங்கு நாட்டில் ஞகர மெய் இடையண்ண வெடிப்பொலிக்கு முன்னர் வருவதைத் தவிர பிறவிடங்களில் வழக்கிழந்துவிட்டது.

6. 1 வெடிப்பொலிகள் ஒலிப்புடையொலியாதல் : கல்வெட்டுச் சான்று

பல்லவர் காலத்தில் வெடிப்பொலிகள் ஒலிப்புடை ஒலிகளாக உச்சரிக்கப்பட்டதற்குச் சான்றுகள் உண்டு. ஆனால் இது எல்லாக் கிளைமொழிகளிலும் ஒரே மாதிரியாகக் காணப்படவில்லை. இம்முடிவு கல்வெட்டுக்களின் சமஸ்கிருதப் பகுதியில் வரும் தமிழ் இடப்பெயர்களையும், உயர்திணைப் பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். கல்வெட்டுக்களின் தமிழ்ப் பகுதியில் கூட, சமஸ்கிருதத்தைத் தென்னகத்தில் எழுதப் பயன்படுத்திய கிரந்த எழுத்துக்கள் சிலவிடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சான்றாக 'ந்த்' என்பது கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில் சமஸ்கிருத ஒலிப்புடை ஒலிகள்கூட ஒலிப்பிலா ஒலிகளாகச் சமஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டுள்ளன. இவையே வேறிடங்களில் ஒலிப்புடை ஒலியாக எழுதப்பட்டுள்ளன. கல்வெட்டுச் சான்றுகளை இரு தலைப்புக்களின் கீழ் ஆராயலாம்.

1 உயிர்கட்கு இடையில் வரும் வெடிப்பொலிகள்.

2 இன மூக்கொலிகட்குப் பிறகு வரும் வெடிப்பொலிகள்.

ஒலிப்புடை வெடிப்பொலி எதுவும் வருமாயின் அதை சமஸ்கிருத உச்சரிப்பு பேணப்படுவதற்கான சான்று எனக்கொள்ளலாம். எனவே அவை இங்கு ஆராயாது விடப்படுகின்றன.

அ. உயிரிடை வெடிப்பொலி

கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நெடுஞ்சடையன் பராந்தகனின் (765—790) வேள்விக்குடிச் சாசனத்தில் பின்வருமாறு உள்ளது :

Parāgan > Parākan (சமஸ்கிருத இயற்பெயர்)

வரகுணனின் (800—830) சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளில் பின்வருமாறு உள்ளது :

Vaṭakaḷavaḷi

ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்றாம் நந்திவர்மனின் பாகூர்ச் செப்பேடுகளில் பின்வருமாறு உள்ளது:

Nilaiṭāṅgi

பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தர சோழனின் அன்பில் செப்பேடுகளில் பின்வருமாறு வருகின்றன :

Karikālan
Nallaṭi

பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் இராசேந்திர னின் கல்வெட்டுக்களில் பின்வருமாறு உள்ளது:

Rājagēcari

(சமஸ்கிருத ஒலிப்பிலா ஒலியான 'k' என்பது சமஸ்கிருத வரிவடிவத்திலேயே 'g' என ஒலிப்புடை ஒலியாக எழுதப் பட்டுள்ளது)

பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த வீர இராசேந்திரன் கல்வெட்டுக்களில் பின்வருமாறு உள்ளது:

Kūṭaḷ

ஆனால் இக் கல்வெட்டில் வரும் 'Saugariyam' (சௌகரியம்) என்பதையும் நோக்குக. ஆனால் இது சமஸ்கிருதச் சொல்லாகும். '*asuragaṇa*' (அசுரகணங்கள்) என்பதையும் நோக்குக. ஆனால் இதுவும் சமஸ்கிருதச் சொல்லாகும்.

tuṇaiyākavum
kaṭiyaṭu

எனவே சமஸ்கிருதச் சொற்களைத் தவிர ஏனையவற்றில் பதி னோராம் நூற்றாண்டு வரை உயிரிடை வெடிப்பொலி ஒலிப்பின்றியே வழங்கியமை விளங்கும்.

ஆ. இன மூக்கொலிகட்குப் பின்னர் வரும் வெடிப்பொலிகள்

ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சின்னமனூர்ச் செப் பேடுகளில் பின்வருவன உள்ளன:

Vēmpaṉāṭu
Ceṅkuṭi

ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்றும் நந்திவர்மனின் கல்வெட்டுக்களில் பின்வருவன உள்ளன:

ஆனால் தந்திவர்மன் என்பதை நோக்குக.

நிலைதாங்கி
விளங்காடு
இந்த
நந்தில்

நந்தி
நந்தா விளக்கு
தவிந்தது
nandāviḷakku என்பதைக் காண்க.

பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தர சோழனின் ஆவணங்களில் பின் வருவன உள்ளன:

கோச்செங்கணான்
அரிஞ்சிகன்
அருந்தூர்

பத்து, பதினோராம் நூற்றாண்டுகளைச் சார்ந்த இராஜ ராஜ சோழனின் ஆவணங்களில் பின்வருவன உள்ளன:

காந்தளூர்
நுளம்பபாடி
திண்டிறல்
சந்திராதித்தவல்

பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த இராசேந்திரனின் ஆவணங்களில் பின்வருவன உள்ளன:

ராஜேந்திர
வந்தெதிர்

பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரராஜேந்திரனின் ஆவணங்களில் பின்வருவன உள்ளன:

தஞ்சாபுரி
கடிந்து
எழுந்தருளி
இறந்த
எறிந்த
வீற்றிருந்தருளிய

ஆனால் சங்கமன் (இது சமஸ்கிருதச் சொல்லாகும்) என்னும் வழக்கைக் காண்க.

சில சமஸ்கிருதச் சொற்களைத் தவிர ஏனையவற்றில் இன மூக்கொலிகளைத் தொடர்ந்து வரும் வெடிப்பொலிகள் ஒலிப்பிலா ஒலிகளாகவே உள்ளன.

குமாரிலபட்டரின் சான்று

சமஸ்கிருதத்தில் புகுந்த சில சொற்களைக் குமாரிலபட்டர் குறிக்கிறார். ஆனால் அவரது கருத்துப்படி அவை சமஸ்கிருதச் சொற்களல்ல. அவை தமிழ்ச் சொற்கள் என இப்பொழுது இனங் காணப்பட்டுள்ளன. புகழ் பெற்ற அவரது சொற்கள் வருமாறு:

> "எனவே திராவிட மொழி முதலானவற்றில் மெய்யில் முடியும் சொற்களுடன் உயிர் ஒலியையோ அல்லது பெண்பால் விகுதியையோ சேர்ப்பதால் நமது மொழியில் (சமஸ்கிருதத்தில்) வேறு பொருள் தருகின்ற சொற்களைப் பெறுகிறோம். சான்றாகச் 'சோர்' என்பது 'சோர' என்றாகும் பொழுது, திருடன் எனப் பொருள்படுகிறது. இங்ஙனமே 'உண்மை' கடத்தற்கு அரியதாய் இருப்பதால் (dustra) பாதையானது "கடத்தற்கு முடியாததாக" (atara) இருக்கிறது என்ற பொருளில் 'அதர்' என்பதை 'அதர' என ஆக்குகிறோம். பகரத்தில் முடியும் 'பாப்' என்ற சொல் 'பாம்பு' என்ற பொருளைத் தருகிறது; ஆனால் அதனுடன் அகரத்தைச் சேர்க்கின்ற பொழுது 'பாப' என்றாகிறது. "உண்மை; அது பாபமாகும்" என்று கொள்கிறோம். இது போலவே 'மால்' (= பெண்) என்பதனை 'மாலா' = மாலை என்றாக்கலாம். இதனை உண்மை என்கிறோம். இது போலவே ரகரத்தில் முடியும் 'வைர்' வயிறு என்ற பொருளைக் குறிக்கும். ஆனால் வைர் என்று சொல்லிப் பாருங்கள். மக்களைக் குற்றஞ் செய்யத் தூண்டுகின்றமையால் வயிறு ஒரு பகைவன் (வைரி) போலவே செயல்படுகிறது. திராவிட மொழிகளைப் பொறுத்த வரையில் சொற்களை எளிதாக விளக்கலாம். எனினும் பாரசீகம், காட்டுமிராண்டிக் கிரேக்கம், உரோமன் போன்ற மொழிச்சொற்களை எங்ஙனம் விளக்கலாம் என்பது தெரியவில்லை".

முதலில் பின் வரும் உண்மைகளை நாம் அறிந்து கொள்கிறோம்:

1. 'ச்' என்பது முதலில் ஒலிப்பிலா இடையண்ண ஒலியாகவே இருந்தது (சோர்).
2. இதழ்விரி உயிர்கள் அவரால் கவனிக்கபடவில்லை (சோர்).
3. 'மால்' என்பதும் 'மாள்' என்பதும் ஒன்றே. இது மகள் என்பதன் மாற்று வடிவமாகும். லகர, ளகர மெய்களின் வேறுபாடு சமஸ்கிருதத்தில் உணரப்படவில்லை.

4. நுனியண்ண வெடிப்பொலி உயிரிடையிலும் இறுதியிலும் ரகர மெய்யிலிருந்து வேறுபடுத்தி (*vair* ~ *vayiṛu*) உணரப்படவில்லை.

5. 'பாம்பு' என்பதன் வேற்றுமை உருபேற்கத் திரிந்தவடிவம் 'பாப்' என்பதாகும்.

இவற்றோடு கூட இன்னும் முக்கியமாக உயிரிடை வெடிப் பொலி ஒலிப்பிலா ஒலியாகவே அவர் காலத்தில் இருந்தது என்பதை மேலே குறிப்பிடப்பட்ட பகுதி மெய்ப்பிக்கிறது.

முடிவு

முன்னர்க் கூறிய சான்றிலிருந்து ஒலிப்புடைமைக்கான திட்ட வட்டமான சுவடு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில்தான் கிடைக் கிறது. ஆனால் பின்னர் இதன் வழக்காறு மிகுந்து கொண்டே செல்கிறது. இப்புதிய உச்சரிப்பானது பழைய உச்சரிப்பை முழுவது மாக அகற்றிவிடவில்லை. அதாவது கட்டற்ற அல்லது நிபந்தனை யற்ற மாற்றம் நிகழ்கிறது. மூக்கொலிகளை அடுத்த வெடிப்பொலி களில் ஒப்புடையனவாதல் மிகுதியாக இருந்திருக்கலாம். இம் மாற்றந்தான் முதலில் நிகழ்ந்திருக்க வேண்டும்; பின்னர் வெடிப் பொலிகள் அச்சூழலில் மூக்கினச்சாயல் பெற்றன, 'மூக்கினச் சாயல் பெறுதல்' முதலில் கடையண்ண வெடிப்பொலியைப் பாதித்திருக்கலாம். 'அங்கனம்' என்பதற்குப்பதில் 'அங்ஙனம்' என்பது செய்யுட்களில் கூட வருவது இம்முடிவை உறுதிப்படுத்தும். ஏனைய வெடிப்பொலிகள் ஒரோ வழி மூக்கினச் சாயல் பெறுதல் என்பது சோழர் காலத்தில் தொடங்கியது.

முகத்து > முகந்து
பெரும்பாணப்பாடி > பெரும்மாணப்பாடி
அம்பது > அம்மது

இப்போக்கு மலையாளத்தில் நிலையாக இடம் பெற்றது. தமிழில் கூடப் பிற்காலத்தில் இது வளர்ந்தோங்கி வந்துள்ளது.

6.2 ஒன்றுதல்

நகர மெய்யும் னகர மெய்யும் ஒன்றுதல்

நுனிநா பல் மூக்கொலி நகரமும், நுனிநா நுனியண்ண மூக்கொலி னகரமும் ஒன்றுதல் அடுத்த முக்கியமான பெரிய மாறுதலாகும். தொல்காப்பியர் காலத்திலேயே இம்மாற்றத்திற்கான அடிப்படை அமைந்திருக்கக் காண்கிறோம். ஆரம்ப நூற்றாண்டுகளில்

நுனிநா பல் மூக்கொலி உயிரிடையிலும் மொழியிறுதியிலும் வந்தது. ஆனுல் நுனிநா நுனியண்ண மூக்கொலியான னகர மெய் இரட்டித்து வரும் பொழுது அதனை 'ந்ந்' எனக் கொள்ளவில்லை. தொடக்கத்தில் இரட்டித்து வரும்போது இவ்வாறு பிறழ உணரப் பட்டன; ஆனுல் வெடிப்பொலிகளால் தொடரப்படும் பொழுது இம் மயக்கம் ஏற்படுவது இல்லை. ஆனுல் பின்னர் நுனியண்ண மூக்கொலிக்குப் பதில் நுனிநா பல் மூக்கொலி பின்கண்ட வரிசை முறையில் எழுதப்பட்டது.

1 இடையில்
2 இறுதியில்
3 முதலில்
4 இரட்டித்து வருமிடத்தில்

ஆனுல் பல்லவர் காலத்தில் நுனிநா பல் மூக்கொலிக்குப் பதில் நுனியண்ண மூக்கொலி வருமிடங்கள் மொத்தத்தில பத்து சதவிகிதமேயாகும்; அதே சமயத்தில் நுனியண்ண மூக்கொலிக்குப் பதில் நுனிநா பல் மூக்கொலி வருமிடங்கள் இரண்டு சதவிகிதமே யாகும். நுனிநா பல் மூக்கொலியின் இடத்தை நுனியண்ண மூக் கொலி பெற்றுக்கொள்கிறது என்பதையே இது காட்டுகிறது. இப்பதிலீட்டின் (Replacement) சதவிகிதம் குறைவாக இருப்பது, பல்லவர் காலத்தினில் இம்மாற்றங்கள் நிலைபெறவில்லை என்பதைக் காட்டுகிறது. நெடில் மூக்கொலிகள் இரு தனிமெய்களாகக் கருதப் பட்டன. இரண்டாவது மூக்கொலி நுனிநா பல் மூக்கொலியாகவே மிகுதியும் எழுதப்பட்டது. ஒரு வேளை அது மொழி முதல் எனக் கருதப்பட்டிருக்கலாம்; மொழி முதலில் நுனிநா பல் மூக்கொலி யையே எழுதுவது என்ற மரபானது இங்கிருந்து உருவாகி இருக்கலாம்.

றகர மெய்யும் ரகர மெய்யும் ஒன்ருதல்

தமிழ் ஒலியன் அமைப்பில் ஏற்பட்ட பிறிதொரு முக்கியமான மாற்றம் றகர மெய்யும் ரகர மெய்யும் ஒன்ருகியதாகும். இம் மாற்றத்திற்கான சுவடு பத்தாம் நூற்ருண்டில் தான் கிடைக்கிறது. இது ஒன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலேயே தொடங்கியிருக் கவும் இடமுண்டு. கிடைக்கக் கூடிய சான்றுகளைக் கொண்டு, இம் மாற்றம் நான்கு நிலைகளில் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

1	ற்கு	>	ர்க்க்;	மேற்கு	>	மேர்க்கு
	ற்ப்	>	ர்ப்ப்;	ஏவற்படி	>	ஏவர்ப்படி
2	ர்க்க்	>	ற்க்;	கார்க்களிறு	>	காற்களிறு
3	ர்க்க்	>	ற்க்க்	ஊர்க்கால்	>	ஊற்க்கால்
4	அ) —ர்—	>	—ற்—	தரை	>	தறை
	ஆ) —ற்—	>	—ர்—	நிறுத்த	>	நிருத்த

முதல் நிலையின் சுவடுகள் பத்தாம் நூற்றாண்டில் காணப்படுகின்றன; நான்காம் நிலையின் சுவடுகள் பதினோராம் நூற்றாண்டில் காணப்படுகின்றன. இவ்விரு ஒலிகளும் ஒன்றுவதன் விளைவாக இவற்றுக்கிடையேயான மயக்கம் மிகுதியாகிறது.

ளகர மெய்யும் ழகர மெய்யும் ஒன்றுதல்

சில கிளைமொழிகளில், குறிப்பாகத் தென்மாவட்டக் கிளைமொழிகளில் ளகர மெய்யும் ழகர மெய்யும் ஒன்றுதல் மற்றொரு ஒலியன் மாற்றமாகும். இங்கு இரு மாற்றங்கள் உண்டு.

வட மாவட்டக் கிளை மொழிகளில் ளகர மெய் ழகர மெய்யுடன் ஒன்றுகிறது. ஏழாம் நூற்றாண்டிலேயே 'ஆள்' என்பது 'ஆழ்' என 'நாடாழ்ச்சி' என்ற சொல்லில் எழுதப்பட்டது. 'ஆள்' (ஆளுதல்) என்ற வேர் தொடர்ந்து 'ஆழ்' என்னும் மாற்று வடிவத்தைப் பெற்றுள்ளது. பதினோராம் நூற்றாண்டில் 'கேள்' என்பது 'கேழ்' எனக் 'கேழ்வி' என்ற சொல்லில் எழுதப்பட்டது. பின்னர் இவ்விரு வேர்களுடன் கூடப்பின்வரும் சொற்களிலும் இப்போக்கு காணப்படுகிறது.

களம்	>	கழம்
உப்பளங்களுக்கு	>	உப்பளங்கழுக்கு
வளம்	>	வழம்

'கொள்' என்னும் வேரும் இதே மாற்றத்திற்கு உள்ளாகிறது. பன்மை விகுதியான 'கள்' மொழிக்கு இறுதியில் வராத பொழுது இதே மாற்றத்திற்கு உள்ளாகிறது. இம் மாற்றங்கள் பிற வடிவங்களுக்கும் விரிவுபடுத்தப்படுகின்றன. வைணவச் சான்றோர்களின் பெயரான 'ஆழ்வார்' என்பது முதலில் 'ஆள்வார்' என்றே இருந்திருக்க வேண்டும். அரசர்கள் 'ஆள்வார்' என்று அழைக்கப்படுவதை நோக்குக.

தென் மாவட்டங்களில் வலுவாக நிலைபெற்றுவிட்ட மாற்றமாகிய ழகரமும் ளகரமும் ளகரமாக ஒன்றுதல் மிகவும் முக்கியமானது. இந்த ஒன்றுதலின் சுவடுகள் எட்டாம் நூற்றாண்டிலேயே காணப்படுகின்றன.

கிழமை > கிளமை
கிழக்கு > கிளக்கு
புகழ் > புகள்

பதினோராம் நூற்றாண்டு இலக்கணமான வீரசோழியம் ளகர மெய் முடிவிற்குரிய சந்தி விதிகளை ழகர மெய் முடிவிற்கும் விரிவுபடுத்துகிறது.

வாள் + நாள் > வாணாள்
வாழ் + நாள் > வாணாள்

ழகர மெய்யும் ளகர மெய்யும், ளகர மெய்யாக ஒன்றுதலைச் சில இலக்கண ஆசிரியர்கள் ஒப்புக் கொண்டனர் என்பதை இது காட்டுகிறது. பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த பவணந்தியார் பழைய சந்தி விதியின் ஆட்சி விரிவானது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இவ்வாறு மொழியின் பழைய நிலைக்கே இலக்கிய வழக்கு மாறிச் செல்கிறது.

ல் ∞ ள்

தற்காலத்திய ஈரோட்டுக் கிளைமொழியில் லகர மெய்யும் ளகர மெய்யும் ஒன்றுகின்றன. இம்மாற்றத்திற்கான சுவடுகள் பழைய கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஆனால் அவற்றின் தொகை மிகவும் குறைவாக இருப்பதால், அவற்றை எழுத்துப் பிழைகள் எனத் தள்ளி விடலாம்.

6 3 பிற மாற்றங்கள் — ய், ர், ல்

அ. ய்

முன்னரே குறிப்பிடப்பட்டது போல மொழி இறுதியில் வரும் யகர மெய்கள் மறைகின்றன. இம்மறைதலைத் தவிர்க்க இவ்வொலி சிலவிடங்களில் 'யி' என உச்சரிக்கப்படுகிறது.

சான்று : செய் > செய்யி

ஆ. ய், ர், ல் :

தொடைநயம், அசை அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இம்மெய்கள் மூன்றையும் இல்லாதனவாகக் கருதலாம்

என யாப்பாசிரியர்கள் கூறுகின்றனர். ஓரசையைத் தொடர்ந்து இம்மெய்கள் வந்தால் அவ்வசை மூடசையாக ஆகாது. ஆகையால் இடத்தால் அது நெடிலசையாகும். பதினோராம், பன்னிரண்டாம், பதின்மூன்றும் நூற்றுண்டுகளில் ன், வ், ம், நெடில் வெடிப்பொலி, ந்த், இடையீடு ஆகியவற்றுக்கு முன்னர் ரகர மெய் மறைகிறது.

சான்று :	கீர்த்தியை	>	கீத்தியை
	கார்த்திகை	>	காத்திகை
	தளர்ந்த	>	தளந்த
	அவர் நாடு	>	அவ நாடு
	பெண்டிர்	>	பெண்டி
	வார்த்து	>	வாத்து

இ. ப் ∞ வ் ∝ ம்

ஒலியன் மாற்றமில்லாத வேறு சில மாற்றங்களையும் காண லாம். உயிரிடையில் பகரமெய் வகர மெய்யாவது பல்லவர் காலத் திற்கு முற்பட்ட காலத்தில் நிகழ்கிறது. —ப்— > —ம்— ஆவது சிலவிடங்களில் காணப்படும் புதிய மாற்றமாகும்.

சான்று : நிபந்தம் > நிமந்தம்

இலண்டன் மொழியியல் வட்டத்தினர் விளக்குவது போல 'நி-பம்' என்னும் இரு அசைகளும் மூக்கினச் சாயல் பெற்றிருக்க லாம். ஆனால் இது அருகி வரும் வழக்கமாகும். 'மிருக ~ விருக' ('விலங்கு') என மொழி முதலில் கூட ஆவது உண்டு.

ஈ. உயிரிடை வெடிப்பொலி இழப்பு அல்லது க் > ய்; ச் > ய்

உயிரிடை வெடிப்பொலிகள் இழக்கப்படும் போக்கு ககர, சகர மெய்களைப் பொறுத்த வரையில் காணப்படுகிறது.

சான்று :	வைகாசி	>	வையாசி
	இசைத்த	>	இயைத்த

இவற்றில் உயிரிடை வெடிப்பொலி இழக்கப்பட்டு இடையின யகர மெய் புகுந்ததாகக் கருதலாம். ஆனால் வகர மெய் வர வேண்டிய இடங்களிலும், ஒப்புமையாக்கத்தால் யகர மெய் வருகிறது.

சான்று : இகல் > இயல்

இடையண்ண வெடிப்பொலியைப் பொறுத்தவரையில் இலக்கிய மொழி யகர மெய்யைப் பெற்றிருக்க, தமிழில் சில கிளை மொழிகளும் பிற திராவிட மொழிகளும் சகர மெய்யைப் பெற்றுள்ளன. 'உயர்த்த' என்பதற்குப் பதில் 'உசத்த', 'குயவர்' என்பதற்குப் பதில் 'குசவர்' என வழங்கும் வடிவங்களை இது விளக்கும்.

2 வெடிப்பொலி அல்லாதன உகர முடிவைப் பெறுதல்

ஒலியன்களின் வருகைமுறையைக் குறித்து இன்னுமொரு செய்தியைக் கூற வேண்டியுள்ளது. பண்டைக் காலத்தில் வெடிப்பொலிகள் மட்டும் மொழிக்கு இறுதியில் வருவதில்லை. அவை உகர முடிவையே கொண்டன. இடைக்காலத்தில் வெடிப்பொலி அல்லாத மெய்களும் சில உயிர்களும் கூட உகர முடிவைக் கொள்ளும் போக்கு உள்ளது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இப்போக்கு உள்ளது. யாப்பியல் நூல்கள் இப்போக்கை உறுதிப் படுத்துகின்றன. யாப்பியல் அசைக்குரிய அதே வாய்பாட்டில் வருவதால் இந்த உகரம் குற்றியலுகரமாகத்தான் இருக்க வேண்டும். தொழிற் பெயராக வரும் வேரைத் தொடர்ந்து வேறு சொற்கள் வரும்பொழுது, அவ்வேருக்குப் பின்னர் இசை நிறைக்க உகரம் வரலாம் எனத் தொல்காப்பியம் அனுமதிப்பதால் இப்போக்குத் தொல்காப்பியர் காலத்திலேயே தொடங்கி விட்டது எனலாம்.

ஊ. இதழ் விரி உகரம்

மொழியிறுதியாக இல்லாத பொழுது குற்றியலுகரம் முழுமையான குறில் உகரம் போலச் செயற்படுகிறது. பல்லவர் காலத்தில் மொழிக்கு இடையிலும் கூட, அது முழுமையாக ஒலிக்காது விடப்படுகிறது. இந்த உகரம் இதழ்விரி உகரமாகிறதெனலாம்.

5. 4 ஆய்தம்

அசையாக எண்ணப்படும் மெய்யெழுத்து

ஆய்தம் சிலபோது அசையாகலாம் என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டது. வெடிப்பொலிகள், ரகர, ழகர மெய்கள் ஆகியன நீங்கலாக எஞ்சிய மெய்கள் செய்யுளிலோ இசையிலோ அசையாகலாம் பின்னர் அவை இரு மெய்களாக எழுதப்படுகின்றன. அசையாக எண்ணப்படும் இம்மெய் நெடில் மெய்யிலிருந்து மாறுபட்டது. சங்க காலத்திற்கு பிற்பட்ட காலத்து யாப்பியல் நூல்

களில் ஆய்தமும் அசையாக எண்ணப்படும் மெய் எனக் கூறப்பட்டுள்ளது. ஆய்தம் ஒலிப்புடையதா என்ற வினா அடுத்து எழுகிறது. 'ஒலிப்பிடம்' 'ஒத்தவை' என்ற அடிப்படையில் இணைந்து வரும் வெடிப்பொலிகளைப் பொறுத்த வரையில் 'நெகிழ்வு', 'விறைப்பு' என்ற வேறுபாடே முக்கியமன்றி, 'ஒலிப்புடைமை', 'ஒலிப்பின்மை' என்ற வேறுபாடன்று என்பதை மர்ரே ஃபௌலர் (Murray Fowler) என்பார் குறிப்பிட்டுள்ளார்.[1] இவ்விதி இடைக்காலத் தமிழுக்கும் பொருந்தக்கூடும். 'ஒலிப்புடைமை', 'ஒலிப்பின்மை' என்று பாகுபாடு செய்வது தொடங்கிய பொழுது 'நெகிழ்ச்சி' என்பது உரசொலியின் தன்மையைப் பெற்றது என்றும் கூறலாம். இது தொடர்பான விதி இங்கே தரப்படுகிறது.

அது + C - > அத் C
அது + V - > அ θ V (அதாவது அஃத் V –)

ஈற்றசையில் உள்ள தகர மெய் மொழிமுதல் உயிரால் தொடரப்பட்டால், உரசொலியாகிறது. இவ்விதியின் ஆட்சி 'அது' என்ற சொல்லில் மட்டுமே நிகழக் காண்கிறோம். ஆரம்பத்தில் நெடில் உரசொலியான ஆய்தமும் ஒலிப்புடை ஒலியாகியிருக்க வேண்டும். கடைநா கடையண்ண ஒலிகள் நுனிநா பல் ஒலிகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையிலும் இது மிகவும் பொருந்தும். சான்றுகள் :

'அஃது என்னும் வாய்ப்பாட்டில் வரும் சொற்களை மெய் தொடர ஆய்தம் மறைகிறது.[2] ஆனால் உயிர் தொடர்ந்தால் ஆய்தம் நிலைக்கிறது. அதாவது ஆய்தம் உயிரிடையாகும். முன்னரே குறிப்பிட்டது போல ஆய்தம் ஒரு உருபொலியன் ஆகும்; அல்லது சொல்லோ, சொல்லுருபோ இணையுமிடத்தில் வரும் இடையீடாகும். ஆனால் பின்னர் அது அடுத்து வரும் வெடிப்பொலியிலிருந்து வேறுபட்ட தனிக்குறிலாகக் கருதப்பட்டது. தொல்காப்பியமே ஆய்தம் அசையாவதற்கு இடந்தருகிறது.[3] ஆனால் இது

1 திருக்குறள், 334. பரிமேலழகர் உரை

2 *Language*, Vol 30, pp 360 - 361

3 தொல்காப்பியம் 423, 424
"முன் உயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அவ்வழி யான."
"ஏனைமுன் வரினே தான்நிலை இன்றே"

பற்றிய நூற்பா இடைச்செருகலாக இருக்கலாம்; ஏனெனில் ஆய்தம் எழுத்து அல்லது ஒலிபோல இயங்காது எனத் திட்டவட்டமாகக் கூறிய தொல்காப்பியர் அதற்கு அசையாக இடந்தந்து, தம்மைத் தாமே முரண்படுத்திக் கொண்டிருக்கமாட்டார். தொல்காப்பியர் காலத்திலேயே மக்கள், உருபொலியன் ஆய்தத்தைத் தனி எழுத்து, ஒலி எனத் தவறாகப் புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கலாம். தொல்காப்பிய 40 ஆவது நூற்பா இதைக் குறிப்பது போலத் தோன்றுகிறது.* திருக்குறளின் காலத்தில் ஆய்தம் தனியொலி யாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். ஆய்தம் இரு மதிப்புக்களை பெற்றதெனத் திருக்குறளின் யாப்பு காட்டுகிறது.

1 அசை ஒலியாக[4]

2 அசையில்லா ஒலியாக[5]

அதனுடைய சரியான உச்சரிப்பு இன்னதென்று தெளிவாகத் தெரியவில்லை. 'அஃதை > அகுதை' என்பது முன்னர் குறிக்கப் பட்டது. இது ஆய்தத்தின் உச்சரிப்பைக் கோடிட்டுக் காட்டுவதா யிருக்கக் கூடும். 'எஃகிலங்கிய கையர்' என்பது ஆய்தம் அசை மெய்யாக வருவதற்குச் சான்றாகும். ஒரு சொல்லின் பழையதொரு வடிவத்தில் புகுத்தப்பட்ட ஒரு கூறாக, ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த தேவாரத்தில் ஆய்தம் வருகிறது. 'அழகு > அழஃகு'. இவ் ஆய்தம் ஒலிப்புடையதாக இருக்க வேண்டும்.

ஆய்தம் > ய்

அ பெருங்கதை

பெருங்கதையின் காலத்தில் ஆய்தம் தனி ஒலியாக யகர மெய்யுடன் எதுகையில் வருகிறது.

சான்று: 'கய்ந் நவிலாளனை எஃகுள்ளடக்கி'[6]

---

* தொல்காப்பியம் 40
"உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலை யான"

4 திருக்குறள், 943

5 திருக்குறள், 236

6 பெருங்கதை, 1, 56, 161

'எஃகொழி களிற்றின் வெய்துயிர்த்துயங்கி'[7]

இங்கு 'கய்', 'எஃ' என்பவையும் 'எஃ', 'வெய்' என்பவையும் எதுகையில் வருகின்றன.

ஆ. நம்மாழ்வார்

நம்மாழ்வார் பாடல்களிலும் இத்தொடைநயத்தைக் காண்கிறோம்.

சான்று:

அஃதே
கொய் பூம் பொழில்[8]
செய்கோலத்து
அஃகாமால்[9]

திருக்குறளிலும் இத்தொடைநயமிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.[10]

இ. இலக்கணம்

இக்காலத்திய இலக்கண நூல்களில் இவ்வழக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.[11] அவிநயத்தில் பின்வருவன உள்ளன:

அ + ஃ > ஐ
அ + ய் > ஐ

இந்த அடிப்படையில் ஆய்தத்திற்கும், யகரமெய்க்கும் இடையே உள்ள ஒத்ததன்மையை நிறுவலாம். தொடை நயம் பற்றி வந்த எதுகை/மோனை காட்டுவதும் இதைத்தான்.

ஈ. கல்வெட்டுக்கள்

குகைக் கல்வெட்டுக்களின் இகர வரிவடிவத்தை 90° திரும்பினால் வரும் வடிவமே கல்வெட்டுக்களில் ஆய்தமாகக் குறிக்கப் பட்டுள்ளது. 'ய் = இ' என்பதை நாம் அறிவோம். எனவே இக் கல்வெட்டுக்கள் ஆய்தத்திற்குய் அல்லது இகர மதிப்பைத் தருவ தாகக் கொள்ளலாம்.

7 பெருங்கதை, 1, 33, 109

8 திருவாய்மொழி, 4-11

9 *Ibid*

10 திருக்குறள்; 759

11 யாப்பருங்கல விருத்தி, 30

வழக்கு மொழியிலிருந்து மறைவு

மேலே கூறப்பட்ட கருத்துக்குச் சான்று தரும் வகையில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த வேள்விக்குடி சாசனங்களில் 'ஈது ∞ இஃது ∞ இது' என்ற மூன்று மாற்று வடிவங்கள் காணப் படுகின்றன. 1077 ஆம் ஆண்டுக் கல்வெட்டிலும் ஆய்தம் காணப் படுகிறது. 'திருவெஃகா' இதற்குப் பின்னர் இலக்கிய வழக்குத் தவிர ஏனைய இடங்களில் ஆய்தம் மறைந்து விட்டது.

இலக்கியத்தில் வரும் வேறு வகை ஆய்தம்

ஆய்தம் வரக்கூடிய சூழ்நிலைகளுக்கு இடையில் வேறுபாடு உண்டு. ஆய்தம் யகர மெய்யின் மதிப்பைப் பெற்று வருகையில் அது மொழிக்கு முதலில் வரக்கூடிய மெய்களுக்கு முன்னரே வரும்.[12] யகர மெய் நுனியண்ண அல்லது நாவளை வெடிப்பொலி களுக்கு முன்னர் வராது. ஆனால் நன்னூலார் காலத்தில் கூட ஆய்தம் அவற்றுக்கு முன்னர் வருகிறது. இவ்விடத்தில் வரும் ஆய்தத்தை வேறொரு நிலையில் ஆராயவேண்டும் இங்கு ஆய்தத் தின் மதிப்பு குரல்வளை ஒலிப்பிலா உரசொலி (h) யாகலாம். அரை மாத்திரை அளவுடைய, யகர மெய் மதிப்பைப் பெறும் முன்னர்க் கூறப்பட்ட ஆய்தத்திலிருந்து இவ் ஆய்தத்தை வேறுபடுத்திக் கொள்ள வேண்டும். யகர மெய்யின் மதிப்பைப் பெறும் ஆய்தம் முற்றாய்தம் எனப்படும். இது முழுவதுமாக உச்சரிக்கப்படும்: இதனுடைய அளவு ஒரு மாத்திரையாகும். மற்றது ஆய்தக்குறுக்க மாகும்; இதனுடைய அளவு அரை மாத்திரையாகும். பல்லவர் காலத்து அவிநயம் ஆய்தம் குறுகுதல் பற்றிக் குறிப்பிடுகிறது.[13]

7. 0. **உருபனியல்**

7. 1. **பொது**

அ) **உருபுகள் சொற்களாக**

உயிர்கள் உடம்படுமெய்யின்றி வருகின்றன. குறிப்பாக இகரத்தை அடுத்தும், ஓர் இல், உம் ஆகிய விகுதிகளுக்கும் உயிரில்

---

12 தொல்காப்பியம், 29.
''யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்.''

13 நன்னூல், 23 ஆவது நூற்பா, மயிலைநாதர் உரை.

தொடங்கும் வேற்றுமை உருபுகளுக்கும் முன்னர் உடம்படுமெய் வருவதில்லை. இவை இடையீட்டுடன் உச்சரிக்கப்படுகின்றன என்பதை இது காட்டுகிறது. வேரற்ற உருபுகளைத் தொல்காப்பியர் சொற்களாகக் குறிப்பிடுவதை இங்கு நினைவிற் கொள்ளலாம்.

ஆ பழைய வடிவங்கள்

முன்னரே ஆராயப்பட்டது போலப் பொதுவாக மூக்கொலியுடன் வரும் வினை வடிவங்கள் தன்வினைகளாகும்; வெடிப்பொலிகளுடன் வரும் வடிவங்கள் பிறவினைகளாகும். ஆனால் கல்வெட்டுக்களில் மூக்கொலியுடன் வரும் சில வடிவங்கள் பிறவினைகளாக வருகின்றன. வெடிப்பொலியுடன் வரும் பிறவினை வடிவங்கள் இருந்த பொழுதிலும் இவை இங்ஙனம் வருகின்றன.

சான்று: 'அழுத்து' என்பதற்குப் பதில் 'அழுந்து'
'தவித்தன' என்பதற்குப் பதில் 'தவிந்தன'
'தவித்து' என்பதற்குப் பதில் 'தவிந்து'

தொடக்கத்தில் 'தன்வினை', 'பிறவினை' என்ற பாகுபாடு இல்லை என்பதை நிறுவுவதற்கு இத்தகைய கிளைமொழி மாற்றங்கள் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன.

இ 'கில்' என்னும் இடைச்சொல்

'கில்' என்னும் புதிய இடைச்சொல் பல்லவர் காலத் தமிழில் இடம் பெறுகிறது. இதனுடைய தோற்றம் புதிராக உள்ளது. இது தனி வேராக வினைமுற்றுருக்கவும்படுகிறது

சான்று : 'உண்ணவே'[14]

'உண்ணகிலான்' போன்ற சொற்களில் உள்ள 'கிலான்' என்பது 'கில்' என்ற வேரை உடைய தனி எதிர்மறைச் சொல்லாகக் கொள்ளப்பட்டிருக்கலாம். இந்த அடிப்படையில் 'கிற்பான்' என்பது போன்ற சொற்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். எதிர்மறை வினைமுற்று தன்னுடைய கடைசி உருபில் ஒருநெடிலுயிரைப் பெற்றுள்ளது. எதிர்மறையைக் காட்டும் 'இல்' என்னும் வேரிலிருந்து வந்த சொற்கள், ஒப்புமையாக்கத்தால் எதிர்மறை வினைமுற்றுக்களைப் போல விகுதியில் நெட்டுயிரைப் பெறுகின்றன.

சான்று : 'இலாத'
'இலாது'
'இலான்'

---

14 திருவாசகம்: திருச்சதகம், 41

குகரத்துடன் கூடிய வேர் 'செய்கிலான்' என எதிர்மறை வடிவத்தில் வரும் பொழுது ஈற்றுருபில் உள்ள நெட்டுயிரே எதிர் மறையைச் சுட்டி 'கில்' என்னும் வேருடன் கூடிய 'கிலான்' என்பதையே எதிர்மறை காட்டும் சொல்லாகக் கொள்ளச் செய்தது. 'கில்' என்பதனை 'இயலும்' என்று பொருள் தருவதாகக் கொண் டனர் எனலாம். ஆனால் செய் + கு + இலான் என்பதே பிறழ் பிரிப்பால் 'செய் + கிலான்' எனக் கொள்ளப்பட்டது.

நிகழ்கால விகுதியின் தோற்றம்

இறந்த காலம் அல்லாதன காட்டும் விகுதியான பகர அல்லது வகர மெய்யை விடுத்து, நிகழ்காலம் காட்டத் தனி இடைநிலையைப் பெற்றமையே சங்க காலத்திற்குப் பிற்பட்ட தமிழின் முக்கிய வளர்ச்சி எனக் கொள்ளலாம். இந்த நிகழ்கால விகுதி 'கின்று' என்பதாகும். பின்னர் இது மூக்கொலியை இழந்து 'கிறு' என்றானது. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரசோழியம் 'கிறு' என்பதைக் குறிக்கிறது.

அ. சங்க காலத்தில் வழங்கிய 'செய்கின்று' வாய்பாடு

'செய்கின்று' என்னும் அஃறிணை ஒருமை வடிவம் சங்க காலத்தில் காணப்படுகிறது.

செய்கின்று > செய்கு + இன் + து

'து' என்பது அஃறிணை ஒருமை விகுதியாகும். 'இன்' என்பது, 'செய்கு' என்னும் வாய்பாட்டில் அமைந்த வேர்களுக்குப் பின்னர் வரும் இறந்தகால விகுதியாகும். ஆனால் ஐங்குறுநூறு உரையா சிரியர் போன்றோர் இதனை நிகழ்கால வினைமுற்று வடிவம் என்ப தாகவே கொண்டு விளக்குகின்றனர். 'செய்கு' (செய்+ கு > செய்த; 'கு' என்பது சொல்லாக்க விகுதியாகும்) என்பது தொடக்கத்தில் பெயர்த்தன்மையதாக இருந்தது என்பதை நினைவிற் கொள்வது நலம். பெயர்த்தன்மையுடையதை அடையாக மாற்ற வேண்டுமாயின், அதற்குப் பல வழிகள் உள்ளன. இங்கு 'இன்' என்னும் இடைச்சொல் சேர்க்கப்பட்டுள்ளது. இதனுடன் அஃறிணை ஒருமை விகுதியான 'து' சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு கொண்டால் 'செய்கின்று' என்பது இறந்தகாலம் காட்டாது குற்றியலுகரத்தில் முடியும் வேர்களோடு இறந்தகாலம் காட்டும் 'இன்' விகுதி சேர்க்கப்படும் பழக்கம் அக்காலத்தில் வலுவாக இருந்தது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆ. நற்றிணை

சங்கத் தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில் 'ஆகின்றது' என்பது வருகிறது.

ஆகின்றது > ஆகின்று + அது

இங்கு 'அது' என்பது அடுத்த வாக்கியத்தின் எழுவாயாகலாம்: 'அது—ஐய நின் நட்பு'. முன்பு எடுத்துக் காட்டப்பட்டதுபோல எழுவாய் பல இடங்களில் வாக்கியத்திற்கு இறுதியில் வந்தது. இப்படி வருவன இடப்பெயர் விகுதியுடன் கூடிய முற்று வடிவங்களாக வளர்ச்சியுற்றன. 'ஆகின்றது' என்பது இக்காலத்திய நிகழ் கால அஃறிணை வடிவம் போன்றே உள்ளது. உரையாசிரியர்களால் விளக்கப்பட்டதுபோலச் 'செய்கின்று' என்னும் வடிவத்தை நிகழ் காலம் காட்டுவதாகக் கொள்ளத் தடையில்லை என்பது தெளிவு. 'போகின்று' என்பது போன்ற வடிவம் குற்றியலுகரத்தை உடைய வேரிலிருந்து வருவதாம். இவற்றிலெல்லாம் உள்ள 'இன்' விகுதி இறந்த காலம் காட்டுகிறது.

சான்று : ஓடு + இன் + து > ஓடின்று

குகரச் சொல்லாக்க விகுதியை உடைய வேர்கள் இல்வாய்பாட்டில் வரும்.

போகு + இன் + து > போகின்று

ஆகு + இன் + து > ஆகின்று

இவை இறந்த காலத்தையும் குறிக்கின்றன. 'வந்தது' என்பது போன்றவற்றின் ஈற்றுருபான 'அது' என்பது நீக்கப்பட 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகிய 'வந்து' என்பது கிடைக்கிறது. இவ்வொப்புமையாக்கத்தின் அடிப்படையில் 'செய்கின்றது' என்பது 'செய்கின்று' எனப் பின்னோக்கி அமைகிறது. 'செய்கின்று' என்பது நிகழ்கால வினையெச்சமாகப் பயன்படுத்தப் பட்டது. ஆனால் அது இப்பொழுது வழக்கில் இல்லை. பெயரெச்ச விகுதியான அகரம் இதனுடன் சேர்க்கப்பட 'செய்கின்ற' என்ற வடிவம் கிடைக்கிறது. இது தொல்காப்பியர் காலத்தே இல்லாத ஒன்றாகும். ஆனால் இது திருக்குறள், பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றில் இடம் பெறுகிறது. இப்பெயரெச்சத்துடன் இடப்பெயர் விகுதிகள் சேர்க்கப்படப் பல்வேறு வினைமுற்றுக்கள் கிடைக்கின்றன.

வியங்கோள் வினை படர்க்கையில் மட்டுமே வருவதாகத் தொல்காப்பியம் வரையறுக்கிறது. சட்டத்துறையில் இருந்த வழக்காற்றின் விளைவே இது எனலாம் கல்வெட்டுக்களில் இது வருமிடங்களில் ஒரு தொடரமைப்புப் பயன்படுத்தப்படுகிறது. இது உண்மையில் வியங்கோளின் பழைய ஆட்சியேயாகும்.'ஆ' என்ற வேரிலிருந்து வந்த வியங்கோள் வடிவமாகிய 'ஆக' என்பது 'வும்' விகுதியைப் பெறுகிறது. 'ஆகவும்' என்பது வினைமுற்றுக்குப் பின்னர் வருகிறது. 'யாருக்குக் கடமை உரியது' என்பதை இது தெளிவுபடுத்துகிறது. இப்பயனிலையின் வேர் 'கட' (< கடமை) என்பதாகும். கல்வெட்டுக்களில் பின்வரும் வடிவங்கள் காணப்படுகின்றன.

'கடவேனாகவும்'
'கடவீராகவும்'
'கடவாராகவும்'
'ஆகவும்'

இம் மாற்று வடிவங்கள் எல்லாம் கிளைமொழிகளில் வழங்கத் தொடங்கி இருக்கலாம். இலக்கிய மொழியில் அவற்றின் வழக்கு குறைவு. கிளைமொழிகளில் — சான்றாகத் திருநெல்வேலிக் கிளை மொழியில் — 'அழுகு', 'உண்கு' முதலிய வடிவங்கள் காணப்படுகின்றன. பகர மெய் மூக்கொலிகட்குப் பின்னர் ஒலிப்புடை ஒலியாகிறது.

சான்று : (*unpān*) > (*unbān*)

ஆனால் ஒலிப்புடை வெடிப்பொலி தவிர்க்கப்படுகிறது. ஏழாம், எட்டாம் வினைவிகற்ப வாய்பாடுகளில் வினைவிகற்பங்கட்குப் பின்னும் வேர்கள் மொழியிறுதியில் உகரச் சாரியையை தக்க வைத்துக்கொள்கின்றன.

உயிர்களுக்கும், இடையின மெய்களுக்கும் பின்னர் பகர மெய் வகர மெய்யாகிறது. இவ்வினைகளில் வகர மெய் எதிர் காலத்தைக் காட்டுகிறது. சான்று : உண்பான் > உண்ணுவான்
தின்பான் > தின்னுவான்

அநேகமாக எல்லா வேர்களும் குகரச்சொல்லாக்க விகுதியைப் பெறும். இவற்றில் எதிர்காலத்தை வகரமெய் காட்டும். இத்தகைய கட்டற்ற அல்லது நிபந்தனையற்ற மாற்றம் எதிர்காலம் காட்டும் எல்லா வடிவங்களிலும் வருவதாகச் சேனவரையர் சுட்டிக்

காட்டுகிறார். சான்று: செய்வான் > செய்குவான்
உண்பான் > உண்குவான்

இ. பிறவடிவங்கள்

நிகழ்கால விகுதியைத் தோற்றுவிக்கப் பிறிதொரு முயற்சியும் இருந்தது. 'செயா' என்பது செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்ச வகையைச் சார்ந்ததாகலாம். இதனுடன் 'இரு' அல்லது 'கிட' அல்லது 'நில்' என்னும் துணைவினை 'செயலின் தொடர்ச்சியை' அல்லது 'செயல் முடியாமையைக்' காட்டச் சேர்க்கப்பட்டது. இவ்வாறாக 'நிகழ்காலம்' பற்றிய கருத்துத் தோன்றியது. 'செயா' என்பதை எதிர்மறை வினையெச்சமாகவும் கொள்ளலாம். (செயல் முடியவில்லை என்பதைக் காட்ட இங்ஙனம் கொள்ளலாம்) உரை நூல்களில் பின்வரும் வடிவங்களைக் காண்கிறோம்:

செய்யாகிடந்தான்
செய்யாநின்றான்
செய்யாவிருந்தான்

மேலே கூறப்பட்ட வடிவங்களில் பிறழ்பிரித்தலால் கிடைத்தவையாகிய ஆகிடந்து, ஆநின்று, ஆவிருந்து என்பனவற்றை நிகழ்கால வடிவம் எனக் கொள்ளலாயினர்.

சான்று : செய்யாநின்றான் > செயா + நின்று + ஆன் > செய் + ஆநின்று + ஆன்

பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த பவணந்தியார் காலத்தில், 'ஆநின்று' என்பது மட்டும் நிகழ்கால இடைநிலையாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

'செய்கின்று' என்ற நிகழ்கால வினையெச்ச வடிவம் வழக்கிலிருந்து மறைந்து விட்ட பொழுதிலும் 'செயாநின்று' என்ற வடிவம் இன்னும் வழக்கில் உள்ளது.

ஆ. நாயக்கர் காலத் தமிழ்

வரலாற்று மூலாதாரங்கள்

பதினான்காம் நூற்றாண்டில் மாலிக்காபூரின் தென்னகப் படையெடுப்புகளுக்குப் பின்னர், தமிழர்கள் தங்கள் உரிமையை இழந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் தென் மாவட்டக் கிளைமொழிகளின் வழக்குச் சொற்களில் எழுதப்பட்ட நூல் ஒன்றின்

மொழியமைப்பைக் கொண்டு நாயக்கர் காலத் தமிழின் வளர்ச்சி ஆராயப்பட்டுள்ளது. சில குறிப்புக்கள் இங்கு தரப்பெற்றுள்ளன.

இம் மாற்றங்கள் ஒருசேர நிகழாது இங்கொன்றும், ஆங்கொன்றுமாக நிகழ்ந்தனவெனினும் அவை பிந்தைய வளர்ச்சிகளைத் தெளிவுபடுத்தலாமாதலால் இங்குக் குறிக்கப்பட்டுள்ளன.

1. 1 உயிரொலி மாற்றங்களின் சிறப்பு

உயிரொலிகளின் அளவு, தன்மை ஆகியவற்றின் மாற்றமே இக்காலத்துக்குரிய சிறப்புக்கூறு ஆகும். இம்மாற்றம் முன்னரேயே தொடங்கி விட்டது.

2. 0 உயிர்கள்

2. 1 அளவு

நெடில் மெய்கள் அல்லது மெய்ம் மயக்கங்களுக்குப் பிறகு உயிர்கள் குறுகும் போக்கு உள்ளது.

காண்பாம் > காண்பம்

தண்ணீர் > தண்ணி

இக்கால உச்சரிப்பைக் கொண்டும், காண்போம் என்னும் மாற்று வடிவத்தைக் கொண்டும் காண்பம் என்பதிலுள்ள அகர உயிர் சற்று இதழ் குவிதலோடு ஒலிக்கப்பெறுகிறதோ என ஐயுறலாம்.

2. 2 தன்மை

2. 2. 1 சுரபத்தி

அகரம் முதலான உயிர்கள் மெய்கட்கு இடையில் வருகையில் மறைந்து மெய்ம் மயக்கங்கட்கு வழி வகுக்கின்றன. பின்னர் சுர பத்தி இகரம் அல்லது உகரம் தோன்றுகிறது.

2. 2. 1. அ. இ > உ

நாவளை அல்லது இதழொலி மெய்கள் வரும் சூழலில் உகரம் வருகிறது.

அடிமை > *அட்'மை > அடுமை

[மெய்$_1$] 'உயிர்$_1$, மெய்$_2$ உயிர்$_2$ மெய்$_3$' என வரும் வேர்களின் வாய்பாட்டில் 'உயிர்$_2$' என்பது இகர உயிராகும் : 'மெய்$_3$' என்பது வ் அல்லது ள் அல்லது ர் என்பதாகும். இந்நிலையில் இகரம் உகரமாகிறது.

சான்று :	சிலிர்-க்கு	>	சிலுர்-க்கு
	துளிர்	>	துளுரு
	குளிர்	>	குளுர் (உ)
	தளிர்	>	தளுர் (உ)
	தமிழ்	>	தமுழு
	மகிழ்	>	மகுழு
	மதில்	>	மதுலு

ஆ.

i) உகரத்தின் மதிப்பு

இவ்விடங்களில் வரும் உகரம் குற்றியலுகரமாக(W)லாம். இவ்வுகரம் குறில் உகரத்திலிருந்து வரிவடிவத்தில் வேறுபடுத்தப் படுவதில்லை. இவ்வுயிர் சில இடங்களில் முன் உயிராகச் சற்று முன் தள்ளிக் கீழ் உயிராக ஒலிக்கப்பெறுகிறது. எனவேதான் இது அகரமாக எழுதப்பெறுகிறது.

எதிர் > எதுர் > எதர்

ii) மொழியிறுதி '—று > — ரு > — ர்' என்பது மேலே கூறப்பட்ட வாய்பாட்டைத் தருமாயின், அங்கும் இம்மாற்றத்தைக் காணலாம்.

வயிறு > வயிரு > வயிர் > வயர்
ஞாயிறு > ஞாயிரு > ஞாயிர் > ஞாயர்

iii) மொழி இறுதியில் புக்கு > புக்குO > புக்கி என்பன உள்ளன.

iv) மொழி இடையிலும் இது வருகிறது.

'இருப்பு > இருOப்பு > இரிப்பு' என மலையாளத்தில் வருகிறது. 'மெய்$_1$ உயிர்$_1$ மெய்$_2$ உயிர்$_2$ வெடிப்பொலி உயிர்$_3$' என்னும் வாய்பாட்டில், 'உயிர்$_3$' என்பது இதழ் விரி உகரமாய் (குற்றியலுகரம்) இருக்குமாயின், 'உயிர்$_2$' என்பதும் இதழ் விரி யாகிறது.

2. 2. 2 அ > இ

தண்டனை >* தண்ட்'னை > தண்டினை
அனைய > அனெய >* அன்'ய > அனிய

2. 2. 3 அ > உ; உ >

வந்தது > வந்துது
இருபது > இருபதி

குற்றியலுகரம் இகரமாகிறது. முன்பு குறிப்பிட்டது போல இ > யி என்றுகிறது.

2. 2. 4 ஐ
ஐ > அய் > அ

ஐம்பது > அம்பது
தலை > தல
யானை > யான

ஐ > எய் > எ

பழைய உச்சரிப்பான 'ஐ > எய் > எ' என்பதும் தொடர்ந்து வருகிறது.

நைவேத்யா > நெய்வேத்தியம்

'கைப்போது' என்பது 'எப்போது' என்பதோடு தொடை நயத்தில் வருகிறது. எனவே 'கைப்போது' என்பது 'கெய்ப் போது > கெப்போது' என உச்சரிக்கப்பட வேண்டும்.

ஏய் + எய் + அய்

எ அல்லது எய் என உச்சரிக்கப்படுவது ஐ என எழுதப்படுவதால் 'கண்ணிலெயும்' (> கண்ணிலேயும்) என்பது 'கண்ணிலையும்' என எழுதப்படுகிறது. இது போலி நாகரிக ஆக்கமாகும் (Hyper-urbanisation).

அகர எகர மாற்றமானது மொழி முதலில் சமஸ்கிருத ஒலிப்புடை வெடிப்பொலிக்குப் பின்னர் வருவது என்பது முன்னரே விளக்கப்பட்டது. எனவே அச்சூழலில் ஔ > அவு > எவு என்ற மாற்றம் நிகழ்கிறது. கௌதமன் > கவுதமன் > கெவுதமன்.

2. 2. 5 எ > அ

'ஐ > எ > அ' என்னும் மாற்றத்துடன் கூட 'எ > அ' என்னும் மாற்றம் மொழி முதலிலும் ஏற்படுகிறது.

எல்லாம் > அல்லாம்
வேண்டாம் > வாண்டாம்

இது உண்மையில் எகரம் தாழ்வுறுதலின் விளைவேயாகும். e > [æ] அல்லது e > [ɛ], இவை அகரத்துக்கு உரியதாக்கப் படுகின்றன.

2.2.6 ய > எ

இதற்கு முற்பட்ட காலத்தில் 'ய — > எ —' ஆனது, இங்ஙனமே 'யா > ஏ' ஆகும்.

யமன் > எமன்

யாது > ஏது

மொழி முதல் யகர மெய் பல்லவர் காலத்தில் மறைந்தது.

சான்று : யார் > ஆர்

யாண்டு > ஆண்டு

இப்போக்கு நாயக்கர் காலத்திலும் தொடர்கிறது.

யமுனை > அமுனை

மொழி முதல் அகரம் உண்மையில் [ɛ] என்பதாகலாம்.

3 மெய்கள்

3.1 சமஸ்கிருத ஒலிகள்

வீரமாமுனிவர் தெளிவாகக் குறிப்பிடுவது போலச் சமஸ்கிருதத்தைத் தமிழ் வரிவடிவத்தில் எழுதுவதற்கெனச் சில கிரந்த எழுத்துக்களைப் புகுத்தியமை, இக்கால மொழியில் நிகழ்ந்த முக்கியமானதொரு மாறுதல் ஆகும். அவை வருமாறு :

j s c ṣ h kṣ cri

தமிழில் கூடக் கற்றவர்களின் மொழியில் சமஸ்கிருத ஒலிகள் சமஸ்கிருத ஒலிப்பு முறைப்படியே உச்சரிக்கப்பட்டன என்பதை இது காட்டுகிறது. ஆனால் இப்பிரிவினர் மிகச் சிறுபான்மையினராகவே இருந்திருக்க வேண்டும்.

3.1.1 சமஸ்கிருதச் சொற்கள் தமிழாக்கப்படல்

இக்காலத்தில் நாவளை உரசொலி இடையண்ண வெடிப்பொலியாகிறது.

1 *riṣi > rici*

dōṣa > tōcam

2 *kṣ > ṣ > c*

சான்று : *kṣaṇam > caṇam*

3 ṣṭ > st

சான்று : kaṣṭam > kasṭi

4 அம் > ஐ; அம் ல ஐ > அல்

சான்று : மாதம் > மாத்தை
கார்த்திகை > காத்திகை > காத்தியை >
காத்தியல்

5 ky > ṅk

சான்று : asahya > acakkiyam > aciṅkiyam > aciṅkam; இங்கு hy > ṅk என்றாகிறது.

6 ṛ* > ழ்

அம்ṛ* தம் > அமிர்தம் > அமிழ்தம்

'முகூர்த்தம்' என்பதில் உள்ள இடை உயிர் குறிலாகி 'முகுழ்த்தம்' என்றாகிறது.

7 ஏகாதசி > ஏகாதேசி; இங்கு —ஆ என்பது சொல்லீறாகக் கொள்ளப் பெறுகிறது.

மேலும் ḍa > ṭe > ṭē என்றாகிறது.

பாமரர் மொழி விளக்கப் போக்கும் (Folk-etymology) இங்குக் காணப்படுகிறது.

ṣaḍrasa > caṭṭaracam
Citragupta > Cittrakūttan

இவற்றை முறையே சட்டம் என்பதனடியாகச் சட்டரசம் என்ற சொல் ஆனதாகக் கூறுவதும் சித்திரகுப்தனைச் சித்திரக்கூத்தன் எனப் பிரித்துக் கூறுவதும பாமரர் மொழி விளக்கப்போக்காகும்.

3. 2. 1 மொழியிடை ஒலிப்புடை, ஒலிப்பிலா வெடிப்பொலிகள்

பிற மொழியாளர்களின் இலக்கண நூல்களில் அவர்கள் மொழியில் எழுதப்பட்டுள்ள தமிழ் ஒலிகளை ஆராய்கையில் -க்க்- -ட்ட்-, -ப்ப்- முதலிய நெடில் மெய்கள் தனி ஒலிப்பிலாக் குறில் மெய்களாகவும், தனி ஒலிப்பிலாக் குறில் மெய்கள் ஒலிப்புடைக் குறில் மெய்களாகவும் எழுதப்பட்டுள்ளமை புலனாகிறது. எனவே ஒலிப்புடை, ஒலிப்பிலா வெடிப்பொலிகட்கு இடையேயான வேறு

* 'ரு' என ஒலிக்கப் பெறும் சமஸ்கிருத ஒலி

பாட்டைக் குறிப்பதற்கு இம்முறையே தமிழ் வரிவடிவத்தில் இன்றும் மரபாக உள்ளது.

சான்று : *Sulphie* > *Calpaiṭu* (சல்பைடு)
Sulphate > *Calpēṭṭu* (சல்பேட்டு)

வெளிநாட்டவர்களான பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த பால்தே, பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீகன் பால்கு, வீர மாமுனிவர், பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கால்டுவெல் முதலியோர் எழுதிய இலக்கண நூல்களில் வெடிப்பொலிகள் ஒலிப்புடை ஒலிகளாவது நன்கு நிறுவப்பட்டுள்ளது. ஒலிப்பிலா ஒலிகள் ஒலிப்புடை ஒலிகளாகும் விதி என்று கால்டுவெல் இதனைக் குறிப்பிடுகிறார். வெடிப் பொலிகள் மொழி முதலிலும் மொழி இடையில் நெடிலாக வருமிடங்களிலும் ஒலிப்பின்றி வருகின்றன; உயிரிடையில் வரும் பொழுதும் மெல்லின மெய்களுக்குப் பின்னர் வரும் பொழுதும் வெடிப்பொலிகள் ஒலிப்புடை ஒலிகளாக வருகின்றன. இடையண்ண வெடிப்பொலி மொழி முதலிலும் உயிரிடையிலும்குழிந்துரசொலி (Sibilant) ஆகிறது. சீகன்பால்கு இதனைத் தடையுரசொலியாகத் (Affricate) தம்முடைய வரிவடிவத்தில் எழுதியுள்ளார். அரிசனங்களின் பேச்சில் இவ் உச்சரிப்பு இன்றும் வழங்கப்படுவதைக் காணலாம்.

3. 2. 2 நுனியண்ண ஒலிகள்

பழைய நுனியண்ண வெடிப்பொலியான றகர மெய் உயிரிடையில் '-ர்ர்' என எழுதப்படுகிறது. மெல்லின மெய்யைத் தொடருமாயின் அது *-ḍṛ-* என எழுதப்படுகிறது. இது ஒலிப்புடை நாவளை வெடிப்பொலியும் ரகர மெய்யும் சேர்ந்த மெய்ம் மயக்கமாகும். நெடில் நுனியண்ண வெடிப்பொலி, நெடில் நுனிநாப்பல் வெடிப்பொலியாக உச்சரிக்கப்படாத பொழுது கற்றவர்களால் '*ṭr*' என உச்சரிக்கப்படுகிறது. இது ஒலிப்பிலா நாவளை வெடிப்பொலியும் ரகர மெய்யும் சேர்ந்த மெய்ம் மயக்கமாகும்.

சான்று: நேற்று > நேத்து > நேட்ரு.

3. 3 றகர மெய்

அ. முந்தைய காலத்திலேயே நிகழ்ந்ததாகச் சுட்டிக் காட்டப் பெற்றது போல நெடில் நுனியண்ண வெடிப்பொலி, நெடில் நுனி நாப்பல் ஒலியாகிறது.

ஆ. உயிரிடை ரகர மெய்யும் றகர மெய்யும் ரகர மெய்யாக ஒன்றுதல், இறுதி அசைக்குக் கூட நன்கு நிறுவப்பட்டுள்ளது.

இ. ரகர மெய்க்குப்பின்னர் வரும் உகரம் இழக்கப்படுகிறது.
சான்று : வயிறு > வயிரு > வயர்
மேரு > மேர்

ஈ. ஆனால் மெல்லின மெய்க்குப் பின்னர் வரும்பொழுது, அன்றில் என்பது போன்ற வழக்குகள் சிலவற்றில் நுனியண்ண வெடிப்பொலியின் பழைய உச்சரிப்பு மாறாது உள்ளது.

மற்ற இடங்களில் நுனியண்ண வெடிப்பொலி மூக்கொலி யாகிறது. ஆனால் இதன் விளைவாக வரும் நெடில் மூக்கொலி நாவளை ஒலியாகும். தமிழகமெங்கும் வழங்கும் இன்றைய கிளைமொழிகளில் இதுவே நிகழ்ந்து வருவது. சான்று : ஒன்று > ஒண்ணு

உ. சில இடங்களில், குறிப்பாக 'உன்றன்' என்பது உந்தன் என்றாகிறது. இது தகரத்தைச் சந்தி விகாரம் ஏதுமின்றி உச்சரிப்பதன் விளைவாகலாம். இன்றும் இது இவ்வாறே உள்ளது.

ஊ. ந்த் > ண்ட்

பழங்காலத்தில், வீரசோழியம் குறிப்பிடுவதுபோல, ழகர மெய் ளகர மெய்யாகச் செயற்படும் பொழுது 'சூழ்ந்த' என்பது 'சூண்ட' என்றாகிறது. 'மீள்' என்பது 'மீள்ந்த > மீண்ட' என்றாவது போல) இவ்ஒப்புமையாக்கத்தால் ழகர மெய் இல்லாதபொழுதும் 'ஏந்தலர்' என்பது 'ஏண்டலர்' என்றாகியிருக்கக் கூடும். ஆனால் இவை அருகிய வடிவங்களாகும்.

3. 3. 1 வல்லின மெய்கள்

வல்லினமெய் மயக்கங்களில் முதலாவது வல்லினமெய் ஓரின மாதல் என்னும் விதிப்படி வல்லினமெய்யாக ஆகிறது.

சான்று:	மாட்சி	>	மாச்சி
	முற்பிறவி	>	முப்பிறவி
	அற்பம்	>	அப்பம்

பிற மெய்களும் கூட இவ்வாறு ஓரினமாதல் விதிப்படி மாறுகின்றன. ஆனால் அவை பின்னிலை ஓரினமாதலாக (Regressive நிகழ்கின்றன.

சான்று: செல்வம் > செல்லம்

அ. க் > ய்

ககர மெய்க்கு முன்னர் அல்லது அதை அடுத்து இகர உயிர் வருமாயின், அம்மெய் யகர மெய்யாக மாறுகிறது.

கன்னிகள் > கன்னியள்

துகில் > துயில்

எனவே ககரம் யகரமாகத் திரிவதாகக் கொள்ளப் பெற்றது. இதனாலேயே கீழ்க்கண்ட மரூஉ வடிவங்கள் அமைந்துள்ளன.

ஆ. ய் > க்

இடையூறு > இடைகூறு

மொழியிடை வெடிப்பொலி இழக்கப்படுவதும் உண்டு·
-ங்க் > -ங்- சான்று: நாங்கள் > நாஙள்

இது 'நாங்கள் > நாங்ஙள் > நாஙள்' என்றுயிருக்க வேண்டும். 'நாஙள் > நாமள்' என்பது 'நாம்' என்னும் வடிவம் இருப்பதால் ஏற்பட்டதாகும். மொழியிடையில் உள்ள மகரமெய் தெலுங்கிற் போலப் பகர மெய்யாவது தெலுங்கு மொழி பேசுவோர் திருநெல்வேலியில் குடியேறியதன் விளைவாகலாம். இதனால் கிடைக்கும் வடிவம் 'நாம்பள்' என்பதாகும்.

இ. ப் > வ்

சமஸ்கிருதச் செல்வாக்கால் பகர மெய் உயிரிடையில் மட்டுமின்றி ஒலிப்பிலா மெய்களுக்குப் பின்னரும் வருகிறது. இவை தமிழில் ஒப்புநிலைக்கேற்ப விடுப்பொலிகளைப்(releases) பெறுகின்றன.

ஈஸ்வரன் > ஈஸ்பரன்

வகர உடம்படு மெய்கூடச் சில இடங்களில் மூக்கொலிச் சாயல் பெற்று மூக்கொலியாகிறது.

சான்று : என்ன + ஓ > என்னவோ > என்னமோ

மூக்கொலிகள் வருவதால் இவ்வாறு நிகழ்வதாக விளக்கலாம். ஆனால் 'கவிய > கமிய' என்பதை நோக்குக. (இங்கு மூக்கொலி ஏதும் சூழலாக அமையவில்லை)

3. 3. 2 மூக்கொலிகள்

அ. ன் > ம்

பழைய நுனியண்ண மூக்கொலியான னகரமெய், நெடிலுயிர்களுக்குப் பின்னரும் மகர மெய் போன்ற மெல்லின மெய்களுக்குப் பின்னரும் இழக்கப்படுகிறது.

சான்று : நான்முகன் > நாமுகன்

பிற மூக்கொலிகளுக்கு முன்னர் மறையும் மகர மெய்யாக எல்லா மூக்கொலிகளும் மாறுகின்றன. அடுத்து வரும் வெடிப் பொலியினுக்கேற்ற இனமூக்கொலியாக அவை மாறுகின்றன.

சான்று : மாண்பு > மாம்பு
வெண்சாமரை > வெஞ்சாமரை
இன்சொல் > இஞ்சொல்
நன்மூர்த்தி > நம்மூர்த்தி

3. 3. 2. ஆ.

— ம் > ∅ > ம்

பண்பைக் குறிக்கும் சில சொற்கள் இரு வடிவங்களை உடையன.

1 வெடிப்பொலியுடன் தொடங்கும் சொற்களுக்கு முன்னர் மூக்கொலியில் முடியும் வடிவங்கள்.

சான்று : அருங்கலே

2 வெடிப்பொலியில்லா ஒலிகளுடன் தொடங்கும் சொற்களுக்கு முன்னர் மூக்கொலியல்லா ஒலிகளுடன் முடியும் வடிவங்கள்.

சான்று : அருவிலே

ஒப்புமையாக்கத்தால் மூக்கொலி முடிவு எல்லா இடங்களிலும் தோன்றுகிறது.

சான்று : பூம்வாவி

இப்போக்கு தற்காலத்தில் நன்கு நிலைபெற்று உள்ளது.

3. 3. 2. இ. இடையின மெய்கள்

மொழியிறுதி ரகர, லகர மெய்களின் இழப்பு பின்வரும் சொற்களில் காணப்படுகிறது.

தூண்டில் > தூண்டி
தண்ணீர் > தண்ணி

மொழி இடையில் கூட ய், ர், ல் முதலியன தொடர்ந்து இழக்கப்படலாயின. இது சோழர் காலத்துத் தமிழிலும் வழங்கியதைக் கண்டோம்.

வாய்க்கால் > வாக்கா

பின்னர் இது அநேகமாகப் பொதுவானதொரு வழக்காகவே ஆகிவிடுகிறது. நீண்ட ஓரசையின் இறுதியில் ரகர மெய் புகுத்தப் படும் நிலையும் உண்டு.

சான்று : கா > கார்
கோ > கோர்

இது இன்றும் வழக்கில் உள்ளது.

ஒரு வேளை லகர மெய்க் கிளை மொழிகளும் ரகரமெய்க் கிளை மொழிகளும் என இருந்திருக்கக் கூடும். பழைய இலக்கண ஆசிரியர் களால் குறிக்கப்பெற்ற மாற்றத்தை நோக்குக.

பந்தல் > பந்தர்
சாம்பல் > சாம்பர்

ற், > ர், மாற்றம் இருக்கும் பொழுதும் ரகர மெய்யும் லகர மெய்யும் உறழ்(ச்சி) ஒலிகளாக வருகின்றன.

அரற்றி > அலற்றி
கழறுக > கழருக > கழலுக

4. உருபனியல்
4. 1. வினை
4. 1. 1. பழைய வடிவங்கள்
4. 1. 1. அ. மாற்று வடிவங்கள்

'ஈந்து', 'ஈத்து' என்பதற்கு இணையான மாற்று வடிவங்கள் இக்காலத்திலும் வருகின்றன.

'வளர்த்து' என்பதற்கு 'வளர்ந்து'.
'பூட்டு, என்பதற்கு 'பூண்டு'.

4. 1. 1. ஆ. ஒரு வினைமுற்று வடிவம்

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த குற்றாலக் குறவஞ்சியில் அதன் ஆசிரியர் திருநெல்வேலி மாவட்டக் கிளைமொழி வழக்கு களையும், குறவர் சமூக வழக்குகளையும் புகுத்தியுள்ளார். குறவர் சொல் வழக்கு அமைப்பு (Word Pattern) ஒன்று மட்டும் இங்கு ஆராயப்படும். படர்க்கை நிகழ்காலப் பலவின்பால் வினைமுற்று 'போகின்னும்' என வருகிறது. இதனது வாய்பாடு 'வேர் + இன் + உம்' என்பதாகும். பன்மையைக் குறிக்கும் பழைய விகுதியான மகர மெய் 'உம்' என்பதில் உள்ளது. இதற்கு முன்வரும் 'இன்' விகுதி இறந்தகாலம் காட்டவில்லை. 'செய்யுன்' என்னும் பழைய

வாய்பாட்டை இது நினைவுபடுத்துகிறது. உகரம் இங்கு இகரமாக மாறியுள்ளது. ளகர விகுதி ஒருமையைக் காட்டும் நிலை வழக்கிழந்தது. வழக்கு மிகுதியான 'செய்யும்' என்னும் வடிவத்தோடு ஒப்புமையாக்கமாக மகர மெய் சேர்க்கப்பட்டது. தெலுங்கில் உள்ள 'சேயுனு' வாய்பாடு மகர மெய்யுடன் வருவதாகக் கருத இடமுண்டு. ஈற்றில் உள்ள உகர மெய், அதற்கு முன்னர் உள்ள னகர மெய்யால் மூக்கொலிச் சாயல் பெறுவதன் விளைவு இது வாகலாம். மூக்கொலிச் சாயல் பெற்றது மெல்லின மெய் ஒன்று சேர்த்து எழுதப்பட்டது. (செயுனும்) 'செய்யும்' என்பதனோடு கூடிய ஒப்புமையாக்கமும் இங்குச் செயற்படுவதாகலாம்.

4. 1. 2. 1. அ. சொல்லாக்க அசையுடன் கூடிய வேர்கள்

இக்கிளை மொழியில் மேலும் மேலும் பல சொற்கள் சொல்லாக்க விகுதியைப் பெற்று வருகின்றன.

அழு + கு > அழுகு
சிற + க்கு > சிறக்கு
தழை + க்கு > தழைக்கு
தரு + கு > தருகு

'கண்ட' என்பதற்குப் பதில் 'காண்ட' என்பது போன்ற வடிவங்கள் காணப்படுகின்றன. பழங்காலத்துக் கிளைமொழிகளிலும் இது காணப்படுகிறது.[15]

4. 1. 2. 1. ஆ. அவற்றிலிருந்து வரும் தொழிற்பெயர்

'பல்' என்னும் வேர் வினையாவதற்கு, குகரச் சொல்லாக்க அசையைப் பெறுவதற்கு முன்னர் ஓர் உகரத்தைப் பெறுகின்றது.

பல் + கு > பலுகு

ககரத்தை இரட்டிக்க இது தொழிற்பெயராகிறது.

சான்று : பலுக்கு

'குளிக்கு', 'குளிக்கில்' போன்றவற்றையும் நோக்குக. 'குளிக்கையில்' என்பதற்குப் பதில் 'குளிக்கு' என்பது வருகிறது. 'குளிக்கை' என்னும் தொழிற்பெயருக்குப் பதில் 'குளிக்கு' என்பது வந்திருக்கக் கூடும். 'இருக்கையில்' என்பதற்குப் பதில் 'இருக்கில்' என்பது வருவதை நோக்குக. இலக்கிய மொழியிலும், கிளைமொழிகளிலும் இவ் வடிவங்கள் தொழிற் பெயரின் நிபந்தனைப் பொருளில் வருவதைக் குறிக்கும்; தொழிற்பெயரின் இடப்பொருளை அன்று.

---

15 கலித்தொகை, 144 : காண்டை என வருதல் காண்க

4.1.2.1. இ. நிபந்தனை அல்லது வரைவுப் பொருள் வினையெச்சம்

இக் கிளைமொழியில், 'செய்தால்' என்னும் நிபந்தனைப் பொருள் தரும் வடிவத்திற்குப் பதில் 'செய்கின்றால்' என்ற மற்றொரு வடிவமும் வளர்ச்சி பெற்றுள்ளது. நிகழ்கால விகுதியான 'கின்ற' என்பது இங்கு இருப்பது குறிக்கத்தக்கது. 'நீர் ஆடுகின்றால்' என்பதையும் நோக்குக. 'செய்து' என்னும் இறந்தகால வடிவத்திலிருந்து 'செய்தல்' வருவது போல, 'நடப்பு' என்னும் இறப்பு அல்லாக் காலங் காட்டும் வடிவத்திலிருந்து 'நடப்பின்' என்பது வருவது போல, 'செய்கின்று' என்னும் நிகழ்கால வடிவத்திலிருந்து 'செய்கின்றால்' என்பது வருகிறது. ஆனால் நிபந்தனையைக் காட்டுவனவற்றில் காலம் குறிக்கப்படுவது இல்லை. பிற இடங்களில் காணப்படாத பழைய வினையெச்சமாகிய 'செய்கின்று' என்பது இங்குக் கிடைக்கிறது.

4.1.2.1. ஈ.

செய்தால் + உம் என்பது வினையெச்சமாக வளர்ச்சியுறுகிறது. "அது செய்யப்பட்டிருந்தாலும் கூட" என்னும் பொருளில் இது வருகிறது.

4.1.2.1. உ

'செயலும்' [செய் + அல் (தொழிற் பெயர் விகுதி) + உம்] என்பது வினையெச்சமாக வளர்ச்சியுறுகிறது. 'செய்து முடிந்த உடன்' என்னும் பொருளில் இது வருகிறது. இதனது ஆட்சி சங்க காலத்திலேயே தொடங்குகிறது. எனினும் பிற்காலத்திலேயே வழக்கு மிகுகிறது.[16]

4.1.2.1. ஊ. ஒப்புமை

ஒப்புமைகள் ஒரு தொடரால் குறிக்கப்படுகின்றன. இத் தொடரில் ஒப்புமைக்குரிய பொருள் எழுவாயாக வரும். எப் பொருளோடு ஒப்பிடப்படுகிறதோ அப்பொருள் செயப்படு பொருளாக வரும். மேலும் 'காட்டு' அல்லது 'பார்' என்னும் வேர்ச் சொல் நிபந்தனை சுட்டிய வடிவமாக மாற்றப்பட்டுப் பின்னர் 'உம்' விகுதி சேர்க்கப்பெற்று வரும்.

சான்று : "இது அதைப் பார்க்கிலும் நல்லது"

"இது அதைக் காட்டிலும் நல்லது."

16 தொல்காப்பியம், 74, சேனாவரையர் உரை.

'அதை' என்பதை விடுத்து 'எல்லாவற்றை' என்னும் சொல்லை ஆள, 'உச்ச உயர்நிலை' (Superlative) உணர்த்தப்படுகிறது. 'எல்லாவற்றை' என்பது 'எல்லாம்' என்பதுடன் இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்த வடிவமாகும். 'காட்டிலும்' முதலானவை ஒப்புமைப் பொருள் உணர்த்தும் விகுதிகளாகின்றன.

4. 1. 2. 2 ஆ 'மை' விகுதியுடைய பெயர்ச் சொற்கள்

தொழில் அல்லது பண்புப் பெயரான 'களிவு' என்பது 'களிமை' என்றாகிறது. வெண்மை, பொறுமை போன்ற 'மை' விகுதியில் முடியும் வழக்கு மிகுந்த பண்புப் பெயர்களில் இருந்து ஒப்புமையாக்கமாக அவ்வடிவம் தோன்றியிருக்கலாம்.

4. 1. 2. 2 ஆ 'மை' விகுதியுடைய வினையெச்சம்

பழங்காலத்திலேயே 'மை' விகுதி முதலில் எதிர்மறைப் பெயரெச்சத்துடன் சேர்க்கப்பட்டது. பின்னர் பிற பெயரெச்சங்களுடன் 'செயலையும்' குறிக்கும் தொழில் அல்லது பண்புப் பெயரைத் தோற்றுவிக்கச் சேர்க்கப்பட்டது.

செய்யாமை

செய்தமை

செய்கின்றமை

இது 'மை' என்பதைத் தலைச் சொல்லாகக் கொண்டு (Head Word) பெயர்ச் சொல் வேர் அதற்கு அடையாகச் சேர்க்கப்படும் வாய்பாட்டு முறைமையாகும். 'மை' என்பதை பழைய பெயர்ச் சொல்லாகக் கருதலாம். தெலுங்கில் இது 'மெய்' என வருகிறது. இது தமிழிலும் கூட 'உடம்பு' எனப் பொருள்படுகிறது. 'இயல்பு' அல்லது 'தன்மையை' மை விகுதி குறிக்கிறது. எதிர்மறைப் பெயரெச்சத்துடன் 'மை' விகுதியைச் சேர்க்க வினையெச்சம் தோன்றுகிறது. இது கலித்தொகையின் காலத்திலேயே காணப்படுகிறது. சான்று : கூறுமை

4. 1. 2 2. இ. மை > மல்

'செய்யாமை' என்பதற்குப் பதில் 'செய்யாமல்' என்ற வடிவம் பிற்காலத்தில் இடம் பெறுகிறது. -ஐ > -அல்; 'செய்யாமை' என்னும் பண்புப் பெயரிலிருந்து வினையெச்சத்தை வேறுபடுத்துவதற்கு இவ்விகுதி வந்திருக்கலாம்.

4. 1. 3 எதிர்மறைத் தொடர்

4. 1. 3. அ பழையவடிவங்கள்

பகுப்பு வடிவம் (Analytical Form) தொகுப்பு வடிவத்திற்குப் பதில் (Synthetic Form) வருமிடங்களும் உண்டு. இந்நோக்கில் ஆராய்கையில் எதிர்மறை வினைகளின் வளர்ச்சி சுவையானதாக உள்ளது. 'செய' என்னும் எச்சத்துடன் அகர உருபைச் சேர்க்கப் பழைய எதிர்மறை வடிவமான 'செயா' என்பது கிடைக்கிறது. பெயரெச்ச விகுதியான அகரத்தை இதனுடன் சேர்த்தாலும் இதே வடிவமே கிடைக்கிறது. இதனோடு பால் விகுதிகளைச் சேர்க்கச் 'செயான்' முதலான வடிவங்கள் கிடைக்கின்றன. 'ஆன்' விகுதி பல பொருள் கொண்டுள்ள விகுதியாகும். எதிர்மறை காட்டும்' இடைச் சொல்லாகிய அகரமும், பெயர்ப்பதிலி விகுதியாகிய 'அன்' என்பதும் சேர்ந்து 'ஆன்' விகுதியாகிறது. மிகுதியும் வழக்கில் உள்ள உடன்பாட்டு வினையெச்சமாகிய 'செய்து' பெயரெச்சமாகிய, 'செய்த' என்பவற்றோடு ஒப்புமையாக்கமாக எதிர்மறை வடிவங் களும் 'செய்யாது' 'செய்யாத' என்றாகின்றன. வார்-அல்-அன்' போன்ற வடிவங்கள் சங்க காலத்தில் காணப்படுகின்றன. எனவே அகரம் 'அல்' என்பதன் மாற்று வடிவமே என்பது தெளிவு. பல இடங்களில் 'அல்' என்பதிலுள்ள லகர மெய் கெடுகிறது.

4. 1. 3 ஆ. பிறிதொரு வடிவம்

'செய்யான்' என்னும் எதிர்மறை வினைமுற்றில் மூன்று கருத் துக்கள் இடம் பெற்றுள்ளன.

1 கர்த்தா
2 செயல்
3 எதிர்மறை

இக்கருத்துக்கள் தொக்க இவ்வடிவத்தில் எந்த ஒன்றையும் சிறப்புப்படுத்திக் கூறமுடியாது. இதில் 'காலம்' (Tense) சூழ்நிலை யாலன்றித் தெளிவுபடாது. இக்குறைபாடு 'செய்திலன்' என்னும் புதிய வடிவத்தைத் தோற்றுவிப்பதால் சரி செய்யப்படுகிறது. 'செய்து' என்பது பழைய வினையெச்ச வடிவமாகும். 'இலன்' என்பது 'இல்' என்னும் வேரிலிருந்து வந்த ஆக்கப் பெயராகும். 'இல்' என்பது எதிர்மறையைக் குறிக்கும் பெயர்ச்சொல் வேராகும். ,இல்' 'அல்' என்பவற்றுக்கிடையில் ஒரு வேறுபாடு உண்டு. 'இல்' என்பது முழுமையான எதிர்மறையாகும். 'அல்' என்பது ஒரு

குறிப்பிட்ட தன்மை அல்லது நிலையின் எதிர்மறையாகும். பழந் தமிழில் இவ்வேறுபாடு ஆழமாக வேரூன்றவில்லை. எனவே தான் 'செய்து + அலன் > செய்கலன்' என்பது வழக்கில் உள்ளது. குகரச் சொல்லாக்க விகுதி இங்கு இருப்பதைக் காணலாம். 'வந்து + இலன்' என்பது 'பொன் + இலன்' என்பதைப் போன்றதே. 'வந்து' என்பது 'பொன்' என்பதைப் போலப் பழங்காலத்தில் பெயர்த்தன்மை யுடையதாக இருந்தது என்பதை இது மீண்டும் வலியுறுத்துகிறது. 'செய்து + அன்று > செய்தன்று'[17] என்பதையும் நோக்குக. ஆனால் 'செய்து' என்பது வினையெச்சமாக கருதப்படும் பொழுது, 'இலன்' என்னும் பெயரோடு வரும் வினையடை அமைப்பை விளக்குவது சிரமமாகிறது. எனவே இத்தொகை 'இல்' என்னும் எதிர்மறை எச்சத்தோடு கூடிய ஒரே சொல்லாகக் கருதப்படலாயிற்று. எனவே இங்கு இறந்த காலமும் காட்டப்படுகிறது. இவ்ஆட்சி புறநானூற் றின் அளவுக்குப் பழமையானது. 'போர்ப்பித்திலது' என்பது புற நானூற்றில் வருகிறது.[18] ஆனால் பல்லவர் காலத்தில் இவ்வழக்கு மேலும் மிகுகிறது. பின்வர் நிகழ்கால இடைநிலைகள் வளர்ச்சி யுற்றதும் 'செய்கின்றிலன்' என்ற வடிவம் ஆட்சி பெறுகிறது. இங்ஙனம் இறந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் தனித்தனி வடிவங்கள் உள்ள நிலையில் காலங்காட்டும் உருபில்லாப் பழைய வடிவம் எதிர்காலத்திற்கு உரியதாகிறது.

4. 1. 3. இ. பகுப்பு வடிவம்

பகுப்பு வடிவ வளர்ச்சியும் உண்டு.

சான்று : 'செய்யவில்லை'

அதாவது 'செய' என்னும் வினையெச்சம், எதிர்மறை வடிவ மான 'இல்லை' என்பதுடன் எல்லா இடங்களுக்கும் எண்களுக்கும் வருகிறது. எதிர்மறையைக் காட்டுவதற்கு இது மிகவும் வசதி யான வடிவமாகும். கர்த்தாவை இங்குத் தனியாகக் கூறிவிட முடியும். அதனாலேயே அக்கருத்தினை வலியுறுத்திச் சொல்லவும் முடியும்.

சான்று : 'அவன் செய்ய - வ் - இல்லை'

இங்ஙனம் காலமும் தனியே சுட்டப்படுகிறது.

சான்று: 'அவன் நேற்றுச் - செய்ய - வ் - இல்லை'

---

17 நற்றிணை, 30

18 புறநானூறு, 286

'செய்ய + இல்லை' என்பன இரு தனிச்சொற்களாதலின் அவை தனித்தனியே வலியுறுத்தப்படலாம். பேச்சு மொழியில் 'செய + இல்லை' என்ற இரு சொற்களும் 'செய்லே' என ஒரே சொல்லாகிறது. இங்கு 'லே' என்பது வெறும் எதிர்மறை இடைநிலையாகும்.

4 2. பெயர்ச் சொற்கள்

4. 2. 1. அ வேற்றுமைகள்

சமஸ்கிருத மொழிப் பயிற்சியின் விளைவாகச் சமஸ்கிருத மரபுத்தொடர்களும் சொற்றெருகுதியும் தமிழ் வழக்காற்றைப் பாதிக்கின்றன. இப்போக்கு பதினோராம் நூற்றாண்டில் வீர சோழியத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. தமிழ்வேற்றுமைகள் சமஸ்கிருத வேற்றுமைகளுடன் ஒத்தனவாக எண்ணப் பெற்றன. இதில் வேற்றுமையுருபேற்ற பெயர்ச்சொற்கள் வினையடைகளாகின்றன. இந்தியா பொதுத்தன்மை கொண்ட மொழிகளின் வழங்கிடமாக (Linguistic Area) மாறியது. இதன் விளைவை இந்திய மொழிகளின் வேற்றுமை அமைப்புக்களில் காணலாம். இரண்டாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை முதலிய பொதுவான அடிப்படைகள் இம்மொழிகளில் உண்டு. அடைத் தொடர்கள் வேற்றுமைகளாக வளர்ச்சியுற்றமை, சமஸ்கிருதச் செல்வாக்கால் வலுப் பெற்றிருக்கலாம். நான்காம் வேற்றுமை உண்மையான 'கொடைப் பொருள்' வேற்றுமையாகிறது; ஐந்தாம் வேற்றுமை உண்மையான 'நீங்கற் பொருள்' வேற்றுமையாகிறது. ஆனல் வேறு சில மாற்றங்களுக்கான தொடக்கத்தை இம் மூலாதாரங்களைக் கொண்டு விளக்க முடியாது. கருவிப் பொருள் வேற்றுமையும் உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமையும் தெளிவாக வேறுபடுத்தப்படலாயின. கருவிப் பொருள் வேற்றுமைக்கு 'ஆல்' என்பதும், உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமைக்கு 'ஒடு' என்பதும் வேற்றுமை உருபுகளாயின. கருவிப் பொருள் வேற்றுமை நீங்கற் பொருள் வேற்றுமையுடன் ஒன்றுகும் போக்கும் உள்ளது.

சான்று: 'புகையுடைமையின்'
அல்லது
'புகையுடைமையால்'

இடப்பொருள் வேற்றுமையும் நீங்கற் பொருள் வேற்றுமையும் ஒன்றுகும் போக்குள்ளது. நீங்கற் பொருள் வேற்றுமை

நீங்கற் பொருளைத் தரும் வினையைக் கொண்டே வேறுபடுத்தப் படுகிறது. இவ்வேறுபாடு வேற்றுமை உருபின் அடிப்படையில் அமைவதன்று.

வேற்றுமை உருபுகளின் ஆட்சி இக்காலத்தில் மிகுகிறது, தமிழின் இந்நிலை பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்த நன்னூலிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது. சாரியைகள் பொருளற்றவையாகின்றன. பெயர்ச் சொற்களில் சாரியைகளின்றி வேற்றுமை உருபுகளைச் சேர்க்கின்ற வழக்கைக் காண்கிறோம். திருக்குறளில் கூட இப்போக்கு உள்ளது; அந்நூலில் 'அத்து' இன்றி 'இல்' சேர்க்கப்படுகிறது. இது பின்னர்ச் செய்யுள் வழக்காகி விட்டது. 'மாடத்துக்கு' என்பதற்குப்பதில் 'மாடக்கு' என்பதை நன்னூலார் கையாளுகிறார்.

ஆ. பழைய உருபுகளின் (Morphs) வழக்கு குறைதல்

சில பழைய வேற்றுமை உருபுகளின் வழக்கு காலப்போக்கில் குறையத் தொடங்குகிறது. —வயின், —மிசை, —கண், —உழி ஆகிய இடப் பொருள் வேற்றுமை உருபுகளும் உளி என்னும் கருவிப் பொருள் வேற்றுமை உருபும் வழக்காற்றிலிருந்து குறைகின்றன. 'அன்' சாரியை 'இன்' சாரியைக்கு இடந்தருகிறது. 'இன்' வேற்றுமை உருபு வரும் பொழுது, 'இன்' சாரியை வராது என்ற விதியானது எல்லா இடங்களிலும் ஒரே மா தி ரி யா க ப் பின்பற்றப்படவில்லை. 'கற்பினின்' என்ற வடிவம் சங்க பாடல்களிலேயே வருகிறது. உயர்திணைப் பெயர்களோடு சாரியையைகள் பயன்படுத்தப்படலாயின. 'அவையத்தானும்' (அவை + அத்து + ஆன்) என்பதில் உள்ளது போல இரட்டைச் சாரியைகள் ஆட்சிக்கு வந்தன.

இ. வேற்றுமை உருபில் மாற்றம்

ஈற்று மூக்கொலியான னகர மெய் மூக்கொலித் தன்மையை இழந்து லகர மெய்யாவதால் மூன்றும் வேற்றுமை உருபான 'ஆன் > ஆல்' எனவும் ஐந்தாம் வேற்றுமை உருபான 'இன் > இல்' எனவும் பலவிடங்களில் மாறுகின்றன. உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை உருபான 'ஒடு > ஓடு' என்றுகிறது.

ஈ. சொல்லுருபு

பழைய வேற்றுமை உருபுகளுக்குப் பதில் சில சொற்களே வேற்றுமை உருபுகளாக வருகின்றன 'கொண்டு' என்னும் சொல் கருவிப் பொருள் வேற்றுமையை உணர்த்துகிறது.

சான்று : வாள்கொண்டு

'பொருட்டு', 'ஆக' ஆகிய சொற்கள் நான்காம் வேற்றுமையை உணர்த்துகின்றன. 'ஆக' என்னும் சொல்லுருபு பழைய குகர விகுதியுடன் வருகிறது.

சான்று : 'அவன் பொருட்டு'
'அவனுக்காக'

ஐந்தாம் வேற்றுமை 'இருந்து', 'நின்று' முதலிய சொல்லுருபுகளைப் பெறுகிறது.

சான்று : 'வீட்டில் இருந்து'
'வீட்டில் நின்று'

ஆறும் வேற்றுமை 'உடைய' என்பதைப் பெறுகிறது.

சான்று : 'அவனுடைய'

பொதுவாக இடப்பொருளை உணர்த்தும் எச்சொல்லையும் ஏழாம் வேற்றுமை உருபாகப் பயன்படுத்தும் மரபு முன்னரே தோன்றிவிட்டது. ஓகாரம் அல்லது ஏகாரத்தைப் பெயர்ச்சொல்லுக்கு முன்னுருபாக (Pre-position) விளி வேற்றுமை பெறுகிறது. சங்கப்பாடல்களில் பிந்தியவற்றில் இவ் இயல்புகள் காணப்படுகின்றன. இச் சொல்லுருபுகள் பிற்காலத்தில்தான் தனி வேற்றுமை உருபுகளாக வளர்ச்சியுற்றன.

4. 2. 2 பெயர்ப்பதிலிகள்

சுட்டுப் பெயரடி உகரம் மெல்ல மறைகிறது. 'இவ' என்பது போன்ற வடிவங்களும் மறைகின்றன. 'இதா' (பின்னர் இவ்வடிவம் 'இந்தா' என்றாயிற்று) என்பது போன்ற வடிவங்களின் வழக்கு மிகுகின்றது.

4. 2 2. 2 தனிநிலையாக இருக்கும் பெயர்ப்பதிலி (Primary Pronoun

அ. தன்மை

தொல்காப்பியர் 'நான்' என்பதைக் குறிக்கவில்லை. 'நாம்' என்பது முன்னிலையை உளப்படுத்தும் தன்மைப் பன்மையாயின், அதற்கு இணையான ஒருமை வடிவம் ஒன்று இருக்க முடியாது. ஆனால் 'யாம்', 'யான்' என்பவற்றுக்கு இணையாக, ஒப்புமையாக்கமாக நாம் என்பதற்கு 'நான்' என்ற ஒருமை வடிவம் தோன்றியது. கன்னடத்தில் கூட 'நான்' என்பது பின்னுளில் புகுந்ததேயாகும். ஆனால் இவ்வடிவம் நடுத்திராவிட மொழிகள்

அனைத்திலும் காணப்படுவதையும், யாழ்ப்பாணக் கிளை மொழியில் இது விகுதியாக வருவதையும் இங்குக்கருத்திற்கொள்ள வேண்டும். இவ்வடிவம் இலக்கிய மொழியில் பழமையன்றாயினும், கிளைமொழி களில் பழங்காலத்திலேயே இருந்திருக்க வேண்டும.

ஆ. முன்னிலை

வேற்றுமை உருபேற்கத் திரிந்த வடிவமாகிய 'நுன்', 'நும்' என்பதிலிருந்து ஒப்புமையாக்கமாக வந்துள்ளது. பல்லவர் காலத்தில் இது தேவாரத்தில் காணப்படுகிறது. ஆனால் 'உன்' என்னும வடிவத்தைத் தர இது கிளை மொழிகளில் வழங்கியிருக்க வேண்டும். 'நும்', 'நுன' என்பன பின்னர் வழககு மிகுதியான 'உம', 'உன' என்ற வடிவங்களைத்தந்தன. 'நீவிர்', 'நீயிர்' ஆகியவற்றுக்குப் பதிலாக நீர்' என்னும் வடிவம் வளர்ச்சியுறுகிறது.

இ. படர்க்கை

பாலே வேறுபடுத்தாத 'தான்', 'தாம்' என்னும் படர்க்கைப் பதிலிகளுக்குப்பதில் சார்புநிலைப் பெயர்ப்பதிலிகளான (Derived Pronoun) 'அவன்', 'அவள்' என்பன வழக்குப் பெறுகின்றன. 'தான்', 'தாம்' 'தன்' 'தம்' ஆகியன தற்சுட்டுப் பெயர்களாகவோ, சாரியைகளாகவோ, அழுத்த அசைநிலைகளாகவோ (Emphatic expletives) மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. பின்னர் இவை காலப் போக்கில் வெறும் இடைச்சொற்களாகவோ அலலது வேற்றுமை உருபுகளாகவோ ஆகின்றன. ஆறும வேற்றுமை உருபான 'உடைய' என்பதைப் பெறும் பொழுது பெயாச் சொல லானது 'சொல்லொட்டு இயல் நிலை விகுதி' (inflexion) எதையும் பெறுவதில்லை. ஏனெனில் இரண்டாம் வேற்றுமை உருபு பெற்றுள்ள பெயர்ச் சொல்லுடன் பயனிலையான 'உடைய' என்பது வருவதே இங்குள்ள தொடரமைப்பாகும்.

சான்று : மரமுடைய

ஆனால் இவ் அமைப்பின் தன்மை மறக்கப்பட்டு 'உடைய' என்பது ஆறும் வேற்றுமை உருபாகக் கொள்ளப்பட்டது. அந்நிலையில் பெயர்ச்சொல் பிற வேற்றுமை உருபுகளை ஏற்கும் பொழுது மாறும் வேற்றுமைத் திரிபை இங்கும் பெறுகிறது.

தவம் + அத்து + ஐ > தவத்தை

தவம் + உடைய > தவ - த்த் — உடைய

எழுவாய் வேற்றுமை கூட அசைநிலைகளைப் போலச் சொற்களைக் கொள்கின்றது. இவற்றை வேற்றுமை உருபுகள் எனச் சில இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

'இராமன் ஆனவன்'
'சீதை ஆனவள்'

தென் மாவட்டக் கிளைமொழிகளில் பழைய இடப்பொருள் வேற்றுமையை வலுப்படுத்த 'வைத்து' என்பது வருகிறது.

''ஊரில் வைத்து-ப்-பார்த்தேன்''

4. 2. 2. 2 விகுதிகள்

சமஸ்கிருத மொழியோடு ஒப்புமையாக்கமாகப் பல புதிய விகுதிகள் வருகின்றன. மேலும் அரிய பழைய வடிவங்களும் தொடர்ந்து போற்றப்பெற்று வழக்கில் வருகின்றன.

சாலி — புத்திசாலி
காரன்— வேலைக்காரன்
அரவு — தோற்றரவு (அரவு: தொழிற்பெயர் விகுதி யான இது முன்னரே ஆட்சியில் உள்ளது).

4. 3 தொடரியல்

4. 3. 1 பெயரெச்சம்

வினையெச்சங்களைப் போல பெயரெச்சங்கள் அடுக்கி வாரா. இறுதியாக உள்ள பெயரெச்சம் தவிர ஏனையன வினையெச்சங்களாக மாற்றப்படும். ஆனால் திருவாசகத்தில் பெயரெச்சங்கள் குறிப்பாக எதிர்மறைப் பெயரெச்சங்கள் அடுக்கி வருவது காணப்படுகிறது.[19] எதிர்மறைப் பெயரெச்சமும் 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் எதிர்மறையும் ஒத்த வடிவம் கொண்டிருக்கின்றன. பழைய விதியின்படி அடுக்கின் இறுதியில் உள்ளதைத் தவிர ஏனையன 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொள்ளப்படும். இது எப்படியாயினும் இக்காலத்தில் உடன்பாட்டுப் பெயரெச்சங்களும் அடுக்கி வருகின்றன. ஆறும் வேற்றுமை உருபை ஏற்ற வடிவம் அடையாகவும் வருகிறது. தனித்து வழங்காத வடிவங்களை உடைய அடைகளைத் தவிர வேறு சொற்கள் அதற்குப் பின்னர் வாரா. இதன் விளைவாகப் பல சொல் தொகைகள் (Multiple Compounds) தோன்றுகின்றன. ஆனால் மாக புராண அம்மானையில் ஆறும் வேற்றுமை உருபு ஏற்ற வடிவத்திற்குப் பின்னர் தனித்து வழங்கும் அடை வருகிறது; ''மடிந்த''; 'அந்த' என்ற அடைசொல்

9 திருவாசகம், 488

'பிள்ளையின்' என்ற சொல்லின் பின் வருதல் காண்க.[20] வினையா லணையும் பெயர்கள் காலங்காட்டாமல் முழுப் பெயர்ச் சொல்லா கின்றன.

சான்று : 'கேட்டது' ('வதந்தி' என்பது இதன் புதிய பொருள்)

4. 3. 2 உரையாடல் நடை

மாகபுராண அம்மானையின் மொழி பேச்சு மொழி போன்றுள்ளது. இடைநிறுத்தங்கள், உடைந்த வாக்கியங்கள், சில இடங்களில் எழுவாயும் பயனிலையும் இயைந்து வாராமை, பலவிடங் களில் காலங்காட்டுதலில் தொடர்ச்சியின்மை ஆகிய போக்குகள் காணப்படுகின்றன. வினைமுற்று அடுத்த வாக்கியத்தில் எச்சமாக மீண்டும் வருவது சாதாரணப் பேச்சு வழக்கை நினைவுபடுத்துகிறது. 'செய்து' என்னும் வினையெச்சம் ஓர் வினையைக் கொண்டு முடிதல் வேண்டும். இவ்வினைமுற்றின் எழுவாய் செய்து எனும் வினையெச் சத்தின் எழுவாயாகவும் இருக்க வேண்டும். ஆனால், இக்காலத்தில் இவ்விதி பலவிடங்களில் பின்பற்றப்படவில்லை.

4. 3. 2 பிற வடிவங்கள்

வீரமாமுனிவர் தமது பேச்சுத் தமிழ் இலக்கணத்தில் அவர் காலத்திய மரபுத்தொடர்கள் சிலவற்றைத் தருகிறார். மாக புராண அம்மானைக்கான எனது முன்னுரையிலும் ஒரு பட்டியல் தந்துள் ளேன். திருக்குற்றாலக் குறவஞ்சியில் காணப்படும் கிளைமொழிச் சொற்களும் தொகுக்கப்பட்டுள்ளன.[21]

---

20 மாகபுராண அம்மானை, p. xxvi

21 A. Ramaswami: *Tirikūtarācappa-k-kavirāyar.* (Thesis awarded M. Litt. by the Annamalai University) இந்நூல் இன்னும் அச்சாகவில்லை.

9

தமிழ் மொழியின் புற வரலாறு

அ. தமிழ் மொழியிலிருந்து பிற மொழிகளுக்குச் சென்றவை

முன்னுரை

தமிழ் மொழியிலிருந்து, கலாச்சாரக் கலப்பு காரணமாகப் பிற மொழிகளுக்குச் சென்றுள்ள சொற்களை, அவற்றை வெளி நாட்டவர் எவ்வாறு ஒலிக்கக் கேட்டனர் என்னும் மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்வது சுவை பயக்கும்.

முண்டா மொழிக் குடும்பம்

முண்டா மொழிகளே திராவிட மொழிகளின் மிகப் பழைய அண்டை மொழிகளாகும். இம் மொழிகளை இக்கண்ணோட்டத்தில் இன்னும் ஆராயவில்லை. தமிழிலிருந்து வந்தவை என ஐயுறத்தக்க சில சொற்கள் இவற்றில் உண்டு. 'மயூர' என்ற சமஸ்கிருதச் சொல் 'மரக்' என்ற முண்டா மொழிச் சொல்லிலிருந்து வந்தது என்பர். ஆனால் இச் சொல் பல திராவிடச் சொற்களுக்கு மிக நெருக்கமாக உள்ளது எனக் கருதப்படுகிறது. ஆஸ்திரேலிய-ஆசிய வடிவத்தில் கூட 'ரக்' என்பது விகுதியாக உள்ளது; எனவே 'ம' என்பது இங்கு வேர் ஆகிறது. திராவிட மொழிகளில் 'மயில்' அல்லது 'மஞ்ஞை' என்பதன் வேர் 'மா' அல்லது 'மை' என்பதாகும். இதன் பொருள் 'கருப்பு' அல்லது 'நீலம்' என்பதாகும். மயில் அல்லது மஞ்ஞை என்னும் சொற்கள் திராவிட மொழிகளிலிருந்து முண்டா மொழிக்குப் போயிருக்கலாம். 'முரள' என்ற முண்டா மொழிச் சொல்லிலிருந்து 'கேரள' என்ற சொல் திராவிட மொழிகளுக்கு வந்ததாகக் கூறுவர். 'மு' என்னும் முன்னொட்டுக்குப் பதில் 'கே' என்னும் முன்னொட்டு வந்தது என்பர். 'கேரள' திராவிட மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டதாயிருக்கக் கூடும். 'கேரள' என்னும் சொல்லில் உள்ள 'கே' என்பதற்குப் பதில்

'ம' அல்லது 'மு' என்ற முண்டா மொழி முன் ஒட்டு சேர்ந்திருக்க வேண்டும்.

வடமொழி

i. வடமொழியில் உள்ள திராவிடச் சொற்கள்

வடமொழிச் சொற்கள் பலவற்றை நேரடியாகத் தமிழ் வேர்களிலிருந்து வந்தன எனக் காட்ட முடியாவிட்டாலும், திராவிட வேர்களிலிருந்து வந்தன எனக் காட்டலாம் எனப் பர்ரோ சுட்டிக் காட்டியுள்ளார். திராவிட மொழிகளுக்கும் ஆரிய மொழிகளுக்கும் இடையேயான உறவு பற்றிய பிரச்சினையானது சமீப காலத்தில் சிக்கல் மிகுந்ததாகிவிட்டது. இவ் உறவு எப்பொழுது தொடங்கியது என்பதே இப்போதைய வினவாகும்.

மகஞ்சேதாரோ

சிந்து சமவெளி நாகரிகத்தின் எழுத்துக்கள் திராவிடமொழிக் குடும்பத்தின் பழைய கிளைமொழி ஒன்றினைக் குறிக்கின்றன என ஹிராஸ் பாதிரியார் போனமூேர் கருதுகின்றனர். ஆனால் சிந்து சமவெளி எழுத்துக்கள் பற்றிய அவரது விளக்கம், ஒரே குறியீட்டிற்குத் தன்னிச்சையான மாறுபட்ட ஒலி மதிப்பையும் பொருளையும் தரும் போக்கை அடிப்படையாகக் கொண்டது. எனவே அவரது முடிவுகள் ஏற்றுக்கொள்ளத்தக்கனவல்ல. திராவிட மொழிகளைப் பற்றிய சான்றுகள் எதையும் வேத காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து தர இயலவில்லை.

ii திராவிட மொழி பற்றிய புதிர்

தென்னகத்தில் கி. மு. 700க்கும் கி. மு 400க்கும் இடைப்பட்ட காலத்தில் கற்களால் கட்டப்பட்ட துளையுடைய கல்லறைகளையும் இரும்பையும் பயன்படுத்திய பெருங்கற்கால நாகரிகத்தினர் வாழ்ந்தனர் என்னும் உண்மையைப் பிரம்மகிரி அகழ்வாராய்ச்சியைக் கொண்டு வான் பூர்ஹைமென்டௌ (*Von Fūrer Haimendohf*). என்பவர் விளக்கியுள்ளார்.[1] ஓரளவு வெளிநாட்டுச் செல்வாக்குக் கிட்டியிருப்பினும் கூட, அந்நாகரிகம் உள்நாட்டிலேயே தோன்றி வளர்ந்திருக்க முடியாது எனக் கருதுகிறார். அவர்கள் யாரை வெற்றி கொண்டார்களோ அப்பழங்குடியினரின் மொழியைப் பேசியிருக்க முடியாது என அவர் உறுதியாகக்

1 Christoph Von Fūrer Haimendohf : *Tamil Culture* Vol. 2, pp 127 - 136, 1953

கூறுகிறார். இவ் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட வீலர் (Wheeler)என்பார் இம்முடிவுக்கு வரவில்லை. கற்களால் கட்டப்பட்டதுவையுடைய கல்லறைகள் இப்பெருங்கற்கால நாகரிகத்தினரின் தனிச் சிறப்பியல்பு என அவர் குறிப்பிடுகிறார். இத்தகைய கல்லறைகள் ஹைதராபாத்திற்கு அருகிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என அவர் கூறுகிறார். கி. மு. 1500க்கும் பழமையானது எனக் கருதப்படும் இத்தகைய கல்லறைகள் மேற்கத்திய நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கல்லறைகள் கராச்சிக்கு அருகிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறுவதாகவும் இவர் குறிப்பிடுகிறார். இந்தப் பெருங்கற்கால நாகரிகம் மேற்கில் இருந்து வந்திருக்கலாம் என்பதில் உண்மையிருக்கலாம் எனப் பொதுவாக அவர் கூறுகிறார்; என்றாலும் கூடவே இவற்றுக்கிடையேயான பெருத்த கால, இட வேறுபாடுகளையும் வலியுறுத்திக் கூறுகிறார்.

மொழிப் புதிர்

இந்தியாவின் பெருங்கற்காலநாகரிகத்திற்கும் மேற்கு ஆசியா, ஐரோப்பா ஆகியவற்றின் பெருங்கற்கால நாகரிகங்களுக்கும் இடையே ஒருமைப்பாட்டிணைப்பு இருந்திருக்குமோ என்பதை இப்போதைக்கு ஆராயாது ஒதுக்கி வைப்பினுங்கூட, ஹைமெண்டார்ப் கூறிய மொழி பற்றிய முடிவுகளை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. வென்றவர்கள் தோற்றவர்களுடன் மொழியில் உறவு கொள்ள முடியாது அல்லது அவர்களின் சொற்களைக் கடன் பெற முடியாது என்பதுவே மொழிபற்றிய அவரது முடிவாகும். இலத்தீன், கெல்டிக் (Celtic), ஜெர்மன் ஆகிய மொழி பேசுவோரிடையே உள்ள உறவைச் சுட்டிக்காட்டினால் மட்டும் இங்குப் போதுமானது. எனவே திராவிட மொழிகள் ஒரு பொழுதும் வட இந்தியாவில் பரவலாகப் பேசப்பட்டிருக்க முடியாது என்ற அவருடைய வாதமும் அடிபட்டுப் போகின்றது.

iii கடன் வாங்கல்கள்

வேத காலத்தில் கடன் வாங்கப்பட்ட சொற்கள்

'*mayūra*' (மயூர), khala, phala' முதலிய வடசொற்கள் திராவிடச் சொற்களோடு தொடர்புடையன என பர்ரோ கூறுகிறார். 'மயில், களம், பழம்', என்னும் வடிவங்கள் இன்று கூடத் தமிழில் உள்ளன.[2] 'bala' (பலம்) என்பது 'வல்' என்னும் திராவிட வேரி

2 T. Burrow : *BSOAS*, II, 603-610, 1945

லிருந்து வந்ததென எமனோ சுட்டிக் காட்டுகிறார். மூலத்திராவிட மொழியின் காலத்திலேயே வகர மெய் ஒலிப்புடைப் பகர மெய்யாக (b) மாறிவிட்ட திராவிடக் கிளைமொழியொன்றிலிருந்து இச்சொல் கடன் வாங்கப்பட்டிருத்தல் வேண்டும்.[3] இந்தோ-ஐரோப்பிய மொழியில் ஒலிப்புடைப் பகர மெய்யொலியன் அரிதாகவே வருகிறது. இதை இந்தோ ஐரோப்பிய மொழி ஒலியனாக ஒப்புக் கொள்ளாதவர்கள், இது திராவிடத்திலிருந்து வந்தது என்ற கொள்கையை ஒப்புக் கொள்வர். 'bala' என்பதற்கான இந்தோ-ஐரோப்பிய 'இனச் சொற்களின்' (Cognates) பொருள்கள் ஒத்தவையாக இல்லையெனின், இங்ஙனம் ஒப்புக் கொள்வதில் தடையேதும் இல்லை. இதிலிருந்து ரிக்வேத காலத்தவர்களோடு சேர்ந்து திராவிட மொழி பேசுவோர் வாழ்ந்தனர் என்பது புலனாகிறது. தொலைவிலுள்ள பஞ்சாபில் கூட இச்சொற்கள் பயன்படுத்தப்பட்டன. பலூச்சிஸ்தானத்தில் திராவிட மொழியான பிராகூய் மொழி இருப்பது இத்தகைய கொள்கைக்கு ஆக்கம் தருகிறது.

iv இந்திய சூழலுக்கேற்ற சொற்கள்

எமனோ குறிப்பிடுவது போல, இந்தியாவிற்கு வந்த இந்தோ-ஐரோப்பியர்கள் காலம் செல்லச் செல்ல இங்குள்ள செடி, கொடிகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் பெயர்களைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

சான்று : 1 தமிழில் உள்ள 'கைதை' என்பது வடமொழியில் 'கைதகா' (*Kaitakā*) என வருகிறது.

2 தமிழ் 'ஏலம்' வடமொழியில் 'ஏலா' (*ēlā*) என வருகிறது.

3 தமிழ்ப் 'பல்லி' வடமொழியில் 'பல்லீ' (*palli*) என வருகிறது

4 தமிழ் 'மயில்' வடமொழியில் 'மயூர' (*mayūra*) என வருகிறது.

5 தமிழ் '(எறும்புப்) புற்று' வடமொழியில் 'புத்திக' (*Puttika*) என வருகிறது.[4]

எனவே வேதகாலத்தும் அதற்குப் பிற்பட்ட காலத்தும் வடமொழியில் திராவிடச் சொற்கள் காணப்படும் வாய்ப்பைத் தள்ளிவிட முடியாது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

---

3 M. B Emeneau : "Linguistic prehistory of India", *Tamil Culture*, Vol V. No 1, pp 50, 51.

4 *Ibid*

v திராவிட மொழிக்கு இன்றியமையாத சொற்கள்

தமிழில் உள்ள 'நீர், மீன், மின்' முதலிய சொற்களுக்கு முறையே வடமொழியில் 'நீர, மீன' என்னும் சொற்கள் உள்ளன. இச்சொற்கள் எல்லா திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றன. இச்சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்கள் திராவிட மொழி களில் கிடையாது. இச்சொற்களின்றித் திராவிட மொழிகள் வேறு சொற்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. ஆனால் இச்சொற் களின்றி வேறு சொற்களை வடமொழி பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆகையால் அவை திராவிடச் சொற்களே ஆகும் எனக் கால்டு வெல்லும் பிறரும் குறிப்பிடுவர். டர்னர் (Turner) என்பார் பல வடமொழிச் சொற்களைத் திராவிட மூலங்களுக்குக் கொண்டு வருகிறார். குண்டர்ட், கிட்டல், கால்டுவெல் முதலானோர் திராவிட மொழி மூலங்களுக்கு இட்டுச் செல்லத்தக்க வட சொற்களின் பட்டியல்களைத் தந்துள்ளனர். சமீபத்தில் பர்ரோ இத்தகைய நீண்ட பட்டியல் ஒன்றைத் தந்துள்ளார். "ஆனால் திராவிடச் சொற்களா எனக் கண்டறிவதற்குப் பர்ரோ தாமே வகுத்துள்ள விதிகளுக்குள் இச்சொற்பட்டியலில் உள்ள எல்லாச் சொற்களும் பொருந்திவாரா". (என்பர் எமனோ)

புதிய ஆராய்ச்சி தேவை

சில சொல் விளக்கங்கள் (Derivations) ஏறக்குறைய முற்றும் பொருந்துவனவே ஆகும். ஆய்வு முறைபற்றியும், ஆராய்ச்சி யாளர் தந்துள்ள சொற்பட்டியலிலுள்ள ஒவ்வொரு சொல்லைப் பற்றியும் புலமை வாய்ந்த அறிஞர்கள் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். 'திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி' எல்லாத் திராவிட மொழிகளின் வடிவங்களையும் தருகிறது என்ற முறையில் ஆராய்ச்சிக்குப் பேருதவி புரிவதாகும். இந்நூலில் வகைப்படுத்தப் பட்டுள்ள வடிவங்களை வடமொழி வடிவங்களுடன் ஒப்பிட்டு ஆராய லாம். ஆராய்ச்சி அறிஞர்கள் செய்துள்ள முன்னோடியான பணி கள் புதிய வழியை வகுத்துத் தந்துள்ளன.

கீழைநாடுகள்

சீனம்

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே சீனாவுக்கும் தென் இந்தியா விற்கும் இடையே பயன்மிகு தொடர்பு இருந்தது என்பது இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.* கி. பி. 100 ஆம்

* Pelliot in Toung Pai xiii, p 457, 1912

ஆண்டிற்கு முன்னர் வாழ்ந்த 'பான்—கௌள' (Pan-Kou) என்பார் பேரரசர் வௌவின் (Wou) காலத்திலிருந்து 'ஹ்வாங்-த்சே' (Houang-tche) அரசு சீனுவுக்குத் திறை செலுத்தியது எனக் கூறுகிறார். வணிகர்கள் வழங்கிய பரிசுப் பொருள் திறை எனக் கருதப்பட்டது. 'ஹ்வாங்-த்சே' என்பது 'காஞ்சி' என்பதோடு ஒலிச்சமன்பாடு உடையது என பெர்ராண்டு (Ferrand) என்பார் கூறுகிறார். பான் கௌவின் ஆட்சிக் காலத்தைப் பொறுத்த வரையில் இச்சமன்பாட்டை ஏற்பதற்கு வரலாற்று உண்மைகள் எதுவும் தடையாயில்லை. அக்காலத்தில் சீனர்கள் கடற்போக்குவரத்துக்கு அந்நியக் கப்பல்களையே சார்ந்திருந்தனர். கி. மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து முத்துக்கள், விலை உயர்ந்த கற்கள், விந்தைப் பொருட்கள் முதலியன தென்னகத்திலிருந்து சீனுவிற்குக் கடல் வழியே சென்றன. எனவே houang-tche என்ற வடிவில் காஞ்சி என்ற ஒரு சொல்லாவது தமிழிலிருந்து சீன மொழிக்குச் சென்றது என முடிவு கட்டலாம்.[5]

தமிழிலிருந்து வந்ததாக ஒரு சப்பானியச் சொல்லைக் கூடக் குறிப்பிட முடியவில்லை. ஆனால் சீனுவிலும் சப்பானிலும் ஜென் புத்தமதம் காஞ்சியிலிருந்து கடல் வழியே சென்ற புத்தவர்மன் என்ற இளவரசனால் தோற்றுவிக்கப்பட்டது. சப்பானின் கடனு (Katana) நெடுங்கணக்கு வடிவத்தில் தமிழின் செல்வாக்கு இருப்பதாக ஐயுறுகிறார்கள்.[6]

சிங்களம்

முன்னரே நாம் கண்டது போல, இலங்கையுடனான தமிழகத்தின் தொடர்பு மிக்கப் பழமையானதாக இருந்திருக்க வேண்டும். இக்காலச் சிங்கள மொழியில் பல தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. சிங்கள யாப்பின் தொடக்கம் கூடத் தமிழிலிருந்து வந்ததாகவே கருதப்படுகிறது. 'தமிழன்' என்ற சொல் சிங்களத்தில் '*damila*' என வழங்கப்படுகிறது. தமிழில் மொழி முதல் ஒலிப்புடை வெடிப்பொலி வருவது சில இடர்ப்பாடுகளைத் தருகிறது. கி. மு. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இலங்கைக் கல்வெட்டுகளில் 'பெருமகன்' முதலான தமிழ்ச் சொற்கள் வருகின்றன.

5 Nilakanta Sastri: *Foreign Notices of South India*

6 *Ibid*

உயிரிடை வெடிப்பொலி இவ்விடங்களில் ஒலிப்பில்லாததாக எழுதப் படுகிறது. பண்டைய சிங்களத்தில் தமிழ்ச் சொற்களை ஆராய்ந்து அறிவது நல்ல பயனைத் தருவதாகும்.

கீழைக் கடற் பகுதிகள்

கீழைக் கடற்பகுதிகளுடனான தொடர்பும் மிகப் பழமையானது. சம்பாவில் (Campa) பரவியிருந்த வரிவடிவம் தென்னிந்திய வகையிலிருந்து தோற்றம் பெற்றதாகும். தாய்லாந்தில் கொண்டாடப்படும் 'தேசிய ஊஞ்சல் திருவிழா' (National Swing Festival) 'triam bave tripave' எனப் பெயர் பெறுகிறது. மாணிக்கவாசகராலும் ஆண்டாளாலும் முறையே பாடப்பெற்ற நூல்களான 'திருவெம்பாவை'' 'திருப்பாவை' என்பன அவை. இன்றுகூட இவை டிசம்பர், சனவரி மாதங்களில் பாடப்படுகின்றன. இம்மாதங்களில் தான் ஊஞ்சல் விழா நடைபெறுகிறது. சமயக் குருமார்கள் பயன்படுத்தும் ஓலைச் சுவடிகளில் காணப்படும் இப் பாடல்களை 'வரிவடிவஇயல்' (On Paleographic grounds) அடிப்படையில் பார்க்கையில், அவை பன்னிரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்தவை எனத் தெரிய வருகின்றன.

மேற்கு

பண்டைக்காலம்

பாபிலோனியா

இந்தியர்கள் பாபிலோனியாவுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததாகக் கருதப்படுகிறது. இந்திய வணிகர்கள் முதலில் காகத்தை அங்குக் கொண்டு சென்றனர் என்றும் அது அவர்களைப் பெரிதும் கவர்ந்தது என்றும், ஆகையால் அவ்வணிகர்கள் பின்னர் மயிலை விற்பனைக்குக் கொண்டு சென்றனர் என்றும் புத்த சாதகக் கதைகள் கூறுகின்றன. தமிழகத்தின் மேற்குக் கரையில் கிடைக்கும் தேக்கு பிரமிடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அந்தத் தேக்குமரம் தமிழ் நாட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டதா, அத்துடன் தமிழ்ச் சொற்களும் சென்றனவா என்பதையெல்லாம் பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூறமுடியாது. சால்தியாவிலிருந்து (Chaldea) இராசி மண்டலக் குறியீடுகள், கிழமைகளின் பெயர்கள் ஆகியவை நேரடியாகத் தமிழுக்கு வந்தன எனச் சிலர் கொள்கின்றனர். சுமேரியத் தலைநகரான 'ஊர்' என்பதை 'ஊர்' என்னும் தமிழ்ச் சொல்லோடு இணைத்துப் பேசுவர். மயிலுக்கு ஹீப்ரு மொழியில் வழங்கும் 'துகி' என்பதைத் 'தோகை'

என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்ததாகக் கால்டுவெல்லும் பிறரும் கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றுக்கள் எல்லாம் அனை வராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவையன்று.

கிரேக்கம்

கிரேக்கச் சொல்லான 'oruza' என்பது தமிழ்ச் சொல்லான 'அரிசி' என்பதிலிருந்து வந்ததாக விளக்கலாம். ஆனால் இதிலுள்ள 's' என்னும் ஒலி ஒரு புதிராகவே உள்ளது. சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் ஒலிப்புடை வெடிப்பொலிகள் மொழி முதலிலும் வருவதைக் கிரேக்க யாத்திரிகர்கள் தமிழ்ச் சொற்களைத் தம் மொழியில் எழுதியிருப்பதைக் கொண்டு உறுதிப் படுத்துகிறோம். சான்றாகத் 'தமிழகம்' என்பது 'damarica' என எழுதப்பட்டுள்ளது. ழகர மெய் மேற்கத்திய மொழிகளில் ரகர மெய்யாகிறது. இந்திய மொழிகளிலுள்ள வெடிப்பொலிகளின் இயல்புகளைப் பற்றிக் கிரேக்கர்கள் தம் மொழியில் எவ்வாறு கேட்டு உணர்ந்தார்களோ அவற்றை அடிப்படையாகக் கொண்டு இங்கு எதுவும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. சமஸ்கிருத, பிராகிருதப் பெயர்ச் சொல்லான 'Candragupta' என்பது 'Santra Kottaras' எனக் கிரேக்கத்தில் காணப்படுகிறது. இரண்டாவது சொல்லின் 'g' எவ்வாறு 'k' ஆனது என்பது தெளிவாகவில்லை. மொழி முதல் அகரம் தமிழில் பின் உயிராக இருந்திருக்க வேண்டும் எனவே கிரேக்கர் அதனை ஒகரமாக எழுதினர். ஆகாரத்தைப் பொறுத்த வரையில் இத்தவறு வரவில்லை. தமிழ் 'ஆர்க்காடு > ஆர்காடு' என்றாகிறது. தமிழின் மொழி இடை இகரம், கிரேக்கத்தில் உகர மாகிறது. இகரம் பிற்காலத்தில் குற்றியலுகரமாக மாறியது போல இங்கும் மாறியிருக்க வாய்ப்புண்டா என்பதையும் ஆராயவேண்டும்.

கிரேக்க, உரோமானிய யாத்திரிகர்களால் பல தமிழ் இடப் பெயர்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் மேலைநாட்டவர் எப்பகுதிகளோடு வணிகம் புரிந்தனர் என்பதை விளக்குதற்குரிய வரலாற்று முக்கியத்துவம் இப்பெயர் களுக்கு உண்டு. தமிழ் ஒலிகளுக்கும் அவை எழுதப்பட்ட கிரேக்க வரிவடிவத்துக்கும் இடையே உள்ள உறவை நிறுவுவதற்கு மொழி யியல் கண்ணோட்டத்தில் விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும். கிரேக்க ஆசிரியர்களின் கிளை மொழி, தமிழ் மூலங்கள், இவற்றின் ஒலியன் அமைப்பு முதலியன தொடர்பான பல வினாக்களுக்குரிய விடைகளை இனியாவது கண்டறிய வேண்டும்:

தற்காலம்

பல தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்தில் புகுந்துள்ளன; அங்கிருந்து பிற மேற்கத்திய மொழிகளுக்கும் சில சொற்கள் சென்றுள்ளன. பதினேழாம் நூற்றுண்டில் ஆங்கிலேயர்கள் சென்னையைத் தமது நடவடிக்கைகளின் மையமாகக் கொண்டிருந்தனர். பின்னர் பதினெட்டாம் நூற்றுண்டில் அவர்களது நடவடிக்கைகளின் நிலைக்களமாக வட இந்தியா ஆனது. பத்தொன்பதாம் நூற்றுண்டைப் பொறுத்தவரையிலும் கூட இது உண்மை ஆகும். ஆங்கிலேயர் தங்கள் மொழிச் சொற்களைக் கொண்டே குறிக்க முடியாத அளவிற்குத் தமிழில் பொருட்கள் இல்லை. எனவே ஆங்கிலத்தில் தமிழ்ச் சொற்களைக் கடன்வாங்குதல் அநேகமாக இல்லை என்றே சொல்லலாம்.

17 ஆம் நூற்றுண்டில் இந்திய நாணயங்கள், அளவைகள், மரக்கட்டைகள், ஆங்கிலேயக் கம்பெனியில் பணிபுரியும் இந்தியர்களின் சாதிப்பெயர்கள், இந்தியப் போக்குவரவுச் சாதனங்கள், புதிய உணவுப் பொருட்கள், இன்பநுகர்ச்சிக்குப் புது வழிகள், விந்தையான (ஐரோப்பாவில் காணப்படாத) உயிரினங்கள் போன்றவற்றை ஆங்கிலேயர் இந்தியாவில் கண்டனர். இவற்றுக்கு ஆங்கிலத்தில் சொற்கள் கிடையா;[7] எனவே தமிழிலிருந்து அவற்றை அவர்கள் கடன் வாங்க வேண்டியிருந்தது.

முதன் முதலில் காணப்படுபவை என்னும் வரன் முறையில் தயாரிக்கப்பட்ட நூற்றுண்டு வாரியான ஆங்கிலச் சொற்களின் பட்டியலில் பின்வரும் தனி இயல்புகள் காணப்படுகின்றன.

1. மேலை நாட்டு மொழிகளில் நாவளை டகர மெய் கிடையாது. இவ்வொலியானது உச்சரிப்பின் போது வீரமாமுனிவர் விளக்கியுள்ளபடி, ரகர மெய்க்கு அருகில் வருவதால் அப்படியே எழுதப்படுகிறது.

Tūttukkuṭi (தூத்துக்குடி) > Tuticorin
Taraṅkampāṭi (தரங்கம்பாடி) > Tranquebar

விரைந்து உச்சரிக்கப்படும்பொழுது டகர மெய் லகர மெய்யாகவே கேட்கப்பட்டது.

mañcāṭi (மஞ்சாடி) > mangelin

7 G. Subbarao : *Indian Words in English,* p 2

இவ்வரிவடிவ மரபுப்படி '—nge—' என்பதிலுள்ள '—g—' என்பது இடையண்ண வெடிப்பொலியாகும். '—nge—' என்பதிலுள்ள '—g—' என்பது கடையண்ண வெடிப்பொலியாகும்.

ககரம் பலவிடங்களில் சகரமாகக் குறிக்கப்படுகிறது.

தமிழ்ச் சகர மெய் (மொழி முதல் சகர மெய்யும் சகர மெய் இரட்டையும்) 'ch' என குறிக்கப்படுகிறது. ஆனால் அதனுடைய குழிந்துரசொலி உச்சரிப்பு 'sh' அல்லது 'ss' எனக் குறிக்கப்பட்டது.

kācu (காசு) > cash
vicai (விசை) > viss

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மொழி முதல் சகர மெய் கூட 's' எனக் குறிப்பிட்டது; ஏனெனில் இக்காலத்தில் சகர மெய் 's' என மாறிவிட்டது.

சான்று : *cōlai* > *sōlai*

2. பின்வரும் சொற்களை ஆங்கிலேயர் ஆங்கிலேய முறைப் படி படித்தனர்; ஆங்கில வரிவடிவ மரபுப்படி படித்தனர். நுனிநா பல் வெடிப்பொலியும் நாவளை வெடிப்பொலியும் (த்,ட்) நுனியண்ண வெடிப்பொலிகளாக உச்சரிக்கப்பட்டன. 'ஓரசைச் சொல்லின் ஈற்றில் உள்ள ஏகாரம் எகரமாக உச்சரிக்கப்படுகிறது; 'ea' என எழுதப்படுகிறது. (சான்று : teak). 'ea' என்பது பின்னர் —'iy'— என உச்சரிக்கப்படுகிறது.

iē > *tea*

பின்வருவது போன்ற மாற்றங்களுக்கு இவ்விதி பயன் படுகிறது.

tēkku (தேக்கு) > *teak*

ஆங்கிலத்தில் எகரம் மொழிக்கு இறுதியில் வராது. எனவே தமிழ் எகரம் இகரமாகிறது. இகரம் 'ய்' (y) என ஆங்கிலத்தில் எழுதப்படுகிறது.

Piḷḷai (பிள்ளை) > *Piḷḷe* > *Poly*

19 ஆம் நூற்றாண்டில், '*ā* ~ *aw*' என்பதற்குப் பின்னர் வரும் மொழியிறுதி எகரம் '*ey*' எனவும் குறிக்கப்படுகிறது. (key என்னும் ஆங்கிலச் சொல்லைக் காண்க)

taṇṇir (தண்ணீர்) ~ *taṇṇi* > *tawney*
Kāṇi (காணி) > *Cawney*

குறில் திறப்பசையால் தொடரப்படும் பொழுது குறில் அசையின் ஈற்றில் உள்ள குறில் - இகரம் ஒரு மூக்கொலியுடன் சேர்த்துக் குறிக்கப்பட்டது.

—CVCi > —CVCin

'in' என்பதிலுள்ள ஆங்கில இகர உயிர் போன்றதே இம் மொழியிறுதி இகரமுமாகலாம்.

mañcāṭi (மஞ்சாடி) > *mangelin*

மொழியிறுதி இகரம் 'ஏஏ' (ee) எனவும் குறிக்கப்படுவது உண்டு.

Kāñci (காஞ்சி) > *Conjee*

'y, ee, ey' என்பவற்றில் இகரத்தின் மூன்று நெடுமைகளும் முறையே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கலாம். உகரம் 'oo' எனக் குறிக்கப்படுகிறது.

Puṅku (புங்கு) ~ *Puṅkan* (புங்கன்) > *Poon*

Curuṭṭu > *Cheroot*

அகரம் 'o' எனக் குறிக்கப்படுகிறது.

Kaṇakka— > *Conico—*

மெய் இரட்டைகளால் தொடரப்படுமாயின் அகரம் 'u' எனக் குறிக்கலாம்.

ṉalla (நல்ல) > *nullah*

அகரம் 'aw' எனக் குறிக்கப்படுகிறது.

Kāṇi (காணி) > *Cawney*

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் ஆகாரம் 'au' எனக் குறிக்கப்படுகிறது.

Ciṇtātirippēṭṭai (சிந்தாதிரிப்பேட்டை) > *Cintāudripet*

'market' என்பதன் ஒப்புமையாக்கமாக 'ஆ' என்பது 'e' எனவும் குறிக்கப்படுகிறது.

mañcāṭi > *mangelin*

இங்கு வரும் 'e' யானது, 'g' ஐ மென்மையுடையதாகக் காட்டப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

அகரம் 'e' எனவும் குறிக்கப்படுகிறது.

marakkāl (மரக்கால்) > *mercal*

பத்தொன்பதாம் நூற்றுண்டில் அகரம் 'a' எனக் குறிக்கப் படுகிறது.

panṭal (பந்தல்) > *pandal*
panṭāram (பண்டாரம்) > *pandara*

இந்நூற்ருண்டில் 'ஐ' என்பது 'ai' எனக் குறிக்கப்பெற்று, 'ay' என எழுதப்படுகிறது.

pālai (பாலை) > *palay*

ஆனல் இஃது இலக்கிய வழக்கைப் பின்பற்றியதாகும்; ஏனெனில் 'ஐ என்னும் தமிழ்ப் பேச்சு வழக்கில் 'எ' அல்லது 'அ' என மாறிவிட்டது ஆங்கிலத்தில் 'எ' மொழியிறுதியில் வராது என்பதால் அது 'இ' (i) என ஆனது முன்னரே விளக்கப்பட்டது.

tope > *tōppu* (தோப்பு)
tyre > *tayir* (தயிர்)

ஆங்கிலத்தில் மொழியிறுதியில் ஒலியற்ற 'e' வருவதானது அதற்கு முன்னர் வரும் 'o', 'y' என்பன முறையே 'o', 'ai' என உச்சரிக்கப்படுவதை உணர்த்துவதற்கேயாகும்.

வீரமாமுனிவர் சுட்டுவது போல மேலைநாட்டு மொழிகளில் ஒலி நீட்சியானது (length) ஒலியனுக இல்லாமையால், அம்மொழி களைப் பேசுவோர் பிற மொழிகளில் உள்ள ஒலி நீட்சியை (இரட்டித் தலை)ப் பல சமயங்களில் கவனிக்கத் தவறுகின்றனர்.

marakkāl (மரக்கால்) > *mercal*

மெய்களைப் பொறுத்த வரையில் நீட்சி இன்மை என்பது தமிழ் உச்சரிப்பின் நடப்பியல் உண்மையைக் காட்டுவதாகும். குறில் வெடிப்பொலிகள் மொழியிடையில் ஒலிப்புடையன ஆகின் றன. ஆனல் நெடில் வெடிப்பொலிகள் ஒலிப்பில்லாதுள்ளன. குறிலுயிர்களுக்குப் பின்னர் தவிர ஏனைய இடங்களில் இரட்டை வெடிப்பொலிகள் ஒலிப்பிலாத்தனி வெடிப்பொலிகளாகவே உச்சரிக் கப்படுகின்றன. ஒலிப்புடைமை ஆங்கிலத்தில் குறிக்கப்படுகிறது; ஆனல் குற்றுயிர்களுக்குப் பின்னர் வரும் நீட்சி குறிக்கப்படுவது இல்லை.

tirucci (திருச்சி) > *ṭrichi*
Kopparai (கொப்பரை) > *Copra*
Kaṇakku (கணக்கு) > *Conico*

இது விரைந்தொலித்தலைக் குறிப்பதாகலாம்.

இடத்தினுல் வரும் நீட்சி பல சமயங்களில் இயற்கையான நீட்சி எனத் தவருகக் கேட்கப்படுகிறது. இது முறை மாறியும் வருவதுண்டு.

taṇṇīr (தண்ணீர்) ∝ *taṇṇi* (தண்ணி) > *tawney*
ōlai (ஓலை) > *Olla*

தமிழில் உள்ள நீட்சி ஆங்கிலத்திலுள்ள ஒலி அழுத்தத்துடன் மயங்கப்படுகிறது.

Cōlai (சோலை) > *Sōlai*

எவ்வித மூச்சொலியும் இல்லாது உச்சரிக்கப்படும் தமிழ் மொழிமுதல் பகரமெய், சில சமயங்களில் f எனக் கொள்ளப் படுகிறது.

paṇam (பணம்) > *fanam*

யகர உடம்படுமெய் தனி எழுத்தாக எழுதப்படுவதில்லை.

kayaṟu (கயறு) > *Coir*
paṟaiyan (பறையன்) > *paraiah*
kuyil (குயில்) > *koel*

நுனியண்ண வெடிப்பொலியான றகர மெய் ஆடொலியாகிறது. அது 'rr' எனக் குறிக்கப்படுகிறது.

Kaṟi (கறி) > *Curry*

ஆங்கிலத்தில் 'l' ஒன்றுதான் உண்டு. எனவே ளகர மெய் 'l' என்பதாலேயே குறிக்கப்படுகிறது. சில சமயங்களில் 'll' எனவும் குறிக்கப்படுகிறது.

piḷḷai > *poly*
miḷaku > *mulliga*

ஆங்கிலச் சொல்லமைப்பைப் பின்பற்றித் தமிழ்ச்சொற்கள் ஆங்கிலத்தில் மெய்யில் முடிவனவாக ஆக்கப்படுகின்றன: இறுதி அசை அல்லது உயிர் விடப்படுகிறது.

ānaikoṇṭān (ஆனைகொண்டான்) > *anacond*
veṟṟilai (வெற்றிலை) > *betel*

மொழியிறுதிக் குற்றுகரத்தை, மொழியிறுதி மெய்யை உச்சரிக்கும் 'தமிழ் முறை' (Tamilian method) எனக் கொள்ளப்

பட்டிருக்கலாம்; அல்லது ஆவ்வுகர உச்சரிப்பு கேட்கப்படாதிருந்திருக்கலாம்.

Kācu (காசு) > *cash*
Curuṭṭu (சுருட்டு) > *Cheroot*
ūṟṟu (ஊற்று) > *woots*

3. தமிழ் மொழியை ஆங்கில வரிவடிவில் பெயர்த்து எழுதும்பொழுது வரும் மாற்றங்கள் எல்லாம் தமிழில் நிகழ்ந்துள்ள மாற்றங்களின் விளைவாகவே இருக்கக்கூடும்.

அ. மூக்கொலிகட்குப் பிறகு வரும் வெடிப்பொலிகள் ஒலிப்புடையன ஆகின்றன.

mañcāṭi (மஞ்சாடி) > *mangelin*
paṇṭāram (பண்டாரம்) > *pandara*
pantal (பந்தல்) > *pandal*

ஆ. மூக்கொலிக்குப் பின்னர் வரும் வெடிப்பொலி மூக்கொலியாகிறது. குற்றியலுகரம் உணரப்படாத பொழுது பின் கண்ட வடிவங்கள் வரும்.

punku (புன்கு) ∝ *puṅgu* (புங்கு) > *poonu*

இ. மொழியிறுதிக் குற்றியலுகரம் 'ɨ' என நடுவிடத்ததாக ஆக்கப்பட்ட ஒலி (centralized sound)—கேட்கப்பட்டு 'ing' என எழுதப்படுகிறது. இறுதியில் உள்ள மூக்கொலியையும் நோக்குக.

Cuṇṇāmpu (சுண்ணாம்பு) ∝ *Cuṇṇāmu* > *Chunaming*

ஈ. வகர மெய் இதழ்ப் பல்லொலியாக 'b' என்பதுடன், கட்டற்ற அல்லது நிபந்தனையற்ற மாற்றத்தில் வருகிறது.

Veṟṟilai (வெற்றிலை) > *betel*

உ. மெய்யொலிகட்கு இடையில் வரும் உயிர்கள் பேச்சுறுப்புக்களில் ஒட்டு நீங்கும் வகையில் பிறக்கும் உயிர்களாக மாறுகின்றன; மயக்கங்கள் (Clusters) தோன்றுகின்றன.

Tirucci (திருச்சி) > *Trichi*
Kopparai (கொப்பரை) > *Copra*

ஊ. இம்மயக்கங்களும் பின்னர் 'சுரபத்தியால்' தவிர்க்கப்படுகின்றன.

Kaṇakka > *Kaṇ'kka* > **Kanika* > *Conico*

எ. பின்வருவது அடிக்கடி காணப்படுவதாகும்.

உ(ப்/த் > ஒ, ப்/ம்) இ > உ ல எ > ஒ

இவை ஆங்கில வடிவங்களிலும் நன்கு விளக்கப்படுகின்றன.

piṇṇākku (பிண்ணாக்கு) > *poonac*
Kaṇakku-pillai (கணக்கு-பிள்ளை) > *Conicopoly*
miḷaku taṇṇi(r) (மிளகு தண்ணீர்) > *mulliga-tāwney*

முதலசையில் உள்ள உகரம் 'o' என்றாகிறது.

mutaliyār (முதலியார்) > *modleiar*
Kuyil (குயில்) > *Koel*

4. பாமர மொழி விளக்கப்போக்கு சில மாற்றங்களை விளக்கும்.

akil > *agil* (அகில்) *eagle wood*
Kiṭṭaṅki (கிட்டங்கி) > *godown,*

ஆங்கிலத்திலுள்ள தமிழ்ச் சொற்களின் நூற்றாண்டு வாரியான பட்டியல்

17 ஆம் நூற்றாண்டு

தமிழ்	ஆங்கிலத்தில்
ஆனைகொண்டான்	anacond
வெற்றிலை	betal
காசு	cash
கட்டுமரம்	catamaran
கத்தை	catechu ∞ cutch
சுருட்டு	cheroot
சுண்ணாம்பு	chunam ∞ chunaming
கயிறு	coir
கணக்குப்பிள்ளை	conicopoly
கஞ்சி	conjee
கூலி	cooly
கொப்பரை	copra
கறி	curry
தோணி	dhoney ∞ doney
அகில்	eagle-wood
பணம்	fanam
கிட்டங்கி	godown
சக்கை	jack

சர்க்கரை	jaggery
மஞ்சாடி	mangelin
மாங்காய்	mango
மரக்கால்	mercal
நொல்ல	nullah
ஓலை	olla
பறையன்	paraiah
புன்கு	poon
தேக்கு	teak
தோப்பு	tope
தயிர்	tyre
வீசை	viss

18 ஆம் நூற்றாண்டு

அணைக்கட்டு	anicut
வண்டி ∞ பண்டி	bandy
சட்டி	chatty
மிளகு–தண்ணீர்	mulliga-tawny
பந்தல்	pandal
பண்டாரம்	pandara
பழவேர்க்காடு	pulliceat
சுவாமி [ஆபரணம்]	swami jewellery
தமிழ்	Tamil ∾ Tamul
தட்டி	tatti
ஊற்று	woots

19 ஆம் நூற்றாண்டு

காணி	cawney
குயில்	koel
முதலியார்	modeliar
பாலை	palay
புண்ணாக்கு	poonac
புங்க (எண்ணெய்)	poonga oil
அப்பளம்	popadam
பட்டாளம்	pultun
சோலை	sola
திருச்சி	Trichi
வெட்டிவேர்	vetiver

ஆ. பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு

1. பண்டைக் கால உறவுகள் — முண்டா மொழி

திராவிடர்களின் தொடக்க கால அண்டைமொழிகள் முண்டா மொழிகளாகும். எனவே அவற்றின் செல்வாக்கைப் பழந்தமிழில் காணமுடியும். தவக்காய், தவளைக்காய், தவளை ஆகிய சொற்கள் 'tabeg' என்ற சொல்லிலிருந்து வந்தவை.[8] கத்தரிக் காயைக் குறிக்கும் 'வழுதுணங்காய்' என்ற சொல்லும் இச்சொல்லி லிருந்தே வந்ததாகக் கொள்வர். (baho என்பது பழத்தையும் tiong என்பது கத்தரிக்காயையும் குறிக்கும்.)

தமிழில் உள்ள 'இளநீர்' என்ற சொல் புதிராக உள்ளது. 'இளநீர்' என்பதன் பொருள் முதிராத தேங்காயிலுள்ள இனிய நீர் எனக் கூறப்படுகிறது. ஆஸ்டிரிக் மொழிகளில் 'niyor' என்ற சொல் தேங்காயைக் குறிக்கிறது.[9] இச்சொல் 'இளநீர்' என்னும் சொல் லினை விளக்கும். 'misei', 'bisai' என்னும் ஆஸ்டிரிக் மொழிச் சொற்களிலிருந்து 'மீசை', 'வீசை' என்னும் சொற்கள் வந்தன.[10]

பிற செல்வாக்குகள்; எதிரொலிச் சொற்கள்

மேலே கூறப்பட்ட சொற்களைத் தவிர, வேறு சொல்வாக்கு களும் காணப்படுகின்றன. இவை இலக்கணத்தில் நிரந்தர இடம் பெறவில்லையாயினும், தமிழ்மரபுத் தொடர்களில் ஆட்சி செலுத்து கின்றன. இவ்வரிசையில் முதலில் வருவன எதிரொலிச் சொற் களாகும் (echo words). தமிழில், முதலில் ஒரு சொல் கூறப்பட்டு முதலசையில் மாற்றத்துடன் மீண்டும் கூறப்படுகிறது.

"(மெய்)நெ. உயிர் / கு. உயிர் > கி / கீ"

பிற இந்திய மொழிகளில் ககர வெடிப்பொலிக்குப் பதிலாக வேறு வெடிப்பொலிகள் பயன்படுத்தப்படுகின்றன

மிகுதியும் வழக்கில் உள்ள எதிரொலிச் சொற்கள் பற்றிப் பழந்தமிழ் இலக்கண நூல்கள் எதுவும் குறிப்பிடவில்லை. எதிரொலிச் சொற்களில் இடம் பெறும் இரண்டாவது சொல் இக்காலத்

---

8 Sylvain Levi and others : *Pre-Aryan and Pre-Dravidan in India*

9 *Ibid*

10 *Ibid*

தமிழில் கீழ்மைப் பொருளை (Semantic degradation) அடைந்துள்ளது.

சான்று: சம்பளம்
கிம்பளம்

இங்குக் 'கிம்பளம்' என்பது 'லஞ்ச'த்தைக் குறிப்பதாகும். இந்தியா முழுவதிலும் சிறப்புப் பெற்றுத் திகழும் எதிரொலிச் சொற்களை முண்டா மொழி மூலத்திலிருந்து வந்ததாகவே விளக்க முடியும்.

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இத்தகைய செல்வாக்கில் இரண்டாவதாக வருவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவம் பற்றியது. கோண்டி போன்ற சில நடுத் திராவிட மொழிகள் நீங்கலாக ஏனையவற்றில் இதற்குத் தனிப்பெயர்ப்பதிலி அடியோ விகுதியோ கிடையாது. தன்மைப் பன்மைப் பெயர்ப்பதிலி வடிவங்களில் சில, உளப்பாட்டுப் பன்மையைக் குறிக்கும் வகையில் வளர்ச்சியுற்றன. ஆனால் அவை காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் வேறுபடுவதால் ஒரு குறிப்பிட்ட வடிவத்தைச் சுட்டிக்காட்ட முடியாது. 'உளப்பாட்டுத் தன்மைப் பன்மை', 'உளப்படுத்தாத தன்மைப் பன்மை' என்று வேறுபடுத்தப்படும் பொதுவான போக்கையே சுட்டிக்காட்ட முடியும்.

'நாம்' என்பது உளப்பாட்டுப் பன்மை வடிவம் எனக் கூறப்படுகிறது. தொல்காப்பியர் இவ்வாறு கூறவில்லை.* சங்க இலக்கியம் இத்தகைய பாகுபாட்டைப் பின்பற்றினாலும் கூட அது ஒரே மாதிரியாக அமையவில்லை.[11] இக்காலத் தமிழில் 'நாம்' என்பது உளப்பாட்டுப் பன்மையாகும்; 'நாங்கள்' என்பது முன்னிலையை உளப்படுத்தாத பன்மையாகும். மிகையாகச் சேர்க்கப்பட்டுள்ள 'கள்' விகுதியே இவ் வேறுபாட்டிற்குக் காரணமாகும் யாழ்ப்பாணத் தமிழில் 'எங்கள்' என்பது உளப்பாட்டுப் பன்மையாகும். ஆனால் தமிழகத்தில் இது முன்னிலையை உளப்படுத்தாத தன்மைப் பன்மையாகும். இடத்தால் வரும் வேறுபாட்டிற்குச் சான்றாக இதைச் சுட்டிக் காட்டலாம்.

---

* தொல்காப்பியம், 647

11 சிலப்பதிகாரம், கடலாடு காதை, 27 ஆவது வரி
"அமரர் தலைவனை வணங்குதும் யாமென"

வடமொழி

பழைய உறவுகள்

முன்னுரை

ஆரியர்கள் வேதகாலத்திலிருந்து திராவிடர்களுடன் தொடர்பு கொண்டதாக நம்பப்படுகிறது. வரருசிக்கு முற்பட்ட இலக்கியங்களில் தென் திராவிடத்துடனான ஆரியர்களின் தொடர்பு பற்றிய குறிப்புக்கள் கிடைக்கவில்லை. வரருசிக்கு முன்னரே 'ஆரிய—தென் திராவிட' உறவு இருந்திருக்கலாம் என்பதை இது மறுப்பதாகாது. பௌத்தமும் சமணமும் தங்கள் கொள்கைகளைப் பரப்பும் நோக்குடைய சமயங்களாதலின் (missionary religion) அவை தங்கள் மதக்குருமார்களைத் தமிழகத்திற்கும் தொலைவிலுள்ள இலங்கைக்கும் அனுப்பின. எனவே குகைக் கல்வெட்டுக்களில் பிராகிருதச் சொற்கள், பெயர்கள் பலவற்றை நம்மால் காண முடிகிறது. இச்சொற்கள் பேச்சு மொழிகளான பிராகிருதம் அல்லது பாலி மொழியிலிருந்து வந்திருக்க வேண்டும்.

பிராகிருதத்தின் காலம் : தொல்காப்பியம்

தொல்காப்பியர் வடக்கிலுள்ள மொழியைப் பற்றிப் பொதுவாக 'வடசொல்' எனக் குறிப்பிடுகிறார்.[12] இச்சொல் சமஸ்கிருதத்தைக் குறிப்பதாக விளக்கப்படுகிறது. ஆனால் இச்சொல் பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளையும் குறிப்பதாயிருக்க வேண்டும். செய்யுளில் இடம் பெறும் நால்வகைச் சொற்களில் ஒன்றாக வடசொற்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுவது குறிக்கத்தக்கது. அந்நால்வகைச் சொற்கள் வருமாறு :

1. இயற்சொல் — சாதாரண, எளிய சொற்கள்
2. திரிசொல் — இலக்கியச் சொற்கள். ஒரு பொருள் பல சொல்லும், பல பொருள் ஒரு சொல்லும் இதில் அடங்கும்.
3. திசைச்சொல் — கிளைமொழிச்சொற்கள்
4. வடசொல்

சமஸ்கிருதத்துடனும் பிற மொழிகளுடனும் தமிழின் தொடர்பு தொல்காப்பியர் காலத்திலேயே நெருக்கமடைந்தது

12. தொல்காப்பியம், 880
''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே''

என்பதை இது காட்டுகிறது. உலகம் (> லோக), காலம் (> கால) முதலிய சொற்கள் சமஸ்கிருத மூலத்திலிருந்து வந்தவை என்பர். ஆனால் சில சொற்களில் காணப்படும் தற்செயலான வடிவ ஒற்றுமையைக் கொண்டு அவற்றைச் சமஸ்கிருதத்திலிருந்து பெறப் பட்டவை என முடிவு கட்டக் கூடாது எனப் பழைய உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டுவர்[13] குறுகிய அளவு உடைய இசைப் பாடல்களைக் குறிக்கப் 'பண்ணத்தி' என்ற சொல் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.[14] *Prājñapti*' என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்ததாகக் கூறப்படும். சமணர்களின் நீண்ட இலக்கியப் படைப்புகளைக் குறிக்கும். 'பண்ணத்தி' என்ற சொல்லிலிருந்து தொல்காப்பியர் குறிப்பிடும் 'பண்ணத்தி' மாறுபட்டது. பழைய உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டுவது போல, தொல்காப்பியர் குறிப்பிடும் பண்ணத்தி' என்பது 'பண—' என்ற தமிழ் வேரிலிருந்து வந்ததாகும்.[15] தொல்காப்பியத்தில் 'காமம்' முதலான சமஸ்கிருதச்சொற்கள் உண்டு. அனைத்திந்தியத் தன்மை உடைய 'அறம்', 'பொருள்', 'காமம்' என்னும் கருத்துருவாக்கம் தொல்காப்பியத்திலும் காணப்படுகிறது.

தொல்காப்பியர் காலத்தே வழக்கில் வாராத வடிவங்களில் எல்லாம் பல சமஸ்கிருதச் சொற்கள் சங்க இலக்கியங்களில் வருகின்றன.

சான்று : யவனர்[16], யூபம்[17]

சமஸ்கிருதப் பெயர்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

மார்க்கண்டேயனார்[18]
உருத்திரன்[19]

---

13 தொல்காப்பியம் 541, நச்சினார்க்கினியர் உரை

14 தொல்காப்பியம் 1424
"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணந் தியல்பே"

15 தொல்காப்பியம், 1424, இளம்பூரணர் உரை

16 புறநானூறு, 56. 18

17 ,, 16. 21

18 ,, 365

19 குறுந்தொகை, 274

வான்மீகியார்[20]
கங்கை[21]
இமயம்[22]
வாரணவாசி[23]
சோணை[24]
பாடலி[25]

ஆனால் இவற்றில் பல சொற்களின் தோற்றத்தைப் பிராகிருத, பாலி மூலங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

சான்று : கண்ணன்[26]

சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் ஆகியவற்றில் சமஸ்கிருதப் பெயர்களன்றி வேறு சொற்களும் வருகின்றன.

சிலப்பதிகாரத்திலிருந்து சில சொற்கள் இங்குத் தரப் படுகின்றன.

சாவகர்	சிலம்பு	15—190
சாரணர்	,,	15—192
தானம்	,,	15—43
தருமம்	,,	10—163
ஞானம்	,,	15—42
விஞ்சை	,,	15—136
இயக்கி	,,	15—116
இந்திரன்	,,	5-காதையின் தலைப்பில்
அந்தி	,,	4- ,, ,,

மணிமேகலையில் மேலும் பல சமஸ்கிருதச்சொற்கள் உள்ளன. டாக்டர் உ.வே. சாமிநாதய்யரின் மணிமேகலைப் பதிப்பில் உள்ள ‘அபிதான விளக்கம்’ என்னும் பகுதியைக் காண்க. மணிமேகலையில் இடம் பெறும் சமஸ்கிருதத் தத்துவச் சொற்கள் வருமாறு :

---

20 புறநானூறு, 358
21 ,, 161. 6
22 ,, 2. 24
23 கலித்தொகை 60. 14
24 குறுந்தொகை 73. 3
25 ,, 75 4
26 ,, 274

கருமம்
பாவனை
கந்தம்
நரகர்
அநித்தம்
துக்கம்

திருக்குறளில் இடம்பெறும் சமஸ்கிருதச் சொற்கள் பல வற்றுள் மூன்று வருமாறு :

ஆதி [குறள் 1]
பகவன் [,, 1]
பாக்கியம் [,, 1141]

பதினெண்கீழ்க்கணக்கு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஸ்மிருதி(smrtis)களிலி ருந்து வந்த சொற்கள் காணப்படுகின்றன. ஆரம்பகாலப் பல்லவ அரசர்களின் செப்புப் பட்டயங்கள் கூடப் பிராகிருத மொழியில் வெளியிடப்பட்டன. கி.மு. ஏழாம் நூற்றுண்டு வரையுள்ள காலத்தைப் பிராகிருத மொழிக் காலம் எனக்கருதலாம்.

சமஸ்கிருத மொழிக் காலம்

தமிழகம் சமஸ்கிருதக் கல்வியின் மையமாதல்

கி.பி. ஏழாம் நூற்றுண்டிலிருந்தோ அல்லது அதற்குச் சற்று முன்னர் இருந்தோ சமஸ்கிருதத்தின் உண்மையான பாதிப்புக் காலம் தொடங்குகிறது. தென்னகம் சமஸ்கிருதக் கல்வியின் மையமானது. இரண்டாம் இராசசிம்மனின் அவைக்களத்தில் தண்டி முனிவர் இடம் பெற்றிருந்தார். பின் சங்கரரும் அவருக்குப் பின்னர் இராமாநுசரும் அக்காலத் தமிழகத்திலிருந்து தங்களது கோட்பாட்டினைப் பரப்ப நாட்டின் பிற பாகங்களுக்குச் சென்றனர். சங்கரரும் பிறரும் 'திராமிடசாரியா' (*Dramiḍācārya*) என்பவரைக் குறிப்பிட்டுள்ளனர். இக்காலகட்டத்தின் தொடக்கத்தில் செப்புப் பட்டயங்கள் சமஸ்கிருதத்தில் வெளியிடப்பட்டன. இக்காலத்தி லேயே இந்து சமயம் வலிமை பெறுகிறது. சமஸ்கிருதத்தில் காணப் படும் சைவ, வைணவ நூல்களில் சில தென்னகத்தில் தோன்றி யிருக்கலாம். தென்னகத்தில் காணப்படும் மகாபாரதமே மிகவும் நீண்டதாகும். அதன் நீட்சிக்குக் காரணமான சேர்க்கைகள் தென்னகத்திலிருந்து வந்திருக்கலாம்.

அரசியல் மற்றும் சமய, தத்துவச் செல்வாக்குகள்

இவ்விரு மொழிகளுக்கு இடையேயான உறவு அரசியல் செல்வாக்குடன் தொடங்குகிறது. பின்வருவன போன்ற சொற்கள் தமிழில் இடம் பெறுகின்றன.

சபை > *sabha* (சமஸ்கிருத வடிவம்)
கணம் > *gaṇa* (,,)
சதுர்வேதிமங்கலம்

பின்னர் சமயச் செல்வாக்கால், சடங்குகள் மற்றும் கோயில் தொடர்பான பல சொற்கள் புகுந்தன.

அர்ச்சனை > *arcanā* [சமஸ்கிருத வடிவம்]
ஈச்சுரன் > *iśvara* [,,]
விட்டுணு > *Viṣṇu* [,,]

அரசர்களின் சமஸ்கிருதப் பெயர்கள்

அரசர்கள் பலரின் பெயர்கள் தெளிவான சமஸ்கிருதப் பெயர்களாகும்.

சான்று : ந்ருபதுங்கன்
ராஜராஜன்
ராஜேந்திரன்
குலோத்துங்கன்

இராசேந்திர சோழனின் வட இந்தியப் படை எடுப்புகளுக்குப் பின்னர், ஆகமங்களைக் கற்ற சைவ அந்தணர்கள் பலர் வங்காளத்திலிருந்து தமிழகத்திற்கு வந்தனர். ஒட்டக்கூத்தரின் பாடல்களில் பல தாந்திரிகச் (*tāntric*) சொற்கள் தமிழாக்கப் பட்டுள்ளன.

மணிப்பிரவாள நடை

பதினோராம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மணிப்பிரவாள நடை என வழங்கப்பட்ட புதிய நடைப்போக்கு தமிழகத்தில் தோன்றியது. மாலையில் மணியையும் பவளத்தையும் மாற்றி மாற்றிச் சேர்த்துத் தொடுக்கப்பட்டதைப் போலத் தமிழ்த் தொடர்களையும் சமஸ்கிருதத் தொடர்களையும் மாற்றி மாற்றிக் கட்டிய நடைப்போக்கே மணிப்பிரவாள நடையாகும். மலையாளத்தில் ஏற்பட்டது போலத் தமிழ்க் கவிதையுலகில் இந்நடை ஆழமாக வேருன்றவில்லை. சமஸ்கிருதத்தில் உள்ளதுபோல ஆழ்வார்களின்

தமிழ்ப்பாக்களில், வேறு கலப்பின்றி இறைச் செய்தியின் முழுச் சாறும் அமைந்திருப்பதாக வைணவர்கள் கூறுவர். உப நிடதங்களிலும் புராணங்களிலும் உள்ள சமஸ்கிருதத் தொடர்களை ஆழ்வார்களின் தொடர்களைக் கொண்டு வைணவர்கள் விளக்குவர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சமஸ்கிருத அறிஞர்களுடன் இவ்வாறு உரையாடுவதற்கு மணிப்பிரவாள நடை பயனுள்ளதாயும் செறிவுமிக்கதாயும் இருந்தது. இத்தகைய மணிப்பிரவாள நடையில் பல சமஸ்கிருதத் தத்துவச் சொற்கள் இடம் பெறுவது இயற்கையே. 13, 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் இந்நடையின் செல்வாக்கு உச்சநிலையை அடைந்தது. 17 ஆம் நூற்றாண்டு வரையிலும் கூட இந்நடை வழக்கிலிருந்தது. சைவர்களும் இந்நடையைப் பின்பற்றினர். ஆனால் அவர்களது மணிப்பிரவாளம் மிகவும் எளிமைப்படுத்தப்பட்டதாகும்.

மேலும் பல சமஸ்கிருதச் சொற்கள்

புராணங்களும், வேறு பல நூல்களும் சமஸ்கிருதத்திலிருந்து அவ்வப்போது தமிழாக்கப்பட்டன. திருப்புகழிலும், தாயுமானவர், வில்லிபுத்தூரார் ஆகியோர் பாடல்களிலும் சமஸ்கிருதத் தொடர்களும் தொகைகளும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன. அக்காலத்திய சாதாரண மக்களின் பேச்சுத் தமிழில் சமஸ்கிருதச் சொற்கள் எவ்வாறு புகுந்தன என்பதை தே நோபிலியின் தமிழ் நூல்கள் காட்டுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த முதல் தமிழ் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' இப் போக்கையே காட்டுகிறது.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் தூய்மை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'தமிழ்மொழித் தூய்மை' (Purist Movement) இயக்கம் ஒன்று தோன்றியது. அவ்வியக்கம் இன்றுகூடக் காணப்படுகிறது. அவ்வியக்கம் பிறமொழிச் சொற்களுக்கு, அதிலும் குறிப்பாக வடமொழிச் சொற்களுக்கு எதிரான இயக்கமாகும். பரவலாக ஆட்சியிலுள்ள, தேவையான பிறமொழிச் சொற்களைக்கூட விட்டுவிட வேண்டும் என அவ்வியக்கத்தினர் கூறுவதைப் பலர் ஒப்புக் கொள்ளாமலிருக்கலாம்; ஆனால் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாத, தேவையற்ற பிற மொழிச் சொற்களைத் தவிர்க்க வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். எது எப்படியாயினும் சரி, இந்திய அறிவுலகத்தின் பொது மொழியாகத் திகழும் சமஸ்கிருதம் — இந்தியாவின் ஏனைய

மொழிகளைப் போலன்றித் தமிழ் குறைந்த அளவில் தேவையான போது தகுந்த கலைச் சொற்களைப் பெறுகின்ற — நிலைத்ததொரு களஞ்சியமாகத் தொடர்ந்து திகழ்கிறது; கடந்த காலத்தில் இருந்த அளவுக்கு இல்லையாயினும், வருங்காலத்திலும்கூடச் சமஸ்கிருதம் இவ்வகையில் தொடர்ந்து அத்தகையதொரு களஞ்சியமாகவே இருந்து வரக்கூடும்.

தமிழ் ஒலியன் அமைப்பில் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு

பல்லவர் காலத்திலிருந்து அறிஞர்கள் சமஸ்கிருதச் சொற்களைத் தமிழில் சமஸ்கிருத உச்சரிப்புடனே உச்சரித்திருக்க வேண்டும். இதன் விளைவாக அறிஞர்களின் தமிழில் புதிய வேற்றுநிலை வழக்குகள் தோன்றின. சமஸ்கிருத ஒலிகள், அதிலும் குறிப்பாக ஒலிப்புடை ஒலிகள், மூச்சொலிகள், குழிந்துரசொலிகள் முதலியன தமிழில் ஒலியன் நிலையைப் பெற்றன. ஆனால் இது இலட்சக்கணக்கான சாதாரண மக்களின் மொழியைப் பாதித்திருக்காது. ஆனால் இன்று கிராமப்புறங்கள் நீங்கலாக, பெருகி வரும் படித்த மக்களிடத்தில் 'p ÷ b', 'k ÷ g' போன்ற ஒலிகளுக்கு வேற்றுநிலை வழக்குகள் வளர்ந்து வருகின்றன.

சான்று : *pāvam, bhāvam*

Kuru, guru

இப்போக்கு சமஸ்கிருதச் சொற்களைப் பயன்படுத்துவதன் விளைவேயாகும்.

i) தமிழாக்க முறை நிலைபெறுதல் : ஒலியன்கள்

சமஸ்கிருதத்திலிருந்து விரிவாகக் கடன் வாங்கப்படுவதன் விளைவாக, பிற மொழிச் சொற்களைத் தமிழாக்கும் முறை தொடர்பாக ஒரு நடைமுறை அல்லது பொது விதியினை நிறுவும் இன்றியமையாமை ஏற்பட்டது. இதன் விளைவாக எழுந்த விதிகளை பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பவணந்தியார் தமது நன்னூலில் தொகுத்துத் தருகிறார்.[27] அடியில் கூறப்படுவன இலக்கிய மொழிகளுக்கே உரியன.

பிராகிருதத்தில் நிகழ்வது போல ரகர (*r*) மெய்யானது 'இரு' அல்லது 'இ' என்றாகியது.

ṛṣi > iruṭi (இருடி)

ṛṣabha > iṭavam (இடவம்)

27 நன்னூல், 146–150

ளகர அசைமெய் ஒரே ஒரு சொல்லிலேயே வருகிறது அது ழுகரமாகப் பேணப்படுகிறது.

kḷpta > Kiluṭṭam

தமிழில் ஈகாரம் இகரமாகிறது; அகரம் ஐகாரமாகிறது.

Gauri > Kavuri (கவுரி)
Sita > Citāi (சீதை)

தமிழில் திணை காட்டும் விகுதிகளால் விசர்க்கம் (visarga) தவிர்க்கப்படுகிறது. இது பின்னர் விளக்கப்படும். அநுஸ்வாரம் (*anusvāra*) மகர அல்லது னகர மெய்யாகிறது.

மூச்சொலிகளும் ஒலிப்புடை ஒலிகளும் தமிழ் வரிவடிவத்தில் வேறுபடுத்தப்படாததால் அவை ஒலிப்பில்லா ஒலிகளாகின்றன.

ii) ஒலியன் சமன்பாடு

சமஸ்கிருத 'j', உயிரிடையில் யகர மெய்யாகிறது.

aja > ayan (அயன்)

சமஸ்கிருத '*i*' இடையண்ண வெடிப்பொலியாகிறது; சில விடங்களில் அது நுனிநா பல் வெடிப்பொலியாகிறது.

iṣa > ican (ஈசன்)
māṣam > mātam (மாதம்)

சமஸ்கிருத '*s*', இடையண்ண வெடிப்பொலியாகவோ அல்லது நாவளை வெடிப்பொலியாகவோ ஆகிறது; சில இடங்களில் அவ்வொலி ழகர மெய்யாகிறது.

viṣam > vicam ∞ *viṭam* (விசம் ∞ விடம்)
bhāṣa > pāḷai (பாழை)

சமஸ்கிருதக் குரல்வளை உரசொலி 'h' மொழி முதலில் மறைகிறது. மொழியிடையில் கடையண்ண வெடிப்பொலியாகிறது.

hara > aran (அரன்)
vāhana > vāhanam (வாகனம்)

சமஸ்கிருத '*kṣ*' இடையண்ண நெடில் வெடிப்பொலியாகிறது; அல்லது நர்வளை வெடிப்பொலியும் இடையண்ண வெடிப்பொலியும் சேர்ந்த மெய்மயக்கமாகிறது.

pakṣi > paṭci ∞ *pacci* (பட்சி > பச்சி)[28]

---

28 தக்கயாகப்பரணி, 610

ஆனால் பழைய இலக்கிய வழக்கில் இது கடையண்ண நெடில் வெடிப்பொலியால் குறிக்கப்படுகிறது. இது பிராகிருதச் சான்றைப் பின்பற்றுவதன் விளைவாகலாம்.

ak > *akkam* (அக்கம்)

வருமுறை — முன்வைப்பு உயிர்

இடைக்காலத்தின் பிற்பகுதிவரை மொழி முதல் குறிலசைக்குப் பின்னர் லகர, ரகர மெய்கள் வருவதில்லை. எனவே அவ்விடத்தில் அவற்றுக்குப் பின்னர் உகரமெய் வருகிறது.

Sarkarā > *carukkarai* (சருக்கரை)

இங்ஙனமே இரட்டிக்கும் சமஸ்கிருத வெடிப்பொலிகளுக்குப் பின்னரும் உகர உயிர் வருகிறது.

vāg > *vākku*

தமிழில் மொழிமுதல் ர், ல், ய ஆகியன வாரா. எனவே இவ்வொலிகளுடன் தொடங்கும் சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் வரும் பொழுது அவற்றுக்கு முன்னர்த் தொடக்க காலத்தில், அகர முன்வைப்புயிர் இடம் பெற்றது; பின்னர் இகரம் இடம் பெறத் தொடங்கியது.

ratna > *araṭṭanam* (அரத்தினம்)
> *iraṭṭinam* (இரத்தினம்)
rāga > *arāgam* (அராகம்)
> *irākam* (இராகம்)

இவ்விரு வடிவங்களும் இலக்கியத்தில் தொடர்ந்து இடம் பெறுகின்றன. ரகர மெய் முன்உயிரால் தொடரப்படுமாயின் இகர முன்வைப்பு உயிர் இடம் பெறுகிறது.

rēpam > *irēpam* (இரேபம்)

ரகர மெய் பின் உயிரால் தொடரப்படும் பொழுது உகர முன்வைப்பு உயிர் வருகிறது.

ruci > *uruci* (உருசி)

லகர மெய் அகரத்தாலோ, முன் உயிராலோ தொடரப் படும் பொழுது இகர முன்வைப்புயிர் வருகிறது.

lēhyam > *ilēkiyam* (இலேகியம்)

லகர மெய் பின் உயிரால் தொடரப்படும் பொழுது உகர முன்வைப்புயிர் வருகிறது.

lōha > *ulōkam* (உலோகம்)

யகரத்துக்கு முன்னர் இகர முன்வைப்புயிர் இடம் பெறுகிறது.

yakṣa > *iyakkan* (இயக்கன்)

ஆனால் சங்க இலக்கியங்களில் கூட 'யவனர்', 'யூபம்' என்னும் சொற்களுக்கு முன்னர் முன்வைப்புயிர் காணப்படவில்லை. பிற்காலத்தில் 'யு' என்பதற்கு முன்னர் உகர முன்வைப்புயிர் இடம் பெறுகிறது. ஆனால் இச் சூழலில் பலவிடங்களில் யகர மெய் இழக்கப்படுகிறது.

yuḍḍha > *uyuṭṭam* > *uṭṭam* (உயுத்தம் > உத்தம்)
yukṭi > *uyṭṭi* > *uṭṭi* (உத்தி)

iv) **மெய்மயக்கம்: இகரச் சுரபத்தி**

தமிழில் வாரா வடமொழி மெய்மயக்கங்கள் இரு வழிகளில் அமைக்கப்படுகின்றன.

1. ஓரினமாதல்
2. சுரபத்தி

ர், ல், ய் என்பவற்றுடன் சேர்ந்து வரும் மெய்களைப் பிரிக்க இகரச் சுரபத்தி இடம் பெறுகிறது.

brahman > *piraman* (பிரமன்)
plava > *pilava* (பிலவ)
bhāgya > *pakkiyam* (பாக்கியம்)

ஒலிச்சேர்க்கையில் இரண்டாவது ஒலி வகர அல்லது மகர மெய்யாய் இருக்குமாயின் உகரச் சுரபத்தி இடம்பெறுகிறது.

padma > *patumam* (பதுமம்)
pakvā > *pakkuvam* (பக்குவம்)
karma > *karumam* (கருமம்)

மெய்களுக்கிடையில் நெகிழ்வு மாற்றத்துடன் (loose transition) விரைந்தொலித்தலால் தமிழில் மெய்மயக்கங்கள் வரும்பொழுது சுரபத்தி தொடர்பான விதிகள் செயல்படுகின்றன.

paruṉṭu > *prāṉṭu* > *pirāṉṭu*

v) ஓரினமாதல்

ஓரினமாதல் தொடர்பான செய்திகளை இனிக் காண்போம்.

அ. மூக்கொலி அல்லது வெடிப்பொலியாயிருக்கும் முதல் மெய்யின் தன்மைக்கு ஓரினமாதல்.

mh > *mm* : *simham* > *simmam* (சிம்மம்)
ny > *nn* : *kanya* > *kanni* (கன்னி)
ks > *kk* : *akṣa* > *akkam* (அக்கம்)

ஆ. மூக்கொலி அல்லது வெப்பொலியாயிருக்கும் இரண்டாவது மெய்யின் தன்மைக்கு ஓரினமாதல்.

st > *tt* : *pusṭaka* > *puṭṭakam* (புத்தகம்)
ṣṭ > *ṭṭ* : *kaṣṭam* > *kaṭṭam* (கட்டம்)
rm > *mm* : *karma* > *kammam* (கம்மம்)

இவற்றிலெல்லாம் வெடிப்பொலியாகவோ அல்லது மூக்கொலியாகவோ ஒலிகள் ஓரினமாக்கப்படுகின்றன.

இ. மெய்யொலி இழக்கப்படல்

மெய்மயக்கத்தில் இரண்டாவது மெய் ய் அல்லது ர் என இருக்குமாயின் அது சிலவிடங்களில் இழக்கப்படுகிறது; வெடிப்பொலி உள்ள இடங்களில் அது இரட்டிக்கிறது.

māṇikkam > *māṇikkam* (மாணிக்கம்)
sramaṇa *samaṇa* (சமண)

அநுஸ்வாரம்

அநுஸ்வாரம் மகர மெய்யாகிறது. பின்னர் தொடர்ந்து வரும் வெடிப்பொலிக்கேற்ற வகையில் திரிந்து ஓரினமாகின்றது.

mh > *mk* > *ṅk*
simham > *ciṅkam*

கீழ்க்கண்ட வழக்குகளையும் காண்கிறோம் :

ms > *mc* > *mc* ; சமஸ் : கம்ஸா > கஞ்சன்

இங்கு உண்மையில் மூன்று விதமான வளர்ச்சிப் போக்குகள் உள்ளன. அவற்றுள் இது முதலாவதாகும். இரண்டாவது சாதாரணமாக வருகின்ற சுரபத்தி வழக்கமாகும்.

ms > *mic* : சமஸ் : மாம்ஸா > மாமிசம்;
சமஸ் : வம்ஸா > வமிசம்.

மூன்றாவது நிலை பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றியதாகும். இது அநுஸ்வாரம் கடையண்ண மூக்கொலியாக உச்சரிக்கப்பட்டதன் விளைவாகும். பிற மெய்களுக்கு முன்னர் இம் மூக்கொலி இன வெடிப்பொலியைப் பெறுகிறது. சுரபத்தி இகரம் இம்மெய்மயக்கத்தைச் சிதைக்கிறது.

māmsā > *māṅca* > *māṅkicam* (மாங்கிசம்)
vamsa > *vaṅca* > *vaṅkicam* (வங்கிசம்)

ரகர மெய்க்குப் பின்னர் வரும் மெய்கள்

தென்னிந்தியாவில் ரகர மெய்க்குப் பின்னர் வரும் மெய்கள் நெடில் மெய்களாக எழுதப்பட்டது காணப்படுகிறது.

karma > *karmma* (கர்மம்)
pārtipa > *pārttipa* > *parttivar* (பார்த்திவர்)

மொழியிடை வெடிப்பொலி இரட்டித்தல்

பிற மெய் மயக்கங்களில் மெய்யொலி இழப்போ அல்லது சுரபத்தியோ உள்ள பொழுது, வெடிப்பொலியானது தனக்கு முன்னர் மூக்கொலியைப் பெற்றிருக்கவில்லையாயின் — இரட்டிக்கிறது. (வீரசோழியம், 59)

pakva > *pakkuvam* (பக்குவம்)
cakra > *cakkiram* (சக்கரம்)
ratna > *irattinam* (இரத்தினம்)

தமிழமைப்பு

பிறமொழிச் சொல்லைத் தமிழ் மொழி மரபுக்கு உட்படுத்தும் போக்கு மிகுந்து காணப்படுகிறது. குறிப்பாக குற்றியலுகர முடிவைச் சுட்டிக்காட்டலாம். பிறமொழிச் சொற்கள் தமிழுக்கு வரும்பொழுது குற்றியலுகரத்தைப் பெறுகின்றன. 'உலகு' (இது 'லோக' என்னும் வடமொழிச் சொல்லினடியாகத் தோன்றியதாயின்) என்பதை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

இலக்கணம்

சமஸ்கிருதப் பெயர்ச் சொற்களிலிருந்து சில வினை வேர்கள் தமிழில் ஆக்கப்படுகின்றன. சமஸ்கிருதத்தில் எந்த வேருடன் 'அனம்' (anam) என்பதைச் சேர்த்தாலும் அது பெயர்ச் சொல்லாகும். 'அனம்' என்பது நீக்கப்பட்டு இகர விகுதி சேர்க்கப்படத் தமிழ் வினைவேர் கிடைக்கிறது.

Grahanam > *Kiraki* (கிரகி)
Cēvanam > *cēvi* (சேவி)

'அனம்' என்பதைப் பெறாத 'சித்ரம்' (Citram) என்பது போன்ற பெயர்ச்சொற்களின் 'அம்' விகுதி (முடிவு) நீக்கப்பட்டு இகர விகுதி சேர்க்கப்படுகிறது

சான்று : சித்தரி

ஈரேவல் சொற்களோடு ஒப்புமையாக்கமான இவையெல்லாம் 11 ஆவது வினைவிகற்ப வாய்பாட்டைச் சேர்ந்தவையாகும்.

அகரத்தில் முடியும் சொற்கள், பெண்பால் ஒருமையைக் குறிக்குமாயின அவை ளகர மெய்யீற்றைப் பெறுகின்றன; ஆண் பால் ஒருமை னகர மெய்யீற்றைப் பெறும்; பலர்பால் ரகர மெய்யைப் பெறும். அஃறிணையைக் குறிக்கையில் மகர மெய்யைப் பெறும்.

yakṣa > *iyakkan, iyakkar* (இயக்கன், இயக்கர்)
ratna > *irattinam* (இரத்தினம்)

கடன் வாங்கப்பட்ட சொற்களின் பொருள் பெரும் மாறுதல்களுக்கு உள்ளாகிறது. 'அவசரம்' என்பதன் பழைய பொருள் 'வாய்ப்பு' என்பதாகும். இன்று அதன் பொருள் 'விரைவு' அல்லது 'மிகையார்வம்' என்பதாகும். இத்தகைய பொருள் மாறுதல்களைப் பற்றி நாம் இங்கு ஆராய வேண்டியதில்லை.

தமிழாக்க முறையின் முக்கியத்துவம்

சமஸ்கிருதச் சொற்களைத் தமிழாக்கும் முறை விரிவாக விளக்கப்பட்டது. இவை பிறமொழிச் சொற்களையும் தமிழாக்கப் பயன்படும் என்பதால் இங்ஙனம் விரித்துக் கூறப்பட்டது.

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் சில செய்திகளைப் பொதுமையாக்கிக் கூறலாம். சமஸ்கிருதத்தில் மொழி முதலசையில் வரும் ரகர மெய்க்கு முன்னர்த் தமிழில் அகர முன்வைப்புயிர் பழங் காலத்தில் இடம் பெற்றது. பின்னர் இகரம் அவ்விடத்தில் வரலானது. இங்ஙனமே சுரபத்தியும் இடம்பெற்றது.

பழைய வடிவம்	புதிய வடிவம்
சக்கரம்	சக்கிரம்
அரதனம்	இரத்தினம்

மொழியிடையில் உள்ள ஒலிப்பிலா வெடிப்பொலி இரட்டித்தலையும் காண்க. பிற்காலத்தில் மொழியிடையில் வரும் தனி வெடிப்பொலி ஒலிப்புடை வெடிப்பொலியைக் குறிக்கத் தொடங்கியதால், ஒலிப்பிலா வெடிப்பொலியைக் குறிக்க நெடில் வெடிப்பொலி இடம் பெறலானது.

தெற்கு, கிழக்குப் பகுதிகளின் மொழிகள்

சிங்களம்

கிறித்து பிறப்பதற்கு முன்னரே தமிழர்கள் இலங்கையோடு தொடர்பு கொண்டிருந்தனர். பழங்காலத்தில் இலங்கையை ஆண்ட அரசர்களில் மக்கள் போற்ற செங்கோலோச்சிய எலாரா (Elara) போன்ற சிலர் தமிழர்களாவர். இலங்கையுடனுன இத்தகைய ஆரம்பக்கால உறவுகளின் விளைவாகச் சிங்களச் சொற்கள் தமிழில் இடம் பெற்றுள்ளன.

ஈழம் (*Simhaḷa > Siḷa > iḷā*)
முருங்கை (*muruṅgā*)

இச்சொல் பழைய உரையாசிரியர்களால் குறிக்கப்பட்டுள்ளது.[29] இலங்கைத் தமிழில் பல சிங்களச் சொற்கள் காணப்படுகின்றன. தமிழகமெங்கும் வழக்கில் உள்ள 'பில்லி' (billi) என்ற சொல் சிங்களத்திலிருந்து வந்ததாகும்.

கிழக்குக் கடற்பகுதிகள்

கிழக்குக் கடற்பகுதிகளுடன் தமிழர்கள் பழங்காலத்திலேயே தொடர்பு கொண்டிருந்தனர். தக்குவாபாவில் (Takuapa) தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. காழகம் அல்லது கடாரம்[30] தாய்லாந்திலுள்ள 'kedah' என்பதாகும். 'தாய்லாந்து', தமிழில் சீயம் என்றழைக்கப்படுகிறது. தக்கோலி (*takkōli*), அருமணவன் (*arumaṇavan*), கிடாரவன் (*Kiṭāravan*) முதலிய நறுமணப் பொருள்கள் தாம் விளையும் இடத்தின் (கீழைக் கடற்பகுதிகள்) பெயரையே தம் பெயராகக் கொண்டுள்ளன. இவை சிலப்பதிகாரத்தில் இடம் பெறுவதோடு அவை அடியார்க்கு நல்லாரால் இங்ஙனமே விளக்கப்படுகின்றன[31] 'சவ்வரிசி' என்பதிலுள்ள 'சவ்' என்பது மலாய்

29 வீரசோழியம், 59, உரை.

30 Nilaknta Sastri: *Foreign Notices of South India*

31 சிலப்பதிகாரம் XIV, 108, அடியார்க்கு நல்லார் உரை.

மொழிச் சொல்லான 'Sāgu' என்பதிலிருந்து வந்ததாகும். 'கிடங்கு', 'கிட்டங்கி' என்னும் சொற்கள் மலாய்ச்சொல்லான 'gadong என்பதிலிருந்து வந்தனவாகும். மலாக்கா (Malacca), 'மணிலா' (Manila) என்னும் இடப்பெயர்களிலிருந்து 'மல்லாக்கொட்டை' (Mallākkoṭṭai) 'மணிலாக்கொட்டை' (Maṇilakkoṭṭai) என்னும் பெயர்கள் ஆக்கப்பட்டிருக்க வேண்டும்.

'சொங்கு' (Coṅku) என்பது ஜவானியச் (Javanese) சொல்லான 'goang' என்பதிலிருந்து வந்ததாகும்.

சீனம்

பழங்காலத்தில் சீனர்கள் தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும். தமிழ் மாலுமிகள் சீனர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழிலுள்ள சில சொற்கள் நேரடியாகச் சீனாவிலிருந்தே பெறப்பட்டிருக்கலாம்; அல்லது அவை மலாய் மொழி வழியாகத் தமிழுக்கு வந்திருக்கலாம். யுவான்சுவாங் (Hieun-Tsiang) தென்னகத்திற்கு வருகை புரிந்தார். படகு வகையைச் சேர்ந்த 'சம்பான்' (> sanpan) என்ற சொல்லும், பெரிய மண்கலத்தைக் குறிக்கும் 'காங்கு' (> Kang) என்ற சொல்லும், 'பீங்கான்' என்ற சொல்லும் சீன மொழியிலிருந்து வந்தவையாகும்.

மேலைநாட்டு மொழிகள்

கிரேக்கம்

கிறித்து பிறப்பதற்கு முன்னரே கிரேக்கர்களும் உரோமர்களும் தமிழர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தனர். பெரிபுளூஸ் (Periplus) என்னும் நூல், தாலமி (Ptolemy), பிளினி (Pliny) ஆகியோர் எழுதிய நூல்களிலிருந்து இது தெரிய வருகிறது. 'மத்திகை', 'சுருங்கை', 'கன்னல்', 'ஓரை' ஆகிய சொற்களைக் கிரேக்கச் சொற்களாகத் திரு கமில் சுவலபெல் (Kamil Zvelebil) விளக்கிச் செல்கிறார்.

'இயேசு' (Jesus) என்ற சொல்லும் கிரேக்க மூலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. 'j' மொழி முதல் வராது என்பதை உணர்ந்த கிறித்துவ மதகுரு ஒருவர் இங்ஙனம் அதை மாற்றியிருக்க வேண்டும்.

ஹீப்ரு

ஹீப்ரு மொழி பேசும் யூதர்களும் சிரிய நாட்டுக் கிறித்தவர்களும் அரேபியர்களும் தென்னகத்தின் மேற்குக்கரையில் பழங்காலத்

திலேயே குடியேறினர். அப்பகுதியில் மலையாளமும் தமிழும் பேசப்படுகின்றன. 'யூதர்' என்னும் சொல் 'yaudi'[32] என்னும் ஹீப்ரு மொழிச் சொல்லில் இருந்து வந்ததாகும் '*jēsu*' என்ற சொல் '*iēshua*' என்னும் ஹீப்ரு மொழிச் சொல்லிலிருந்து வந்ததேயாகும்.[33]

அரபிய மொழி

அரபு மொழி முகமதியர்களின் சமய மொழியாகும். திருக்குர்ரான் இம்மொழியில் உள்ளது. எனவே தமிழகத்தில் இம்மொழி பரவத் தமிழக முஸ்லீம்கள் துணை நின்றனர். திருக்குர்ராணை அரபிய மொழியில் தமிழ் இசுலாமியர்கள் படிப்பதற்கு வசதியாகப் புதிய குறியீடுகளும், அடையாளப்புள்ளிகளும் தமிழ் வரிவடிவத்தில் சேர்க்கப்பட்டன. இது 'அரபுத் தமிழ்' எனப்படும்.

பதினாறும் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இசுலாமியப் பெருமக்கள் தமிழில் செய்யுளிலும் உரை நடையிலும் நூல்கள் எழுதி வருகின்றனர். பல அரேபியப்பெயர்களும் சொற்களும் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. மொழியின் சில இயல்புகளை மாற்றிய செல்வாக்கின் அளவை மட்டுமின்றி தன்மையையும் நுட்பமான ஆராய்ச்சிகள் புலப்படுத்தும். தமிழுக்குப் புறம்பானவையாகத் தோன்றும் சில பெயர்கள் சந்த விருத்தத்தில் அமைத்துத் தரப்படுகின்றன, இங்கு யாப்பிசைக்கேற்பச் சீர்கள் வேறுபடப் பிரித்து ஒலிக்கப் பெறுகின்றன. இங்குச் சீர்கள் முழுச்சொற்களுக்கும் அல்லது தொகைகளுக்கும் சமமாக இருக்கத்தேவையில்லை; இருக்கவும் மாட்டா. எனவே இவை இரண்டு அல்லது மூன்று சீர்களாகப் பிரிக்கப்பெறுகின்றன. இவ்வாறு அரபுப் பெயர்கள் எளிதில் யாப்பமைப்புக்கேற்பப் பொருந்திவிடுகின்றன. எடுத்துக்காட்டாக (c) *vcvcvccvc* என்பது ஒரு குறிப்பிட்ட வகை யாப்பிற்கு அல்லது சந்தத்திற்கான சீரமைப்பு ஆகும். அபூபக்கர் என்ற பெயர் எளிதாக இச்சீரில் அமைக்கப் பெற்றுவிடுகிறது.

தமிழ் இசுலாமியச் செய்யுள்கள் சிலவற்றில் சூஃபிசச் (Sufism) செல்வாக்கு காணப்படுகிறது. எனவே அனுபூதி நிலைத் (Mystical) தொடர்பான சொற்கள் புகுந்தன. இசுலாமியர்களின் இலக்கியங்களில் இசுலாமின் வண்ணம் இழையோடுவது இயல்பே. பழங்காலத்திலிருந்தே பல சமயச் சொற்கள் இசுலாமிய மூலங்களி

---

32 Tamil Lexicon, Vol VI

33 *Ibid*

லிருந்து வருகின்றன. இசுலாமியர்களின் சட்டங்களும் பழக்க வழக்கங்களும், இந்துக்களின் முறையிலிருந்து மாறுபட்டவை. தமிழ் இசுலாமிய இலக்கியங்களிலும், இசுலாமியர்களின் பேச்சுத் தமிழிலும் அரபுச் சட்ட, சமுதாயச் சொற்கள் பல காணப்படு கின்றன. வடநாட்டு அரசர்களின் அவைக்கள மொழியான பெர்சியன், உருது ஆகிய மொழிகளிலிருந்து பிற அரபுச் சொற்கள் தமிழில் புகுந்தன. இவை பெரும்பாலும் அரசாங்கம், சட்டம் தொடர்பானவை. தமிழ்ச் சொற்களஞ்சியம் 259 சொற்களை அரபிய மூலங்களுக்குக் கொண்டு செல்கிறது. சில சமயங்களில் இரண்டு அல்லது மூன்று வடிவங்கள் ஒரே அரபிய வடிவத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இவற்றில் ஒன்று அரபுச் சொல்லாக இருக்கும்; ஏனைய தமிழ் அமைப்புக்கு ஏற்ப இருக்கும். அவ் அரபுச் சொல் கற்றோரிடையே வழங்குவதாக இருக்கும்.

தமிழிலுள்ள அரபுச் சொற்கள் சிலவற்றின் பட்டியல் வருமாறு:

இலாக்கா	(> *ilaqua*)
இஸ்லாம்	(> *islām*)
இசும்	(> *ism*)
ஈமன் அல்லது இமான்	(> *imān*)
உருசு (*urusu*)	(> *urus*) (மொழியிறுதியில் குற்றியலுகரம் வருதல் காண்க)
உஸ்தாதி (*usṭāti*) வஸ்தாதி (*vasṭāti*)	(> *usṭād*)
கொசுரு (*Kocuru*) கசர் (*Kacar*)	(> *quasir*)
சுல்தான் சுபேதார்	(> *suba*)
சுன்னத்து	
சுன்னி (*sunni*) ஷீய (*ṣiya*)	(இசுலாமின் இருசமயப் பிரிவுகள்
சைத்தான் சேப்பு, ஜேப்பு	என்பனவும் அரபுச் சொற்களே.

'காப்பி' (coffee) என்ற சொல் ஐரோப்பிய மொழிகளின் வழியே வந்த அரபுச் சொல்லாகும்.

பெர்சியன் (பாரசீகம்)

பெர்சிய, இந்திச் சொற்கள் உருது மொழி வழியே தமிழில் புகுந்திருக்க வேண்டும். மொகலாயர்களின் அவைக்கள மொழி

உருது மொழியாகும். அவர்களது அவைக் கலைச் சொற்களும் ஆட்சித்துறைச் சொற்களும் அகில இந்தியச் சொற்களாக ஆகியிருக்க வேண்டும். மாலிக்காபூரின் தமிழகப் படையெடுப்புகளுக்குப் பின்னர் இப்போக்கு வலிவுற்றது. மாலிக்கபூரின் படையெடுப்புக் களுக்குப் பின்னர் 40 ஆண்டுக் காலத்துக்கு மதுரையில் சுல்தானிய ஆட்சி நடைபெற்றது. ஹைதராபாத்தில் பாமினி சுல்தான்களின் அரசு நிலைநாட்டப் பெற்றது. இதனால் உருது மொழியின் தக்காண இலக்கியக் கிளைமொழியொன்று வளர்ச்சியுற்றது. மொகலாயர்கள் மெல்ல மெல்ல இந்தியா முழுவதிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டினர். மராத்தியர்கள்கூட மொகலாயக் கலைச் சொற்களைக் கைக்கொண்டனர். கர்நாடக நவாப்புகள் மெல்ல உரிமை பெற்றார் கள். எனினும் அவர்கள் மீண்டும் ஆங்கிலேயரின் கைப்பொம்மை யானார்கள், அவர்களது தலைநகரம் திருச்சிராப்பள்ளியாகும். எனவே தமிழில் பல உருது, பெர்சியச் சொற்கள் இடம் பெற்றன. மராத்தியர்களின் தமிழக ஆட்சி இப்போக்கினை உறுதிபடுத்தியது.

இங்ஙனம் வந்த பெர்சியச் சொற்களில் சில ஆட்சித்துறைச் சொற்களாகும்.

டபேதார்		(> *daftardar*)
தவாலி	(*davāli*)	(> *dawāli*)
திவான்	(*divān*)	(> *diwān*)
முகர்	(*mukar*)	(> *muhar*)*
ரவாணா	(*ravāṇā*)	(> *rvaānā*))
ரஸ்தா	(*rasṭā*)	(> *rāsṭā*)

தமிழ் மொழி வரலாற்றின் ஆரம்ப காலத்தில் மொழி முதல் வாரா ஒலிகள், இப்பொழுது வரலாயின. அவற்றில் உயிர் களின் அளவு மாறுவதையும் நோக்குக.

'சமீன்' > (*jamin*)
'ஜாகீர்' > (*jāgir*)

'ஜாகீர்' என்னும் மொகலாயச்சொல் 'நில உடைமை உரிமை' வரலாற்றை விளக்குவதாகும். இராணுவம் அல்லது பிற பணிகளாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலோ அல்லது சில சமயங்களில் நிபந்தனையெதுவும் இன்றியோ சில பகுதி நிலங்

---

* மொழியிடையில் வரும் 'h' > 'k' என்றாகிறது. இது x என உச்சரிக்கப்படுகிறது.

களின் வருவாயை உரிமையாகத் தருவதை இச்சொல் குறிக்கும். 'சர்க்கார், சர்தார், ஹவல்தார், ஜுர்மன (Zurmana)' முதலிய சொற்களும் பாரசிகச் சொற்களாகும்.

மதம், வழிபாடு தொடர்பான 'தக்கியா / தர்க்கா > *takya* தர்க, (*durga* > *dargah*), நமாஸ் (*namās* > *nimāsu*) லங்கர் கானு' (*langar kana*) முதலிய சொற்கள் அனைத்தும் பெர்சியச் சொற்களேயாகும்.

குதிரை, அதனைப்பராமரித்தல் தொடர்பான சொற்கள் பொதுவாகப் பிற மொழிச் சொற்களேயாகும். இவற்றில் சில பாரசீக மொழியிலிருந்து வந்தவையாகும்.

மாலீசு (*mālisu*) > *mālish*
ஜீனி (*jini*) > *zin*

தமிழ்ச் சொல்லும் பாரசீகச் சொல்லும் சேர்ந்த மருஉத் தொகையும் (Hybrid compound) காணப்படுகிறது. கட்டடப்பகுதி எனப்பொருள்படும் *kār* என்ற சொல் *kāyar* எனத்திரிகிறது; பின் 'மேல்' என்ற சொல் முன்னால் சேர்க்கப்பெற்று மேல்+காயர் > மேல்காயர் "மேல் கட்டடப்பகுதி" எனப் பொருள் தரும் சொல்லாகிறது.

பிற மொழிச் சொற்கள் எனப் பாகுபடுத்தி அறிய முடியாத அளவுக்குச் சில தமிழாகி விட்டன. 'தயார்' 'சுமார்', 'தம் (பிடித்தல்)' (*tam* > *dam*) முதலிய சொற்களும் பாரசீக சொற்களாகும். தமிழ் சொற்களஞ்சியம்' பாரசீக மொழியிலிருந்து வந்தனவென 119 வடிவங்களைத் தருகிறது.

2. பிற்காலத்தில் கொண்ட தொடர்புகள் திராவிட மொழிகள்

தெலுங்கு

தெலுங்கு மொழியுடனான தொடர்பு சங்ககாலத்தின் அளவிற்குப் பழமையானது. சங்க இலக்கியங்களில் திருப்பதிக் குன்றுகளை ஆண்ட சிற்றரசர்கள் தொடர்பான குறிப்புக்கள் வருகின்றன. பிற்காலச் சோழப் பேரரசர்கள் வெளி உறவுக் கொள்கையின் நிமித்தமாகத் தெலுங்கு மொழி பேசும் வைதும்பர்களுடன் திருமண உறவு கொண்டனர். தெலுங்குக் காப்பியப் புலவர்களில் முதல்வரான நன்னயபட்டரை ஆதரித்த இராசராச

நரேந்திரன் முதலாம் இராசேந்திரனின் மருமகனுவான். பின்னர் இவன் குடும்பத்தில் தோன்றிய முதலாம் குலோத்துங்கன் பதினேராம் நூற்றுண்டில் சோழப் பேரரசனுகின்றுன். 'அக்கடா' முதலிய தெலுங்குச் சொற்கள் கம்பராமாயணத்திலும் வருவதாகக் கூறுவர். 14 ஆம் நூற்றுண்டில் விசயநகரப் பேரரசு நிறுவப்பெற்றுத் தமிழகம் மதுரை சுல்தானியர்களின் ஆட்சியிலிருந்து கம்பவர்மனுல் காக்கப்பட்டது. அருணகிரிநாதர் புரௌடதேவரைப் (Proudhadēvar) பற்றிக் குறிக்கிருர். அவர் தமது பாடல்களில் சுமார் பத்துத் தெலுங்குச் சொற்களைப் பயன்படுத்துகிருர். பேரரசர் கிருஷ்ண தேவராயர் தமிழ்க் கல்வியினைப் போற்றிய பெரும் புரவலராவார். விசயநகரப்பேரரசர்களின் சிற்றரசர்களான நாயக்கர்களிடத்தே மதுரையின் ஆட்சி இருந்தது. மதுரை நாயக்கராட்சி வலுவிழந்த பொழுது தஞ்சை நாயக்கர்கள் ஆட்சிக்கு வந்தனர். விசயநகரப் பேரரசின் ஆட்சிக்காலத்தில் தமிழகப் பாளையங்களின் தலைவர் களாகத் தெலுங்கர்கள் சிறப்பெய்தினர். இங்ஙனம் தொலைவில் உள்ள நெல்லை மாவட்டத்திலும் தெலுங்கர்கள் குடியேறினர்.

மராட்டியர்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெறுவதற்கு முன்னர்வரை தெலுங்கு மொழி செல்வாக்குடன் விளங்கியது. அவர்கள் தமிழ் மீது பற்றுக் கொண்டிருந்தனர் நாடு விடுதலை பெற்றதற்குப் பின்னர் தனித் தெலுங்கு மாநிலத்திற்காக நடை பெற்ற போராட்டத்தில் சென்னை நகரை ஆந்திராவுடன் இணைக்க வேண்டும் எனக் கோரியவர்களில் அவர்கள் முதல் வரிசையில் நின்றவராவர். 'இரு வேறு மொழித் தொகைகளைப்' பழந்தெலுங்கு இலக்கணங்கள் ஆதரிக்கவில்லையாயினும், தமிழில் மூன்று வகையான 'இரு வேறு மொழித் தொகைகள்' உண்டு.

1 தெலுங்கு — தமிழ்
2 தெலுங்கு — உருது
3 தெலுங்கு — சமஸ்கிருதம்

'இரளி, உப்புசம், சளிப்பு, கலிங்கம். சொண்டி கத்தரி, கடப்பாரை, ராயசம், தரகரி, சேந்திரவர், கம்பத்தக்காரர், 'குப்பம், ரெட்டியார், பத்தர், கோபாட்டி ராஜா, கூரிசை (அளவு)' முதலி யனவவெல்லாம் தெலுங்கிலிருந்து வந்தவை. கடன் வாங்கப் பெற்ற சொற்களில் முக்கியமானவை உடைகள், உணவு, அணிகள் தொடர் பானவை. "ஆபரணங்கள், உண்வுப் பொருட்கள், ஆடைகள், வேலைக்கும் பயன்படும் கருவிகள், சாதிப்பெயர்கள்" ஆகியவற்றுக்

கான சொற்களே குறிப்பாகத் தெலுங்கிலிருந்து பெறப்பட்டன என்பதை இவ்வாராய்ச்சி புலப்படுத்தும்.''

வடசொற்களைத் தமிழாக்கப் பயன்படுத்தப்பட்ட அதே நடைமுறையே இச்சொற்களைத் தமிழாக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

பெரும்பாலான உயிரொலி மாற்றங்கள் மொழியிடையில் நிகழ்கின்றன. முன்னர் விளக்கப்பட்டதுபோல 'விரைந்தொலித்தல்', 'சுரபத்தி' ஆகியவற்றின் விளைவே இது.[34]

கன்னடம்

பழங்காலத்திலிருந்தே கன்னடமும் தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருந்தது. சங்க இலக்கியங்களில் வரும் வடுகர் என்னும் சொல் கன்னடர்களைக் குறிப்பதாக விளக்கப்படுகிறது. ஹொய்சளர்கள் சோழ நாட்டு அரசியலில் தலையிட்டு ஹொய்சள இளவரசன் தமிழகத்திலேயே (குறுகிய காலமான போதிலும் கூட) ஆட்சியை நிலைநாட்டிய காலமாகிய 13ஆம் நூற்றுண்டில் கன்னடச் செல்வாக்கு உச்சநிலை எய்தியது. விசயநகரப் பேரரசர்களில் சிலரும் கன்னடத்தவர்களாவர். இவர்கள் வழியேயும் கன்னடச் செல்வாக்கு தமிழகத்தில் பரவியது. இத்தகைய செல்வாக்கிற்கான மற்றொரு மூலகாரணம் வீரசைவமாகும். இச்சமயப் பிரிவைச் சார்ந்த துறவிகள் தமிழகத்தில் குடியேறி மடங்களை நிறுவினர். சிவப்பிரகாசரும் சாந்தலிங்கரும் பெரும் வீரசைவப் புலவர்களாவர். மொழி முதலில் கடையண்ண வெடிப்பொலியும் அதைத் தொடர்ந்து குறுகிய முன் உயிரும் வரும் சொற்களில் கன்னடச் செல்வாக்கைத் தெளிவாகக் காணலாம். இக்கடையண்ண வெடிப்பொலி தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் இடையண்ணவொலியாகிறது. இந்நிலையில் வரும் கடையண்ண வெடிப்பொலி, நேரடிக் கன்னடச் செல்வாக்கையோ அல்லது தெலுங்கு மூலமான கன்னடச் செல்வாக்கையோ காட்டும்.

சான்று : கெம்பு

மலையாளம்

மலையாளமும் தமிழ் மொழியைப் பாதித்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் என்றழைக்கப்படும் நாஞ்சில் நாடு திருவாங்கூர் அரசின் கீழ் நீண்ட காலம் இருந்தது. தமிழும்

34 இந்நூலின் பக்கம் 259ஐக் காண்க.

மலையாளமும் நெருங்கிய உறவுடையன; எனவே அவற்றை வேறு படுத்தி அறிவது சிக்கலானதாகும். 'சக்கை, கஞ்சி, வெள்ளம், அவியல்' போன்ற சொற்கள் மலையாளத்திலிருந்து கடன் பெறப் பட்டவையாகும். 'அங்கணம்' (= சாக்கடை) போன்ற தமிழ்ச் சொற்கள் இப்பகுதியில் இன்னும் வழக்கில் உள்ளன.

பிற மொழிகள்

மராத்தி

மராத்தியர்கள் தமிழ் நாட்டின் ஒரு பகுதியைச் சில காலம் ஆண்டனர். சிவாஜியின் 'மாற்றுள் சகோதரரான' வெங்காஜி 1766 ஆம் ஆண்டில் தஞ்சை நாயக்கர்களை வெற்றி கொண்டார். மராத்தியர்களின் தமிழக ஆட்சி 1800 ஆம் ஆண்டுவரை நடை பெற்றது; பின்னர் கிழக்கிந்தியக் கம்பெனியார் அவர்களை பென்ஷன் தாரர்களாக்கி விட்டனர். கடைசி மராட்டிய ஆட்சியாளரான சரபோஜி (Serfoji) 'சரஸ்வதி மஹால் நூலகம்' என்றழைக்கப் படும் நூலகத்தை உருவாக்கினார். வடமொழி, மேலைநாட்டு மொழி கள், மராத்தி, தெலுங்கு மொழி நூல்கள் மட்டுமின்றித் தமிழ் நூல்களும் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. அவர் தமிழின் புரவலராகத் திகழ்ந்தார். பல நாடகங்களும் காவியங்களும் (*Campu Kāvyas*) தமிழில் எழுதப்பட்டன. மராட்டியர் பலர் தமிழகத்தில் குடியேறினர்.

55 சொற்கள் மராத்தி மொழியிலிருந்து தமிழுக்கு வந் துள்ளன. அவற்றில் 23 சொற்கள் இன்றும் பேச்சு வழக்கில் உள்ளன. 'பட்டாணி, காயம்' (> *ghāya*) போன்ற சொற்களைச் சான்றாகக் காட்டலாம். கடனாகப் பெற்ற மராட்டியச் சொற்களில் பல, உணவு வகைகள் தொடர்பானவையாகும். 'கச்சாயம், கிச்சடி, கேசரி, கோசும்பரி, சேமியா, வாங்கி, ஸொஜ்ஜி' முதலியன அவ்வாறு கடன் வாங்கப்பட்ட சொற்களாகும். 'கங்காலம், கிண்டி, ஜாடி, சாலிகை குண்டான்' முதலியன சமையல் பாத்திரங்கள் தொடர் பான சொற்களாகும். காமாட்டி, ஜம்பம் முதலிய சொற்கள் அறிவு, உணர்ச்சி தொடர்பான சொற்களாகும். 'ஆதரவு' என்ற பொருளில் வரும் 'லாகு' என்ற சொல் மராட்டியச் சொல்லாகும். 'கைலாகு கொடுத்தல்' என வருவதை நோக்குக. 'கோலி' (= சிறுவர்களின் விளையாட்டு), சாவடி, கண்டி (= ஓர் எடை), சாகி, லாவணி தண்றி, அபங்கம், டோக்ரா முதலிய இசை தொடர்பான சொற் களும் மராட்டியத்திலிருந்து வந்த சொற்களாகும்.

எனவே அன்றைய துன்பமிக்க நாட்களில் வாழ்வின் இன்றியமையாத இருதுறைகளாகிய இசை (பலவகைப்பட்ட பாத்திரங்கள் தேவைப்படும்) உணவு(கள்) ஆகியவற்றில் மராத்தி மொழியின் பாதிப்பு இருந்தது. கடன் பெறப்பட்ட சொற்கள் அடையும் மாற்றங்களை ஆராய்கையில் பின்வரும் செய்திகள் தெரிய வருகின்றன. குற்றியலுகரத்தை உடைய தமிழ்ச் சொற்களின் வாய்பாட்டு வடிவத்தைக் கடன் பெறப்பட்ட சொற்களும் பெறுகின்றன. வெடிப்பொலி அல்லது பிற மெய் முடிவுகளுடன் உயிரொலிகள் பொதுவாகச் சேர்க்கப்படுகின்றன. மனிதனைக் குறிக்காத சொற்கள் பால்வேறுபாடின்றி அஃறிணையில் வருகின்றன. சிலவிடங்களில் இதற்கு விதிவிலக்கு உண்டு.[35]

உருது

ஆங்கில ஆட்சியின் பொழுதும் நிர்வாகத் தொடர்பான பல உருதுச் சொற்கள் வழக்கில் இருந்தன; இன்றும் அவை வழக்கில் உள்ளன.

தமிழ்		உருது
துமல் ~ தும்பல்	<	*dumbāl* 'வரியிலி நிலம்'
நஜர் ~ நசர்	<	*nazir* 'நீதிமன்ற தகவல் அறிவிப்பாளர்'
சராய்	<	*sharāi* 'காற்சட்டை'
கோரி	<	*gōr* 'சமாதி'

பல சொற்கள் இவ்வாறு வழக்கில் கலந்துள்ளன. சிலவற்றைக் கடன் வாங்கியவை என்றே சொல்ல இயலாது.

கெடுபிடி	<	*garbar*
கெவு ~ கெழுவு	>	*khewā* 'சரக்கு எடுத்துச் செல்வதற்கான கப்பற் கட்டணம்'
கைதி	>	*qaidi*
சப்பரம்	>	*cafpar*
சராசரி	>	*sarāsari*
சிலாமணி ~ செலவாணி	>	*calā'ōni*
சாட்டை ~ சாட்டி	>	*jāṭi*

35 Ganeshsundaram, P. C. and Subramoniam, V. I. : 'Marathi Loans in Tamil', *Indian Linquistics*, Vol. 14, 1954

சாமான்	> sāmān
சாலேசுரம்	> cālīśā
சீனி	> cīna
சுக்கான்	> sukkān
சேடை	> jēḍe
சீட்டு (சீட்டுக்கவி)	> ciṭṭhi
தயார்	> taiyār

'ராவுத்தர்', 'சலாம்' முதலான சொற்கள் தமிழ்ச் செய்யுளில் இடம் பெற்றுள்ளன.

சமஸ்கிருதச் சொற்களை மிகுதியும் உடையது என்ற முறையிலேயே இந்தி உருதுவிலிருந்து வேறுபட்டது. எனவே இந்தியையும் உருதுவையும் ஒன்ருகவே கொள்ளலாம். தமிழ்ப் பேரகராதி தமிழில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட உருதுச் சொற்களைத் தருகிறது. ஆனுல் இத்தொகையை விட மிகுதியான சொற்கள் வழக்கில் உள்ளன. நடுவண் அரசு ஆங்கிலத்தோடு இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருப்பதாலும், நம் பள்ளிச் சிறுவர்கள் கீழ் வகுப்புக்களிலேயே இதனைக் கற்றுக் கொள்ளத் துவங்கியிருப்பதாலும் காலப் போக்கில் மேலும் இந்திச் சொற்கள் தமிழில் வந்து சேரலாம்.

மேலை நாட்டு மொழிகள்

போர்த்துக்கீசியம்

மேலை நாட்டார் 15 ஆம் நூற்றுண்டிலிருந்தே இந்தியாவிற்கு வரத் தொடங்கினர். முதலில் வந்தவர்கள் போர்த்துக்கீசியர். அவர்கள் கிழக்கிந்தியாவில் பல குடியேற்றங்களை ஏற்படுத்தினர். அவ்விடங்களின் பெயர்களுடன் 'பறங்கி' என்பது முந்துநிலையாக வழங்குவதால் அவ்விடங்களை அடையாளங் கண்டு கொள்ளலாம்.

சான்று : பறங்கிப்பேட்டை
பறங்கிமலை

பறங்கிமலையில் 1522 ஆம் ஆண்டில் போர்த்துக்கீசியர் குடியேற்றத்தை ஏற்படுத்தினர். 'பறங்கி' என்ற சொல் 'frank' என்னும் சொல்லிலிருந்து வந்ததாகும். சிலுவைப் போர்களுக்குப் பின்னர் இச்சொல் 'ஐரோப்பியர்' என்ற பொருளில் வழங்கலானது.

போர்த்துக்கீசியரே தமிழகத்திற்கு வந்த முதல் மேலைநாட்டவர்; எனவே அவர்கள் 'பறங்கியர்' என்றழைக்கப்பட்டனர். அவர்கள் கொண்டு வந்த பொருள்கள் இங்குள்ள பொருள்களிலிருந்து வேறு பட்டவை; எனவே 'பறங்கி' என்ற முன்னொட்டோடு அவை வழங்கப்பட்டன.

சான்று : பறங்கித்தாழை (அன்னாசிப் பழம்)
பறங்கிக்காய்

தமிழ்ச் சித்த மருத்துவத்தின் குறிக்கத்தக்க சிறப்பு இயல்பு நஞ்சைப் பதங்கமாக்கலாம். இங்ஙனம் பதங்கமாக்கப்பட்டது பறங்கி வைப்பு எனப்பட்டது, ஆல்புகெர்க்(Albuquerque)கின் ஆட்சியின் கீழ்ப் போர்ச்சுக்கீசியர், இந்தியப் பெண்களை மணம் புரிய ஊக்கிவிக்கப் பெற்றனர். ஆனால் இது சமுதாயத்தின் நலனுக்கு பயனளிக்காது போனது வருந்தத் தக்கது. 'பறங்கி' என்னும் சொல் 'branco' என்னும் சொல்லுடன் பாமர மொழி விளக்கப் போக்கால் ஒன்றென மயங்கப் பெற்றது. 'branco' என்பது ஒரு வகை மேக நோயைக் குறிக்கும் சொல்லாகும். 'பறங்கிப் புண்' என்ற சொல் இனக் கலப்பால் பிறந்த மேக நோயுடைய இனத்தைக் குறிக்கலானது. எனவே தான் தெ நோபிலி தம்மைப் 'பறங்கியர்' என்றழைத்ததை எதிர்த்தார்.

16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் கீழைநாட்டுக் கடற்படையினரை வெற்றி கொள்ளப் பயன்படுத்திய பெரிய துப்பாக்கி புரட்சிகரமான ஆயுதமாகக் கருதப்பட்டது. எனவே இதற்குப் 'பீரங்கி' என்ற பெயர் வந்தது. இது பறங்கி என்ற சொல்லோடு தொடர்புடையது. தமிழ்ப் பேரகராதி இச்சொல்லை '*firangi*' என்ற சொல்லிலிருந்து வந்ததாகக் குறிக்கிறது.

இரண்டாவது கட்டத்தில், தமிழ்ச் சொற்களுடன் 'பரங்கி' என்னும் முந்து நிலையைச் சேர்த்து வழங்குவதற்குப் பதில் போர்த்துக்கீசிய சொற்களே இடம் பெறலாயின. யேசு சபையைச் சேர்ந்த பாதிரியார்கள் கோவையைத் தலைமையிடமாகக் கொண்டனர். போர்த்துக்கீசியராயினும் சரி அல்லது இந்தியராயினும் சரி, கிறித்துவப் பாதிரியார்கள் போர்த்துக்கீசிய வாழ்க்கை முறையைப் பின்பற்றினர். இதன் விளைவாகவே 'போர்த்துக்கீசிய—தமிழ்' அகராதிக்கான தேவை ஏற்பட்டது. கிறித்துவச் சமயச் சடங்குகளுக்குப் புதிய சொற்கள் தேவைப்பட்டன. கிறித்துவச்

சமயச் சடங்குகள் தொடர்பாக வழங்கிய போர்த்துக்கீசிய சொற்கள் மறைந்து விட்டன. 'பாதிரி' (>*pādre)* போன்ற சில சொற்களே இன்னும் வழக்கில் உள்ளன. கல்விக் கூடங்களின் மதிப்பைக் கிறித்துவப் பாதிரியார்களுடன் போர்த்துக்கீசியரும் உணர்ந்திருந்தனர். 'கடுதாசி ∝ கடதாசி' (> *cartas*), 'பேனா' (*pēnō*) முதலிய போர்த்துக்கீசியச் சொற்கள் இன்றும் வழக்கில் உள்ளன. நமது பள்ளிகளில் பயன்படுத்தப்படும் முக்கியமான இவ்விரு பொருட்களுக்கும் போர்த்துக்கீசியச் சொற்கள் வழங்குகின்றன.

புதுமையான சில கலைச் சொற்கள் தமிழில் புகவும் போர்த்துக்கீசியர் காரணமாவர். தாமிரம், துத்தநாகம் ஆகிய இரண்டும் சேர்ந்த கலப்பு உலோகம் 'தம்பாக்கு' என வழங்கப்படுகிறது. இது 'tambuk' என்ற போர்த்துக்கீசியச் சொல்லிலிருந்து வந்ததாகும். 'வாத்து' என்னும் சொல்லும் போர்த்துக்கீசியச் சொல்லாகும். 'doce' என்னும் போர்த்துச்கீசியச் சொல் இனிப்பான உணவுப் பொருள் ஒன்றைக் குறிப்பதாகும். இதன் பொருள் விரிவுபட்டு அரிசி மாவில் தயாரிக்கப்பட்ட உணவு வகை ஒன்றுக்கு 'தோசை' என வழங்கலாயிற்று.

தமிழ்	போர்த்துக்கீசியம்
சா (=தேநீர்)	> cha
இலஞ்சி	> lengo 'கழுத்துத்துணி'
திராவி	> trava 'இறவான இணைப்பு'
அலமாரி	> almario
மேசை	> mesa
சாவி	> chiavi

நிர்வாகத் துறைச் சொற்கள் சிலவும் போர்த்துக்கீசிய மொழியிலிருந்து வந்துள்ளன. 'சதாரித்தல்' சாதர் செய்தல் முதலியன போர்த்துக்கீசியச் சொல்லான 'citar' என்பதிலிருந்து வந்தனவாகும். 'பேஷ்கார்' என்பது 'fiscal' என்பதிலிருந்து வந்ததாகும். 'ஆயா' என்ற சொல் 'aia' என்பதிலிருந்து வந்ததாகும்.

ஸ்பானிஷ் பிரேசிலியன் முதலிய மொழிச் சொற்களும் போர்த்துக்கீசிய மொழி மூலமாகத் தமிழில் புகுந்தன. 'வெத்தாக்குகூடு' என்பது 'bitacula' என்ற ஸ்பானிஷ் மொழிச் சொல்லிலிருந்து வந்ததாகும். 'கொய்யா' என்னும் சொல் 'guayaba' என்னும் பிரேசிலியச் சொல்லிலிருந்து வந்ததாகும்.[36]

---

36 *Tamil Lexicon,* Vol.II

டச்சு மொழி

டச்சுக்காரர்கள் தங்களது கிழக்கிந்தியக் கம்பெனி மூலமாக இந்தியாவுடன் வணிகம் புரிந்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள கூடலூரில் அவர்களது தூய டேவிட் கோட்டை இருந்தது. 'கக்கூசு' என்னும் சொல்லானது 'kakhuis' என்னும் சொல்லிலிருந்து வந்ததாகும். வெட்ட வெளியையோ, அல்லது புதர்களையோ மலம் கழிக்கப் பயன்படுத்தி வந்த இந்தியர்களுக்கு இது தெரியாத ஒன்றாகும். 'துட்டு' என்ற சொல் சிறிய டச்சு நாணயத்தின் பெயரான 'duit' என்பதிலிருந்து வந்ததாகும். டச்சுக்காரர்களின் பணியாளர்கள் பணத்துக்கு இச்சொல்லையே பொதுவாகப் பயன்படுத்தும் அளவுக்கு ஏழைகளாயிருந்திருக்க வேண்டும். 'துட்டுக்காரன்' என்னும் சொல்லை நோக்குக.

பிரெஞ்சு மொழி

தங்களது கிழக்கிந்தியக் கம்பெனி மூலமாக வாணிகம் செய்யப் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்தனர். ஆங்கிலேயரின் கடற்படை வலிமையாலும் பிரெஞ்சு அரசின் பாராமுகத்தாலும் டியூப்ளேக்ஸின் (Dupleix) பிரெஞ்சு அரசை இந்தியாவில் நிறுவும் முயற்சி தோல்வியுற்றது. பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்தியாவின் தலைமையிடமானது. 300 ஆண்டுகாலப் பிரெஞ்சு ஆட்சியின் விளைவாகப் பாண்டிச்சேரி இன்றும் பிரெஞ்சு நாகரிகத்தின் இருப்பிடமாக உள்ளது.

பிரெஞ்சு - தமிழ் உறவின் சுவையான பயன்களில் ஒன்று டியூப்ளேயின் கீழ் பணியாற்றிய ஆனந்தரங்கம் பிள்ளை என்பவரின் நாட்குறிப்பாகும். இதில் பல பிரெஞ்சுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இதன் மொழியில் பிரெஞ்சுச் செல்வாக்கின் சுவடுகள் காணப்படுகின்றன. இக்கண்ணோட்டத்தில் இந்நூல் ஆராயப்படவில்லை. பாண்டிச்சேரித் தமிழ்க் கிளை மொழியில் பல பிரெஞ்சுச் சொற்கள் காணப்படுகின்றன.

பிறவிடங்களிலும் பிரெஞ்சுச் சொற்கள் தமிழாக்கப்பட்டுள்ளன. 'பத்தாய்' > (bouteille) என்பதை வேற்று மொழிச் சொல் என்றே இன்று உணர முடியாது. பாட்டில் அல்லது போத்தல் என்பது 'bouteille' என்ற பிரெஞ்சுச் சொல்லிருந்து வந்ததாகும்.

சீட்டாட்டம் மேற்கத்தியர்களால் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டது. சீட்டுக்களில் உள்ள 'ஆசு' என்பது 'ace' என்ற

பிரெஞ்சுச் சொல்லிலிருந்து வந்ததாகும். இதன் உச்சரிப்பு, பிரெஞ்சிலிருந்து இது வந்தது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

'லாந்தர்' என்ற சொல் 'lanterne' என்ற பிரெஞ்சுச் சொல்லிலிருந்து வந்தது. 'பின்தூர்' என்ற சொல் 'peinture' என்பதிலிருந்து வந்தது. 'தம்பூர்' என்ற சொல் 'tambour' என்ற பிரெஞ்சுச் சொல்லிலிருந்து வந்தது. 'ரோஜாவடி' என்பது 'rouge' என்பதிலிருந்து வந்தது.

பிரெஞ்சு அரசு அதிகாரிகளின் பெயர்கள் பிரெஞ்சுப் பெயர்களேயாகும். கம்யூன்கள் (Communes) ஷெரிப்புகளின் (sheriffs) கீழும், போலீஸ் இலாகா குமுசியர் (> commissaire) கீழும் உள்ள பிரெஞ்சு அரசாங்க முறையை இச்சொற்கள் நினைவுபடுத்துகின்றன. 'குமுசியர்' என்ற சொல்லிலுள்ள இரண்டாவது உகரம், மொழியிடைக் குற்றியலுகரமாகும். இது இகரத்துக்கு மிகவும் நெருங்கி உள்ளது. இரவுக்காவலைக் குறிக்க வழங்கும் 'ரோந்து' அல்லது 'லோந்து' (ரகர லகர மாற்றம் பேச்சு வழக்கின் விளைவாகும்) என்னும் சொற்கள் 'ronde' என்ற பிரெஞ்சுச் சொல்லை நினைவு படுத்துகின்றன. ஆங்கிலேய அரசாங்கம் இந்திய ஆட்சிப்பொறுப்பை 1857 ஆம் ஆண்டில் ஏற்பதற்கு முன்னர், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் இந்தியாவை ஆண்டனர். அவர்கள் 'கும்மினியான்' என அழைக்கப்பட்டனர். இச்சொல் பிரெஞ்சு மொழியிலிருந்து வந்திருக்கலாம்.

ஆங்கிலம்

ஆங்கிலேயர்கள் தங்களது கிழக்கிந்தியக் கம்பெனியின் வழியாகப் பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுடன் வணிகம் செய்யத் தொடங்கினர். அவர்களது தொடக்ககாலக் குடியேற்றங்களில் சென்னையும் ஒன்றாகும். அன்று முதல் ஆங்கிலச் சொற்கள் தமிழுக்கு வந்து கொண்டே இருக்கின்றன.

ஆட்சித்துறைச் சொற்கள் பல ஆங்கிலத்திலிருந்து வந்துள்ளன.

கவர்னர் > *governor*
பொலீசு ∞ போலீசு > *police*

'ஒலி அழுத்தம்' (stress) தமிழர்களால் 'நெடில்' (length) என உணரப்பட்டது. ஏனெனில் தமிழில் 'ஒலி அழுத்தமுறை' கிடையாது.

சட்டத் தொடர்பான ஆங்கிலச் சொற்கள் பல தமிழில் இடம் பெறுகின்றன. 'ஜட்ஜு' என்ற சொல் 'judge' என்பதிலிருந்து வந்தது. மொழியிறுதிக் குற்றியலுகரத்தை நோக்குக. இது பலவிடங்களில் இகரமாகிறது. எனவே பழைய வடிவமான 'ஜட்ஜு' என்பதும், பிந்திய வடிவமான 'ஜட்ஜி' என்பதும் 'கட்டற்ற அல்லது நிபந்தனையற்ற மாற்றத்தில்' வருகின்றன. மொழியிறுதி மெய், இடையண்ண மெய்யாக இல்லாது கடையண்ண மெய்யாக இருந்த பொழுதிலும் இம்மாற்றம் நிகழ்கிறது. ஈரங்கி > hearing மொழி முதல் 'h' இழக்கப்படுகிறது. உகர முடிவுக்குப் பதில் இங்கு இகர முடிவு வருகிறது. ஆங்கிலத்தில் மொழியிறுதியில் 's', 't', 'p' என்பன வருமாயின் மாற்றமெதுவும் இல்லை. 'அவிளவெட்டு' > affidavit உயிரிடையில் 'f' 'v' என மாறுகிறது. 'will' என்பதிலிருந்து 'உயில்' என்பது வருகிறது. 'w' என்பதற்கு முன்னர் உகரத்தைப் புகுத்தும் போக்கு உள்ளது. 'w' என்பது வகரமாகிப் பின்னர் யகர உடம்படு மெய்யாகிறது. 'மவுண்டு' < (amount) நீதிமன்றக் கட்டணம். இவ்வாறு mount என்பது குறிப்பிட்ட ஒரு பொருளில் பயன்படுத்தப்படுகிறது. ஒலி அழுத்தமில்லாத பொழுது மொழி முதல் அகரம் இழக்கப்படுவதைக் காண்க. தரணி < attorney என்பதையும் நோக்குக. இடைப் பின் உயிர் தமிழில் அகமாகிறது. கீழ் முன் உயிரும் இவ்வாறே அகரமாகிறது. 'bank' என்பது 'பாங்கு ~ வாங்கு > வங்கி' என்றுகிறது. 'draft' என்பது 'திராபு' அல்லது தெராபு அல்லது துராபு என்றுகிறது. இங்கு வெடிப்பொலிக்கு முன்னர் வரும் 'f' ஒலிப்பிலா வெடிப்பொலியாக ஓரினமாக்கப்படுகிறது. மொழியிறுதியிலுள்ள தகரம் இழக்கப்படுகிறது.

இராணுவச் சொற்களும் ஆங்கிலத்திலிருந்து வந்துள்ளன. பட்டாளம் > battalion. தமிழில் பெரும்பாலான அஃறிணைப் பெயர்கள் 'அம்' என்பதில் முடிகின்றன. இதனோடு ஒப்புமையாக 'battalion' என்பதிலுள்ள ஈற்றசை 'அம்' எனக் கேட்கப்பட்டது.

தில்லெரி	>	artillery
துருப்பு	>	troop
துருப்பு (சீட்டுக்கட்டில் உள்ளது)	>	trump

'trump' என்பதிலுள்ள மகர மெய் தமிழில் கேட்கப்படவில்லை. இங்ஙனமே சிமிட்டி < cement. ஆனால் 'சிமிண்டு' என்ற பிற்காலத்திய வடிவமும் உண்டு. 'சார்வு (<serve) + ஆதல்' >

சார்வாதல். தமிழ்ச் சொற்களோடு ஆங்கிலச் சொற்கள் சேர்ந்து தொகைகளாகவும் வருகின்றன.

இன்றைய அறிவியல், பண்பாட்டு வளர்ச்சிகள் இயல்பாக ஆங்கிலச் சொற்களாலேயே குறிக்கப்படுகின்றன.

டெலிபோன் ∝ தெலிபோன் > telephone.

டிராம் ∝ திராம் > tram.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நோய்களின் பெயர்களும் ஆங்கிலச் சொற்களேயாகும்.

பிளேக்கு > plague

மொழி முதல் மெய்ம்மயக்கங்கள் சுரபத்தியால் தவிர்க்கப் படுகின்றன. ஆங்கில மருங்கொலி பலவிடங்களில் தமிழில் நாவளை மருங்கொலியாகிறது. ஆங்கிலேயர்களால் புதிதாக இந்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட பழங்களுக்கு ஆங்கிலப் பெயர்களே வழங்குகின்றன. மெலாம் பழம் அல்லது முலாம் பழம் ∞ மலாம் பழம் ∞ மொலாம்பழம் > melon. மகர மெய்க்குப் பிந்திய உயிர் இதழ் குவி உயிராகிறது.

சாதாரண மக்கள் ஆங்கிலச் சொற்களில் தமிழ்ச் சொற்களைக் காண முற்படுகின்றனர். இது பாமர மொழி விளக்கப் போக்கின் விளைவாகும். 'private' என்பது 'புறவெட்டு' என்றாகிறது. 'doctor' என்பது 'டாக்கு தொரை' என்றாகிறது. இலங்கைக்குப் படகில் செல்லும் பயணிகள் 'டாக்' (dock > dockyard) என்றழைக்கப் படும் துறைகளில் மருத்துவர்களால் சோதிக்கப்பட்ட பொழுது இப்பெயர் வந்தது. 'தொரை' என்பது முக்கியமானவரைக் குறிப்பதாகும். 'correct' என்பது 'கரெகட்டு' என்றாகிறது. 'writer' என்பதிலுள்ள 'அர்' விகுதி தமிழில் பன்மை விகுதியாகும். அது மரியாதை ஒருமைக்கும் வருகிறது. ஆண்பால் ஒருமை விகுதியான 'அன்' விகுதியைப் பெற்று 'ரயிட்டன்' என்ற சொல் வருகிறது. இது செல்வந்தர் கிளார்க்குகளைத் தாழ்ந்தவர்களாகக் கருதியதன் விளைவேயாகும்.

அனைத்துலகக் கலைச்சொற்களை (இவை நமக்கு ஆங்கிலத்தின் வாயிலாகவே வருகின்றன) அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என நமது தலைமையமைச்சர் திரு. ஜவஹர்லால் நேரு வற்புறுத்தினார். இந்தியாவிலுள்ள அறிவுப் பணி நிறுவனங்கள் இப்பரிந்துரையை ஏற்றுக் கொண்டுள்ளன. எதிர்காலத்திலும் ஆங்கிலச் சொற்கள் தமிழில் புகும் என்பதே இதன் பொருளாகும்.

தமிழ் பேரகராதி 300 ஆங்கிலச் சொற்களையே தருகின்றது. ஆனால் இதைவிட இருமடங்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு வரலாம்; இது குறிப்பாக நீதிமன்றங்களிலும், கல்லூரிகளிலும், பணியகங்களிலும் நிகழ்கிறது. தமிழகக் குழந்தைகள் தமது நாலாவது வகுப்பிலிருந்து பட்டம் பெறும் வரை ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாகப் படிக்கின்றனர். எனவே 'மொழித் தூய்மை வாதிகளின்' எதிர்ப்புகளுக்கு இடையிலும் பல ஆங்கிலச் சொற்கள் எல்லாவிடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன.

10

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் வானொலி, செய்தித் தாள்கள், அனைவர்க்கும் கல்வி தருவதை நோக்கமாகக் கொண்ட பாட நூல்கள் ஆகியவற்றின் மூலம் 'பொது மொழி' (Standard Dialect) எங்கும் பரவுகிறது. இப் பொது மொழி எந்தக் குறிப்பிட்ட வட்டாரத்திற்கோ, சமூகப் பிரிவிற்கோ உரியதன்று; எனினும் இப் பொது மொழிக்கிடையில் கிளைமொழிகளும் கிளைத்து வளர்கின்றன. திரைப்படங்களில் கூட இவை நன்கு பயன்படுத்தப் படுகின்றன. பேச்சு மொழியில் ஆர்வமுடைய நமக்கு இவை முக்கிய மானவை. இலக்கியத்தில் கிளைமொழிச் சொற்கள் இடம் பெறுவதை தொல்காப்பியர் உணர்ந்துள்ளார். இக்கிளை மொழிகளின் வழக்கு குறிப்பிட்ட வட்டார அளவில் மட்டுமே வழக்கிலிருப்பினும் இலக்கியத்தில் இடம் பெறும் இக் கிளைமொழிச் சொற்களைத் தொல்காப்பியர் 'திசைச் சொல்' என்கிறார்.[1] உரையாசிரியர்கள் கிளை மொழிச் சொற்கள் வருமிடங்களைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.[2]

கிளைமொழிகள்

தொல்காப்பியர் தமிழகத்தின் பன்னிரு நிலப்பிரிவுகள் பற்றிப் பேசுகிறார். ஒவ்வொரு நிலப்பிரிவும் ஒரு கிளைமொழியை உடையதாகும்.[3] அப்பன்னிரு பிரிவுகளின் பட்டியல் முன்பக்கத்தில் தரப் பட்டுள்ளது; அவற்றுக்கு இணையான இக்கால வட்டாரப் பகுப்புக் களும், உரையாசிரியர்கள் குறிப்பிடும் அவ்வட்டார வழக்குகளின் சிறப்புச் சொல்லும் குறிக்கப்பட்டுள்ளன.[4]

---

1 தொல்காப்பியம், 880, 883
"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"
"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"

2 தொல்காப்பியம், 880, 883, நச்சினார்க்கினியர் உரை, சேனா வரையர் உரை, நன்னூல், 272, மயிலைநாதர் உரை

3 தொல்காப்பியம், 883

4 நன்னூல், 272, மயிலைநாதர் உரை



1 அருவா வடதலைநாடு, 2 மலாடு, 3 அருவாநாடு, 4 புனல்நாடு, 5 பாண்டி நாடு, 6 தென்பாண்டி நாடு, 7 வேணாடு, 8 குட்டநாடு, 9 குடநாடு, 10 கற்கா நாடு, 11 சீதநாடு, 12 பூமி நாடு.

ஆறுகள் : A கோதாவரி, B கிருஷ்ணு, C துங்கபத்ரா, D வடபெண்ணை E பாலாறு, F தென்பெண்ணை, G காவிரி, H வைகை.

	கிளைமொழி வழங்குமிடம்	தற்காலப் பெயர்
	1	2
1.	தென்பாண்டி நாடு	திருநெல்வேலியின் தென்பகுதி
2.	குட்டநாடு	கோட்டயம், கோழிக்கோடு மாவட்டங்கள்
3.	குடநாடு	வடமலபார்
4.	கற்கா நாடு	கோயமுத்தூரின் குன்றுப் பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப்பகுதி
5.	சீதநாடு	நீலகிரி, கோயமுத்தூரின் பகுதிகள்
6.	பூமிநாடு	கன்னியாகுமரி மாவட்டமாக இருக்கலாம், —வேள்நாடு என்பதன் பழைய பெயர்
7.	அருவாநாடு	வடஆர்க்காடு, தென்னார்க்காடு கடற்கரைப் பகுதிகள்
8.	அருவாநாடு	,,
9.	அருவா வடதலைநாடு	தமிழகத்தின் வடக்கு எல்லையை ஒட்டிய பகுதி
+ 10.	அருவாள் வடதலைநாடு	,,
11.	வேணாடு	திருவாங்கூரின் தென்பகுதி
12.	பாண்டிநாடு	பாண்டியநாடு
13.	மலாடு	தென்னார்க்காட்டில் உள்ள திருக்கோவலூர்
14.	புனல்நாடு	சோழநாடு

+ 9, 10 ஆகிய இரண்டும் ஒரே பகுதியைக் குறிக்கின்றன.

இதைக் குறிப்பிட்ட உரையாசிரியரின் பெயர் ந = நச்சினார்க்கினியர் ம = மயிலைநாதர்	கிளைமொழி வடிவம்	உரையாசிரியரால் தரப்பட்ட பொதுவடிவம்
3	4	5
ந	பெற்றம்	ஆ; எருமை
ம	பெற்றம்	ஆ
ம	சொன்றி	சோறு
ந	தள்ளை	தாய்
ந	ஞெள்ளை	நாய்
ம	தள்ளை	தாய்
ந	அச்சன்	தந்தை
ம	அச்சன்	தந்தை
ந	கையர்	வஞ்சர்
ம	கையர்	வஞ்சர்
ந	எலுவன்	ஏடா
ந	இகுளை	தோழி
ந	தந்துவை	தம்மாமி
ம	எலுவன்	தோழன்
ந	ஞமலி	நாய்
ந	பாழி	சிறுகுளம்
ம	,,	,,
ந	செறு	செய் (வயல்)
ந	கேணி	சிறுகுளம்
ம	,,	,,
ந	குட்டை	குருணி
ம	எகினம்	புளி
ம	கிழார்	தோட்டம்
ம	செய்	*செறு
ம	†இகுளை	தோழி
ம	ஆய்	தாய்

* இச்சொல்லை நச்சினார்க்கினியர் அருவநாட்டுக்குரிய கிளைமொழிச் சொல்லாகத் தந்துள்ளார்.

† இச்சொல்லை நச்சினார்க்கினியர் சீதநாட்டுக்குரிய கிளைமொழிச் சொல்லாகத் தந்துள்ளார்.

வீரசோழியம்

தான் இழிந்தது எனக் கருதும் சில வழக்குகள் பற்றி வீர சோழியம் குறிப்பிடுகிறது.[5] அவை மூன்று வட்டாரங்களில் பரவி யிருந்தன என அதன் உரையாசிரியர் காட்டுகிறார்.

1 கருமண் நிலப்பகுதி. (கொங்கு நாடு—கோயமுத்தூர், சேலம் மாவட்டங்கள்)

2 காவிரி பாயும் பகுதி (சோழநாடு)

3 பாலாறு பாயும் பகுதி (பல்லவ நாடு)

முதலில் கூறப்பட்ட வட்டாரத்தில் ழகர ளகர மெய்கள் மயங்கி வருகின்றன

1 ழ் > ள்

நாழி > நாளி
உழக்கு > உளக்கு
கோழி > கோளி
வாழை > வாளை
வழி > வளி
மூழை > மூளை

2 ள் > ழ்

விளக்கு > விழக்கு
பளிங்கு > பழிங்கு
தளிகை > தழிகை
இளமை > இழமை

காவிரி பாயும் பகுதியில் (சோழநாட்டில்) இரட்டித்த நுனி யண்ண வெடிப்பொலியும் இரட்டித்த இடையண்ண வெடிப்பொலி யும் மயங்கி வருகின்றன. நெடில் நுனியண்ண வெடிப்பொலி, நெடில் நுனிநா பல் வெடிப்பொலியாகவும், நெடில் நுனிநா பல் வெடிப்பொலி இ, எ, ய் ஆகியவற்றுக்குப் பின்னரும், சிலவிடங் களில் எல்லா ஒலிகளுக்குப் பின்னரும் இடையண்ணச் சாயல் பெற்று நெடில் இடையண்ண வெடிப்பொலியாவதும் இம்மயக்கத் திற்குரிய காரணங்களாகும்.

வெற்றிலை > வெச்சிலை
முற்றம் > முச்சம்
கற்றை > கச்சை

---

5 வீரசோழியம், 82, பெருந்தேவனார் உரை.

[கடைசி இரு சொற்களிலும் இரட்டித்த நுனியண்ண வெடிப்பொலிக்கு முன்னர் இடையண்ண ஒலிகள் வாராமையை நோக்குக.]

பாலாறு பாயும் பகுதியில் 'நெல்லின் பக்கத்தில் நின்றது', 'வீட்டின் பக்கத்தில் நின்றது' என்பதற்குப் பதிலாக முறையே 'நெல்லுக்கா நின்றது', 'வீட்டுக்கா நின்றது' என்னும் மரபுத் தொடர்கள் வழங்குகின்றன.

வட்டாரமெதனையும் குறிப்பிடாமல் தாம் 'இழிந்தவை' எனக் கருதும் பின்கண்ட வழக்குகளை அவர் குறிப்பிடுகிறார்.

1 இவனை-ப்-பார்க்க > இவனை-ப்-பாக்க [வேரின் இறுதியிலுள்ள ரகர மெய் மறைகிறது.]

2 இங்கு > இங்காக்க; அங்கு > அங்காக்க, ['ஆக்க அசை நிலை' சேர்க்கப்பட்டுள்ளது.]

3 சேற்று நிலம் > சேத்து நிலம்; ஆற்று-க்-கால் > ஆத்து-க்-கால் [ற்ற் > த்த்]

4 இப்படிக் கொத்த > இப்படிக் கொற்ற
அப்படிக் கொத்த > அப்படிக் கொற்ற
(த்த் > ற்ற் இது போலி நாகரிக ஆக்கத்தின் விளைவாகலாம். மேலே எண் 3 இல் குறிப்பிட்டவற்றோடு இதனை ஒப்பிட்டுக் காண்க)

5 வாழை-ப்-பழம் > வாயை-ப்-பயம்
கோழி முட்டை > கோயி முட்டை (ழ் > ய்)

6 உயிர் > உசிர்; மயிர் > மசிர் (ய் > ச்)

முன்னரே குறிப்பிட்டது போலச் சகர மெய்யே பழமை யானதாகும். ஆனால் இலக்கிய மொழியில் யகர மெய் உடைய வடிவத்தைப் பயன்படுத்தக் காண்கிறோம். ஆனால் உரையாசிரியர், இதனை அறியாத சாதாரண மக்கள் மொழியைத் தவறாகப் பயன் படுத்துவதாக முடிவு கட்டியதால் சகர மெய்யுள்ள வடிவத்தைத் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

பெருந் தமிழ்நாடு

இலங்கைத் தமிழையும் இத்துடன் சேர்த்து ஆராய வேண்டும். இலங்கைத் தமிழில் உள்ள கிளைமொழிகள் பின்வருமாறு:

1. யாழ்ப்பாணக் கிளைமொழி
2. மட்டக்களப்புக் கிளைமொழி
3. தென்கிழக்கு இலங்கையின் கிளைமொழி
4. இசுலாமியர்களின் கிளைமொழி
5. கொழும்பு நகரின் கிளைமொழி

மலேயா, பர்மா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாட்டுத் தமிழர் களின் கிளைமொழிகளும் உள்ளன. மொழி முதல் வகர மெய்யை விட்டுவிடும் 'திகலவர்' (Tigaḷavar) எனப்படும் பெங்களூர்த் தமிழ்க் குடியானவர்களின் திகளு (Tigalu) கிளைமொழி, பெங்களூர் அரிசனங்களின் கிளைமொழி, மைசூரின் சங்கேதி (Sanketi) கிளைமொழி, ஹெப்பர் (Hebbar) மண்டயம் பிராமணர்களின் கிளைமொழி, 'பெண்டாட்டி' என்ற சொல்லைப் 'பெண்' என்ற அதனுடைய பழைய பொருளிலேயே இன்றும் வழங்கும் ஆந்திராவில் குடியேறிய பிராமணர்களின் செகந்திராபாத் கிளைமொழி முதலியவற்றையும் குறிப்பிட வேண்டும்.

இக்காலத் தமிழ் வட்டாரக் கிளைமொழிகள்

'இருக்கிறது' அல்லது 'இருக்குது' என்ற வடிவங்களுக்குப் பதிலாக, இசுலாமியச் செல்வாக்கால், 'கீது' என்ற வடிவம் வட ஆர்க்காட்டில் அதிலும் குறிப்பாக வேலூரில் வழக்கில் உள்ளது. இது அவ்வட்டாரக் கிளைமொழியின் தனி இயல்பாகும். வழக்கெல்லைகளைக் (Isoglosses) குறிப்பிடும் கிளைமொழி வரைபடங்கள் வரையப் படாததால், இங்குக் கூறப்படும் கிளைமொழி வழக்குகள் வழங்கு மிடங்களின் எல்லைகளை உறுதியாக வரையறுக்க முடியாது. பழைய ழகர மெய்யின் பல்வேறு மாற்றங்கள் தமிழின் மாறுபட்ட கிளை மொழிகளின் சிறப்பியல்புகளாக உள்ளன. சென்னைத் தமிழில் ழகர மெய் யகர மெய்யாகிறது.

சான்று ; பழம் > பயம்

வடஆர்க்காட்டுத் தமிழில் ழகர மெய் சகர மெய்யாகிறது.

சான்று : இழு > இசு

தென் ஆர்க்காட்டுத் தமிழில், அதிலும் குறிப்பாகச் சிதம் பரத் தமிழில் ழகர மெய் ஷகர மெய்யாகிறது.

சான்று : திருவிழா > திருவிஷா

தென் மாவட்டங்களிலும் இலங்கையிலும் ழகர மெய் ளகர மெய்யாகிறது.

சான்று : பழம் > பளம்

'அவர்கள்' என்ற சொல் பிராமணர்களின் தமிழில் 'அவா' அல்லது 'அவாள்' எனவும், வடஆர்க்காட்டுத் தமிழில் 'அவுங்க' எனவும், கோவை, நெல்லை மாவட்டத் தமிழில் 'அவிய' எனவும் வழங்குகிறது முன்னரே குழிந்துரசொலியாகிவிட்ட மொழி முதல் இடையண்ண ஒலியின் ஒலிப்புடைமை மதுரைத் தமிழின் தனித் தன்மையாகும்.

சான்று : *sāmān* > *jāmān*

எண்பதை 'எண்பளது' α எம்பளது' என உச்சரிப்பது தென் தஞ்சைத் தமிழின் சிறப்பியல்பாகும். பழைய ஆய்தத்தின் இடத்தில் ளகர மெய் வந்திருக்கக் கூடும். 'பந்தல்' என்ற சொல் இறந்தவர் களின் வீட்டின் முன்னால் போடப்படும் பந்தலையே குறிக்கும் குறுகிய பொருளில் வழங்குவது செட்டி நாட்டுத் தமிழின் தனி இயல்பாகும். செயல் முடிவதைக் குறிக்க 'இடு' அல்லது 'விடு' என்னும் துணைவினைக்குப் பதில் 'போடு' என்னும் துணைவினையைப் பயன்படுத்துவது கோயமுத்தூர்த் தமிழின் சிறப்பியல்பாகும்.

புதிய ஒலியன்களின் வேற்றுநிலை வழக்குகள்

கிளைமொழிகளிடையே காணப்படும் வேறுபாடுகளால், ஒரு கிளைமொழியில் உள்ள வேற்றுநிலை வழக்கு பிறிதொன்றில் இருப் பதில்லை. 'வால்', 'வாள்' என்னும் வேற்றுநிலை வழக்குகள் லகர, ளகர மெய்களை ஒலியன்களாக்குகின்றன. ஆனால் ஈரோட்டுக் கிளை மொழியில் இவை வேற்றுநிலை வழக்கில் வருவதில்லை. தென் மாவட்டங்களில் ழ், ள் என்பன வேற்றுநிலை வழக்கில் வருவதில்லை. நாஞ்சில் நாடு நீங்கலாக ஏனைய இடங்களில் ரகர மெய்யும் றகர மெய்யும் வேற்றுநிலை வழக்கில் வருவதில்லை. ஞகர, ஙகர மெய்கள் கோவை, சேலம் ஆகிய இடங்களில் வேற்றுநிலை வழக்கில் வரு வதில்லை. ஙகர மெய் நாஞ்சில் நாட்டில் தனி ஒலியனாக வருகிறது. 'அங்ஙனம்', 'அங்கணம்' (*angaṇam*) என்னும் வேற்றுநிலை வழக்கு இதற்குச் சான்றாகும். 'ɛ' 'æ' ஆகிய ஒலிகள் பல வட்டாரங்களில் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன. காயல்பட்டினம் இசுலாமியர் களின் தமிழில் 'æ', 'எ' ஆகியன வேற்றுநிலை வழக்கில் வருகின்றன.

சான்று : *væṅgi* (= வாங்கி)

vēṅge (= வேங்கை)

கல்லூரி மாணவர்களின் தமிழில் *f, p, (ப்) என்னும் ஒலிகள் 'coffee', 'copy' என்னும் சொற்களில் வேற்று நிலை

* ஒலிப்பிலாப் பல்லிதழ்ப் பிளந்துரசொலி

வழக்கில் வருகின்றன. படித்த இசுலாமியர்களின் தமிழிலும், இந்தியில் புலமை பெற்ற அறிஞர்களின் தமிழிலும் 'z' 'j' ஆகியன வேற்றுநிலை வழக்கில் வருகின்றன.

சான்று : *zamin* ÷ *jāmūn*

புதிய உயிரொலியன்கள்

ஆனால் இவற்றின் வழக்கு மிகவும் குறைவு. எனவே இவை பிறமொழிக்குரியன என்பதைக் கண்டு கொள்ளலாம்.

உயிரொலிகளிலும் புதிய வேற்றுநிலை வழக்குகள் தோன்று கின்றன. ஒரு காலத்தில் ஒலி மாற்றமாக இருந்தது பிறிதொரு காலத்தில் ஒலியன் மாற்றமாகி விடுகிறது. உகரத்தைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட மாற்றத்தைக் காண்கிறோம்.

சான்று : குத்து (பெயராக)
குத்து (ஏவலாக)

மொழியிடை உகரம் சிலவிடங்களில் அகரமாகக் குறிக்கப் படுகிறது. பழந்தமிழில் எகரம் மொழி முதலிலும், இடையிலும் வழங்கியது. ஆனால் பின்னர் எகரம் மொழியிடையில் வருவது நின்றது. அவ்வாறு வருவதாகக் கொண்டாலும், அந்நிலையில் அதற்கு வேற்றுநிலை வழக்குகள் இல்லை. இப்போக்கு மொழிமுதல் எகரத்திற்கும் பரவியது. மொழி முதலில் எகரத்திற்கும் அகரத் துக்குமிடையே 'கட்டு' அல்லது 'நிபந்தனையற்ற மாற்றம்' சில கிளைமொழிகளில் காணப்படுகிறது. இது எவ்வாறாயினும் சரி, எகரம் தொடர்ந்து ஒலியனாகவே உள்ளது. ஐ > எ > ε என்னும் மாற்றம் குறிக்கப்பட்டுள்ளது. உயர்ச்சியுடனோ (heightening) அல்லது உயர்ச்சியின்றியோ அகரம் முன் உயிர் ஆவதும் குறிக்கப் பட்டுள்ளது. 'ε' 'எ' என்பவற்றுக்கிடையில் சில கிளை மொழிகளில் வேற்றுநிலை வழக்குகள் உள்ளன.

மேல் உயிரால் தொடரப்படாத பொழுது இகரமும் உகர மும் முறையே எகரம் ஒகரமாக மாறுவதை முன்னரே குறிப் பிட்டோம். 'இவன்', 'முட்டை', 'முற்றம் > முத்தம்' முதலான வழக்கு மிகுதியுடைய சொற்களில் இம்மாற்றங்கள் நிகழ்வதில்லை. மாற்றம் நிகழ்ந்தால் கிடைக்கும் வடிவங்களான 'எவன், மொட்டை, மொத்தம்' முதலியன முன்னரே வேறு பொருள்களைக் குறிக்க வழங்குகின்றன. எனவே 'பல பொருள் ஒரு சொல்லாகி' 'பொருண் மயக்கம்' வந்து விடுகிறது. எனவேதான் இம்மாற்றங்கள் ஏற்பட வில்லை.

ஈரிதழ் ஒலிக்கு முன்னரும் நாவளை ஒலிக்குப் பின்னரும் வரும் பொழுது எகரம் (இகரத்திலிருந்து எகரமாக மாறிய எகரமும்) ஒகரமாகிறது.

சான்று : பெண் > பொண்ணு
மிடா > மெடா > மொடா

ஒரு சொல் குற்றியலுகரத்தில் முடியுமானுல் அதற்கு முந்திய அசையிலுள்ள உகரம் குற்றியலுகரமாகிறது. 'திரும்பு', 'துரும்பு' முதலிய சொற்களை நோக்குக. இச்சூழல்களில் சுரபத்தி இகரம் குறுகி குற்றியலிகரமாகிறது; மேலும் அது நடுவிடத்து உயிராகிறது. ஆனுல் சமீபகாலத்தின் கடன் வாங்கப்பட்ட சொற்களில் இம் மாற்றங்கள் நிகழ்வதில்லை.

சில கிளைமொழிகளில் மொழிமுதல் உயிர் உச்சரிக்கப்படும் முறையானது, அசை அமைப்பில் மாற்றத்துச்கு வழிவகுக்கக்கூடிய போக்கைச் சுட்டிக் காட்டுகின்றது. பழங்காலத்திலிருந்து முதலசை தவிர ஏனைய அசைகளிலெல்லாம் 'அசைமுதல்' இருந்தது. ஆனுல் முதலசையிலும் இத்தகைய அமைப்பு மெல்ல இன்று வளர்ந்து வருகிறது. மொழி முதல் முன் உயிர்கள் சோழர் காலத்திலேயே யகர உடம்படு மெய்யைப் பெறலாயின. மொழி முதலில் பின் உயிர்கள் வகர உடம்படு மெய்யைப் பெறுவதை 19ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த கால்டுவெல் குறித்துள்ளார். சில இடங்களில் இது 'w' என இருக்கலாம். இம்மாற்றங்கள் மொழி முதல் அகரத்தை (ஐகார ஆகாரங்களையும்) மட்டுமே பாதிக்கவில்லை. பல கிளைமொழிகளில் அகரம் அல்லது ஆகாரத்துக்கு முன்னர்க் குரல்வளை ஒலி வருகிறது. முதலசையில் வரும் உடம்படு மெய்களின் வருகையைக் கணித்து விடலாம்; எனவே அவை இன்றைய நிலையில் ஒலியனுகமாட்டா.

மூக்கொலி உயிர்கள்

தமிழ் உயிரொலிகளின் இரண்டாவது பெரிய வளர்ச்சி மூக்கொலி உயிர்கள் தோன்றியதாகும். மூக்கொலி உயிர்கள் முன்னரே இருந்திருக்க வேண்டும்.[6] தொல்காப்பியர் காலத்திலேயே மொழியிறுதி மகர, னகர மெய்கள் ஒன்றுகியமை அவற்றுக்கு முந்திய உயிரொலிகள் மூக்கொலிச் சாயல் பெற்றதன் விளைவாக நிகழ்ந்திருக்கலாம். மொழி இறுதி மூக்கொலி (மெல்லின

6 T. P. Meenakshisundaran : *Indian Linguistcs*, Poona

மெய்) மறைவதை உயிர்மூக்கொலிச் சாயல் பெறுவது விளக்கக் கூடும்.

மரம் ல மர[1]*
மரன் ல மர[1]
எனவே 'மரம் ∝ மரன்' என்றாகிறது.

பிற மொழியாளர்களின் குறிப்புக்கள்

தமிழ்ச் சொற்களின் உச்சரிப்புக்களைப் பிற மொழியாளர்கள் கேட்ட முறையானது, உயிரொலிகள் மூக்கொலிச் சாயல் பெற்றது உட்படச் சில மாற்றங்களை விளக்கமாக உணர்த்தும். 'தரங்கம்பாடி' என்ற சொல்லில் உள்ள நாவளை டகர மெய்யை உச்சரிக்க முடியாமல், அதை ரகர மெய்யாகப் போர்ச்சுக்கீசியர் உச்சரித்தனர். உச்சரிப்பு முறையில் டகர மெய்க்குப் பெரும் பான்மையும் ஒத்த போர்ச்சுக்கீசிய ஒலி ரகர மெய்யேயாகும். 'தூத்து-க்-குடி > Tuticorin' என்பதையும் நோக்குக. 'பா' என்ற நெடிலசையை அடுத்து வரும் இகர உயிர், பிற மொழியாளர் களால் சரியாகக் கேட்கப்படாதிருக்கலாம். தர - என்பது முன்னரே விளக்கப்பட்டது போல 'த்ர்' என்னும் மெய்ம் மயக்கமாகிறது. மகர மெய்க்குப் பின்னர் பகரம் b எனும் ஒலிப்புடை வெடிப்பொலி யாகிறது. மூக்கொலிகளுக்குப் பின்னர் வரும் ஒலிப்பிலா வெடிப் பொலிகள் ஒலிப்புடை வெடிப்பொலிகளை மாற்றொலியாகப் பெற்றுள்ளன. ஆங்கிலத்திலுள்ள முதல் ஒலி அழுத்தமானது (accent) முதலசையை நெடிலசையாக்குகிறது. 'அம்' என்பது மூக்கொலிச் சாயல் பெற்ற அகரமாகிறது. மூக்கொலிச் சாயல் பெற்ற உயிரொலிகளைத் தனி ஒலியனாகப் பெறாத மொழியினர், அவ்வொலிகள் பிற மொழிகளில் வரும் பொழுது அவற்றை உணர்ந்து கொள்ள இடர்ப்படுகின்றனர். எனவே 'Tranquebar' என்ற வடிவம் கிடைக்கிறது. *ṅk* - என்ற மெய்ம்மயக்கம் *ṅg*- என்றாகாதது அந்நிய மொழியின் ஒலியன் அமைப்பின் விளைவாகும்.

நாட்டுப்புற இலக்கியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகங்களில் சமுதாயத்தின் கீழ்மட்ட மக்களின் பேச்சுமொழி இடம் பெற்றது உயிரொலி மூக்கொலிச்சாயல் பெறுவதைக் குறிப்பதற்குக் கடை

* இப்பகுதியில் '1' என்னும் குறியீடு மூக்கொலிச் சாயல் பெறுவதைக் குறிக்கும்.

யன்ன மூக்கொலிக்குரிய எழுத்தைத் தலைகீழாக அவ்உயிருக்குப் பின்னர் எழுதினர். இருபதாம் நூற்றாண்டு நாடகத் தமிழின் தந்தையான பம்மல் சம்பந்த முதலியார் உயிர்கள் மூக்கொலிச் சாயல் பெறுவதைக் குறிக்க ஒரு சிறு வட்டத்தைப் பயன்படுத்தினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூக்கின் உயிரொலிகள் தனி ஒலியன் ஆனதை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

சொல்		பொருள்
அவ[1]	=	அவன்
அவ	=	அவள்
வந்தே[1]	=	வந்தேன்
வந்தே	=	வந்தாய்
ஆ[1]	=	ஆம்
ஆ	=	வியப்பிடைச் சொல்
ஊ (காட்டு)	=	குழந்தையைப் பயமுறுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சொல் அல்லது பேய்க் கதை
ஊ’	=	யைக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது, கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்ட பயன்படுத்தப் படும் சொல்.
ஓ[1]	=	ஆம்
ஓ	=	வியப்பிடைச் சொல்
கொம்பொ[1]	=	கும்பம்
கொம்போ	ல	கொம்பொ = அது கொம்பா?
ஈ	=	ஈ
ஈ[1]	=	ஈயெனச் சிரித்தல்
வந்து வேலையைச் செய்	=	வந்து உன் வேலையைச் செய்
வந்து வேலையைச் செய்	=	வந்து வேலையைச் செய்

ஒலிப்புடை வெடிப்பொலிகளும் ஒலிப்பிலா வெடிப்பொலிகளும்

மூன்றாவதாகக் குறிப்பிட வேண்டிய முக்கியமான வளர்ச்சி ஒலிப்புடை வெடிப்பொலிகள் தனி ஒலியன்களாக வளர்ச்சியுற்ற

தாகும். பிறமொழிச் சொற்கள் வழக்கு மிகுந்தது இந்நிலைக் குரிய அடிப்படையான காரணமாகும்.

kuṛu pāvam tēkku seṭṭi
guru bāvam dēkkusā jeṭṭi

ஆனால் இச்சொற்களெல்லாம் கிராமப் புறங்களில் இன்னும் ஆட்சி பெறவில்லை என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். மதுரையில் 's' 'j' என்பன ஒன்றுகின்றன. எனவே ஒலிப்புடை வெடிப்பொலிகளைப் பற்றி மேலே கூறப்பட்ட செய்தி நகர்ப்புறங் களில் வாழ்வோர், கற்றோர் ஆகியோரைப் பொறுத்த வரையில் மட்டுமே உண்மையாகும். அங்கும் கூட இப்போக்கைத் தடுத் தாட் கொள்ளும் இலக்கிய மொழியின் தாக்கத்தையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

பழந் தமிழில் தவிர்க்கப்பட்ட மெய்ம்மயக்கங்கள் விரைந் தொலித்தலில் அல்லது கடன் வாங்கப்பட்ட சொற்களில் இடம் பெறுகின்றன.

கட்டில் < கட்லு
திருகு < த்ர்' கு
ஓடட்டும் < ஓட்'டும் (*ōḍṭum*)

சுப்பு (Subbu) [‘சுப்பிரமணியன்’ என்பதன் சுருங்கிய வடிவம்]

டப்பா < (*ḍabba*)
சத்தம் < (*saddam*)
மட்டி < (*maḍḍi*)

மூன்று மெய்கள் மயங்கி வருதலும் உண்டு. முதலிரண்டு மெய்களுக்கும் மூன்றாவது மெய்க்கும் இடையில் (loose transition) நெகிழ்வு மாற்றமிருக்கலாம். விரைந்தொலித்தலால் மெய்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து இரண்டாகி விடுவதுண்டு.

maṇṇ'lɛ' என்பதை *pull'lɛ* என்பதுடன் பின்வருவனவற்றில் ஒப்பிட்டாராய்க.

palɛ
pallɛ
pall'lɛ
paṇɛ
paṇṇɛ

paṇṇināy > paṇṇine > paṇṇ'nɛ > paṇṇ'ṇɛ

மெய்யொலிகள் மொழி முதலில் வருவது தொடர்பாக இருந்த கட்டுப்பாடுகள் மறைகின்றன. ர், ல், ḍ (ஒலிப்புடை டகர மெய்) முதலியன மொழி முதலில் வருகின்றன. இது 'ரண்டு > இரண்டு' என்பது போன்ற போலி ஆக்கத்திற்கு வழி வகுக்கிறது. இயற்சொற்களிலும் மொழி முதலில் வரும் ஒலிப்பிலா ஒலிகள் சிலவிடங்களில் ஒலிப்புடை ஒலிகளாகின்றன. சில கிளை மொழிகளில் 's > j' மாற்றமும் நிகழ்கிறது.

சான்று:	Kutirai	(குதிரை)
	Gudirai	(,,)

மெய்யொலிகளின் இருவகைப் பாகுபாடு

இருபதாம் நூற்றுண்டின் தமிழ் உச்சரிப்பியலில் ஒரு புதிய போக்கு நிலைபெற்றுள்ளது. இடையண்ண ஒலி, கடையண்ண ஒலி, நுனியண்ண ஒலி நுனிநாப் பல்லொலி என்ற பாகுபாட்டிற்குப் பதில், மெய்கள் முன், பின் என்று இருவகையாகப் பாகுபடுத்தப் படுகின்றன. இது செக் நாட்டு அறிஞர் சுவலபெல் (Kamil Zevlebil) தந்துள்ள சில மெய்கள் பற்றிய விளக்கங்களிலிருந்து வளர்ச்சி யுற்ற கருத்து ஆகும்.

க்	ச்	
ட்	த்	
ள்	ல்	
ழ்	ய்	(?)
ஷ்	ஸ்	
ங்	ஞ்	
ண்	ன்	
ர்ர்[ற்]	ர்	(?)

ஆடொலியும் சாதாரண ரகர மெய்யும் வேற்றுநிலை வழக்கில் வரவில்லையாயின், லகர மெய் பின்னொலியாகவும் அதற்கு இணையான முன்னொலியாக ரகர மெய்யும் இருக்கலாம். 'ய்' என்பது 'இய்' என்றோ அல்லது 'யி' என்றோ 'ல்' என்பதன் மாற்றாக வருவது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. அப்படியாயின் அந்நிலையில் அதை மெய்யொலிகளின் கீழ்ச் சேர்த்துக் கொள்ள வேண்டியதில்லை.

பல கிளைமொழிகளுக்கும் பொதுவான அமைப்பு

பல கிளைமொழிகளுக்கும் பொதுவான அமைப்பைப் பற்றி மட்டுமே நாம் பேசமுடியும். இங்குத் தரப்படும் தமிழின் ஒலியன்

அமைப்பானது தமிழகத்தின் எல்லாக் கிளைமொழிகளின் இயல்பு களையும் விளக்குவது எனக் கருதக்கூடாது. என்னுடன் பணியாற்றும் திரு. முத்துச்சண்முகத்தின் ஆராய்ச்சி முடிவுகளை, அவரது இசைவுடன் பின்வரும் பகுதியில் பயன்படுத்தியுள்ளேன்.[7] அவரது கிளைமொழி தவிரப் பிற கிளைமொழிகளிலிருந்தும் வேற்றுநிலை வழக்குகள் தரப் பட்டுள்ளன.

இக்காலத் தமிழின் ஒலியன் பட்டியல் இங்குத் தரப்படுகிறது. 'தமிழகத்திலும் இலங்கையிலும்' வழங்கும் பல்வேறு கிளை மொழி களின் பொதுவானதொரு அமைப்பை இவை குறிக்கின்றன.

உயிர்கள்

வாயின உயிர்கள் (Oral Vowels)

குறில்	இ	எ	ɛ :	அ	ஒ	உ	ɨ	ə
நெடில்	ஈ	ஏ	ɛ :	ஆ	ஓ	ஊ	ə :	

மூக்கின உயிர்கள் (Nasal Vowels)

குறில்	$ɛ^1$		$ஒ^1$	$ɛ^1$
நெடில்	$ɛ^1$:	$ஆ^1$	$ஓ^1$	$ɛ^1$:

மெய்கள்

	ப்(p)		த்(t)	ற்(ṟ)	ட்(ṭ)	ச்(c)	க்(k)	
	b		d		ḍ	i	g	
		f	s		ʂ			
ɛ		வ்(v)	z					h
ம்			ன்		ண்	ஞ்	ங்	
			ல்		ள்			
			ர்		ழ்		ய்	

விட்டிசை (juncture)

தொடர் இறுதி விட்டிசை	+	|	ʌ	(சமநிலை, எழுச்சி, வீழ்ச்சி)
Terminal juncture	|	V	|	

தொடரிசைச் சுரம் *1 2 3 4* (கீழ், நடு, மேல், உயர்)
(intonation pitch)

வேற்றுநிலை வழக்கிற்குச் சான்றுகள்

உயிரொலியன்கள்

/ iḍi /	'இடு'	*/ i:ḍi·*	'ஈடு' */*
/ aḍi /	'எடு'	*/ e:ḍi /*	'ஏடு'

7 M. Shanmugam Pillai: *Grammar of Colloquial Tamil* (un-published)

ı aḍi l	'அடி'	*l a:ḍi l*	'ஆடி'
l oḍi l	'ஓடி'	*l o:ḍi l*	'ஓடி'
l uḍi l	'உடு'	*l u:ḍi l*	'வீடு'
l paḷɛ l	'பல'	*l ɛ:si l*	'ஏசு'
l bale l	'பலே'	*l ersi l*	'ஏசுநாதர்'
l tiripi l	'திருப்பு'		
l turipi l	'துருப்பு'		
l nigō l	'நகம்'		
l oḍi l	'ஒடி'		
l o:ḍi l	'ஓடு'		
l vəmbi l	'வெம்பு'	*l və:mbi l*	'வேம்பு'
l vambi l	'வம்பு'	*l və: l l*	'வேல்'
l eppɛ l	'எப்ப'	*l və:ḷvi l*	'வாழ்வு'
l əppaḍi l	'எப்படி'	*l və:ḷvi l*	'வேள்வி'
l adɛ l	'அது'	*l vaṇdɛ l*	'வந்தே'
l na:' l	'நான்'		
l kaḍo' l	'கடன்'	*l vaṇdō: l*	'வந்தோம்'
l varɸ l	'வரும்'		

மெய்யொலியன்கள்

l p b B f v l

l payiri l	'பயிர்'
l bayilvā: l	'பயில்வான்'
l film l	'சினிமா'
l vayali l	'வயல்'
l ka:pi l	'காப்பு'
l ka:fi l	'காப்பி'
l ka:yali l	'காயல்'
l balbi l	'பல்பு'
l palpoḍi l	'பல்பொடி'
l iyalBi l	'இயல்பு'

ı t d l

l te:kō l	'தேக்கம்'
l de:sō l	'தேசம்'
l ti: l	'டீ'

l ṭ ḍ t d r l

l paṭō l	'பட்டம்'
l paḍō l	'படம்'
l padi l	'பது (பத்து)'
l padō l	'பதம்'
l paṟi l	'பற்று'

l c j s z ṣ h l

l cangi l	'சங்கு'
l jambar l	'ரவிக்கை'
l sa:mba:r l	'சாம்பார்'
l ṣaṇmugō l	'சண்முகம்'
l vipaca:ri l	'விபசாரி'
l aisəri l	'ஆசாரி'
l ḍaxɛ[1] *l*	'டசன்'
l hinḍi l	'ஹிந்தி'

l ṟ s z l

l pari l	'பற்று'
l pasi l	'பசு'
l ḍazɛ[1] *l*	'டசன்'

l k g l

l kaḍō l	'கடன்'
l gaḍō l	'கடம்'

l m ṉ n ṇ ñ ṅ l

l magarō l	அல்லது	*l ma:na: l*	'மகரம்'
l ṉagarō l	அல்லது	*l ṉa:na: l*	'நகரம்'
l nagarō l	அல்லது	*l na:na l*	'னகரம்'
l ṇagarō l	அல்லது	*l na:na l*	'ணகரம்'
l ñagarō l	அல்லது	*l ña:na l*	'ஞகரம்'
l ṅagarō l	அல்லது	*l ṅa:na l*	'ஙகரம்'

ந், ண், ங் ஆகியவற்றுக்கான வேற்றுநிலை வழக்குகள் வேறெதுவும் கிடைக்கவில்லை. இவ்வொலிகளின் வேற்றுநிலை வழக்கை நிறுவ இங்குத் தரப்பட்ட சான்றுகள் போதுமானவை அன்று எனப் பலர் கருதலாம்.

l vaṉḏiṭrīṉāō: l	'வந்து கொண்டிருந்தோம்'
l paṇō l	'பணம்'
l aṟiñɛ¹ l	'அறிஞன்'
l nanō l	'மனம்'
l nagō l	'நகம்'
l ña:yiṟi l	'ஞாயிறு'
l ṅopɛ' l	'உங்க் அப்பா'

-/l ḷ ḻ r/

l kali l	'கலி'
l kaḷi l	'களி'
l kaḻi l	'கழி'
l kari l	'கரி'

l v y l

l va: l	'வா'
l yā: l	'யா (து)'

l c j j l

l vipaca:ri l	'விபச்சாரி'
l acō l	'அச்சம்'
l baj ɛ nɛ l	'பஜனை'
l bajji l	'பஜ்ஜி'

l s s s l

l basī l	'பசு'
l basī l	'பஸ்'

l mm nn ṇṇ ṅṅ l

l amma l	'அம்மா'	*l cumai l*	'சுமை'
l kanni l	'கன்னி'	*l kani l*	'கனி'
l panni l	'பன்னி'	*l kari l*	'கரி'
l aṅṅaṇō l	'அங்கணம்'		

l ll ḷḷ r l

l palli l	'பல்லி'	*l palō l*	'பலம்'
l kaḷḷi l	'கள்ளி'	*l kaḷō l*	'களம்'
l kaṟi l	'கறி'	*l kari l*	'கரி'

l vv yy l

l kavvī l	'கவ்வு'	*l avɛ' l*	'அவன்'
l ayyar l	'அய்யர்'	*l payaṟi l*	'பயறு'

/ ṇṇṇ lll ḷḷi rrr /

/paṇṇṇɛ/	'பண்ணிணுய்'	/paṇõ/	'பணம்'
/palllɛ/	'பல்லில்'	/pallɛ/	'பல்லே'
/palɛ/	'பல'	eḷḷɛ/	'எள்ளே'
/eḷḷḷɛ/	'எள்ளில்'	/arɛ/	'அறை'
/eḷɛ/	'இழை'		
/varrrɛ/	'வருகிருய்'		
/arɛ/	'அரை'		

இடையின மெய்கள் மூன்று சேர்ந்து வருவதை, நெடில் இடையின மெய்யைத் தொடர்ந்து வரும் குறில் அவ் இடையின மெய்யுடன் நெகிழ்வு மாற்றத்தில் வருகிறது எனக் கொள்ளலாம். மும்மெய்களின் வேற்றுநிலே வழக்குகளேச் சிலர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

நிறுத்திசை

1 *ava + ma:mivi:ṭiki po:ra:* 'அவள், மாமியார் வீட்டுக்குப் போகிருள்'.

2 *avama:mi + vi:ṭiki pora:* 'அவளுடைய மாமியார் வீட்டுக்குப் போகிருள்'.

சுரவிசை

1 $va{:}\dot{n}g\varepsilon^{1}$ வீட்டுக்கு வருபவரை வரவேற்றல்.
அல்லது (பெரியோர்களே மரபாக வரவேற்க இது
$v^{2}a{:}\dot{n}gE^{2}$ பயன்படுகிறது)

2 $v^{2}a{:}\dot{n}gE^{2}$ நண்பர்களே அல்லது இளேயோரை வரவேற்றல், சிலவிடங்களில் கடிதல் பொருளிலும் இது ஆளப் படும்.

3 $v^{4}a{:}\dot{n}g\varepsilon^{3}$ பொறுமையின்றி ஒருவரை வரும்படி கட்டளே யிடல்.

4 $v^{2}ari v\varepsilon^{1}$ நீ வருவாய்

5 $v^{1}nri v\varepsilon^{4}$ நீ வருவாயா?

6 $v^{1}ari v\varepsilon^{2}$ நீ வருவதை நான் விரும்பவில்லே.
நீ வராமல் நான் பார்த்துக்கொள்வேன்

7 $v^{2}ari v\varepsilon^{3}$ நீ வருவதை நான் விரும்பவில்லே.
நீ வராமல் நான் பார்த்துக் கொள்வேன்.
(கோபமாகக் கூறல்)

என்னுடன் பணிபுரியும் திரு. P. C. கணேசசுந்தரத்தின் தமிழ் மெய்யொலிகள் பற்றிய 'ஒலிச்சிறப்புக் கூறு' ஆய்வை, அவர் இசைவுடன் பின்னிணைப்பில் தந்துள்ளேன்.

3 உருபனியல்

i. வினை

வினையெச்சம், பெயரெச்சம், வினைமுற்றுக்கள் முதலியவற்றின் இறந்தகால வினைவிகற்பங்களில் — பின்வரும் சில மாற்றங்கள் நீங்கலாக — மாற்றமெதுவும் இல்லை. இவற்றிலெல்லாம் நெடிலுயிருடன் கூடிய இறுதி உருபன் ஒரே மாதிரியாக ஏற்கப்படுகிறது.

வினைவிகற்பங்கள்

அ. இறந்தகாலம்

1 [செய்தான்] ∝ செய்தா[1] ∞ சேசா' ~ சேஞ்சா[1] (பிராமணர் கிளைமொழி)

2 சொண்டா[1] [ள் + த் > ண்ட்] "கொண்டான்"
(இது மிகவும் அரிதாக வழங்குகிறது)

3 நின்னு[1] [ன்ற் > ன்ன்] ∝ நிண்ணு[1] [ன்ற் > ண்ண்] "நின்றான்"

4 அறிஞ்சா[1] [ந்த் > ஞ்ச் (இகரத்திற்குப் பின்னர்)] "அறிந்தான்"
பாஞ்சா[1] [ய்ந்த் > ஞ்ச்] "பாய்ந்தான்"
சேர்ந்தா[1] ~ சேந்த' [ர்ந்த் > ந்த்] "சேர்ந்தான்"

5 ஒடுங்க்னு[1] ~ ஒடுங்கினு' [இ ∝ இன் ~ ன்] "ஒடுங்கினான்"
'ஒடுங்கி' என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகும்.

6 நட்டா[1] இட்டா[1] ~ இத்தா[1] [9 அல்லது 11 ஆவது வினைவிகற்பத்திலும் வரலாம்]

7 உண்டா[1] [த் > ட்] (அருகிய வழக்கு)

8 தின்னு[1] [த் > ன்] "தின்னான்"

9 கேட்டா[1] [ள் + ட் > ட்ட்] "கேட்டான்"

10 விற்று[1] [ல்த் > ற்ற் > த்த்] "விற்றான்"

11 பார்த்தா[1] ~ பாத்தா[1] [ர்த்த் > த்த்] "பார்த்தான்"
முடிச்சா[1] [இகரத்திற்குப் பின்னர், த்த் > ச்ச்] "முடிச்சான்"

நெடிலுயிருக்குப் பின்னால் மொழியிறுதியில் ழ், ள், ய் ஆகியனவும், ரகர மெய்யும் பலவிடங்களில் ணகர, னகர மெய்களும்

இழக்கப் படுவதைப் பொது விதியாகக் கொள்ளலாம். இறந்தகாலம் காட்டும் இடைநிலைகளாகப் பின்வருவனவற்றை வகைப்படுத்தலாம்.

1 த் ல ச்; த்த் ல ச்ச்
2 ந்த் ல ஞ்ச்
3 ண்ட்
4 ன்ன்
5 இ ல இன் ல ன்

முதலாவது வினைவிகற்ப வாய்பாட்டைச் சேர்ந்த வினைகளின் உயிர்கள் நீட்சியுற, அவை நான்காவது வினை விகற்ப வாய்பாட்டுக் குரியனவாகின்றன.

சான்று : சேஞ்சா[1] ($c\bar{e}\tilde{n}j\bar{a}{:}^{1}$) "செய்தான்"
நேஞ்சா[1] ($n\bar{e}\tilde{n}j\bar{a}{:}^{1}$) "நெய்தான்"
பேஞ்சா[1] ($p\bar{e}\tilde{n}j\bar{a}^{1}$) "பெய்தான்"

கண்டா[1] (கண்டான்), மொண்டா[1] (மொண்டான்) என்பன போன்ற மிகச் சில வடிவங்களே கிளைமொழிகளில் இரண்டாவது வினைவிகற்ப வாய்பாட்டினவாக வருகின்றன. இதைப் போலவே ஆறுவது வினைவிகற்ப வாய்பாட்டிற்கு உரியனவும் மிகக் குறை வாகும். இவற்றை ஒன்பதாவது அல்லது பதினோராவது வினை விகற்ப வாய்பாடுகளுடன் சேர்த்துக் கொள்ளலாம். ஏழாவது வினைவிகற்ப வாய்பாடும் மிகவும் அருகியே வருகிறது. ஒன்பதாவது வினைவிகற்ப வாய்பாட்டின் இறுதியான துகரமும், பதினோராவது வினைவிகற்ப வாய்பாட்டின் இறுதியான றுகரமும் மறைந்து விட்டன. விதிவிலக்காய் வருபவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைவாயி ருப்பதால் அவற்றை இங்கு விளக்கலாம். துணைவினை என்ற முறையில் 'கொண்டு' என்பது, கீழே விளக்கப்படும் மாற்றங் கட்கு உள்ளாகின்றது.

1 கொண்டு > கொணு > க்' ணு ல க்'னு
சான்று : "எடுத்துக்'ணு"

2 கொண்டு > கொடு > க்' டு
சான்று : "எடுத்துக்'டு"

இங்ஙனமாயின், உண்மையில் இரு வினைவிகற்ப வாய்பாடு களே உண்டு.

1 "மெய் உயிர் மெய் உயிர்" என்னும் வாய்பாடுடைய வேரின் இறுதி உயிரான உகரம் மறைகிறது. ளகர மெய்யில் முடியும்

வேர் இறந்த காலத்தில் அவ்வேரை இழக்கிறது; அது பிறவிடங்களில் நெடில் நுனிநா பல்லொலியாக உள்ளது. இந்நிலையில் நுனிநா பல் வெடிப்பொலி நெடில் நாவளை வெடிப்பொலியாகிறது. [த் ~ ட்ட்] இகரத்தில் முடியும் வேர்களை அடுத்து இரட்டித்த நுனிநா பல்லொலி இரட்டித்த இடையண்ணவொலியாகிறது. 'திரிச்சான்' என்பதைச் சான்ருகக் காட்டலாம். இரட்டித்த வெடிப்பொலியை ஈரொலிகள் எனக் கொண்டால், முதலிலுள்ள வெடிப்பொலி இன மூக்கொலியாவதுண்டு. இவ்வொலிகளில் மூக்கொலியாகும் முதலாவது ஒலியைச் சகர உருபொலியன் எனக் கொள்ளலாம்; அல்லது இரண்டாவது அசைக்கு ஒத்த வெடிப்பொலி எனக் கொள்ளலாம். இவற்றை முதல் பிரிவாகக் கொள்ளலாம். மூக்கொலி அல்லது பூஜ்யத்தை (∅) தன்வினை விகுதியாகக் கொள்ளலாம். விதிவிலக்குகளையும் விளக்கலாம். இவற்றையும் முதற்பிரிவோடு சேர்த்துக் கொள்ளலாம்.

2 இரண்டாவது பிரிவு "ன்ன் ∞ இன் ∞ ன் ∞ இ" என்னும் இறந்த கால மாற்றுருபுகளைப் பெறுகின்றன. 1) வேரின் இறுதியில் ன் அல்லது னு வந்தால் [தின் –, தின்னு] ஈற்றில் உள்ள ன் அல்லது னு என்பது மறைந்ததாகக் கொள்ளப்படும். 2) குற்றியலுகரத்தில் முடியும் வேர்களைப் பொறுத்த வரையில், வினையெச்சத்தின் இறுதியில் இறந்தகால இடைநிலை இருக்குமாயின், இகரம் வருகிறது. னகர மெய்யில் வேர் முடியுமாயின் 'ன்ன்' என்பதும் குற்றியலுகரத்தில் வேர் முடியுமாயின் 'இன் ∞ ன்' என்பதும் வருகின்றன.

பழைய 'நுனிநா பல்லொலி'ப் பிரிவும் 'இன்' பிரிவும் இவ்வினைவிகற்ப வாய்பாட்டின் அடிப்படைகளாக இருந்த போதிலும் பழைய வாய்பாடு எவ்வாறு மாறியுள்ளது என்பதை அறியும் போது வியப்புண்டாகிறது.

ஆ. நிகழ்காலம்

நிகழ்காலத்தில் வேர்களின் உகர முடிவு பலவிடங்களில் மறைகிறது. அகர உருபைச் சேர்த்து முதல் ஏழு வினைவிகற்ப வாய்பாடுகளிலும் 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தைப் பெறலாம். இவற்றில் 'ற்' என்பது நிகழ்கால இடைநிலையாகும். ஏனையவற்றில் 'க்ற்' என்பது நிகழ்கால இடைநிலையாகும். இங்கு வேரின் இறுதியில் வரும் லகர, ளகர, ரகர மெய்கள் இழக்கப்படுகின்றன. வரிவடிவத்தில் இரட்டைக் ககர மெய்களாகக் குறிக்கப்

படும் ஒலிப்பிலாக் ககர வெடிப்பொலியே இங்குக் குறிப்பிடப்படும் ககர மெய்யாகும்.

இ. எதிர்காலம்

முதலாறு வினைவிகற்ப வாய்பாடுகளிலும் வகர மெய் எதிர் காலம் காட்டுகிறது. எல்லா உயிர்களும் இப்பொழுது உகரத்தில் முடிகின்றன. ஆனால் ஆரம்பத்தில் யகர மெய்யில் முடிந்தவை இதற்கு விதிவிலக்கு. அவை இப்பொழுது இகரத்தைப் பெறுகின்றன. 'செய் > செயி'.

ஆறுவது வினைவிகற்ப வாய்பாடு அருகிய ஆட்சி உடையது. 9, 10, 11, 12 ஆவது வினைவிகற்ப வாய்பாடுகள் பகர மெய்யைப் பெறுகின்றன. 9, 12 ஆவது வினைவிகற்ப வாய்பாடுகளைப் பொறுத்த வரையில் இதனோடு இன்னொரு பகர மெய் சேர்கிறது, எஞ்சிய வற்றில் பூஜ்யம் (∅) சேர்கிறது. உயிரொலிகள் ய், ர், வ், ல், ள், ழ் (முதலாறு வினைவிகற்ப வாய்பாட்டு வேர்கள்) ஆகியவற்றுக்குப் பின்னர் பகர மெய் வகர மெய்யாகிறது.

எட்டாவது வினைவிகற்ப வாய்பாட்டில் இசை நிறைக்க வந்த உகரம் அல்லது சொல்லாக்க அசைக் குகரத்திற்குப் பின்னர், ஏனையவற்றில் வருவது போன்று, வகர மெய் வருகிறது; அல்லது அதனது மூல னகர மெய்யானது மகர மெய்யாக, பகர மெய்யை நோக்கி, ஓரினமாக்கப்படுகிறது. பகர மெய்யும் மகர மெய்யாதல் உண்டு.

சான்று : தின்னுவா[1] 'தின்னுவான்''
தின்குவா[1] (*tinguvā*) ∝ தின்பா[1] (*tinbā:*)
ā: ∝ திம்மா[1] (*timmā:*)

அஃறிணையில் எதிர்காலம்

எதிர்காலம் காட்ட அஃறிணையில் ஒருமையிலும் பன்மை யிலும் 'செய்யும்' என்னும் வாய்பாடு பயன்படுத்தப்படுகிறது.

1 வேர் + உ[1] (முதல் எட்டு வினைவிற்பங்களிலும்)
2 ஈற்று மெய் இழக்கப்பட்ட வேர் + கு[1] (ஏனைய வினை விகற்ப வாய்பாடுகளில்)

நிகழ்காலத்தைப் பொறுத்த வரையிலும் அஃறிணையில் ஒருமைக்கும் பன்மைக்குமிடையே பலவிடங்களில் வேறுபாடு ஏதும் செய்யப்படுவதில்லை. துகரம் நிகழ்கால விகுதியாக இருந்தது. 'யி'

அல்லது குற்றியலுகரத்தை உடைய முதல் ஏழு வினைவிகற்ப வாய்பாட்டு வேர்களும் இறுதி மெய்யை இழந்து பின்னர் நிகழ் காலத்தைக் குறிக்கலாயின எனத் தோன்றுகிறது.

சான்று : செய்யிது (ceyyidu)
விக்குது (vikkudu)

இவற்றிலெல்லாம் உகரம் அல்லது இகரமும் இழக்கப்படலாம். காலங்காட்டும் விகுதிகள் இல்லாமையால், அவை எதிர்காலம் அல்லது நிகழ்காலத்தைக் காட்டின. நிகழ்கால இடைநிலைகளான [உயர்திணை நிகழ்காலம் முன்னரே ஆராயப்பட்டது] ற் அல்லது க்ற் என்பன வினைமுற்றுகளில் துகரத்துடன் சில கிளைமொழிகளில் வருகின்றன. எச்ச வடிவத்தில் இவ்வாறே எல்லாக் கிளைமொழி களிலும் வருகின்றன.

சான்று : செய்யிறது (*Ceyyiṛadu*)

	ஒருமை	பன்மை
தன்மை	ஏ[1] செய்தே[1]	ஓ'செய்தோ'
முன்னிலை	ஏ[1]செய்தே	ஈங்க ∝ ஈங்கொ – செய்திங்க
		திங்க ഗ ங்கொ ഗ இய ഗ ஈக (*iha*) செய்திய ഗ செய்திக

படர்க்கை

ஆண்பால்		—ஆ[1] செய்தா
பெண்பால்		—ஆ செய்தா
பலர்பால்		ஆ + அ ∼ ஆக (*āha*) ഗ ஆங்க (*āṅga*) ഗ ஆங்கொ செய்தா ഗ செய்தாக ഗ செய்தாங்க ∫ செய்தாங்கோ
அஃறிணை	– து செய்தது	- து செய்தது

எச்சம்

வினையெச்சங்களும் பெயரெச்சங்களும் மிகவும் பழமை யானவை. ஆனல் வினைவிகற்ப வாய்ப்பாடுகளில் காட்டப்பட்டுள்ள மாற்றங்களைக் கருதுதல் வேண்டும்.

உயர்வு அல்லது மரியாதை குறித்த விகுதி (Honorific suffix) உயர் திணைப்படர்க்கை

'உயர்வு—தாழ்வு' என்னும் அடிப்படையில், தமிழ்ச் சமுதாயத்தில் படிநிலை அமைப்பு ஏற்பட்டதன் விளைவாகத் தமிழில்

உயர்வைக் குறிக்கும் விகுதிகள் தோன்றின. தொல்காப்பியரே 'உயர்சொற்கிளவி' அல்லது மரியாதை ஒருமை பற்றிப் பேசுகிறார்.[8] முக்கியத்துவம் உடையோர் ஒரு செயல் செய்கின்றபோது அவர்களை ஏனையோரிலிருந்து பிரித்துக் குறிப்பிடப்படும் பொழுது உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை உருபான 'ஓடு' என்பதனைப் பயன்படுத்துவதன் மூலம் வேறு பிரித்துக் காட்டப் பெறுவர். ஏனையோரைக் குறிக்க வெறும் பெயர்ச்சொல் மட்டுமே பயன்படுத்தப் பெறும்.

சான்று: "அரசரொடு அமைச்சர் வந்தார்"

உயர்வுகாட்ட ஆண்பால் அல்லது பெண்பாற்சொல்லுடன் 'ஆர்' விகுதி சேர்க்கப்படுகிறது.

சான்று: அகத்தியனார் மகளார்

'நரியார்' என்பதைப் போல, 'ஆர்' விகுதியை ஏளனப் பொருளில் கையாளுகையில் முரண்சுவை தோன்றுகிறது. படர்க்கையில் உயர்வு ஒருமையைக்காட்ட 'ஆர்' விகுதி பயன்படுத்தப் படுகிறது. தன்மையிலும் முன்னிலையிலும் பன்மையே உயர்வு ஒருமைக்கும் பயன்படுத்தப்படுகிறது. சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் பெருகப் பெருக, வேறுபாட்டை மிகுதிப் படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. 'ஆர்' என்பது முக்கியமானவர்களைக் குறிக்கும் விகுதியாக வழங்க, அதிலிருந்து வேறுபட்டு 'ஆர்கள்' (ஆர் + கள்) என்பது மிகவும் முக்கியமானவர்களைக் குறிக்கும் விகுதியாக வழங்கலாயிற்று. பலர்பால் விகுதியான 'அர்' அல்லது 'ஆர்' என்பது உயர்வு ஒருமைக்கு வழங்கியது. இத்துடன் 'அவர்கள்' என்பதும் பெயர்கட்குப் பின்னர் இடம் பெற்றது.

சான்று: "கந்தப்ப முதலியார் அவர்கள்"

படர்க்கை முன்னிலைப் பன்மையாக வழங்குதல்

முன்னிலையில் பன்மை வடிவங்கள் உயர்வு ஒருமையைக் குறிக்க ஆளப்படுகின்றன. பின்னர் 'நீர்', 'நீங்கள்' ஆகியவற்றுக்

---

8 தொல்காப்பியம், 510

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய உயர்சொற் கிளவி;
இலக்கண மருங்கின் சொல்லா றல்ல."

கிடையே ஒரு வேறுபாடு செய்யப்பட்டது. 'நீங்கள்' என்ற சொல் உயர்ந்தோரையும், 'நீர்', என்பது ஏறக்குறைய சமநிலையில் உள்ளோரையும், 'நீ' என்பது தாழ்ந்தோரையும் குறிக்க வழங்குகின்றன. திருநெல்வேலிக் கிளைமொழியில் 'நீம்' என்ற வடிவம் காணப்படுகிறது. எனவே 'நீ', 'நீர்', 'நீம்', 'நீங்கள்' என்பவற்றுக்கிடையேயான வேறுபாடு நான்கு நிலைகளை உடையதாகிறது. வேற்றுமை உருபேற்கும் வடிவங்களில் 'உன்', 'உம்', 'உங்கள்' ஆகிய மூன்றே உள்ளது. இங்கு வேறுபாடு மூன்று நிலைகளை உடையது.

ஏவல்

'உயர்சொற் கிளவி' ஏவல் வினை வடிவத்தையும் பாதிக்கிறது. வெறும் வேரை மட்டும் ஏவலுக்குப் பயன்படுத்துவது, தாழ்ந்தோருக்கே வழங்குகிறது. சமமானவர்களிடம் பயன்படுத்துகையில் 'உம்' விகுதி சேர்க்கப்படுகிறது. உயர்ந்தோர் கூற்றுக்கு 'உங்கள்' என்னும் விகுதி பயன்படுத்தப்படுகிறது. ''நட'', ''நடவும்'', ''நடவுங்கள்'' என்பவற்றை நோக்குக. 'அருளும்'' என்னும் துணைவினை மிகுந்த மரியாதையைக் காட்டுகிறது.

சான்று : ''நடந்தருளும்''

ஞானிகள், அரசர்கள் ஆகியோருக்கே இத்துணைவினை பயன்படுத்தப்படுகிறது.

படர்க்கையை உயர்வைக் குறிக்க ஆளுதல்

படர்க்கையும் உயர்வைக் குறிக்க ஆளப்படுறது. இந்திய மொழிகளுக்கிடையேயான பொது இயல்பாக இதனைக் கருதலாம். இந்தியில் ''āp'' என்பது உள்ளது. தமிழில் 'தாம்' 'தாங்கள்' என்னும் இரு பாகுபாட்டு நிலைகள் உண்டு. உபநிடதங்களில் கடவுள் 'தத்' என அஃறிணை ஒருமையிலேயே பேசப்படுகின்றான். ஆனால் பின்னர் இதுவே கடவுளை மட்டுமன்றி ஞானிகளையும், துறவிகளையும் பற்றி உயர்வாகப் பேசுவதற்குரிய முறையாகிவிட்டது. வினையும் அஃறிணை ஒருமை முடிவையே கொள்கிறது. 'சாமி வந்தது' எனக் கூறுவது உயர்வாகக் கூறும் முறையாகும். இதன் விளைவாக 'அவ்விடம்', 'அங்குத்தை' என்னும் சொற்களும் போற்றுதற்குரியோரை உயர்வாகக் குறிக்கும் பொருளுடையன ஆயின. 'இங்கே' என்பது தன்மையைக் குறிக்க வரலாயிற்று.

படர்க்கை ஒருமை உயர்வைக் குறிக்க வழங்குதல்

ஆண்பால் அல்லது பெண்பால் ஒருமையைப் பயன்படுத்துவது மதிப்புடையதாக இல்லாத இடங்களில், அஃறிணை ஒருமையின் (ஒன்றன் பாலின்) ஆட்சி விரிவாக்கப்பட்டது. ஆனால் இங்கு ஒரு கிளைமொழி மாற்றம் உண்டு. தந்தை, பாட்டன் முதலியோரை மரியாதை ஒருமையில் பேசினாலும் அன்னை, அக்காள், தங்கை முதலியோரைப் பெண்மை ஒருமையிலும் அண்ணனையும் பிறரையும் ஆண்பால் ஒருமையிலும் பேசுவதைப் பிராமணர்களும் பிறரும் மரியாதைக் குறைவாகக் கருதுகின்றனர். சென்னையிலும் பிறவிடங் களிலும் பிராமணர் அல்லாதாரின் கிளைமொழிகள் சிலவற்றிலும் ஆண்பால், பெண்பால் ஒருமையைப் பயன்படுத்துவது மரியாதைக் குறைவு எனக் கருதப்பட்டு அவற்றின் ஆட்சி ஒதுக்கப்படுகிறது. இத்தகைய இடங்களில் ஒன்றன்பால் பயன்படுத்தப்படுகிறது.

சான்று : அண்ணன் வந்தது
அக்காள் வந்தது
தங்கை வந்தது

தெலுங்கில் பெண்பாலுக்கு ஒன்றன்பால் வழங்கும் போக்கின் விளைவே இது என வாதிடத் தோன்றலாம். ஆனால் ஆண்பாலுக்கும் ஒன்றன்பால் பயன்படுத்தப்படுவதை நோக்கவேண்டும். எனவே துறவிகளைக் குறிக்க ஒன்றன்பால் உயர்வு நோக்கிப் பயன்படுத்தப் படுவதாக முன்னர்க் கூறியதன் விரிவே இது என்பது புலனாகும்.

உயர்வு அல்லது மரியாதையைக் குறிக்க வரும் பிந்து நிலைகள்

'உயர்வு - தாழ்வுடைய' தமிழ்ச்சமுதாயத்தின் 'படி நிலை அமைப்பு' வேறொரு வகையான ஆட்சியையும் தமிழில் வளர்த் துள்ளது. ஒரு செய்தி கூறப்படும் பொழுது வினைமுற்றானது பல் வேறு தன்மையுடைய இடைச்சொற்களைப் பெறுகிறது. அவற்றில் சில விளி வேற்றுமையில் உள்ள தனிச் சொற்களாகும். 'ஏடா' என்பது ஆண்பால் ஒருமையிலும், 'ஏடி' அல்லது 'அடி' என்பது பெண்பால் ஒருமையிலும் வழங்குகின்றன. 'அய்யா' அல்லது 'ஓ அய்யா' என்பது ஓய் என மாறித் தாழ்ச்சியுறுகிறது. எனவே அது மதிப்பிற்குரிய உயர்ந்தோரைக் குறிக்காது சமமானவரைக் குறிக்க வழங்குகிறது. பெண்களிடம் பேசும்பொழுது 'அம்மா' என்பது உயர்வைக் காட்ட ஆளப்படுகிறது. இங்ஙனமே ஆடவர் களின் உயர்வைக் குறிக்க உரையாடலில் 'அப்பா' என்ற சொல் ஆளப்படுகிறது. இவைகளெல்லாம் முறையே *ḍā*, *ḍi*, *yā*, *mā*, *pā*

(டா, டீ, யா, மா, பா) என மாறியுள்ளன. 'உங்கள் > uṅgo, என்பது முக்கியமானவர்களைக் குறிக்க வழங்குகிறது. வந்தான், வந்தாள் என்பன தாழ்ந்தோரைக் குறிக்க முறையே ஆண்பாலில், 'வந்தாண்டா' (vaṉāṇḍa:) எனவும் பெண்பாலில் 'வந்தாண்டி' (vaṉāṇḍi) எனவும் வழங்குகின்றன. சமமானவரைக் குறிக்க 'வந்தாயா' (vaṇḍā'ya) எனவும், தங்கையையோ பெண்ணையோ குறிக்க 'வந்தாம்மா', (vaṇḍāmmā) எனவும் உயர்நிலையில் உள்ள இளையோர் உள்ளிட்ட ஆடவரைக் குறிக்க 'வந்தாம்பா' (vaṇḍāmpā) எனவும் வழங்குகின்றன. 'வந்தாங்கொ' (vaṇḍāṅgō) என்பது மிகவும் முக்கியமானவர்களைக் குறிக்க வழங்குகிறது. கோயமுத்தூர்க் கிளைமொழியில் உயர்வு காட்டும் வடிவங்கள் இங்குக் கூறப்பட்டது போல மாற்றமின்றி ஒரே மாதிரியாக ஆளப்படுகின்றன.

iii) துணைவினைகள்

இந்தோ–ஐரோப்பிய மொழிகளில் 'பல பொருள் தருவதற்கு' முன்னொட்டுக்கள் பயன்படுகின்றன. திராவிட மொழிகளில் துணைவினைகள் இப்பணியைச் செய்கின்றன. 'தலைப்படு' என்பது போலப் பெயர்கள் வினைகளுடன் சேர்ந்த தொகைகளின் முக்கியத்துவம் முன்னரே குறிப்பிடப்பட்டது. 'மேல் + பார்வை > மேற்பார்வை', 'கீழ் + அடங்கு > கீழடங்கு' முதலியவற்றை இக்காலத் தமிழின் சான்றுகளாகத் தரலாம்.

வினைகளுக்குப் புதிய பொருள்களை உண்டாக்குவதற்குத் துணைவினைகள் மற்றொரு அடிப்படையாக விளங்குகின்றன. 'அருள்' என்னும் துணைவினை, பிறவினைகளுடன் சேர்ந்து, அவ்வினை புரிபவன் உயர்ந்தோன் என்பதைக் காட்டி நிற்கும். 'கொள்' என்னும் துணைவினை, வினையைத் தற்சுட்டாக்கும். இதனோடு ஒப்புமை உடைய 'கொடு' என்னும் துணைவினை 'செயல் பிறிதொருவருக்கானது' என்பதை உணர்த்தி நிற்கும்.

சான்று : பிரித்துக்கொள், பிரித்துக் கொடு

செயப்பாட்டு வினைக்கு வரும் 'படு' என்னும் துணைவினையின் பயன் முன்னரே குறிப்பிடப்பட்டது.

காலங்கள் (tenses) அல்லது வினைப்பொருட்கூறுகள் (aspects) என்பனவற்றைப் பொறுத்தவரையில் பல்வேறு குறிப்புப் பொருள்களை இத்துணைவினைகள் தருவதைக் கவனிக்க வேண்டும். தமிழ் மொழியில் பொதிந்துள்ள இவ் ஆற்றல் வளத்தை முதன் முதலில்

குறிப்பிட்டவர் திரு. சூரியநாராயண சாஸ்திரி அவர்களே எனத் துணியலாம்.[9]

“இடு, விடு, படு, பெறு, உண், கொள், அருள்” ஆகிய துணை வினைகள் பழந்தமிழைப் பற்றி ஆராய்கையில் முன்னரே விளக்கப் பட்டன. “போ, வா, இரு, கொண்டிரு, போடு, அழு, தொலை” முதலியனவும் துணைவினைகளாக வருகின்றன.

‘போ’ என்னும் துணைவினை நிகழவிருப்பதைக் குறிக்கிறது. சான்று : செய்யப்போகிறான். அல்லது மூலவினையின் (main verb) பொருளைத் தருகிறது. சான்று : தூங்கிப் போனான்.

‘வா’ என்பது வழக்கம் (habit) என்ற பொருளைத் தருகிறது. சான்று : செய்துவருகிறான்.

‘இரு’ என்பது ‘காத்திருப்பதை’ அல்லது ‘தயாராக இருப் பதைக்’ குறிக்கிறது.

சான்று : வந்திரு

‘கொண்டிரு’ என்னும் துணைவினை செயல் தொடர்வதைக் குறிக்கிறது. சான்று : செய்து கொண்டிருந்தான்.

‘இடு’, ‘விடு’ என்னும் துணைவினைகளுக்குப் பதில் கோயமுத்தூர் மாவட்டத் தமிழில் ‘போடு’ என்னும் துணைவினை முடிந்த நிலையை உணர்த்த வருகிறது. எல்லா வினைகளுடனும் அது அசைநிலையாக வருகிறது. ‘விடு’ அல்லது ‘இடு’ என்பன வரைநிலை அடைமொழி களாக (definitive) வருகின்றன.

சான்று: வந்து விடுவான்

‘செயல்முடி காலங் (perfect tense) காட்டுதல்’ என்ற முறையில் செயல் முழுமை பெறுவதையும் இத்துணைவினை குறிக்கிறது.

சான்று : வந்துவிட்டான்

‘ஒழி’, ‘தொலை’, ‘அழு’ ஆகிய துணைவினைகள் ‘விரும்பாத தன்மையைக்’ குறிக்கின்றன.

சான்று : சொல்லி ஒழி
சொல்லித் தொலை
சொல்லி அழு

---

9 V. G. Suriyanarayana Sastri : *Tamil moliyin, Varalaru p,* 70

"ஆ, ஆக்கு, பண்ணு" முதலியன பெயர்களை வினைகளாக்கப் பயன்படுகின்றன.

சான்று : Oxidize = ஆக்ஸிஜனாக்கு

எதிர்மறை வினைவிகற்ப வடிவமான 'மாட்டான்' (mäṭṭā:) என்பது எதிர்மறைத் துணைவினையாக வருகிறது.

'ஒட்டு' என்பதிலிருந்து வந்த 'ஒட்டும்' என்பது துணைவினையாக விருந்து அதே வடிவத்தில் விகுதியாக 'முடியும்' அல்லது 'அனுமதிக்கப்பட்டுள்ளது' என்னும் பொருளில் வழங்குகிறது. இதன் வழக்காறு மிகுந்து வருகிறது.

சான்று : வரஒட்டும் < வரட்டும்
போகஒட்டும் < போகட்டும்

நிலைமொழி ஈற்றில் உள்ள அகரமும் வருமொழி முதலில் உள்ள ஒகரமும் சேர்ந்து அகரமானதை நோக்குக.

iv) ஈரேவல் வினை

'செய்வித்து' என்பதைப் பாமரமொழி விளக்கப்போக்கு 'செய வைத்து' எனக் கருத வைக்கிறது. வினையுடன் 'வை' என்பதன் வினைவிகற்ப வடிவம் விகுதியாகச் சேர்ந்து, ஈரேவல் வினை உணர்த்தப்படுகிறது. இதன் விளைவாகப் பழைய வடிவமான 'செய்வி' மறைகிறது. மூலவினையின் எச்ச வடிவமும் 'வை' எனும் துணை வினையும் சேர்ந்ததே ஈரேவள் வினையின் புதிய வடிவமாகும்.

v) உருபனியலில் பிரதிபலிக்கப்படும் பொதுவான மாற்றங்கள்

விரைவாக உச்சரித்ததின் விளைவாகத் தோன்றிய வடிவங்கள் மொழியில் நிலைபெறத் தொடங்கின. இரட்டித்த நுனியண்ண வெடிப்பொலி இரட்டித்த நுனிநா பல் வெடிப்பொலியாக நிலைபெறுகிறது. நுனியண்ண வெடிப்பொலி அதனுடைய இன மூக்கொலியுடன் சேர்ந்து நெடில் நுனியண்ண மூக்கொலியாகிறது. வேர்கள் உகர முடிவு கொள்கின்றன. ஆனால் பழைய யகர முடிவு கொள்வன மட்டும் இதற்கு விதிவிலக்கு. அவை அதற்கு (யகரத்துக்கு) அடுத்து இகரத்தைப் பெறுகின்றன. இரட்டித்த வெடிப்பொலிகள் குறில் வெடிப்பொலிகளாகின்றன. உயிரிடை ஒலிப்புடை வெடிப்பொலிகள், பல கிளைமொழிகளில் உரசொலிகளாகின்றன. வெடிப்பொலிகள் மூக்கொலிக்குப் பின்னர் ஒலிப்புடையன ஆகின்றன. மூக்கொலிகள் பல சமயங்களில் ஓரினமாதலுக்கு ஆளாகி வெடிப்பொலிகளாகின்றன.

சான்று : திண் ~ தின்னு ~ tingu
ṭinnuvā: ~ *ṭiṅguvā:* ~ *ṭimbā:*

'த்த்', 'ந்த்' என்பன இ அல்லது ய்க்குப் பின்னர் ச்ச் ஞ்ச் என முறையே மாறுகின்றன. வேரின் இறுதியில் உள்ள யகர மெய் பல சமயங்களில் மறைகிறது. மொழி இறுதி னகர மெய் மறைந்து அதற்கு முந்திய உயிர் மூக்குச் சாயல் பெறுகிறது. உருபன் வடிவங்களில் இணைகள் உண்டாவதும் உண்டு.

vi) புதிய விகுதிகள்

'காரன்', 'சாலி' போன்ற புதிய விகுதிகள் தொடர்ந்து பெரிதும் வழக்காறு பெறுகின்றன. 'த்வ' என்னும் சமஸ்கிருதப் பண்புப் பெயர் விகுதி அண்மைக் காலத்தில் மிகுந்த வழக்குப் பெற்றுள்ளது. இதனால் 'இரு மொழித் தொகைச் சொல்' வடிவங்களும் தோன்றியுள்ளன.

சான்று : முதலாளி > முதலாளித்துவம்
முக்கியம் > முக்கியத்துவம்

'—ந்தன்' அல்லது 'வந்தன்' என்பதும் விகுதியாக வருகிறது.

சான்று : செல்வந்தன் அல்லது செல்வவந்தன்.

'அடமு' ~ 'அடம்' என்னும் தெலுங்குத் தொழிற் பெயர் விகுதி செயப்படு பொருளை அல்லது செயலின் பயனைக் குறிக்க வழங்குகிறது.

சான்று : கட்டிடம்
தாழ்வடம்
கரவடம்

APPENDICES

1. Consonant clusters occurring in the inscriptions (700-1050 A.D.)

	k	ṅ	c	ñ	ṭ	ṇ	ṯ	ṉ	p	m	y	r	l	v	ḻ	ḷ	t	n
k	kk																	
ṅ	ṅk																	
c			cc															
ñ			ñc	ññ														
ṭ	ṭk				ṭṭ				ṭp									
ṇ	ṇk		ṇc		ṇṭ	ṇṇ			ṇp	ṇm				ṇv				
ṯ							ṯṯ											
ṉ							ṉṯ											
p									pp									
m									mp									
y	yk						yṯ				yy			yv				
r	rk						rṯ											
l	lk								lp		ly		ll	lv				
v														vv				
ḻ	ḻk						ḻṯ							ḻv				
ḷ	ḷk								ḷp					ḷv		ḷḷ		
t	tk		tc						tp								tt	
n	nk		nc						np	nm				nv			nt	nn

2

Consonant clusters occurring in the inscriptions (1050-1250 A.D.)

	k	ṅ	c	ñ	ṭ	ṇ	ṯ	ṉ	p	m	y	r	l	v	ḻ	ḷ	t	n
k	kk																	
ṅ	ṅk	ṅṅ	ṅc															
c			cc															
ñ			ñc	ññ														
ṭ	ṭk		ṭc		ṭṭ													
ṇ	ṇk		ṇc		ṇṭ	ṇṇ	ṇṯ		ṇp	ṇm				ṇv				
ṯ							ṯṯ											
ṉ							ṉṯ	ṉṉ	ṉp	ṉm								
p									pp									
m									mp	mm								
y	yk		yc				yṯ		yp	ym	yy							
r	rk						rṯ		rp	rm				rv				
l	lk		lc						lp	lm			ll					
v														vv				
ḻ	ḻk								ḻp	ḻm				ḻv				
ḷ	ḷk								ḷp	ḷm						ḷḷ		
t	tk		tc				tṯ		t'p								tt	
n	nk		nc					nṉ	np	nm							nt	nn

3. The Distinctive-Feature Analysis of Modern Tamil

	Vowels					Consonants																						
	a ā	ı ī	u ū	e ē	o ō	k	(h)	ṅ	c	(ś)	(j)	ñ	ṭ	(ṣ)	ṇ	t	(s)	n	p	m	y	v	l	ḷ	ḻ	r	ṟ	ṉ
Vocalic	+	+	+	+	+	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	+	+	+	+	+	+	+	−
Consonantal	−	−	−	−	−	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	−	−	+	+	+	+	+	+
Compact	+	−	−	−	−	+	+	+	+	+	+	+	−	−	−	−	−	−	−	−	−	−	0	0	0	0	0	−
Diffuse	0	+	+	−	−	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	+	+	0	0	0	0	0	0
Grave	0	−	+	−	+	+	+	+	−	−	−	−	−	−	−	−	−	−	+	+	−	+	0	0	0	0	0	−
Continuous	0	0	0	0	0	−	+	+	−	+	−	+	−	+	+	−	+	+	−	+	0	0	+	+	+	−	−	+
Nasal	0	0	0	0	0	−	−	+	−	−	−	+	−	−	+	−	−	+	−	+	0	0	0	0	0	0	0	+
Flat	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	+	+	+	−	−	−	0	0	0	0	−	+	+	−	+	−
Sharp	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	−	0	0	0	0	0	0	0	0	0	+
Strident	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	−	+	0	0	0

The phonemes within brackets are marginal

கலைச்சொற் பட்டியல்

அஃறிணை non-human / neuter
அகச்சந்தி internal sandhi
அகநிலை ஆன்மீகம் mysticism
அகழ்வாராய்ச்சி excavation
அசைகெடல் haplology
அசைநிலை expletive
அசைஉச்சி peak
அசைஈறு coda
அசைமுதல் onset
அசைமுதல் அசைஉச்சிவகை onset peak type
அசை அமைப்பு / அசை பிரித்துக் காட்டல் syllabification
அசை(யாக எண்ணப்படும்) மெய்யெழுத்து syllabific consonant
அடை / அடைச்சொல் attributive
அடைத்தொகை attributive compound
அடைத்தொடர் attributive construction
அடைப்புரசொலி affricate
அடைப்பொலி / வெடிப்பொலி தடையொழி stop/plosive
அடையாளக் குறிகள் diacritical marks
அண்ணச்சாயல் பெறுதல் palatalisation
அண்ண முடி cerebral
அண்ண அச்சு palatogram
அநுஸ்வாரம் *anusvāra*
அமைப்புவழி ஆய்வு typological study
அரை உயிர்கள் / இடையின மெய்கள் semi vowels
அளபெடை *plūta*
அழுத்த அசைநிலைகள் emphatic expletives
ஆக்கநிலை வழிவாக்கிய அமைப்பு generative syntax
ஆக்க(நிலை) விகுதி derivative suffix
ஆக்கங்கள் derivations
ஆக்கமுறை இலக்கணம் generative grammar
ஆடொலி trill

ஆண்பால் masculine
ஆழ்நிலை அமைப்பு deep structure
ஆழ்நிலை இலக்கணம் deep grammar
இசை நிறை sound filler
இடச்சார்பாக மாறும் மாற்றொலி / துணைநிலை வழக்கு positional variant complementory distribution
இடப்பெயர்ப் பதிலிகள் / இடப்பெயர்கள் personal pronouns
இடப்பொருள் வேற்றுமை locative case
இடம் பெயரல் metathesis
இடர் காப்புகள் safeguards
இடைச்சொல் / வேரல்லா உருபன் particle / non-root morpheme
இடைநா இடையண்ண ஒலி palatal sound
இடைநிலை அமைப்பு intermediary structure
இடைவெளி interlude / pause
இணை (நிலைத்) தொடர் (அமைப்பு) co-ordinate construction
இணைப்பு (ஆங்கிலத்திலுள்ள 'to be' என்பது போன்று பிற மொழிகளில் வரும் பயனிலை) copula
இதழ் குவி(தல்) lips unrounded
இதழ்ச் சாயல் பெறுதல் labialisation
இறந்த காலம் past tense
இயங்குகால மொழியியல் diachronic linguistics
இறந்தகாலம் அல்லாதன non-past
இயற்சொல் native word
இயற்பெயர் proper name
இயைபு (திணைபாலிட வழா நிலை) concord
இரட்டித்தல் doubling
இரட்டித்த long
இரட்டைப் பன்மை double plural
இரட்டை விகுதிகள் double suffixes
இருவேறு மொழித்தொகை hybrid compound
இலக்கண வடிவங்களின் மாற்று வடிவங்களின் மாற்றம் alternation change in grammatical forms
இலக்கிய வழக்கு literary usage
இனச்சொற் கோவை / இனச்சொற்கள் cognates
இனமூக்கொலி homorganic nasal
இனவெடிப்பொலி இரட்டித்தல் gemination

ஈற்றியல் தொடர்நிலை pre-terminal string
ஈற்றுவரித் தொடர் terminal string
ஈரசை வேர் disyllabic root
ஈரிதழ் ஒலி bilabial sound
உச்ச உயர் நிலை superlative
உச்சரிப்பு pronunciation
உச்சரிப் பொலியியல் articulatory phonetics
உடம்படுமெய் glide
உம்மைச்சொல் particle of comparison
உள் உணர்வு intuition
உயர்திணை human category
உயர்திணைப் பன்மை/பலர்பால் epicene plural
உயிர் (உயிரொலி) மயக்கம் vowel cluster
உயிர்த்தொடர் diphthong
உயிர்த்தொடராதல் diphthongisation
உயிர்ப் பொருட்பெயர் animate noun
உயிரில்லாப் பொருட்பெயர் inanimate noun
உயிரிடை வெடிப்பொலி intervocalic stop
உயிரொலியன் vowel phoneme
உரசுவான் / உரசொலி fricative
உரிச்சொல் / வேர் உருபன் root morpheme
உருபன் / சொல்லுருபன் morpheme
உருபனியல் morphology
உருபனியல் அமைப்பு morphological structure
உருபொலியன் morpho-phoneme
உருபொலியன் விதி morpho-phonemic rule
உருபொலியன் அமைப்பு morpho-phonemic system
உருபொலியன் விதி மாற்றம் morpho-phonemic rule change
உருபு / சொல்லுருபு casemarkers / morphs
உரையாடல் நடை conversational style
உளப்பாட்டுத் தன்மைப் பன்மை inclusive plural
உளப்படுத்தாத தன்மைப் பன்மை exclusive plural
ஊசலாட்டம் / கட்டற்ற அல்லது நிபந்தனையற்ற மாற்றம் free--variation
எறி உரு projection
எச்சம் non-finite

எண்ணுப்பெயர் numeral
எண்ணுமுறைப் பெயர் ordinal
எண் தருபொருள் count noun
எதிர் துலக்குதல் response
எதிர்முறை negative
எதிர்காலம் future tense
எதிரொலிச் சொல் echo word
எழுச்சி rising
எழுவாய் subject
ஏவல் imperative
ஏவுவோன், இயற்றுவோன் வினை ஈரேவல் வினை causal verb
ஏவுவோன், இயற்றுவோன் அல்லா வினை ஈரேவல் அல்லா வினை non-causal verb
ஒட்டு affix
ஒட்டுநிலை agglutinative
ஒட்டு(நிலை) மொழி agglutinative language
ஒட்டுநிலை விகுதி inflectional suffix
ஒட்டுநிலை அடையாத இரு பெயர்கள் nouns in opposition
(பேச்சுறுப்புக்களின்) ஒட்டு நீக்கம் release
ஒப்பியல் முறை comparative method
ஒப்புமைச் சொல் particle of similarity
ஒப்புமையாக்கம் analogy
ஒருமை singular
ஒருமைப்பாடு synthesis
ஒலிச்சமன்பாடு phonetic correspondence
ஒலிச்சிறப்புக் கூறு distinctive feature
ஒலித்தசை vocal cord
ஒலி நிலை விளக்கம் phonetic interpretation
ஒலி அழுத்தம் stress
ஒலிப்பான் articulator
ஒலி மதிப்பு phonetic value
ஒலிப்புடை voiced
ஒலிப்பிலா voiceless
ஒலிப்பு முனை point of articulation
ஒலிப்பு முறை articulation
ஒலிமாற்றம் sound change

ஒலியன் phoneme
ஒலியனியல் phonology
ஒலியன் மாற்றம் phonemic change
ஒலியின் சிறப்புக்கூறு distinctive feature
ஒலியியல் விதி phonetic law
ஒலிவகை உறுப்பு phonological component
ஒரே வடிவான சொல் வழங்குமிடங்களை இணைக்கும் கோடு isogloss
ஒன்றுதல் merger / falling together
ஓரசை வேர் mono-syllabic root
ஓரினமாதல் assimilation
கட்டுருபன் bound morpheme
கட்டு வடிவம் bound form
கடன் வாங்கல் borrowing
கடைநா கடையண்ண ஒலி velar sound
கடையண்ணச் சாயல் பெறல் velarisation
கவர்படுபொருள் நிலை ambiguity
கலப்பு மொழி hybrid language
கலாச்சாரக் கலப்பு cultural contact
களஞ்சியம் corpus
கருவிப் பொருள் வேற்றுமை instrumental case
கர்த்தா agent
காட்சிநிலை நிறைவு observational adequacy
காலவகை aspect
கிளைப்படம் tree diagram
கிளைமொழி dialect
கிளைமொழிச் சொற்கள் dialect words
கிளைமொழி ஆராய்ச்சி dialectology
கிளைமொழி மாற்றம் dialect change
குகைக் கல்வெட்டுக்கள் cave inscriptions
குறிப்பு comment
குறியீட்டுத்தருக்கம் symbolic logic
குரல்வளை வெடிப்பொலி/ விட்டிசைத்தல் glottal stop
குழிந்துரசொலி sibilant
கூட்டுவேர் compound root
கொடி வழி geneological

சந்தியியல், சந்திவிகாரம் morpho-phonemics
சமநிலை level
சமூகக் கிளைமொழி social dialect
சர்வதேசக் கலைச்சொற்கள் international technical terms
சார்பு நிலைப்பெயர்/ சொல்லடியாகப் பிறந்த பெயர் derived noun
சாரியை inflectional increment
சிறப்புப் பெயர் title
சிறப்பு வழக்காறு special usage
சுரபத்தி *Svarabhakti*
சூழல் context
செய்வினை active voice
செயப்பாட்டு வினை passive voice
செயப்படு பொருள் குன்றா வினை transitive verb
செயப்படு பொருள் குன்றிய வினை intransitive verb
செயின் என்னும் வினையெச்சம் conditional participle
செய்து என்னும் வினையெச்சம் conjunctive participle
செயப்படு பொருள் வேற்றுமை second case
செய என்னும் வினையெச்சம் infinite
செயல் முடி காலம் perfect tense
செல்வாக்கு influence
சேய் மொழி daughter language
சொல் மாற்றம் lexical change
சொல்லொட்டு இயல் நிலை விகுதி inflexional suffix
சொல்லாக்க விகுதி formative suffix
சொல்லுருபு வரும் தொடரமைப்பு peripharastic-construction
சொற்றொகுதி vocabulary
தற்சுட்டு reflexive
தற்செயலான வடிவ ஒற்றுமை accidental similarity
தன்வினை non-ergative
தனிநிலைப் பெயர் primary noun
தனியன் unit
தலைப்பு topic
தமிழ் மொழித் தூய்மை இயக்கம் Tamil Purist Movement
திறப்பசை/ உயிர் ஈறுள அசை open syllable
திசைச்சொல் dialect word
திரிசொல் homonym and synonym

திராவிட மொழி மூலம் Dravidian origin
திராவிட மொழிகளின் வேர்ச் சொல் அகராதி Dravidian Etymological Dictionary
துணைவினை auxiliary verb
துணை வேர் auxiliary root
தூண்டுதல் stimulus
தெரிநிலை வினை finite verb
தேசிய ஊஞ்சல் திருவிழா National Swing Festival
தொடர் இறுதி terminal ending
தொடரியல் syntax
தொடரிசை intonation
தொடரியல் அமைப்பு syntactic structure
தொடரொலி continuants
தொடர் நிலை terminal string
தொல் எழுத்தியல் paleography
தொனிப்பொருள் suggestive meaning
தொழிற் பெயர் verbal noun
நடத்தையியல் behaviourism
நடுவிடத்ததாக ஆக்கப்பட்ட ஒலி centralized sound
நாடோடி இலக்கியம் folk literature
நான்காம் வேற்றுமை, கொடைப் பொருள் வேற்றுமை dative case
நிகழ்காலம் present tense
நிபந்தனை வரைவுப் பொருள் conditional
நிறுத்திசை விட்டிசை juncture
நிலைத்தொடர் phrase structure
நிலைத்தொடர் இலக்கணம் phrase structure grammar
நிலைத்தொடர் விதி phrase stucture rule
நீங்கற் பொருள் ablative of motion
நுனிநா ஒலிகள் apical sounds
நெகிழ்வு மாற்றம் loose transition
நெடுங்கணக்கு alphabet
நோக்கப்பொருள் purposive
பகுப்பு / பாகுபாட்டு வடிவம் analytical form
படர்க்கை third person
பதிலீடு replacement
பன்மை plural

பயனிலைத் தொடர் predicative construction
பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு Theory of Evolution
பல்லுறுப்புத் தொகை multiple compound
பல்லிதழ் ஒலி labio-dental
பல்லினச் சாயல் பெறுதல் dentalization
பல சொல் ஒரு பொருள் synonym
பல கிளைமொழிகளுக்கும் பொதுவான அமைப்பு overall pattern
பழக்கத்திற்கு ஆளாகி விட்ட habitual
பாமர(ர்) மொழி விளக்கப் போக்கு folk etymology
பால் காட்டும் விகுதி gender suffix
பிந்து நிலை enclitics
பிறழ்ச்சி deviance
பிறழ் பிரிப்பு metanalysis
பிறப்பால் ஒத்தவை similarity of articulatory position
பிறவினை ergative
பிண்டப் பொருள் mass noun
பின்னுயிர் back vowel
பின் ஒட்டு / விகுதி suffix
பெண்பால் feminine
பிழையில்லாத grammatical
பிழையுள்ள ungrammatical
பெயர்ச் சொல் noun
பெயரடை noun attribute
பெயர்த்தொடர் (பெயர்த் தன்மை உடைய) வாக்கியங்கள் substantive sentences
பெயர்ப் பதிலி pronoun
பெயர்ப் பதிலி விகுதி pronominal suffix
பெருங் கற்கால நாகரிகம் megalithic culture
பெருந் தமிழ் நாடு The Greater Tamil Land
பெயரெச்சம் relative participle
பேச்சு மொழி spoken language
பேச்சுறுப்புக்கள் organs of speech
பேச்சொலியியல் சட்டம் phonetic law
பொதுக் கூறு common core
பொதுமையாக்கம் neutralisation
பொது மொழி standard language

பொறுக்குக் கூறு selectional feature
பொருள் குறிப்பு semantic feature
பொருள் நிலை உறுப்பு semantic component
பொருள் மாற்றம் semantic change
பொருள் வீழ்ச்சி semantic degradation
பொருளமைப்பு semantic structure
பொருளன் semanteme
பொருளனியல் semantics
போலி (நாகரிக) ஆக்கம் hyper-urbanisation
மக்கட்பெயர் & பிற பெயர் human & non-human noun
(ஒலி) மதிப்பு phonetic value
மனிதவியல் / மானிடவியல் anthropology
மயக்கம் cluster
மரபுத் தொடர் idiom
மரியாதைப் பன்மை honorific plural
மருங்கொலி lateral
மாற்றம் (அளவு) quantity change
மாற்றம் (தன்மை) quality change
மாற்று வடிவம் alternant form
மாற்றியல் இலக்கணம் transformational grammar
மாற்றொலி allophone
மாற்றியல் விதி transformation rule
மீட்டுருவாக்கம் reconstruction
முக்காலத்துக்கும் ஒத்தது aorist form
முறைநிலை ஒலியன்கள் systematic phonemes
முடிந்த நிலை வினை completive verb
முன்னிலை second person
முன்வைப்புயிர் prothetic vowel
முன்னுயிர் front vowel
முன்னுருபுகள் pre-positions
மூக்கொலி nasal
மூக்கொலிச் சாயல் பெறுதல் nasalisation
மூக்கினச் சாயலை / மென்மையை இழத்தல் denasalisation
மூக்கின உயிர் nasal vowel
மூச்சொலி aspirated sound
மூச்சிலா ஒலி unaspirated sound

மூடசை / மெய் ஈறுள அசை closed syllable
மூலத் திராவிட மொழி proto-Dravidian language
மூலபாட ஆராய்வியல் textual criticism
மூல மொழி proto-language
மூலாதாரங்கள் sources
மெய்யொலியன் consonantal phoneme
மெய் மயக்கம் consonantal cluster
மேல்நிலை / புறநிலை இலக்கணம் surface grammar
மேல்நிலை அமைப்பு surface structure
மேலுயிர் high vowel
மொழிப் புலமைத் திறமை competence
மொழியை வழங்கும் திறமை performance
மொழி அமைப்பு இயல் structural linguistics
மொழிகளில் அமைப்பு வழி ஆய்வு typological study of the languages
மொழிப் பொதுமைப் பகுதி liguistic area
மொழியியல் கண்ணோட்டம் linguistic point of view
மொழியிறுதி word final
மொழிதிரிதல் corruption
மொழி நூல் ஆவணம் philological record
மொழிக் குழப்ப நிலை linguistic pathology
யாப்பு metre
யாப்பியல் prosody
யாப்பியல் அசை poetic syllable
லண்டன் மொழியியல் வட்டத்தினர் London Linguistic Circle
வகையியல் ஆராய்ச்சி taxonomy
வடசொல் words borrowed from the north Indian languages
வரிவடிவம் / லிபி script
வருணனை நிறைவு descriptive adequacy
வருமிடம் context
வருமுறை distribution
வாக்கியம் sentence
வாக்கிய அமைப்புக் குறிப்பு syntactic feature
வாக்கிய அமைப்பு நிலை உறுப்பு syntactic component
வாய்பாடு canoncial form
வாயின உயிர் oral vowel

விட்டிசைத்தல் glottal stop
விந்தையான ஒலி peculiar sound
விளக்கநிலை நிறைவு explanatary adequacy
வினையெச்சம் verbal participel
வினையாலணையும் பெயர் participial noun
வினைவிகற்பம் conjugation
வினைச்சொல் verb
வினைவேர்கள் verb roots
வினையடை verbal attribute / adverb
விரைந்தொலித்தல் allegro pronunciation
வீழ்ச்சி falling
வேற்றுமை case
வேற்றுமைத் தொகை declension
வேற்றுமை உருபேற்கத் திரிந்த வடிவம் oblique form
வேற்றுமைப் பாகுபாடு case clessification